www.tamilarangam.net

# வியூகம்

இதழ் 1

Nov 2009 **Viyooham** கார்த்திகை 2009

தேசியவாதம் குறித்து...

சூறையாடப்படும் தமிழீழ வளங்கள்

தேசிய விடுதலைப் போராட்டமும் புலிகளும்

பெண்ணியம்...

விடியலிற்கான தேடல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வியூகம் இதழ் ஒன்று

## ஆசிரியர் தலையங்கம்.

நடந்து முடிந்தவை சோகமானவைதான். மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் புறப்பட்ட ஒரு பயணம் நந்திக் கடற்கரையில் முடிந்துள்ளது. போதாக்குறைக்கு இலட்சக் கணக்கானவரின் அவலம் வேறு மனதை குடைகிறது. தவறு எங்கே நடந்தது என்று மனம் தினம் தினம் தேடிக் கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் தாங்களே பார்த்துக் கொள்வதாகத்தானே புலிகள் யாரையும் செயற்பட விடாமல் தடுத்தார்கள். இப்போது அனைத்துக்கும் அவர்களே பொறுப்பு என்று கூறி ஓய்ந்துவிட முடியவில்லை. இத்தனைக்குப் பின்னும் புலிகளின் தலைமை பற்றி சாதியரீதியானதும், கல்வித்தரம் பற்றியதுமான காழ்ப்புகளையும் கேட்க நேர்கிறது. அத்தோடு எரிகின்ற வீட்டில் பிடுங்க முனையும் வியாபாரிகளின் கூட்டம் வேறு தாமே கட்டமைத்த பொய்மைகள் நொறுங்கிப் போனது கூட தெரியாமல் வியாபாரத்தை தொடர கடும் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கையில் இந்த சமூகம் விடுதலை அடைந்திருந்தால்தான் ஆச்சரியப்படலாம் போலவும் இருக்கிறது. மீண்டும் தவறு எங்கே நடந்தது என்ற கேள்விதான் முன்னே நிற்கிறது.

அப்படியானால் நடந்து முடிந்தவற்றில் எமது சமூகத்தில் உள்ள முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளுக்கு எந்த விதமான பங்கும் கிடையாதா? கடந்த காலத்தில் புலிகள் அமைப்பானது எம்மில் பலரை வேட்டையாடியது என்பது நாம் பல நல்ல தோழர்களது உயிர்கள் உட்பட கணிசமான விலையை கொடுத்துதான் ஆகவேண்டியிருந்ததும் உண்மைதான். ஆனால் அத்தோடு எமது கடமைகள் முடிந்துவிட்டன என்று நாம் ஓய்ந்து விட்டிருந்தோமே? அது எப்படி சாத்தியமானது. நாம் உண்மையிலேயே எமது மக்களதும், ஒடுக்கப்பட்ட மக்களதும் விடுதலையை ஆழமாக நேசித்திருந்தால், அந்த இலக்குகள் அடையப்படும் வரையில் எப்படி ஓய்வு கண்டிருக்க முடியும்?

எமது கண்ணுக்கு முன்னாலேதானே புலிகள் அமைப்பானது தனது அராஜக நடவடிக்கைகள் ஒவ்வொன்றாக மேற்கொண்டு வந்தார்கள். அப்போது நாம் என்ன செய்து கொண்டிருந்தோம்? சக போராளிகளின் கொலைகள் என்று தொடங்கி, சக அமைப்புக்கள் அனைத்தையும் தடை செய்வது வரையில் ஒவ்வொன்றாக படிப்படியாகத்தனே செய்து கொண்டு வந்தார்கள். இந்த ஒவ்வொரு கட்டத்திலும் நாம் சரியான பக்கத்தில்தான் நின்றோமா? ஏனைய விடுதலை அமைப்புக்களில் மாத்திரம் என்ன வாழ்ந்ததாம். அங்கும் நிலைமைகள் சற்றேறக் குறைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படித்தானே இருந்தது. வேண்டுமானால் இது அளவு – பண்பு பற்றிய வேறுபாடாக இருந்திருக்கலாம். ஆனால் ஜனநாயகம், கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை போன்ற பல்வேறு பிரச்சனைகளிலும் எல்லா அமைப்புக்களுமே கிட்டத்தட்ட ஒரேவிதமான பிரச்சனைகளையே முகம் கொடுத்து வந்தன. ஆகக் குறைந்தது, புலிகள் அமைப்பானது இப்படிப்பட்ட ஒரு ஏக பிரநிதித்துவத்தை நோக்கி முன்னேறி வருகிறார்கள் என்பதை இனம் கண்டு மாற்று முன்முயற்சிகளை எடுக்க முடியாதவர்களாகத்தான் இருந்தோமா? அப்படி நாம் இருந்திருந்தால், முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகள் என்ற பதங்களுக்கு நாம் பொருத்தமானவர்கள் தாமா?

சரி புலிகள் அமைப்புத்தான் நாட்டில் எம்மை உயிருடன் வாழவே அனுமதிக்கவில்லை. புலம் பெயர்ந்த பின்பு எமது முன்னெடுப்புக்கள் எவ்வாறு அமைந்தன. நாம் எம்மாலான அனைத்தையும் வழங்கத் தயாராக இருந்தோமா? எம்மில் பலருக்கு போராட்டத்தில் போதிய நம்பிக்கை இல்லாமற்போனது. பல வருட தப்பிப் பிழைக்கும் வாழ்க்கை எம்மை களைக்கப் பண்ணியிருந்தது. ஆதலால் எமது முயற்சிகள் எதுவுமே அவற்றின் முதல் தடங்கலைக் கண்டவுடன் கலைந்து போனது, அல்லது எமது அரசியல் இலக்குகளை மறந்து எமது உணர்வுகளுக்கு வடிகால் தேடும் நடவடிக்கைகளை நோக்கி நகர்ந்தது.

புரட்சியாளர்கள் எவருமே எதிரியினதும், எமது தரப்பில் இருக்கும் எதிர்ப்புரட்சிகர சக்திகளதும் அங்கிகாரத்தை எதிர்பார்த்துக் கொண்டு செயற்படுவது கிடையாது. இதனால் புலிகளது எதிர்ப்பையும் மீறி சில குழுக்கள் முற்றிலும் தலைமறைவாக தமது அரசியலை பல மிகவும் நெருக்கடியான சூழலிலும் முன்னெடுத்து வந்தார்கள். ஆனால் அவை கூட ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் தாக்கு பிடிக்காமல் போனதேன். இதற்கான காரணி புலிகளிடம் இருந்தல்லாமல் இந்தந்த அமைப்பிற் உள்ளேயே இருந்து வந்தன என்பது பலருக்கு ஆச்சரிய மூட்டுபவையாக இருக்கலாம்.

ஆனால் இந்த தோற்றுப் போன மாற்றுக்கான முன்முயற்சிகளையும் சேர்த்துப் பார்த்தால் நாம் எமது போராட்டம் முழுவதற்குமான ஒரு பொதுவான போக்கொன்றை காண முடிகிறது. அதாவது எமது போராட்டமானது முற்றிலம் ‘தன்னியல்புவாதமாக’ (Spontanism) முன்னெடுக்கப்பட்டுள்ளது என்ற சோகமான முடிவுதான் அதுவாகும். எந்தவொரு போராட்டமும் அதன் ஆரம்ப கட்டத்தில், அந்த போராட்டத்துடன் தொடர்புடைய கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனைகளை முகம் கொடுப்பது தவிர்க்க முடியாததாகிறது.

www.tamilarangam.net

இந்த பிரச்சனைகளை தமது காலத்தின் மிகவும் முன்னேறிய கோட்பாட்டின் மூலமாக முகம் கொடுத்து தீர்வு காண்பதென்பதும், தமது எதிர்தரப்பாரும் மதிக்கத்த ஒரு விரிவான திட்டத்தை வகுத்து முன்வைப்பதும், இதனை தீர்வு காண்பதில் மிகவும் முக்கியமான செயற்பாடாக அமையும். ஆனால் அப்படிப்பட்ட செயற்பாடுகள் எதுவுமே எமது முன்னேறிய பிரவினர் மத்தியிலோ அல்லது போராட்ட அமைப்புக்கள் மத்தியிலோ அறவே நடைபெறவில்லை. மரபார்ந்த தமிழ் தலைமை எடுத்திருந்த முடிவுகளை செயற்படுத்துவதே அமைப்புக்களது செயற்பாடு என்ற போக்கே ஓங்கியிருந்தது. முற்போக்கு அமைப்புக்கள் என்று கூறப்பட்டவையும் கூட மிகவும் மேல்பூச்சான சிவப்பு கோசங்களைக் கடந்து முறையாக தீர்வுகளை கண்டிருக்கவில்லை. இன்னும் சிலரோ தாமே தமிழீழ போராட்டத்தில் முதன் முதலாக மார்க்சியத்தை முன்வைத்து போராட்டத்தை தலைமையேற்பவர்களாக காட்டிக் கொண்டார்கள். அவர்களது மமதையில் இன்னும் பலரை தாக்கிக் கொண்டும் இருந்தார்கள். ஆனால் இப்போது திரும்பிப் பார்த்தால் அந்த கற்கால கோடரிகள் ஒரு நவீன யுத்தத்தில் எதற்கும் பயன்படாதவையாக இருந்தமை தெரிகிறது.

ஒட்டு மொத்தத்தில் போராட்டமானது முழுக்க முழுக்க தன்னியல்புவாதத்திற்கு பலியாகிப் போயிருந்தது. இதனால் இவர்களது செயற்பாடுகளில் பிரக்ஞையின் பாத்திரம் அறவே இருக்கவில்லை. பிரக்ஞைபூர்வமான செயற்பாடுகள் இல்லாதபோது கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படாததுடன், ஜனநாயகம் என்பதே இந்த அமைப்பிற்குள் வெளியிலிருந்து பிரக்ஞைபூர்வமாகவே கொண்டு வந்திக்க வேண்டிய நிலையில் இது எல்லா அமைப்புக்களிலும் ஒரே விதமான பிரச்சனைகளை திரும்பத் திரும்ப கொண்டு வந்து கொண்டிருந்தது. தேசியவாதம் பற்றிய கோட்பாட்டு பிரச்சனைகள், இலங்கையின் சமூக உருவாக்கம் அதிலுள்ள சமூக சக்திகள் பற்றிய பிரச்சனை, எதிர்ப்பியக்கம் மற்றும் அவற்றின் போராட்ட வடிவங்கள் தொடர்பான விடயங்கள், ஈழத் தமிழரது சமூக அக ஒடுக்குமுறைகள் அவற்றிற்கான தீர்வுகள், சர்வதேச நிலைமைகள் போன்ற பல்வேறு பிரச்சனைகளக்கு தீர்வு காணப்படாமல்தான் இந்த போராட்டமானது தொடர்ந்து கொண்டிருந்தது. தேசியவாதம் பற்றிய கோட்பாட்டு பிரச்சனைகள் முறைப்படியாக தீர்வு காணப்படாததால், ஐக்கியப்பட்ட புரட்சி என்பதே இலங்கை இடதுசாரிகளின் இயல்பான நிலைப்பாடாக இருந்தது. இதனால் தேசிய விடுதலை இயக்கங்களில் இருந்து விழிப்புணர்வு பெற்ற பிரிவினர் கூட ஐக்கியப்பட்ட புரட்சி என்ற எதிர் கரைக்கு தாவினார்கள். இந்த இரண்டு அந்தங்களுக்கிடையில் ஊசலாடுவதிலேயே பலரது ஆயுட்காலம்

www.tamilarangam.net

செலவானது. போராட்ட அலைகள் உயர்வாக இருக்கும் போது தேசியவாதிகளாகவும், போரட்ட அலை தொய்யும் போது ஐக்கியப்பட்ட புரட்சியாளர்களாகவும் மாறிக் கொண்டிருந்தார்கள். இப்படியாக நாம் குத்துக் கரணங்கள் அடித்துக் கொண்டிருப்பதனால் மக்கள் மத்தியில் எந்த விதமா உருப்படியான தாக்கத்தையும் நிகழ்த்த முடியாதவர்களாக ஆனார்கள்.

ஆகவே பிரச்சனை இங்கு புலிகளது நடவடிக்கைகளில் மாத்திரமல்ல. மாறாக புலிகளுக்கு மாற்றாக அமைப்புக்களை கட்ட முனைந்தவர்களது பேரிலும் இருக்கிறது. எமது சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திய சித்தாந்தங்களான வர்க்கவாதம், சாதியம், ஆணாதிக்கம், பிரதேசவாதம், முஸ்லிம் - சிங்கள மக்கள் மீதான தப்பெண்ணங்கள் போன்ற எவற்றுக்குமே சவால் விடும் வேலைகள் எமது தரப்பில் தீவிரமாக முன்னெடுக்கப்படாதபோது, இந்த ஆதிக்க சித்தாந்தங்கள் எமது போராட்டத்தில் அதிகம் செல்வாக்கு செலுத்தியது. அதன் விளைவுகள் தான் இந்த தோல்விகளில் வெளிப்பட்டதாகும். முன்னேறிய பிரவினரான நாம் எம்முன்னே இருந்த கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, போராட்டத்தின் சித்தாந்த மேலாண்மையை நிறுவுவது சாத்தியப் பட்டிருக்குமானால், புலிகளுக்கு எதிரான ஒரு பலமான அரசியல் சக்தியாக நாம் நிலைபெற்றிருக்க முடியும். ஆனால் அதற்கான புரிதலும், அதனை அவசியப்படுத்த தேவைப்படும் கடுமையான உழைப்பும், விடாப்பிடியான செயற்பாடும் எம்மிடம் இருக்கவில்லை. இப்படியாக நாம் முன்னேறிய பிரிவினர் இழைத்த பாராதூரமான தவறுகளையும் இணைந்தே இந்த சடுதியானதும், முழுமையானதுமான தோல்வியை புரிந்து கொள்ள முடியும்: புரிந்து கொள்ள வேண்டும். அப்போது மட்டும் தான் எந்த விதமான ஆரோக்கியமான முன்னெடுப்புக்களும் எதிர்காலத்தில் சாத்தியப்படும்.

சரி இப்போது நடந்து கொண்டிருப்பது பற்றி பார்ப்போம். புலிகளது மிச்ச சொச்சங்கள் நடந்து முடிந்தவற்றின் பாரதூரமான தன்மை குறித்தே புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்களா என்று தெரியவில்லை. தமது வியாபாரத்தை எவ்வாறு தொடர்வது என்பதன் பேரிலேயே இவர்களது கவனங்கள் குவிந்துள்ளன. தலைமையின் திருகுதாளங்கள் பற்றிய விழிப்புணர்வற்ற ஒரு பகுதி ஆதரவாளர்கள் இவர்களது இழுப்புக் கெல்லாம் இழுபடு அவலத்தை காண முடிகிறது. ஆனால் இந்த விதமான சுத்துமாத்து விளையாட்டுக்கள் நீண்ட காலத்திற்கு பயன்பட மாட்டாது. அதுவரையில் இவர்களை விட்டுப் பிடிப்பதைதவிர வேறு வழியில்லை என்றே படுகிறது. இவற்றைவிட புலிகளது மோசமான

www.tamilarangam.net

நடவடிக்கைகள் காரணமாக ஆத்திரமடைந்துள்ள ஒரு கணிசமான அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் உண்மையான போராட்ட சக்திகளாவர். இவர்கள் எமது அணிதிரட்டலின் இலக்காக கொள்ளப்பட வேண்டியவர்களாவர்.

யுத்தம் முடிவடைவதற்கு முன்பே புலம் பெயர் தமிழர்களின் ஒரு குழுவானது சிறீலங்கா அரச பிரதிநிதிகளை போய்ச் சந்தித்துவிட்டு வந்தார்கள். இவர்கள் அங்கு எல்லாம் திருப்தியாக இருப்பதாக அறிக்கை விடுத்துள்ளார்கள். மகிந்தர் நல்ல மனிதர்: அவரிடம் பேசித்தீர்க்கலாம்: என்று கதைவிடுகிறார்கள். சிறீலங்காவின் சமூக, பொருளாதார, அரசியல், இராணுவ, சித்தாந்த கட்டமைப்புக்களில் அடிப்படையான மாற்றங்கள் ஏதும் நிகழாமலேயே தீர்வு கிடைக்கும் என்றால் அது எப்படி என்பதை சம்பந்தப்பட்டவர்கள் விளக்க வேண்டும் அல்லவா? இவர்கள் கருதும் தீர்வு என்பது என்ன? அப்படிப்பட்ட ஒன்றை முன்வைப்பதற்கும் இந்த அரசு தயங்குவதேன்? இதனைத்தானே இத்தனை காலமும் சிங்கள தலைமைகள் செய்து வந்தன என்பது மறந்து போவதேன். சரி அப்படியாக முன்வைக்கப்பட்ட அரைகுறை தீர்வுகளும், சிங்கள பேரினவாதிகளது எதிர்ப்பினால் குப்பைக் கூடைக்கு போன பின்பும், இப்படிப்பட்ட ஒரு மயக்கம் இவர்களுக்கு வருவது எவ்வாறு சாத்தியப்படுகிறது என்று யோசித்துப்பார்க்க வேண்டும். அதேவேளை சிறீலங்கா அரசானது கிழக்கு மற்றும் வன்னிப் பிரதேசங்களில். தமிழ் தேசிய இயக்கத்தை நீண்ட காலத்தில் வேரறுக்கும் வகையில் பல நடவடிக்கைகளை திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கிறது. இவற்றை கண்டும் காணாதவர்கள் போல பாவனை காட்டுவதும் ஆரோக்கியமான செயற்பாடாக தெரியவில்லை. அத்தோடு தமது நடவடிக்கைகள் மூலமாக சிறீலங்கா அரசானது சங்கடத்திற்குள்ளாகக் கூடாது, தம்மைப் பற்றி தவறான அபிப்பிராயங்களை உருவாக்கி விடக்கூடாது என்று சொல்லும் போது, இவர்கள் யாருடைய நலன்களை உண்மையில் பிரதிநிதித்துவப் படுத்த முனைகிறார்கள். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது நலன்களை சிறீலங்கா அரசிற்கு பிரதிநிதித்துவம் செய்யப் போகிறார்களா? அல்லது சிறீலங்கா அரசை தமிழ் மக்கள் மத்தியில் பிரதிநிதித்துவப்படுத்த முயல்கிறார்களா? என்பது கட்டாயமாக வேறு பிரித்துப்பார்க்கப்பட வேண்டியவையாகும். இவர்களது மறைந்து கிடக்கும் நலன்கள் பற்றிய கேள்வியை எழுப்புகிறது.

இப்போதெல்லாம் பல்வேறு தரப்பினரும் சிறீலங்கா அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு புலம் பெயர் தமிழரது பிரதிநிதிகள் என்ற பெயரில் அடிக்கடி செல்கிறார்கள். இப்போது

www.tamilarangam.net

புலிகள் அமைப்பின் முன்னாள் ஆதரவாளர்களின் தவணை இது. இவர்களும் சென்று, முக்கிய அரச அதிகாரிகளை சந்தித்து பேசிவிட்டு வந்து நல்லவிதமாகத்தான் பேசத்தான் தொடங்கியிருக்கிறார்கள். இந்த கூட்டத்தில் பலவிதமான நபர்களும் கலந்து இருக்கிறார்கள். மீள் கட்டுமாணம் என்ற பெயரில் பெரியளவில் பணம் செலவிடும் வேலைத்திட்டங்கள் நாடு பூராவும் நடைபெறத் தொடங்கியுள்ளன. அதில் ஒரு பங்கைப் பெறுவது ஒரு தரப்பினரின் நோக்கமாக அமைகிறது. புதிதாக உருவாகி வரும் அரசியல் வெற்றிடத்தில் சில இடங்களை குறிவைக்கிறது ஒரு பகுதி: அரசியல் பதவியாக இல்லாவிட்டாலும் ஏதாவது நிர்வாக, இராஜதந்திர நாற்காலிகளுக்காக சிலர். பிரபல்யத்தைத் தேடி இன்னும் சிலர்: இதற்குள் துன்பப்படும் மக்களுக்கு ஏதாவது செய்துவிட முடியாதா என்று துடிக்கும் நேர்மையான சிலர். ஒட்டு மொத்தத்தில் இந்த கதம்ப கூட்டணி இப்போதைக்கு குழப்பியடித்தாலும் கூட, ஒரு குறிப்பிட்ட காலத்துள் நிலைமைகள் தெளிவுக்கு வரும்.

தமிழ் தேசியத்தை முன்னெடுப்பது ஏனைய ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவான மலையக, முஸ்லிம் மக்களையும், கிழக்கைச் சேர்ந்தவர்களையும், தலித் மக்கள் போன்றோரையும் அந்நியப்படுத்திவிடும் என்ற குற்றச்சாட்டு எழுகிறது. ஈழத் தமிழர் ஒரு ஒடுக்கப்பட்ட தேசம் என்ற வகையில் அந்த மக்கள் தமது ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுவதற்கு அனைத்து உரிமைகளும் உடையவர்கள் ஆவர். ஒரு தேசம் ஒடுக்கப்படும் போது தனது தேசிய அடையாளத்தின் அடிப்படையில் தான் போராடியாக வேண்டியுள்ளது. இதில் ஏனைய தேசங்கள் அந்நியப்படுவதற்கு என்ன இருக்கிறது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் விளக்க வேண்டும். கடந்த காலத்தில் புலிகள் தமிழ் தேசியத்தை தவறாக முறையில் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள் என்பதற்காக தமிழ் தேசியத்தை சரியாக யாருமே முன்னெடுக்க முடியாது என்பது என்ன விதியா? அப்படிப் பார்த்தால் சோசலிசம் என்ற பெயரால் கடந்த காலத்தில் நடைபெற்றவை அனைத்தும் சரியாகத்தான் இருந்தனவா? அதற்காக நாம் சோசலிசத்தை கைவிடச் சொல்லி கேட்பது முதலாளித்துவ நிலைப்பாடு ஆகாதா? அவ்வாறே தமிழ் தேசியத்தில் கடந்த காலத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாக தமிழ் தேசியத்தை கைவிடச் சொல்வது சிங்கள பேரினவாதத்திற்கே வாய்ப்பாக அமையும் ஒரு நிலைப்பாடாகும். தமிழ் தேசியமானது மலையக, முஸ்லிம் மக்களுடனான உறவுகளை எவ்வாறு பாதிக்கும்? கடந்த காலத்தில் முஸ்லிம் மக்களுடனான உறவு பாதிக்கப்பட்டதற்கு காரணம் தமிழ் தேசியம் அல்ல. மாறாக, வலதுசாரி பிற்போக்குவாதிகள் அதனை

www.tamilarangam.net

முன்னெடுத்ததேயாகும். இப்போதும் தமிழ் தேசியத்தை தலைமை தாங்குவதற்கு கிடைக்கும் வாய்ப்பை மீண்டும் உதறித் தள்ளினால் இந்த புரிந்துணர்வு எட்டப்படுவது சாத்தியமாகுமா? நாம்தான் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்றான பின்பு எப்படி தமிழ் - முஸ்லிம் நல்லிணக்கத்திற்கு பங்காற்றப் போகிறோம். அப்படித்தான் நாம் தனிநபர்களாக தனிப்பட்ட முஸ்லிம் தனிநபர்களுடன் நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொள்வதாக வைத்துக் கொண்டாலும், அந்த உறவானது எமது தேசங்களின் மனங்களில் ஆழமாக ஊருவியுள்ள தப்பெண்ணங்களை முறியடிக்காமல், வெறுமனே மேல்மட்டத்தில் அடையப்படும் ஒரு உடன்பாடு மட்டுமேயாகும். அந்தந்த தேசங்களை தலைமை தாங்கும் வலதுசாரிகள் இந்த நல்லுறவுகளை சிதைப்பதற்கு எத்தனை காலம் ஆகும். ஆதலால் இந்த உறவுகள் யாவும் கீழிருந்து மேலாக கட்டமைக்கப்பட வேண்டியவையாகும். இந்தவிதமான நல்லுறவுகள் முற்போக்கு சக்திகள் அந்தந்த தேசங்களின் தலைமையை ஏற்பதனால் மட்டும்தானே சாத்தியப்படும்.

ஒடுக்கப்பட்ட தேசங்களான தமிழ், மலையக, முஸ்லிம் மக்கள் இணைந்து கோரிக்கைகளை சிங்கள தேசத்தின் முன் வைப்பதன் மூலமாக தீர்வுகளைக் காணலாம் என்றால், இதைத்தானே தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைப்பதன் மூலமாக தமிழ் தேசம் செய்ய முனைந்தது. அதற்கு கிடைத்த பலன்கள் என்ன? சிங்கள தேசத்துடனான பிரச்சனைகள் என்பவை, அந்த தேசம் ஒடுக்கப்பட்ட மக்களது பிரச்சனைகளை புரிந்து கொள்ளாததுடன் சம்பந்தப்பட்டதா? இத்தனை காலம் கடந்த பின்னும் இன்னமும் சிங்கள் தலைமைக்கு விளக்குவது போன்ற அப்பாவித்தனங்களை விடுத்து விட்டு, ஒடுக்கப்பட்ட தேசங்கள் சார்பாக திட்டவட்டமான நிலைப்பாடுகளை மேற்கொள்வது அவசியம் என்பது தோன்றவில்லையா? ஈழத் தமிழரது தலைமையை அதே வலதுசாரி மேட்டுக்குடியிடம் விட்டுவிடுவதில் என்ன நன்மை இருக்கப் போகிறது. சிங்கள தேசம் பிரச்சனைகளை புரிந்து கொள்ளும் ஆற்றலுடன் இருந்திருந்தால் இந்த விடயங்கள் இப்படி உருவாகியிருக்கவே மாட்டாது அல்லவா? மொத்தத்தில் இது இன்னொரு மேட்டுக்குடிசார்ந்த காய் நகர்த்தலே அன்றி வேறில்லை.

தலித் மக்களது பிரச்சனையை தமிழ் தேசியத்திற்கு எதிராக முன்வைக்கப்படுகிறது. அவ்வாறே கிழக்கு மக்களது பிரச்சனையும் முன்வைக்கப்படுகிறது. தமிழ் தேசியத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்காக தமது கரங்களில் கிடைக்கும் அத்தனையையும் எடுத்து எறிவது போல தோன்றுகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் ஐக்கியத்தை சிதைப்பதும், அதனை அதன் கூறுகளாக உடைத்து, ஒன்றிற்கு எதிராக

www.tamilarangam.net

இன்னொன்றை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதும் தானே ஒடுக்குமுறையாளர்களின் வழமை. இங்கு மட்டும் என்ன நடக்கிறதாம். கிழக்கு பிரிந்து போக வேண்டும் என்பதில், தமிழ் தேசியத்தை சிதைப்பது என்பதற்கு மேலாக ஏதாவது அக்கறை சிங்கள அரசிற்கு இருக்கிறதா? தாழ்த்தப்பட்ட மக்களது உரிமைகளை தமிழ் தேசியம் கண்டு கொள்ளவில்லை என்பதில் இருந்து இந்த பிரிவினரை தமிழ் தேசியத்திற்கு எதிராக நிறுத்த வேண்டும் என்ற அக்கறை எவ்வாறு நியாயப்படுத்தப்பட முடியும்? தமிழ் மக்களின் சமூகக் கூறுகளில் ஒன்று என்ற வகையில், தேசிய ஒடுக்குமுறையின் ஏனைய அம்சங்களில் இருந்து இவர்கள் என்ன தனியாக விடுவிக்கப்பட்டுவிட்டார்களா?

அபிவிருத்தி நல்ல விடயம்தான். இதே அபிவிருத்திகளை பார பட்சம் காட்டாமல் அந்த நாளில் இருந்தே முன்னெடுத்து வந்திருந்தால் இந்த தேசிய பிரச்சனை என்ற ஒன்றே வந்திருக்காது அல்லவா? இவ்வளவு காலமும் இல்லாத அக்கறை அப்படியென்ன தமிழர் தாயகத்தின் மேல் சிறீலங்கா அரசிற்கு வந்துள்ளது. அப்படி உண்மையாகவே ஈழத் தமிழர்களை சமத்துவமாக நடத்த வேண்டும் என்று நம்பினால், அதனை முதலில் அரசில் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதில் காட்ட வேண்டும். ஒற்றையாட்சி, மற்றும் சிங்கக் கொடி போன்றவற்றை பல்தேச சமூகத்தை பிரதிபலிக்கும் விதத்தில் மாற்றியமைக்க வேண்டும். இவற்றை செய்யாமல், அதற்கான முன்மொழிவுகைளக் கூட முன்வைக்க முடியாதவர்கள் காட்டும் அபிவிருத்தி விளையாட்டுக்கள் எல்லாம் வெறும் கண்துடைப்புக்களே. இவை நீண்ட காலத்தில் தேசத்தின் நலன்களுக்கு ஊறு விளைவிப்பதை நோக்கமாக கொண்டவையே. அரசியலை பிழைப்பாக்கிவிட்ட சிலர் இவற்றை “விடிவு”, “வசந்தம்” என்று வர்ணிக்கலாம். ஆனால் அரசியல் அதிகாரம் இல்லாத அபிவிருத்திகள் என்பது அர்த்தமற்றவை என்பதை மக்கள் படித்து வருடங்கள் பல ஆகிவிட்டன.

யுத்தம் முடிந்ததும், யுத்தத்திற்கு காரணமான அரசியல் என்பது மறக்கப்பட்டு மக்களின் அவலம் என்பதே பிரச்சனையாக மாற்றப்படுகிறது. மக்களது துயரம் என்பது முக்கியமான பிரச்சனை என்பதில் யாருக்கும் வேறு கருத்தாக இருக்க முடியாது. ஆனால், இந்த அவலம் ஏன் நேர்ந்தது என்பது மறக்கப்பட முடியாத விடயம் அல்லவா? யுத்தம் என்பது அரசியலின் தொடர்ச்சியே. தேசிய ஒடுக்குமுறை என்ற அரசியலின் தொடர்ச்சியாகவே இந்த ஆயுத போராட்டமானது தோன்றியது. அதன் உச்ச கட்ட விளைவுகளே இந்த அவலங்களாகும். இதில் புலிகளின் பாத்திரம் பற்றி பேசுபவர்கள் அரசின் பாத்திரம் பற்றியும், யுத்தத்தின் பின்பு அது தான்

www.tamilarangam.net

“விடுவித்ததாக’’ கூறப்படும் மக்கள் தொடர்பாக நடந்து கொண்ட விதம் குறித்தும் காணாமல் இருக்க முடியாது. இந்த மக்களை முட்கம்பிகளின் பின்னால் அடைத்து வைத்துவிட்டு அவர்களுக்கு அரசு உதவுவதாக கூறுவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும். அந்த மக்கள் என்ன சொந்தமாக பிழைக்க முடியாதவர்களா? அவர்களை அடைத்து வைத்ததே தவறு. அதற்கு மேல் அவர்களுக்கு வழங்க வேண்டிய அன்றாடம் உயிர் வாழ்வதற்கு அவசியமான உணவு, உடை, இருப்பிடம், மற்றும் மருத்தவம் போன்றவற்றை கூட சரிவர வழங்காத அரசை ஏதோ உதவி நிறுவனம் போலக் கருதி, “தமிழ் மக்களுக்கு உதவியது அரசே’’ என்ற பாணியில் பேச முற்படும் போது இவர்களது அரசியல் என்பது கேள்விக்குள்ளாகிறது. அரச ஆதரவு குழுக்கள் வேண்டுமானால் இப்படியாக பேசிவிட்டுப் போகலாம். ஆனால் தமிழரது அரசியல் உரிமைகளில் அக்கறை உடையவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் இப்படியாக பேச முடியாது. மக்களை அவர்களது நடமாட்ட சுதந்திரத்தை மறுத்து அடைத்து வைப்பது பற்றிய பிரச்சனை ஏதோ தொண்டர் நிறுவனம் போல அரசு சிலாசித்துப் பேசப்படும் போது இவர்கள் இந்த பிரச்சனையின் அரசியலை தவற விடுவதாகவே கருத வேண்டியுள்ளது. இந்த இலட்சனத்தில் அரசின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது என்ற அக்கறையில் பேச முனைவது நகைப்புக்கிடமானது. முதலில் மக்கள் ஏன் இப்படிப்பட்ட நிலைக்கு உள்ளானார்கள் என்று பார்க்க வேண்டும். யுத்தத்தினால் என்றால், இந்த யுத்தம் ஏன் நடைபெற்றது? அது ஒரு அரசியலின் விளைவால் நடந்தது. தேசிய ஒடுக்குமுறையே அந்த அரசியலாகும். இந்த ஒடுக்குமுறைக்கு தீர்வு காண வழியற்ற எல்லா நடவடிக்கைகளும், இதேவிதமான யுத்தங்களையும், நெருக்கடிகளையும் திரும்பத் திரும்ப தோற்றுவிக்கவே வழி வகுக்கும். இதற்கான வழிவகைகளை காண முடியாத அரசானது இந்த ஒடுக்குமுறையை தொடர்வதாகவே அர்த்தப்படும். இவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்களே அன்றி பாராட்டப்பட வேண்டியவர்கள் அல்லர்.

புலிகளது முற்று முழுதான இராணுவ தோல்வியின் பின்னர் புலம் பெயர்ந்த புலிகளது தலைமையானது ‘நாடு கடந்த அரசொன்றை’ அமைப்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது. பொதுவில் ஒடுக்கப்பட்ட ஒரு தேசத்தைச் சேர்ந்த மக்கள் தமது அரசியல் முன்னெடுப்புக்களை சுதந்திரமாக முன்னெடுப்பது என்ற வகையில் இப்படிப்பட்ட முயற்சிகளை பல்வேறு ஒடுக்கப்பட்ட தேசங்களும் முன்னெடுத்தே வந்துள்ளன. ஏதோ ஒரு விதத்தில் ஒடுக்கப்பட்ட தேசத்தின் பலதரப்பட்ட பிரிவினரின் பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்து அவர்களது அரசியல் அபிலாசைகளை உலகறியுமாறு முன்னெடுப்பதே இப்படிப்பட்ட

www.tamilarangam.net

அமைப்புகளின் நோக்கமாகும். அந்த வகையில் இது மிகவும் காலம் தாழ்த்தி மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையே ஆகும். ஆனால் இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை இத்தனை காலமும் புலிகள் மேற்கொள்ளதாது ஏன் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது அல்லவா? புலிகளது தலைமையின் ஏக பிரதிநிதித்துவம் மற்றும், தனித் தலைமை போன்றவையே இப்படிப்பட்ட அரசியல் முன்னெடுப்புக்களை செய்வதற்கு தடையாக அமைந்தன. ஆனால் இப்போது காலம் தாழ்த்தித்தான் என்றாலும் செய்யும் போது, இந்த இடைக்காலத்தில் நடந்து போன மாற்றங்களும் புறந்தள்ள முடியாத பிரச்சனைகளாக முன்னிக்கின்றன. இந்தனை அழிவுகளையும் ஈழத்தமிழர் மீது ஏற்படுத்திய பின்பு, இந்த தவறுகளுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமல், அவற்றிற்கு காரணமான தவறான அரசியலை கட்டுடைக்காமல், தலைவரின் பாதையில் தொடர்வதாக கூறிக்கொண்டு மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களது அரசியல் தலைமையை ஏற்க முனைவது அனுமதிக்கப்பட முடியாததாகிறது. ஈழத் தமிழர் மத்தியில் ஒரு சக்தி என்ற வகையில் புலிகளது எதிர்கால அரசியல் பாத்திரத்தை யாரும் முன் கூட்டியே நிராகரித்துவிட முடியாது. ஆனால் அது கடந்த கால அரசியலில் இருந்து முறித்துக் கொள்வதால் மாத்திரமே சாத்தியப்படும். அப்படிப்பட்ட ஒரு மாற்றத்திற்கு புலிகள் அமைப்பு தயாராகாத வரையில் இந்த நாடு கடந்த அரசு பற்றிய முன்மொழிவானத புறக்கணிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிறது.

புலிகளது தோல்வியை அடுத்து புதிதாக முன்னெடுக்கப்படும் முன்முயற்சிகள் தொடர்பாக பலவிதமான சந்தேகங்களும், பயங்களும் முன்னேறிய பிரிவினர் மத்தியில் கூட காணப்படுவது தவிர்க்க முடியாததே. அவற்றில் அமைப்புக்கள் தொடர்பாக காணப்படும் பயப்பிராந்தியும் ஒன்றாகும். புலிகளது தவறான அரசியலை அமைப்புத்துறை சார்ந்து பொதுவான பிரச்சனையாக குறுக்கும் போக்கை அவதானிக்க முடிகிறது. இந்த பொதுமைப்படுத்தலானது எமது எதிரிகளைத்தான் பலப்படுத்தும் என்பதை மறக்க முடியாது. எமது எதிரி எப்போதும் பலமாக அமைப்பாகித்தான் இருக்கிறான். அவனை எதிர்ப்பவர்கள் தம்மை தனியான அமைப்பாக ஒழுங்கமைக்காமல் எந்தவிதமான எதிர்ப்பியக்கத்தையும் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது. அடுத்ததாக, நாம் ஒவ்வொருவரும் விரும்புகிறோமோ இல்லையோ ஏதோ ஒரு விதத்தில் அமைப்பாகியே இருக்கிறோம். குடும்பம், பாடசலைகள், வேலைத்தளங்கள், தொழிற்சங்கங்கள்.... போன்ற இன்னோரன்ன நிறுவனங்களில் அமைப்பாகியே உள்ளோம். ஆனால் எமது எதிர்ப்பியக்கங்களை அமைப்பாக்கம் செய்யும் போது மட்டும் அமைப்புத்துறை தொடர்பாக பயப்பிராந்தியை கிளப்புவது

www.tamilarangam.net

என்பது அமைப்புத்துறை பற்றிய பொதுப்புத்தி மட்டத்திலான புரிதலில் இருந்து பிறப்பதாகும்.

எதிர்ப்பியக்கங்கள் தம்மை நிறுவனமயப்படுத்திக் கொள்ளாமல் தமது நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பது (Organizing), ஒருங்கிணைப்பது (Coordination) என்பவை சாத்தியப்படப் போவதில்லை. அத்தோடு திட்டமிடுவது, தமது நடவடிக்கைகளுக்காக தயாரிப்புக்களை மேற்கொள்வது என்பனவும் அமைப்பின் ஊடாக மட்டுமே சாத்தியப்படும். இதனை விட தமது நடவடிக்கைகளை மதிப்பிடுவது, கற்றுக் கொள்வது, வெளிப்படையான தன்மை (Transparancy), பதில் சொல்லும் பொறுப்பு (Accountablity) என்பனவும் அமைப்பின்றி சாத்தியப்பட மாட்டாது. அங்கத்தவர்களது நடவடிக்கைகளை மதிப்பிடுவது, விமர்சனம் - சுயவிமர்சனம் என்பவையும் அமைப்பின் உள்ளேயே சாத்தியப்படும். அமைப்பாக்கம் பெறாதவரையில் நாம் ஒவ்வொரு நெருக்கடியின் போதும் நாம் எல்லாவற்றையும் முதலில் இருந்தே தொடங்கியாக வேண்டியிருக்கும். ஆங்கிலத்தில் இதனை "Re-inventing the wheel' என்பார்கள். இப்படியாக நாம் பாலபாடங்களை தாண்டிப் போக முடியாமல் தடுமாறிக் கொண்டிப்பதனால் நாம் நேசிக்கும் மக்களுக்கு எந்தவிதமான நன்மையையும் கொண்டு வருவதில்லை. கடந்தகால அனுபவங்கள், அவறின் மூலம் அமையப்பட்ட வெற்றிகள் போன்றவற்றை அடுத்த கட்ட போராட்டத்தில் பயன்படுத்த முடியாதவர்களாக ஆகிவிடுவோம். ஆதலால் போராட்டத்தின் தொடர்ச்சி, வளர்ச்சி போன்றவையும் அமைப்பாதல் இன்றி சாத்தியப்பட மாட்டார். கடந்த காலத்தில் நடைபெற்ற கட்டற்ற அராஜகவாதங்களுக்கு காரணம் அமைப்பல்ல. மாறாக அமைப்புத்துறையை தன்னியல்பாக முன்னெடுத்ததேயாகும். அமைப்புத்துறையை முற்றாக நிராகரித்தவர்கள் உண்மையில் அதன் அங்கத்தவர்களது சுதந்திரமான நடவடிக்கையை ஊக்குவிக்க முடியவில்லை. மாறாக, அந்தந்த அமைப்புக்களில் இருந்த கற்றறிந்த, பேசும் ஆற்றல் மிக்க சில மத்தியதர வர்க்க புத்திஜீவிகளது கரங்களில் அதிகாரங்களை குவிப்பதற்கே வழிவகுத்தது. இதனைத்தான் ஒரு பெண்ணியவாதி "அமைப்பின்மையின் கொடுங்கோன்மை" (The Tyarnny of Structurelessness) என்று குறிப்பிட்டார். இது தன்பங்கிற்கு மேட்டுக்குடி அரசியலுக்கே வழிவகுப்பதாக அமைந்தது.

இப்படி கூறுவதனால் நாம் ஏற்கனவே இடதுசாரி அமைப்புக்களில் காணப்படும் அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனைகளை புறக்கணிப்பதாக அர்த்தப்படுத்தத் தேவையில்லை. புரட்சிர அமைப்புக்கள் அதிகாரமயமாதல் பற்றிய பிரச்சனைகள் இப்போதும் நாம் முகம்

www.tamilarangam.net

கொடுத்து முறியடிக்க வேண்டிய பிரச்சனைகளாகவே கருதுகிறோம். இது உண்மையில் அமைப்புத்துறை பற்றிய பிரச்சனையை கோட்பாட்டு மட்டத்தில் அணுகி தீர்வு காண்பதால், பல்வேறு மாற்று அமைப்பு வடிவங்களின் நடைமுறை அனுபவங்களை பொதுமைப்படுத்தி ஆய்வு செய்வதனால் மட்டுமே சாத்தியப்படும். மாறாக, இந்த பிரச்சனையை பொதுப்புத்தி மட்டத்தில் அணுகி, அமைப்புத்துறையை அப்படியே நிராகரிப்பதானது ஒடுக்கப்படும் மக்களுக்கு, அவர்கள் கையில் இருக்கக் கூடிய ஒரேயொரு சாதனத்தையும் கைவிட்டுவிடுவதைக் குறிக்கும். ஆகவே அமைப்புத்துறை என்பது நிராகரிக்கப்பட வேண்டியதல்ல. மாறாக கோட்பாட்டு மட்டமத்தில் இன்னும் கராராக பரிசீலிக்கப்பட வேண்டியதாகும். இந்த விடயத்தில் எதிர்காலத்தில் ‘வியூகம்’ தனது கவனத்தைக் குறிக்கும் என்பதை மட்டும் இப்போதைக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்போது எமது சுயவிமர்சனத்திற்கான நேரம் வருகிறது. நாம் முன்னேறிய பிரிவினரின் ஒரு பகுதியினர் என்ற வகையில் கடந்த காலத்தில், போராட்டத்தில் நேர்ந்த தவறுகளில் எமது பாத்திரம் என்ன என்ற கேள்விக்கு பதில் கண்டாக வேண்டியுள்ளது. கடந்த காலத்தில் பல்வேறு குழுக்களிலும், தனிநபர்களாகவும் செயற்பட்ட பல்வேறு நபர்களும் எம்முடன் இணைந்து கொண்டிருந்தாலும், அரசியல் அமைப்பு என்ற வகையில் தொடர்ச்சியாக இயங்கி வந்தவர்கள் என்ற வகையில் ‘தமிழீழ மக்கள் கட்சி’ இலிருந்து வந்தவர்கள் முக்கிய கூறாக அமைகிறார்கள். மாற்று அமைப்பைக் கட்ட முனைந்தவர்கள் என்ற வகையில் எமது அனுபவங்கள், படிப்பினைகள் இப்போது முக்கியத்துவம் பெறுகிறது. அத்தோடு எமது சுயவிமர்சனமும் ஏனைய முன்னேறிய பிரிவினர் மத்தியில் கட்டாயமாக வேண்டப்படும் ஒன்றாக இருக்கிறது. ‘தீப்பொறி’ குழுவாக எமது தனியான அரசியலை முன்னெடுத்த நாம், பல வருட தலைமறைவு வாழ்க்கையின் பின்னால் 1998 எமது கொங்கிரசை கூட்டி ‘தமிழீழ மக்கள் கட்சி’ எனும் பெயரில் பகிரங்க அமைப்பாக செயற்பட முனைந்தோம். கொங்கிரசை கூட்டி தீர்மானங்களை எடுத்து அவற்றை செயற்படுத்த தொடங்கும் போது அமைப்பினுள் நடைபெற்ற பல்வேறு பிரச்சனைகள் காரணமாக அமைப்பானது 2000 ம் ஆண்டில் கலைந்து போனது. இப்படியாக நேர்ந்ததில் பல்வேறு தனிப்பட்ட, மற்றும் புறநிலை சார்ந்த அம்சங்கள் தாக்கம் நிகழ்த்தியது உண்மையே என்றபோதிலும், அமைப்பின் அரசியல் மற்றும் அமைப்புத்துறை சார்ந்த விடயங்களில் நடைபெற்ற தவறுகள் தீர்க்கமானவையாக அமைந்தன. அவற்றை சற்று விரிவாக நோக்குவோம்.

www.tamilarangam.net

கொங்கிரசானது முக்கியமான அரசியல் தீர்மானங்களை சரியாகவே எடுத்திருந்தது. தேசிய பிரச்சனையே முக்கியமான முரண்பாடாக இருப்பதால் இந்த முரண்பாட்டில் ஈழத் தமிழரின் பக்கமாக நின்று சிறீலங்கா அரசை எதிர்த்து போரிடுபவர்கள் என்ற வகையில் புலிகள் அமைப்பானது ஒரு தேசிய சக்தியாக வரையறுக்கப் பட்டார்கள். புலிகள் ஒரு தேசியசக்தி என்ற போதிலும் தமிழ் மக்களது நலன்களை முரணற்ற வகையில் முன்னெடுக்கும் திறனற்றவர்கள் என்று மதிப்பிட்டிருந்தது. அத்துடன் பல்வேறு பட்ட ஒடுக்கப்பட்ட பிரிவினரை தன்னுள் கொண்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பானது அந்தந்த ஒடுக்கப்பட்ட பிரிவினரின் நலன்களைக் காப்பதில் சிறிதும் அக்கறையற்று இருப்பதால் இந்த முரண்பாடுகள் அமைப்பினுள் பிரதிபலிக்கப்படுவதும், அதன் மூலமாக அமைப்பானது நெருக்கடிக் குள்ளாவதும் தவிர்க்க முடியாதது என்று எதிர்வு கூறியது. அத்துடன் புலிகளது தலைமையாது புரட்சிகர முற்போக்கு சக்திகளினால் இடம்பெயர்க்கப்படுவது தவிர்க்கப்பட முடியாதது என்று எதிர்வு கூறியது. ஆதலால் தமிழ் மக்கள் மத்தியில் சித்தாந்த மேலாண்மையை நிறுவதில் அக்கறையை குவிப்பது எனவும், இதன் மூலமாக புலிகளை அரசியல் ரீதியாக நெருக்குதலுக்கு உள்ளாக்கி, அவர்களது ஏகபிரதிநிதித்துவ தலைமை மற்றும் பிற பிற்போக்கு நிலைப்பாடுகளை கைவிடச் செய்வது என்றும், இதற்கு அவர்கள் முன்வராத போது புலிகளது தலைமையை தனிமைப்படுத்தி தமிழ் மக்களது அரசியல் தலைமையை கைப்பற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தனது அரசியல் தீர்மானங்களை சரிவர மேற்கொண்டிருந்தாலும், அமைப்புத்துறையில் போதிய பயிற்சியின்மை முக்கிய பிரச்சனையாக எதிர் கொள்ள நேரிட்டது. அமைப்பினுள் முன்னெடுக்கப்படும் தவறான வேலைமுறைகளை இனம் கண்டு உரிய நேரத்தில் அவற்றுக்கு எதிராக செயற்பட முக்கிய தலைமைத் தோழர்களே போதிய விழிப்புணர்வு அற்றவர்களாக இருந்தார்கள். அமைப்பின் முக்கிய உறுப்பினர்களே அமைப்பின் கூட்டு முடிவுகளுக்கு மாறாக தன்னிச்சையாக சில முடிவுகளை எடுத்து அவற்றை செயற்படுத்த முனைந்த போது அமைப்பினுள் பிரச்சனை ஏற்பட்டது. 2000 ம் ஆண்டில் நடைபெற்ற ஆனையிறவு தாக்குதல்களை அடுத்து புலிகளின் தலைமையை ஏற்றுக் கொள்வது என்று ஒரு பகுதியினர் கொங்கிரஸ் தீர்மானங்களுக்கு மாறாகவும், அமைப்பின் கூட்டாக முடிவெடுக்கும் விதிமுறைகளுக்கு விரோதமாகவும் தீர்மானித்தார்கள். இதனை எதிர்த்து அமைப்பின் சாதாரண அங்கத்தவர்கள் போராடிய அளவிற்கு தலைமைக் குழுவைச் சேர்ந்த அங்கத்தவர்கள் போராட தயங்கியதனால் அமைப்பின் பெரும்

www.tamilarangam.net

பகுதியினர் வெளியேறவும் இறுதியில் அமைப்பானது கலைந்து போகவும் காரணம் ஆனார்கள்.

அங்கத்தவர்களது நீண்ட பரிசீலனைக்கும், கூட்டான முடிவுகளுக்கும் மேலாக தனிநபர்கள் தமது தனித்திறமைகளை கருதியதுடன், தமது தனித்திறமையை வெளிப்படுத்த அமைப்பு வழிமுறைகள் தடையாகவும் இருப்பதாக உணர்ந்தார்கள். இதனால் அமைப்பு நடைமுறைகளை மீறி நடக்கலானார்கள். இது அப்பட்டமான ஒரு மேட்டுக்குடி மனோபாவமாகும். இன்று அவர்களது முடிவுகளது பிழையான தன்மையை வரலாறு நிரூபித்துள்ளது. தலைமை அங்கமானது முறையாக தனது வழிகாட்டலை வழங்க திறனற்று இருந்ததனால் மேற்கொண்டு போராட்டத்திற்கும், தனது அங்கத்தவர்களுக்கும் தலைமை தாங்கும் தகுதி இன்றி அமைப்பானது தகர்ந்து போக காரணமாயிற்று. இது உலகக் கண்ணோட்டம் தொடர்பான பிரச்சனையுடனும் தொடர்புடையதாகிறது. 'இலக்கு – வழிமுறை' மற்றும் 'வரலாற்றில் தனிநபர்களது பாத்திரம்' போன்ற பிரச்சனைகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. ஆழமாக பார்த்தால் இந்த பிரச்சனைகளைப் பொறுத்தவரையில் இந்த அமைப்பானது இப்படிப்பட்ட அடிப்படையான பிரச்சனைகளில் விடுதலைப் புலிகளை விட மேம்பட்ட கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதே உண்மையாகும். இதுவே எமது தோல்விக்கு பிரதானமான காரணமாயிற்று. அமைப்பானது தான் எடுக்கும் அத்தனை முடிவுகளையும் அதன் அங்கத்தவர்கள் அனைவரும் உடனடியாக சரிவர பற்றிக் கொள்ள மாட்டார்கள் என்பது உண்மையே. ஆனால் கொங்கிரஸ் தீர்மானங்களும், அமைப்பு வழிமுறைகளும் சரிவர கடைப்பிடிக்கப் பட்டிருக்குமானால் ஒரு விடாப்பிடியான நீண்ட போராட்டத்தின் மூலமாக, அமைப்பினுள் நடைபெறும் உட்கட்சிப் போராட்டத்தின் மூலமாக அதன் அங்கத்தவர்கள் அமைப்பு மேற்கொண்ட அரசியல் தீர்மானங்கள் தொடர்பாக போதிய விளக்கங்களைப் பெறவும், சரியான அரசியலை பற்றிக் கொள்ளவும் சாத்தியப் பட்டிருக்கும். ஆனால் இந்த இரண்டுமே கைவிடப்படும் போது அமைப்பு நடைமுறைகள் என்பவையே வெறுமனே சுத்துமாத்து செயற்பாடுகள் போல போய் முடிந்தன.

1997 இல் 'தீப்பொறி' அமைப்பும், அதன் கோட்பாட்டு சஞ்சிகையான 'உயிர்ப்பு' உம் முன்னேறிய பிரிவினர் மத்தியில் செல்வாக்கு மிக்கவையாக திகழ்ந்தன. பத்து வருடத்திற்கும் மேலாக தலைமறைவாக செயற்பட்டு, பல தோழர்களது உயிர்கள் உட்பட பல இழப்புக்களின் ஊடாகத்தான் இந்த குழுவானது இந்த நிலையை அடைந்தது. கணிசமான காலம், உழைப்பு மற்றும் ஏனைய வளங்கள்

www.tamilarangam.net

என்பவற்றை செலவிட்டே தனது கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்த படிப்பிணைகளைப் பெற்றுக் கொண்டது. புலிகளது நேரடித் தாக்குதல் உட்பட தலைமறைவின் பல்வேறு கஷ்டங்களையும் தாங்கி முன்னேறிய ஒரு அமைப்பானது, பகிரங்கமாக செயற்படத் தொடங்கியதும் உள் முரண்பாடுகளினால் சிதைந்து போவது என்பது மிகவும் துரதிஷ்டவசமானது. தமிழ் மக்களது அரசியல் எதிர்காலம் பற்றி நம்பிக்கையூட்டும் அமைப்பாக பலராலும் கருதப்பட்ட இந்த அமைப்பின் இழப்பானது தமிழர்களது தேசிய இயக்கத்தில் நடந்த பெரிய இழப்பாகும். அதுவும் பின்னாளில் புலிகள் கண்ட பின்னடைவுகளுடன் இதனை இணைத்துப் பார்க்கும் போது இதன் இழப்பு மிகவும் பெரியதாகவே படுகிறது. பிற்காலத்தில் பல்வேறு முன்னேறிய பிரிவினர் மத்தியிலும் இந்த இடைவெளியானது உணரப்பட்டது. புலிகள் அமைப்பினுள் இருந்த ஒரு பகுதியினர் கூட மாற்று சக்திகள் இல்லாத நிலைமையானது புலிகள் அமைப்பினுள் தமது நிலைமைகளை பலவீனப்படுத்தியதாக உணர்ந்தனர். மக்களுக்கு என்ன சொல்கிறோம் என்பதை விட அமைப்பினுள் அந்த முடிவுகளை எப்படி எடுக்கிறோம் என்பது முக்கியமான படிப்பினையாக இப்போது மிஞ்சியிருக்கிறது.

இதே போன்ற படிப்பினைகள் எம்மைத் தவிர்ந்த ஏனைய சிறு குழுக்கள் மற்றும் தனிநபர்களது நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஏற்பட்டே இருக்கும் என்பதை எம்மால் உணர முடிகிறது. குறிப்பாக ஏனைய வெகுஜன அமைப்புக்களில் செயற்பட்டவர்களது களைப்பு, போராட்டத்தின் மீதான நம்பிக்கையில் தளர்வு, விடாப்பிடியான ஒரு அரசியல் போராட்டத்திற்கு தயாரற்ற எமது குட்டிமுதலாளிய மனோபாவம் என்பவை இங்கும் முக்கியமான பாத்திரம் வகிக்கிறது. புலிகள் மாற்று சக்திகளை இயங்க அனுமதிக்கவில்லை என்பது ஓரளவிற்குத்தான் உண்மையானது. புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்த முன்னேறிய பிரிவினரை பலவீனப்படுத்தியது புலிகளது நடவடிக்கைகள் அல்ல. மாறாக அவர்களது சொந்த பலவீனம், மற்றும் அரசியல் ரீதியான வளர்ச்சியின்மை போன்றவையே. புற நிலைமைகள் எதுவும் நம்பிக்யையூட்டும் படியாக இருக்கவில்லை என்பதும், மாற்று அமைப்புக்கள் எதுவும் பகிரங்கமாக செயற்படவில்லை என்பதும் ஒரு பகுதிக் காரணமாக மட்டுமே திகழ முடியும். பாட்டாளிவர்க்கமானது தன்னை எவ்வாறு ஒழுங்கமைத்து தலைமை தாங்குவது என்பதை கற்றுக் கொள்ள நீண்ட காலம் எடுக்கலாம், என்ற கார்ல் மார்க்சின் வாசகங்களை நினைவூட்டிக் கொள்வது இங்கு பயனுள்ளதாக இருக்கும்.

www.tamilarangam.net

இப்போது நாங்கள் முன்னேறிய பிரிவினரின் இன்றைய நிலைமை பற்றி பார்ப்போம். எம்மிடம் ஒரு முறையான அமைப்பு கிடையாது. அதனை உருவாக்குவதற்கு அவசியமான கோட்பாட்டு, அரசியல் மற்றும் அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனைகள் தொடர்பான ஆரம்ப விவாதங்களைக் கூட நாம் இன்னமும் தொடங்கவில்லை. அதற்குள் மக்களிடம் போவது பற்றிய பிரச்சனைகள் முன்னுக்கு கொண்டு வரப்படுகிறது. சரி அப்படி போவதாக வைத்துக் கொள்வோம். அவர்களிடம் கொண்டு போவதற்கு எம்மிடம் என்ன இருக்கிறது? குறைந்த பட்சம் ஒரு அமைப்பு, அதற்கான திட்டம், மக்களை அணிதிரட்டுவதற்கான வழிமுறைகள் போன்ற எதுவுமே இன்றி மக்களிடம் போவது என்பது தன்னியல்பாக செயற்படுவது என்றே அர்த்தப்படும். கடந்த கால தவறுகளில் தன்னியல்புவாதம், பொதுப்புத்தி ஆகிய இரண்டிற்கும் மிகவும் குறிப்பான, முக்கியமான பாத்திரம் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. இங்கே பிரச்சனை இருப்பது முன்னேறிய பிரிவினரிடம்தான். அவற்றை களைவதற்கு முயற்சிகளை எடுப்பதற்கு பதிலாக மக்களுக்கு பாடம் கற்பிக்க முனைவது தவறானதாகும்.

இன்று எமது தேசம் முகம் கொடுக்கும் பிரச்சனைகளுக்கு நீண்ட காலத்தில் தீர்வு காணக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக நாம் ‘மே 18 இயக்கம்’ எனும் அமைப்பை தோற்றுவித்துள்ளோம். இது ஒரு அரசியல் முன்னணி அமைப்பாகும். முன்னேறிய பிரிவினர் மத்தியில் காணப்படும் கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனை முகம் கொடுப்பதை இலக்காக கொண்டு இந்த அமைப்பானது தனது செயற்பாடுகளை முன்னெடுக்கும். ‘வியூகம்’ இதழானது இந்த அமைப்பின் உத்தியோகபூர்வமான கோட்பாட்டு, அரசியல் இதழாக செயற்படும். அந்த வகையில் எமது தேசத்தினதும், ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரதும் விடுதலையை மையமாக கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த முக்கியமான பணியில் இணைந்து கொள்ளுமாறு எமது தேசத்தினதும், ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரதும் விடுதலையில் அக்கறையுள்ளஅத்தனை முன்னேறிய பிரிவினரையும் ‘வியூகம்’ திறந்த மனதோடு வரவேற்கிறது.

ஆசிரியர் குழு
வியூகம்.
டிசம்பர், 2009.

தொடர்புகளுக்கு:
**viyooham@gmail.com**

www.tamilarangam.net

# தேசியவாதம் குறித்த சில கருத்துக்கள்....

***தேசபக்தன்.***

இந்த குறிப்பானது நாவலன் அவர்கள் 'இனியொரு' என்ற இணையத்தளத்தில் எழுதிய '***ஈழத் தமிழ் பேசும் மக்கள் தனித்தேசிய இனம்?***' என்ற கட்டுரை குறித்தே எழுதப்படுகிறது. இந்த கட்டுரையானது உலகமயமாதல், தேசங்களின் தோற்றம், தேசங்களை வரையறை செய்வது தொடர்பான பிரச்சனைகள், ஈழத் தமிழர் தொடர்பான சிக்கல்கள் ...... இப்படி பல விடயங்களைப் பேசிச் செல்கிறது. எனது அபிப்பிராயத்தில் இந்த கருத்தாக்கங்கள் எல்லாம் முறையாக, கோர்க்கப்பட்டு ஒரு முழுமையான வாதத்தை முன்வைக்கத் தவறிவிட்டதாகவே நான் உணர்கிறேன். எனினும் இன்றைய காலகட்டத்தில் அவசியமான ஒரு விவாதப் பொருளை முன்வைப்பதனால் இந்த கட்டுரை தொடர்பாக எனது கருத்துக்களை சுருக்கமாக முன்வைப்பது அவசியம் எனக் கருதுகிறேன். இந்த குறிப்பானது மேற்குறித்த கட்டுரைக்கு பதிலளிப்பதையே முதன்மையான நோக்கமாக கொண்டிருந்த போதிலும், சமகாலத்தில் உலகமயமாதல் பற்றி முன்வைக்கப்படும் இன்னும் சில கருத்துக்கள் தொடர்பாகவும் தொட்டுச் செல்வது தவிர்க்க முடியாததாக அமைந்துவிடுகிறது.

தேசியவாதம் பற்றிப் பேசப்படும் போது நாவலன் அவர்கள், முதலாளித்துவத்தின் தோற்றத்தோடு முன்னுக்கு வந்த தேசியவாதம் பற்றி மட்டுமே பேசுகிறார். முதலாளித்துவத்தின் தோற்றமானது தேசியவாதத்தை முன்னுக்கு கொண்டுவந்ததோடு, தேச – அரசை முதலாளித்துவ நவீன சமூகத்தின் நியமமாக ஆக்கியது என்ற வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயலாக இருப்பினும் கூட, தேசியவாதத்தை இந்த ஒரு போக்குடன் மட்டும் மட்டுப்படுத்திக் கொள்வது, அதனை எல்லாவிதமான தேசிய வெளிப்பாடுகளையும் அளப்பதற்கான கருவியாக கொள்வது பிரச்சனைக்குரிய ஒரு விடயமாகிறது. ஏனெனில், நவீன சமூகத்தில் தேசியவாதமானது முதலாளித்துவத்தின் தோற்றம் தவிர்ந்த இன்னும் பல குறிப்பான சூழ்நிலைகளில் மிகவும் அதிகளவில் வெளிப்பட்டுள்ளது. நாம் வரலாற்றுரீதியாக பார்த்தால், தேசியவாதத்தின் தோற்றத்தை பின்வரும்

www.tamilarangam.net

முக்கியமாக ஐந்து நிகழ்வுப் போக்குகளுடன் இணைத்து அடையாளம் காணலாம்.

1. **முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் கூடிய தேசியவாதம்.**
2. **கொலனித்துவ நாடுகளில் தோன்றிய, குடியேறியவர்களால் முன்வைக்கப்பட்ட‘கிரியோல்’ தேசியவாதம் (Creole Nationalism)**
3. **குடியேற்ற நாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்களால் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டங்களுடன் கூடிய தேசியவாதம்.**
4. **வளர்ந்த தேச அரசுகளினுள் வாழ்ந்த புறக்கணிக்கப்பட்ட மக்களால், அககொலனித்துவ முறைமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தேசியவாதம்.**
5. **கொலனித்துவத்திற்கு பின்பான காலங்களில் விடுதலை அடைந்த நாடுகளில் ஒடுக்கப்பட்ட தேசங்கள் முன்வைக்கும் தேசியவாதம்.**

இப்படியாக குறைந்த பட்சம் ஐந்து விதமான தேசியவாதங்களை வரலாற்றில் நாம் காண முடிகிறது. இப்படியாக வேறுபட்ட வரலாற்று நிலைமைகளின் கீழ் உருவான தேசியவாதத்தின் பண்புகளை, குறிப்பிட்ட ஒரு வரலாற்றுச் சூழலில் எழுந்த - முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் உருவான - தேசியவாதத்தின் அளவுகோல்களை பயன்படுத்தி மதிப்பிட முற்படும் போது பிரச்சனைகள் உருவாகின்றன.

தேசங்களை எவ்வாறு இனம் காண்பது என்ற கேள்வியுடன் தொடங்கும் நாவலன், ஸடாலினின் தேசம் பற்றிய வரையறையை தொடங்கு புள்ளியாக முன்வைக்கிறார். ‘ஸ்தூலமான நிலைமைகளில் ஸ்தூலமான ஆய்வு’ என்பதே மார்க்சியத்தின் இயக்கவியல் பொருள்முதல்வாத அணுகுமுறையாகும். எனவே தேசம் பற்றிய வரையறைகளையும் சூத்திரங்களில் இருந்து தொடங்காமல் அவற்றின் வாழ்நிலையில் இருந்து, அவற்றின் அரசியல் போராட்டங்களில் இருந்து தொடங்குவதே சரியான ஆய்வாக இருக்க முடியும். சூத்திரங்கள் யாவும் செய்யக் கூடியதெல்லாம், அதுவரை காலமும் வரலாறு அளித்த சான்றுகளை

பொதுமைப்படுத்தி, சூட்சுமப்படுத்துவது மட்டும்தான். வரலாறு புதிது புதிதாக உண்மைகளை எம்முன் வைக்கும் போதெல்லாம் சூத்திரத்தின் துணை கொண்டு அவற்றை அளந்து பார்த்து நிராகரிக்காமல், இந்த சூத்திரங்களையே நாம் கேள்விக்குள்ளாக்குவது அவசியமானதாகிறது.

## மார்க்சியமும் தேசியவாதமும்

**மார்க்சியத்தைப் பொறுத்தவரையிலும் தேசிய பிரச்சனை தொடர்பாக திட்டவட்டமான சில கோட்பாட்டு வகைப்பட்ட நிலைப்பாடுகளை சரியாக வகுக்க முனைந்தவர் லெனின் தான் என்றாலும் அவரும் கூட எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் பொருத்தமான ஒரு வரையறையை வகுக்க முனையவில்லை. இப்படியாக எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் பொருத்தமான ஒரு சூத்திரத்தை பற்றி சிந்திப்பதே ஒரு மார்க்சிய அணுகுமுறையாகாது அல்லவா?** அன்று ரஷ்ய போல்ஷேவிக்குகள் ஒரு பாட்டாளி வர்க்க புரட்சியை எதிர்கொண்ட நிலைமைகளின் கீழ் ரஷ்ய பேரரசினுள் இருந்த ஒடுக்கப்பட்ட தேசங்கள் தொடர்பாக நிலைப்பாட்டை மேற்கொள்வதே அவரது நோக்கமாக இருந்தது. அந்த முயற்சியானது தவிர்க்க முடியாத வகையில் தேசிய பிரச்சனை தொடர்பான ஒரு கோட்பாட்டை முன்வைப்பதை நிர்ப்பந்தித்தாலும் கூட, அவர் தேசியவாதம் தொடர்பாக ஒரு முழுமையான கோட்பாட்டை உருவாக்கும் நோக்கத்துடன் செயற்படவில்லை. அவர்களது உடனடி இலக்காக இருந்தது ஒரு புரட்சியை நோக்கி முன்னேறும் கொம்யூனிஸ்ட்டுக் கட்சியானது, தேசிய பிரச்சனை குறித்து எப்படிப்பட்ட நிலைப்பாட்டை முன்வைப்பது பற்றிய அக்கறையே. அதிலும் ஒடுக்கப்பட்ட தேசங்களது நம்பிக்கையை பெறும் நோக்கத்துடனேயே இந்த அணுகுமுறைகள் முன்வைக்கப்பட்டன. இந்த வகையில் **தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய லெனினது நிலைப்பாடு மிகவும் முக்கியமானது.** இருப்பினும் கூட, இநத நிலைப்பாட்டை அப்படியே, ஒரு புரட்சிக்கு தயாரற்ற சூழ்நிலையில், ஒடுக்கும் தேசத்தின் இடதுசாரிக் கட்சிகளே தேசியவாதத்தின் கருவிகளாக செயற்படும் நிலைமைக்கு யாந்திரீகமாக பொருத்திப் பார்ப்பது என்பது மிகவும் பாதகமான நிலைமைகளை உருவாக்கிவிடும். இது ஒடுக்கும் தேசத்தின் பாட்டாளி வர்க்கத்திற்கோ, ஒடுக்கப்படும் தேசத்திற்கோ எந்த விதமான நன்மைகளையும் தந்துவிடாது.

www.tamilarangam.net

## ஸ்டாலினின் வரையறையின் பற்றாக்குறைகள்

மாக்சியத்தின் வரலாற்றில் ஸ்டாலின் மிகவும் ஒரு சர்ச்சைக்குரிய தலைவராவார். அவரது கோட்பாட்டு நிலைப்பாடுகள் அத்தனை ஆரோக்கியமானவையாக இருந்ததில்லை. அதிலும் இந்த தேசம் பற்றிய ஸ்டாலினது வரையறையை லெனின் எந்த இடத்திலும் வெளிப்படையாக ஆதரித்து எழுதியவரும் அல்லர். இப்படிப்பட்ட நிலைமையில் ஸ்டாலினின் வரையறையில் இருந்து தொடங்குவதே ஒரு ஆரோக்கியமான கருத்தாடலுக்கு துணையாக இருக்காது என்பதே எனது அபிப்பிராயமாகும். அத்தோடு ஸ்டாலினது வரையறையானது மிகவும் பற்றாக்குறையானது என்று பல மார்க்சியவாதிகள் தொடர்ந்தும் விமர்சித்து வந்துள்ளார்கள். ஸ்டாலினின் வரையறை செய்வதெல்லாம் முதலாளித்துவத்தின் தோற்றத்தின் போது, தேச அரசுகள் உருவாகிய காலகட்டத்தில் நிலவிய நிலைமைகளை பொதுமைப்படுத்துவது மட்டும்தான். மிஞ்சி மிஞ்சிப் போனால் இது செய்யக் கூடியதெல்லாம், அந்த நிலைமைகள் பற்றிய **விபரணங்களை** தரக்கூடியது மட்டும்தான். இப்படிப்பட்ட ஒரு **வரையறுக்கப்பட்ட பாத்திரத்தை மட்டும் ஆற்றக் கூடிய ஒரு சூத்திரத்தை**, **வரலாற்றில் மிகவும் செழுமையான ஒரு நிகழ்வுப் போக்கை புரிந்து கொள்ள பயன்படுத்த முனைவது மிகவும் பற்றாக்குறை உடைய தன்மையையே காட்டுகிறது.**

தேசம் என்பது ஸ்டாலின் குறிப்பிட்ட **பொதுவான மொழி, பாரம்பரிய பிரதேசம், வரலாற்று உணர்வு, பொதுவான பொருளாதாரம், மற்றும் காலச்சார உணர்வு** ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு மட்டுமல்ல, இன்னும் பல அம்சங்களை அடிப்படையாகக் கொண்டும் உருவாகலாம் என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. அத்தோடு மேலே குறிப்பிட்ட அம்சங்களில் சில இல்லாத சமூகங்கள் கூட தேசங்களாக உருப்பெற்று தேச – அரசுகளை நிறுவியதும் வரலாற்றில் கண்கூடு. **மதம், பொதுவான ஒடுக்குமுறை, செய்திப் பத்திரிகை, குடிசன மதிப்பீடு, "தேசப்படம்" (Map)** போன்ற இன்னும் பல அம்சங்கள் ஒரு தேசத்தை உருவாக்குவதில் பங்களிக்கலாம். இதில் எத்தனை அம்சங்கள் இருந்தாலும் ஒரு மக்கள் கூட்டமானது தன்னளவில் ஒரு தேசமாக உருவாகிவிடமாட்டாது. இவை எல்லாவற்றையும் விட அவற்றின் பிரக்ஞை மிகவும் முக்கியமானது. அதாவது, இவை ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டமானது தன்னை ஒரு தேசமாக உணர்வது இங்கு மிகவும் முக்கியமான அம்சமாகும். இதனை குறிக்கும் விதத்தில்தான் பிரெஞ்சு தத்துவவியலாளரான 'ஏர்னெஸ்ட் ரெனன்' (Ernest Renan)என்பவர், தேசம் என்பது **'அன்றாட மக்கள் கருத்து'** (Daily Plebiscite) என்று

www.tamilarangam.net

குறிப்பிடுகிறார். இப்படியாக ஒரு மக்கள் கூட்டம் தன்னை ஒரு தனியான தேசமாக உணர்வதில் அதன் அரசியல் மிகவும் முக்கியமான பாத்திரம் வகிக்கிறது. இதனை கருத்திற் கொண்டுதான் தேசம் என்பது ஒரு **"வரலாற்று விபத்து"** என்று கூறுவார்கள். இப்படி கூறுவதன் அர்த்தம் எந்தவொரு தேசத்தின் உருவாக்கத்திலும் அதன் தலைவர்கள் பிரக்ஞை பூர்வமாக ஆற்றிய பாத்திரத்தை குறைத்து மதிப்பிடுவதல்ல. மாறாக மொழியின் உருவாக்கம், அதன் சொற்களஞ்சியத்தை (Glossary) தொகுத்தவர்களது பாத்திரம், அரசியல் கட்சிகளது செயற்பாடுகள் போன்றவை எந்தவொரு தேசத்தின் தோற்றத்திலும் முக்கியத்துவம் பெறுகின்றன. இன்னும் சொல்வதானால் இப்படிப்பட்டவர்களது முயற்சிகள் இல்லாமல் ஒரு தேசம் உருப்பெற்றுவிட முடியாது. ஆனால் இந்த "வரலாற்று விபத்து" என்ற வாசகமானது இந்த முயற்சிகளை விட இன்னொரு அம்சத்திற்கு தேசங்களின் உருவாக்கத்தில் உள்ள பாத்திரத்தை வலியுறுத்துகிறது. அதுதான் வரலாறாகும். அதாவது, எந்தெந்த சமூகங்கள், எப்படிப்பட்ட நிலைமைகளின் கீழ், தேசமாக உருப்பெறும் என்பதை முன்னரே கணித்துக் கூறுவதன் சாத்தியமற்ற தன்மையை தான் இது சுட்டிக் காட்டுகிறது. அதாவது பல்வேறு சமூகங்களின் புத்திஜீவிகள், அதன் மொழி, சொற்சொற்களஞ்சியம், அரசியல் கட்சிகள் போன்றவற்றை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றிய போதிலும், அந்தந்த சமூகங்கள் எல்லாமே தனியான தேசங்களாக உருப்பெற்று விடுவதில்லை. மாறாக குறிப்பான சில சமூகங்கள் மட்டும், குறிப்பான நிலைமைகளின் கீழ் இந்த அம்சங்களின் பலவற்றின் கூட்டான செயற்பாட்டின் விளைவாக தேசங்களாக உருப்பெறுகின்றன. இப்படியாக உருவாவதில் குறிப்பிட்ட சமூகத்தின் அரசியல் பிரக்ஞை மிகவும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. எந்தெந்த சமூகங்கள் தம்மை தனியான தேசங்களாக இனம் கண்டு, தனியான அரசை நோக்கி தனது அக்கறையை குவிக்கிறதோ, அந்தந்த சமூகங்கள் மட்டுமே தேசங்களாக உருப்பெருகின்றன. அந்த அர்த்தத்திலேதான் பெனடிக்ட் அன்டர்சண் அவர்கள் தேசங்களை **கற்பிதம் செய்துகொண்ட சமூகங்கள்** (Imagined Communities)என்பார். இங்கு கூறப்படும் கற்பிதம் என்பது ஒரு **ஐதீகம்** என்ற அர்த்தத்தில் அல்லாமல், அந்த **தேசிய பிரக்ஞையின்** பாத்திரம் குறித்துத்தான் கூறப்படுகிறது என்பதை குறித்துக் கொள்வது பயனுள்ளதாக அமையும்.

www.tamilarangam.net

## முதலாளித்துவத்தின் கீழ் சந்தையும், உற்பத்தியும்

முதலாளித்துவத்தின் கீழ் தேசங்கள் உருவாவதில் சந்தைக்கு உரிய முக்கியத்துவத்தை நாவலன் வலியுறுத்துகிறார். அதிலும் குறிப்பிட்ட சமூகங்கள் தேசங்கள் தானா என்பதை கண்டறிவதற்கு அவை முதலாளித்துவ சந்தையை கொண்டுள்ளனவா என்ற அளவுகோலை பாவிக்க முனைகிறார். இது மிகவும் பற்றாக்குறையுள்ள பார்வை என்றே கருதுகிறேன். முதலாளித்துவத்தின் கீழ் ஒரு பொதுவான **சந்தையின்** முக்கியத்துவமானது, ஒரு பொதுவான அரசை, அதன் கீழுள்ள பொதுவான பிரதேசத்தை வேண்டி நின்றாலும் கூட, இந்த சந்தையை விட முக்கியமாக, முதலாளித்துவத்தின் **உற்பத்தி நிலைமைகளே** இந்த தேசத்திற்கான பொதுவான மொழியை வேண்டி, உருவாக்கியும் கொள்கிறது என்பதை 'ஏனெர்ஸ்ட் கெல்னர்' (Ernest Gelner)என்பவர் வலியுறுத்துகிறார். முதலாளித்துவத்திற்கு முந்தி நிலவும் சிறு பண்ட உற்பத்தியானது, தனிப்பட்ட அளவிலும், உள்ளூர் மட்டத்திலும் நடைபெற்ற உற்பத்தி மற்றும் நுகர்வைக் குறிக்கிறது. ஆனால் முதலாளித்துவத்தின் வரவானது, இந்த உள்ளூர் நிலைமைகளைக் கடந்து உற்பத்தி சாதனங்களை பொதுமைப் படுத்துகிறது. இதில் உழைப்பதற்கு பலவகைப்பட்ட பின்னணிகளிலும் இருந்து வரும் பாட்டாளிகளை ஒன்றாக குவிக்கிறது. இவர்கள் பல்வேறு வட்டாரங்களில் இருந்து வந்தவர்கள். பலதரப்பட்ட பேச்சு மொழிகளை கொண்டவர்கள். இப்படிப் பட்டவர்கள் ஒன்றாக உழைப்பில் ஈடுபடுவதற்கு முதலில் அவர்களுக்கிடையில ஒரு **பொதுவான மொழியின்** அவசியம் உருவாகிறது. அத்தோடு இப்படிப்பட்ட பலதரப்பட்ட பின்னணிகளில் இருந்தும் வந்துள்ள தொழிலாளர்களுடன் முறையான ஒரு கருத்துப் பரிமாற்றத்திறகு ஒரு **முறைப்படுத்தப்பட் மொழி** (Context-free Language) மூலமாக அறிவுறுத்தல்களை வழங்குவது அவசியமானதாகிறது. இது **பொதுக் கல்வி** முறைகளுக்கு வழி வகுக்கிறது. இதனுடன் இணைந்தே பொதுவான மொழியை உருவாக்குவதற்கான முயற்சிகளும், சொற்களஞ்சியங்களின் தோற்றம் போன்றவையும் நடந்தேறுகின்றன. அத்தோடு இந்த முதலாளித்துவ உற்பத்தி முறையானது **காலம்** மற்றும் **இடம்** பற்றிய சிந்தனைகளிலும் கூட மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இதன் பின்புதான் **வரலாறு** மற்றும் **பிரதேசம்** பற்றிய சிந்தனைகளின் சாத்தியப்பாடு தோற்றுவதாக 'நிக்கொஸ் பௌலன்சாஸ்' (Nicos Poulantzas)என்ற மார்க்சிய அறிஞர் குறிப்பிடுகிறார். இதனால் தேசங்களின் உருவாக்கத்தை முதலாளித்துவ சந்தை பற்றிய பிரச்சனையாக குறுக்குவது சரியான வாதமாக தோற்றவில்லை. அதன் உற்பத்தி நிலைமைகள் பற்றியும் கருத்திற்

www.tamilarangam.net

கெடுத்தே நாம் பேசியாக வேண்டியுள்ளது. ஆகவே இங்கு சந்தை என்பதைவிட **மொழி, பொதுக்கல்வி, தேசிய பிரக்ஞை, வரலாறு** மற்றும் **பிரதேசம்** பற்றிய சிந்தனைகள் போன்றவையே தேசியத்தின் அடிப்படையான ஆரம்ப கூறுகளாக இருப்பதை நாம் காண்கிறோம். இவை சந்தையில் இருந்தல்லாமல், முதலாளித்துவ உற்பத்தி நிலைமைகளில் இருந்தே உருவாகின்றன. வரலாற்றில் மிகவும் வேறுபட்ட கால கட்டங்களில், வேறு பல காரணங்களினால் இந்த - தேசத்தின் தோற்றத்திற்கு மிகவும் அடிப்படையான- அம்சங்கள் தோற்றுவிக்கப்படுமானால், முதலாளித்துவ சந்தை இல்லாமல் இருப்பினும் கூட நாம் பலமான தேசியவாத இயக்கங்களை காணமுடியும்.

## கொலனித்துவ நாடுகளும் தேச உருவாக்கமும்

மார்க்சியமானது வாழ்க்கை நிலைமைகளே சிந்தனைமுறைகளின் தோற்றத்திற்கு வழிவகுப்பதாக குறிப்பிடுகிறது. **பொருளாதாரத்தை ‘அடித்தளமாக’** மார்க்ஸ் அவர்கள் **உருவகப்படுத்தியிருந்தாலும்**, **‘மேற்கட்டுமானத்தின்’ அம்சங்களான சித்தாந்தம், அரசியல், அழகியல், கோட்பாடு** போன்றவற்றின் பாத்திரத்தை நிராகரித்துவிடவில்லை. இந்த இரண்டு வகையான அம்சங்களினதும் பரஸ்பர செயற்பாட்டின் விளைவாக, இந்த இரண்டு கூறுகளதும் இயங்கியல் உறவின் விளைவாக சமூகத்தை புரிந்து கொள்வதே சரியான அணுகுமுறையாக இருக்க முடியும். மாறாக பொருளாதாரத்தை, அதிலும் சந்தையை மையப் பிரச்சனையாக்குவது பொருளாதாரவாதமே அன்றி பொருள்முதல்வாதமாகாது. அதிலும் கொலனித்தவ ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த நாடுகளைப் பொறுத்த வரையில், ஆதிக்க நாடுகளானவை, குடியேற்ற நாடுகளில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை வேண்டுமென்றே கட்டுப்படுத்தி வைத்திருந்த நிலைமைகளின் கீழ், முதலாளித்துவத்தின் வளர்ச்சி மற்றும் அதன் சந்தைக்கான தேவை போன்றவற்றில் இருந்து, அந்தந்த நாடுகளில் எழுந்த மிகவும் பலமான தேசியவாத இயக்கங்களை ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது. இங்கு நிலவிய பொதுவான ஒடுக்குமுறையானது - அதாவது பொதுவான துன்பங்கள் மற்றும் வரலாற்று நிலைமைகள் - பலதரப்பட்ட மக்கள் கூட்டங்களையும் இணைத்து தேசங்களாக உணரச் செய்தன. இப்படிப்பட்ட நிலைமைகளில் சந்தை பற்றிய பிரச்சனையானது, கொலனித்துவத்திற்கு எதிரான வீறு கொண்ட தேசிய விடுதலைப் போராட்டங்களை ஒருபோதும் விளக்கமாட்டாது. இதனை புரிந்து கொள்வதற்கு வேறு கருத்தாக்கங்கள்

www.tamilarangam.net

தேவைப்படுகின்றன. இவ்வாறே நான் மேலே கூறிய ஏனைய தேசிய இயக்கங்களையும் கூட இவற்றைவிட வேறுபட்ட கருத்தாக்கங்களின் ஊடாகவே புரிந்து கொள்ள முடியும். இப்படிப்பட்ட நிலைமைகளின் கீழ் சந்தை பற்றிய கேள்விகளுடன் தேசங்களை நிர்ணயிக்க முனைவது முற்றிலும் தவறான நிலைப்பாடுகளுக்கே இட்டுச் செல்கிறது.

கொலனித்துவ நாடுகளில் ஆதிக்க அரசுகள் தமது ஆட்சியை ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடன் ஆதிக்க நாட்டவர்கள் தமது மதத்தைப் பரப்ப முனைகின்றனர். இதன் நோக்கில் பாடசாலைகளை உருவாக்கினர். அந்தந்த மொழி பேசும் மக்கள் மத்தியில் தமது மதத்தை கொண்டு செல்லும் நோக்கில் அந்தந்த மொழி பேசுபவர்களை மத போதகர்களாகவும் ஆக்கி அந்தந்த மொழிகளில் பைபிளை அச்சிடவும் செய்தனர். அத்தோடு உள்ளூரில் நிர்வாக பணிகளை கவனிப்பதற்காக ஒரு பிரிவினரை உருவாக்கும் நோக்கத்தில் பொதுக் கல்வியையும் பரவலாக வழங்கினர். இங்கு முதலாளித்துவத்தின் தோற்றம் நடைபெற்ற காலகட்டத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட முறையில் இந்த **பொதுக் கல்வி,** மற்றும் **உள்நாட்டு மொழிகளின் மறுமலர்ச்சி** போன்றவை நிகழ்ந்தேறுகின்றன. அத்தோடு நிர்வாக நோக்கில் மேற்கொள்ளப்பட்ட **மக்கள் தொகை கணக்கெடுப்புகள், போக்குவரத்து பாதைகள்,** மற்றும் **செய்திப் பத்திரிகையின் வரவு போன்றவை தம்பங்கிற்கு தேசியவாதத்தை உருவாக்குவதில் முக்கிய கூறுகளாக விளங்குகின்றன. இப்படியாக ஒரு தேசத்தை உருவாக்கும் முக்கிய கூறுகள், முதலாளித்துவ சந்தை பற்றிய பிரச்சனையுடன் நேரடியா தொடர்பு அற்ற விதத்திலும் கூட உருவாகின்றன. அப்படியாக உருவான பின்பு தேசிய இயக்கங்கள் தலையெடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. தேசிய இயக்கங்கள் தோன்றி அவற்றில் மக்கள் அலையலையாக கலந்து கொள்ளும் நிலைமையும் உருவாகிவிட்ட பின்பு அந்த தேசமானது யாரது அங்கிகாரத்திற்காகவும் காத்துக் கிடப்பதில்லை. இப்படியாக தமது சுதந்திர அரசை அமைப்பதற்காக போராடும் தேசங்களை வேறு எந்த குறுகிய சூத்திரங்களும் கட்டிப் போடவும் முடிவதில்லை.**

கொலனித்துவத்தின் பின்பு அந்தந்த தேச அரசை கையில் எடுத்த ஆதிக்க சக்திகள் பல இன மக்களதும் வேறுபட்ட தேவைகளை கருத்திற்கெடுக்க தவறி மிகவும் குறுகிய அர்த்தத்தில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முனைந்து போது, முன்பு ஒரே தேசமாக இணைந்து நின்ற மக்கட் கூட்டங்கள் இப்போது தனித்தனியான தேசங்களாக உருவெடுக்க காரணமாக ஆகியும் இருக்கின்றன.

அத்தோடு கொலனித்துவத்திற்கு பிந்திய காலங்களில் இந்த நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியானது நவகொலனித்துவ முறைகளினால் மீண்டும் பின்தள்ளப்படுகிறது. அப்போது அரசாங்க சேவைத்துறையே முக்கிய ஒரு வேலைவாய்ப்பாக நகர்ப்புற மற்றும் கிராமப்புற படித்த தரப்பினரிடையே இருந்து வருகிறது. இதற்கான போட்டியில் **அரசாங்கத்தின் மொழிக் கொள்கை, கல்வி வாய்ப்புகள்** போன்றவை ஆயுதங்களாக பயன்படுத்தப்படுகின்றன. இந்த வகையான பாரபட்சங்கள் குறிப்பிட்ட இனத்தவரின் வாழ்வாதாரங்களை பறிக்க முனைவதாக இந்த இனத்தவர் உணர்கின்றனர். இது அவர்கள் மத்தியில் தேசியவாத உணர்வுகளுக்கு வித்திடுகிறது. இங்கே முதலாளித்துவ சந்தை என்பதை மட்டும் அடிப்படையாக கொண்டு இந்தவிதமான சிக்கலாக நிகழ்வுப் போக்குகளை விளக்கிவிட முடியாது. இந்த நிலையில் முதலாளித்துவ சந்தை இல்லை என்பதை காரணமாக காட்டி இந்த போராட்டங்களை தேசியவாத போராட்டங்கள் இல்லை என்று நிராகரிக்கும் போது நாம் வாழ்நிலையில் இருந்து அரசியலை புரிந்து கொள்வதற்குப் பதிலாக சூத்திரங்களில் இருந்து வாழ்நிலையை விளக்கும் தவறைத்தானே செய்கிறோம். இது கருத்துமுதல்வாதமே அன்றி பொருள்முதல்வாதம் அல்ல.

## உலகமயமாதல் பற்றிய பிரச்சனைகள்

அடுத்ததாக உலகமயமாதல் பற்றிய பிரச்சனைக்கு வருவோம். ஒரு சமூகத்தின் சிக்கலான பிரச்சனைகளை ஒரு பெரிய, உலகளாவிய கோட்பாட்டின் மூலம் விளக்குவதில் எப்போதும் பிரச்சனைகள் எழவே செய்கின்றன. மாவோவின் மூன்று உலக கோட்பாட்டை இதற்கு சிறந்த உதாரணமாக காட்டலாம். மாவோ உலகத்தை மூன்று உலகங்களாக பிரித்து முதலாம் உலக நாடுகளுக்கு எதிராக மூன்றாம் உலக நாடுகளை இரண்டாம் உலக நாடுகளுடன் இணைந்து போராட வேண்டும் என்று குறிப்பிட்ட போது, அவர் இந்த மூன்றாம் உலக நாடுகளுக்கிடையில் இருக்கும் முரண்பாடுகளையும், அந்த நாடுகளில் உள்ள வர்க்க போராட்டங்களையும் நிராகரிப்பதாக ஒரு தீவிரமான, நியாயமான விமர்சனத்தை எதிர்கொள்ள நேரிட்டது. அதே பிரச்சனைதான் இந்த உலகமயமாதல் என்ற கோட்பாட்டின் மூலமாக தேசிய பிரச்சனையை விளக்குவதிலும் காணப்படுகின்றன. அவற்றை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

www.tamilarangam.net

உலகமயமாதல் பற்றிய விளக்கங்களை முன்வைப்பவர்கள் முன்வைக்கும் வாதங்களில் முக்கியமான ஒன்று இந்த உலகமயமாதல் தேசிய எல்லைகளை தகர்க்கிறது என்பதாகும். அதாவது, பல்தேசிய நிறுவனங்கள் தேச—அரசுகளை விட பெரியனவாகி, மிகவும் பலம் கொண்ட அமைப்புக்களாக மாறி விடுகின்றன: அதனால் இந்த தேச அரசுகள் என்பவை இவற்றுடன் ஒப்பிடும் போது ஆற்றல் அற்றவை ஆகிவிட்டன: அத்தோடு இந்த பல்தேசிய நிறுவனங்களது மூலதனமானது தேசிய எல்லைகள் எல்லாவற்றையும் கடந்த உலகெங்கும் தனது பாய்ச்சலை துரிதப்படுத்துவதானது சிறிய நாடுகளில் தேசிய எல்லைகளையும் தகர்த்து விடுகின்றன: இதனால் இதற்குமேல் தேசியவாதம், தேச—அரசு போன்றவை அர்த்தமற்றுப் போகின்றன: என்பதே இதன் சாராம்சமாகும். மேலெழுந்தவாரியாக பார்க்கையில் இந்த வாதமானது பலமானதாகத்தான் தோற்றமளிக்கிறது. ஆனால் இந்த வாதத்தின் பலவீனம் எங்கு இருக்கிறது என்றால், இந்த வாதமானது, இந்த மைய நாடுகள் இன்னமும் கடவுச் சீட்டுக்களை ஏன் இல்லாமற் செய்யவில்லை என்பதற்கு பதில் அளிக்க முடியாமல் இருப்பதில்தான். அதாவது உலகளாவிய அளவில், அதிலும் குறிப்பாக விளிம்பு நாடுகளில் தேசியவாதத்தை கேள்விக்குள்ளாக்கும் இந்த மைய நாடுகளில் குடிவரவுச் சட்டங்கள் இன்னமும் இறுக்கமாக ஆக்குகின்றன: இந்த நாடுகளில் புதிய தேசியவாத கட்சிகள் உருவெடுக்கின்றன: அல்லது இருக்கும் கட்சிகள் தேசியவாதக் கூறுகளை முன்வைக்கத் தலைப்படுகின்றன. இந்த முரண்பாட்டை எவ்வாறு புரிந்து கொள்வது?

இது பற்றி பரிசீலிக்க முதலில் நாம் இந்த உலகமயமாதலின் அடிப்படை என்ன என்பதை கவனிக்க வேண்டும். முதலாளித்துவ நாடுகள் அவ்வப்போது பெரிய அளவிலான நெருக்கடிகளை சந்திப்பது தவிர்க்க முடியாததாகிறது. குறிப்பிட்ட வித்திலிருக்கும் உற்பத்தி முறைகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அந்தந்த சமூகங்களில் ஒருவித நிரம்பல் தன்மையை அடைந்து விடுகின்றன. உதாரணமாக நீண்ட கால துய்ப்புப் பொருட்களை தமது பிரதான உற்பத்தியாக கொண்டுள்ள சமூகங்கள் தமது உற்பத்தியை எல்லையின்றி விரிவாக்கம் செய்து கொண்டு போக முடியாத நிலைமைகள் அவ்வப்போது ஏற்படுகின்றன். உதாரணமாக கார் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் அமெரிக்காவில் ஒரு வீட்டுக் இரண்டு கார்கள் வந்த பின்பு அதற்கு மேலும் சந்தைகளை விஸ்தரிப்பது என்பது இயலாத காரியமாகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளில் ஏதாவது புதிய உற்பத்தி முறைகள் போன்றவை கைகொடுத்தால் இந்த நெருக்கடியை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒத்திப் போட முடிகிறது. உதாரணத்திற்கு கணணிகளின் வருகையானது 1980 களில் தற்காலிகமாக இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியை தள்ளிப்

www.tamilarangam.net

போட உதவியது. ஆனால் இப்போது அந்த நெருக்கடி மீண்டும் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளின் கீழ் மூலதனமானது தனது இலாபவீதத்தை பெருக்கிக் கொள்வதற்கு அல்லது அதனை அப்படியே தக்க வைத்துக் கொள்வதற்கு புதிய சந்தைகளை அல்லது புதிய உழைப்பின் மூலாதாரங்களை தேடி நகர்கிறது. இதுவே இந்த உலகமயமாதல் பற்றிய பிரச்சனையின் மூல ஊற்றாகவும் இருக்கிறது.

1990 களில் ஏற்பட்ட சோவியத் முகாமின் தகர்வு மற்றும் புதிய தாராண்மைவாதத்தின் எழுச்சி இவற்றுடன் கூடிய உலக வங்கியின் மறுசீரமைப்பு பற்றிய மூன்றாம் உலக நாடுகள் மீதான நெருக்குதல்கள் போன்றவை இந்த விளிம்பு நாடுகளை நோக்கி மைய நாடுகளின் மூலதனம் நகர்விற்கான முன்னெப்போதும் இராத வாய்ப்பான சூழல்களை தோற்றுவித்தது. இதனை அடுத்து நிகழ்ந்த இந்த மாபெரும் மூலதன பாய்ச்சல்தான் உலகமயமாதல் என்று பெயரிடப்பட்டது. இந்த மூலதன நகர்வின் தார்ப்பரியம் என்ன? மைய நாடுகளில் தொழிலாளர் வர்க்கம் தனது பலவருட போராட்டங்களின் ஊடாக முதலாளித்துவத்துடனான ஒருவிதமான சமநிலையை தனக்கு சாதகமாக உருவாக்கிக் கொண்டுள்ளது. இதனால் இங்குள்ள பாட்டாளி வர்க்கமானது ஒப்பீட்டளவில் ஒரு சாதகமான நிலைமையில் இருக்கிறது. ஒப்பீட்டளவில் உயர்ந்த வாழ்க்கைத்தரம், ஓரளவு தரமான வேலை நிலைமைகள், சமூக காப்புறுதிகள் போன்றவற்றை இவர்கள் பெற்றுக் கொண்டுள்ளதால் மூலதனமானது இந்த நாடுகளில் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் போது பெறும் உபரி மதிப்பின் வீதமானது ஒப்பீட்டளவில் குறைந்து கொண்டு செல்கிறது. அத்துடன் அதன் நீண்ட கால துய்ப்பு பண்டங்களின் சந்தைகளும் ஒருவித் நிரம்பல் தன்மையை அடையும் போது இந்த இலாப மட்டத்தை தொடர்ந்தும் பேணிக்கொள்வது இயலாத காரியமாகிறது. இதனால் இந்த மூலதனமானது தனது சுரண்டலின் மீது இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்களை திணிக்காத உழைப்புச் சந்தையை நோக்கி தனது கவனத்தை திருப்புகிறது. அங்குதான் இந்த குறைவிருத்தி நாடுகள் அவற்றின் இலக்காக மாறுகின்றன. முதலில் மெக்சிக்கோ மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளை இலக்காக கொண்டன: பின்பு கிழக்கைரோப்பிய நாடுகள் இவற்றின் இலக்காகின: இப்போது இந்தியாவும் சீனாவும் இவற்றின் முக்கிய இலக்குகளாக மாறியுள்ளன்.

இந்த நாடுகள் ஏன் கவர்ச்சி மிக்கவையாக இந்த மூலதனத்திற்கு தோற்றம் அளிக்கின்றன? முதலாளித்துவ உற்பத்தியின் போது முதலாளிகள் அபகரித்துக் கொள்ளும் உபரி மதிப்பே இலாபமாக முதலாளிகளிடம் திரள்கிறது. உபரி மதிப்பென்பது குறிப்பிட்ட

உழைப்புச் சக்தியினால் உற்பத்தி செய்யப்பட்ட மதிப்பிற்கும், அதனை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட உழைப்புச் சக்தியின் மதிப்பிற்கும் இடைப்பட்ட வேறுபாடாகும். உழைப்புச் சக்தியின் மதிப்பானது ஒரு குறிப்பிட்ட நிலைமைகளின் கீழ் அந்த உழைப்புச் சக்தியை உருவாக்க செலவிடப்பட்ட மதிப்பினால் - அதாவது ஒரு தொழிலாளியின் வாழ்க்கைச் செலவினால் - நிர்ணயம் பெறுகிறது. ஒரு வசதிமிக்க மையநாட்டில் தொழிலாளர்களது வாழ்க்கைத்தரம் கூட குறிப்பிட்ட தரத்தை எட்டிவிட்ட நிலையில் இங்கு பெறப்படும் உழைப்புச் சக்தியின் பெறுமதி உயர்வாக அமைகிறது. இதே உழைப்புச் சக்தியை வளர்ச்சி குன்றிய நாடொன்றில் - அதாவது ஒரு வறிய நாடொன்றில் - கொள்வனவு செய்யப்படுமாயின் அதன் பெறுமதி மிகவும் குறைவாக அமைகிறது. இதனால் எந்த நாட்டில் வைத்து இந்த உற்பத்தி நடைபெறுகிறது என்பதைப் பொறுத்து உருவாக்கப்படும் உபரி மதிப்பின் அளவு வேறுபடுகிறது. இதுதான் இந்த உலகமயமாதலின் இரகசியமாகும். அதாவது வசதி குறைந்த ஒரு வளர்முக நாட்டில் வைத்து உற்பத்தியை மேற்கொள்வது அதிக இலாபத்தை தரும் என்ற ஒரே காரணத்திற்காகவே மூலதனமானது இந்த விளிம்பு நாடுகளை நோக்கி நகர்கிறது. இதே உற்பத்தியை இந்த விளிம்பு நாடுகளில் வைத்து மேற்கொள்கையில் அவர்களது ஊதியம் குறைவாக இருப்பதுடன் தொழிலாளர் உரிமைகள் பற்றியோ அல்லது சமூக நலன்புரி திட்டங்கள் குறித்தோ, அல்லது சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய பயமோ இன்றி இந்த சுரண்டலை மிகவும் தீவிரமாக மேற்கொள்ள முடிகிறது.

சீனாவை நோக்கி இந்த சர்வதேச நிறுவனங்கள் நகர்ந்த போது அங்கு தொழிலாளர்களை மிகவும் குறைந்த கூலியில் வேலைக்கு அமர்த்தியதுடன், அவர்களது தொழில்சார் உரிமைகள் பற்றியோ, வாழ்க்கை நிலைமைகள் பற்றியோ, சுற்றுச் சூழல் பற்றியோ இவை அக்கறைப்படத் தேவையிருக்கவில்லை. இங்கு உற்பத்தி செய்யும் பொருட்களை மீண்டும் மேற்கு நாடுகளுக்கு சந்தைப்படுத்தும் போது இந்த பொருட்கள் முன்பு இதே நாடுகளில் உற்பத்தி செய்ததுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படும் போதும் கூட அபரிமிதமான இலாபத்தை இவை ஈட்டக்கூடியதாக இருந்தன. இதுதான் இந்த உலகமயமாதல் மோகத்தின் மையப்பொருளாகும். ஆனால் இந்த அபரிமிதமான இலாபம் என்பது ஒரு தற்காலிகமான நிகழ்வு மட்டுமேயாகும். படிப்படியாக இந்த விளிம்பு நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் விழிப்புணர்வு பெற்று அமைப்பாவதும், தமது உரிமைகளுக்காகவும், கூலி உயர்வுக்காகவும் போராடுவது: மைய நாடுகளில் உள்ள தொழிலாளர் மற்றும் மனிதாபிமான அமைப்புக்கள்

www.tamilarangam.net

இந்த உற்பத்தியில் இருக்கும் மனிதாபிமானமற்ற நிலைமைகளுக்கு (Sweat Shop Condition) எதிராக போராடுவதும் இந்த அபரிமிதமான இலாபத்தை குறைக்கத் தொடங்குகின்றன. இந்த வகையில் இந்த நிலைமையானது மார்க்ஸ் குறிப்பிடும் 'சார்பளவிலான உபரிமதிப்பு நிலையை' (Relative Surplus value) ஒத்ததாகும். அதாவது புதிதாக ஒரு தொழில் நுட்பமானது அறிமுகப்படுத்தப்படும் நிலையில் அதனை முதன் முதலில் பாவிக்கத் தொடங்குபவர் குறைந்து உழைப்புச் சக்தியுடன் குறிப்பிட்ட பண்டங்களை உற்பத்தி செய்யக் கூடியதாக இருப்பதனால் அவர் அந்த துறையில் முதலீடு செய்துள்ள ஏனைய முதலாளிகளுடன் ஒப்பிடும் போது அதிக உபரியை – அதிக இலாபத்தை – பெற்றுக் கொள்வார். ஆனால் இந்த நிலைமை அப்படியே நீடிக்கப் போவதில்லை. படிப்படியாக ஏனைய முதலாளிகளும் இதே இயந்திரங்களை பாவிக்கத் தொடங்கும் போது, இந்த பண்டங்களில் விலைகள் புதிதாக தேவைப்படும் உழைப்புச் சக்தியின் அளவிற்கு குறையத் தொடங்குகிறது. இதனையே மார்க்ஸ் சார்பளவிலான உபரி மதிப்பு என்பார். இதனை ஒத்த செயற்பாடுகள் இந்த விளிம்பு நிலை நாடுகளிலும் படிப்படியாக ஏற்படத் தொடங்கவே ஆரம்ப காலத்தில் பெறப்பட் உபரி மதிப்பின் - இலாபத்தின் - மட்டத்தை தொடந்தும் பேணுவது சாத்தியமற்றுப் போகிறது.

இதனைவிட இன்னோர் முக்கியமான நிகழ்வானது முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் போது மைய நாடுகளிலேயே நடைபெற்றது. அதாவது ஆரம்பத்தில் தொழிலாளரது உபரியை கடுமையாக சுரண்டும் நிலைமை காணப்பட்ட போதும், இந்த ஒரு முறையையே தொடர்ந்தும் தீவிரமாக அதிகரித்துச் செல்வதில் சிக்கல்கள் உருவாகின்றன. அதாவது மக்களில் பெரும்பாலானவர்கள் உழைக்கும் மக்களாக இருக்கையில், இவர்களை கடுமையாக சுரண்டி ஒட்டாண்டியாக்கிவிட்டால், அதற்கு மேல் இந்த முதலாளிகள் உற்பத்தி செய்யும் பண்டங்களை கொள்வனவு செய்வது யார் என்ற பிரச்சனை எழுகிறது அல்லவா? இதனால் இந்த பெரும்பான்மையினரான தொழிலாளர்களை வெறுமனே உற்பத்தியாளர்களாக மாத்திரம் வைத்திருக்காமல், அவர்களை நுகர்பவர்களாகவும் மாற்றுவதனால் மாத்திரமே மேற்கொண்டு இவர்களால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் தொடர்ந்தும் விற்பனை செய்யப்படுவதும், அதன் மூலமாக இலாபம் பெறுவதும் சாத்தியமாகிறது. இதனால் முதலாளிகளில் ஒரு பகுதியினர் தொழிலாளர்களின் கடுமையான போராட்டங்கள் இன்றியே அவர்களது கூலியை உயர்த்த நேர்கிறது. 1910 களில் 'போர்ட்' (Ford) கார்த் தொழிற்சாலையின் முதலாளி, ஏனையவர்கள் ஒரு நாள் ஊதியமாக

2.50 டொலரை வழங்கிக் கொண்டிருக்கும் நிலையில் தனது ஆலையில் தொழில் செய்யும் ஊழியர்களது வேதனத்தை 5.00 டொலர்களாக உயர்த்தினார். இந்த நடவடிக்கையானது அந்த காலத்தில் "சோசலிசத்தை நோக்கிய செயற்பாடு" என்றும், இந்த நடவடிக்கையினால் போர்ட் கார் நிறுவனம் நட்டத்தில் போய்விடும் என்றும் ஏனைய முதலாளிகள் கேலி செய்தார்கள். ஆனால், அப்போதுதான் தனது தொழிற்சாலையில் 'அசெம்பிலி லைன்' (Assembly Line) முறையை முதன் முதலாக அறிமுகம் செய்திருந்த போர்ட் கார் நிறுவனமானது, மிகவும் அதிக பட்ச இலாபத்தை பெற்று முன்னணி நிறுவனமாக வந்தது. இந்த நடவடிக்கைகளின் போது கார் ஒன்றின் விலையானது 825 டொலரில் இருந்து 260 டொலருக்கு குறைந்தது. தொடர்ந்தும் தனது சந்தையை விரிவு படுத்துவதன் மூலமாக போர்ட் கார் நிறுவனமானது தனது இலாபத்தை அதிகரித்துச் சென்றதுடன், இதனையே ஏனைய தொழிற்சாலைகளும் நியமமாகக் கொள்ளும் நிலைமை உருவானது. இந்த வகையில் நவீன முதலாளித்துவத்தைப் புரிந்து கொள்வதில் **'போர்ட்டிசம்'** (Fordism) மற்றும் **'டெய்லரிசம்'** (Taylorism) போன்ற கருத்தாக்கங்களின் முக்கியத்துவத்தை 'கிராம்சி' வலியுறுத்துகிறார். இதே போன்றதொரு பிரச்சனை விளிம்பு நிலை நாடுகளிலும் படிப்படியாக உருவாகத் தொடங்குகிறது.

சீனாவும் இந்தியாவுமாக சேர்ந்து சுமார் 250 கோடி சனத்தொகையை கொண்டுள்ளது. அதாவது உலக சனத்தொகையில் கிட்டத்தட்ட அரைப்பங்கினர் இந்த இரண்டு நாடுகளில் மாத்திரம் சீவிக்கின்றனர். இவர்களது வாங்கும் சக்தி அதிகரிக்கப்படுகையில் இவர்களே ஒரு மிகப் பெரிய சந்தையாக திகழ முடியும். ஆகவே தொடர்ந்தும் நிச்சயமற்ற அந்நிய சந்தைகளை நம்பி ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு தமது தொழிலாளர்களை அபரிமிதமாக சுரண்டுவதிலும் பார்க்க, இதே தொழிலாளர்களது வாங்கும் சக்தியை அதிகரிப்பதனால் உள்நாட்டிலேயே தமது சந்தையை விஸ்தரிப்பதன் மூலமாக ஒப்பீட்டளவில் நிலையான வருமானத்தை இவர்கள் பேணலாம். இந்த நோக்கில் இந்த விளிம்பு நாடுகளில் முதலாளிகளும், இந்த நாடுகளில் அரசாங்கமும் நகர்வது தவிர்க்க முடியாததாகிவிடும். இதற்கான இன்னொரு உந்தலானது மேலே குறிப்பிட்ட விளிம்புநிலை நாடுகளின் மற்றும் மைய நாடுகளின் தொழிலாளர்கள் மற்றும் மனித நேயர்களது போராட்டங்கள் மூலமாக கிடைக்கவே இது கைகூடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். இந்த வகையான புரிதலானது மூலதனம் மற்றும் உழைப்பு ஆகியவற்றுக் கிடையிலான உறவையும், இதில் அரசு மற்றும் ஏனைய சர்வதேச ஆதரவு செயற்பாடுகள் (Solidarity Activities)

www.tamilarangam.net

இணைத்து நோக்கப்படும் ஒரு நிலைமையில் மாத்திரமே பெறப்படும். ஒற்றைப் பரிமாண சிந்தனையானது இந்தவிதமான புரிதல்களுக்கு ஒருபோதும் இடம் தரப்போவதில்லை.

இப்போது உலகமயமாதலுக்கும் தேசியவாதத்திற்கும் இடையில் உள்ள உறவு பற்றிய விடயத்திற்கு மீண்டும் வருவோம். அதாவது, உழைப்பானது இந்த குறிப்பிட்ட விளிம்புநிலை நாடுகளில் வைத்து மேற்கொள்ளப்படும் போது மட்டுமே மேலே குறிப்பிட்ட அபரிமிதமான இலாபமானது இந்த நிறுவனங்களுக்கு கிடைக்கிறது. ஆகவே மூலதனம் தேசிய எல்லைகளை கடந்து சுதந்திரமாக நகரும்போதே, சமகாலத்தில் உழைப்பானது – அதாவது உழைப்பாளியானவர் - இந்த தேச எல்லைகளை கடந்து எதிர் திசையில் நகராமல் கட்டுப்படுத்துவதும் அவசியமானதாகிறது. இதற்காகத்தான் இந்த நாடுகள் தமது **கடவுச் சீட்டு** முறைகளை கண்டிப்பாக கடைப்பிடித்தாக வேண்டியுள்ளது. ஆகவே இவர்கள் **மூலதனத்தைப் பொறுத்தவரையில் சர்வதேசியவாதிகளாக இருக்கும் போதே, உழைப்பைப் பொறுத்தவரையில் தேசியவாதிகளாகவே** இருந்தாக வேண்டியும் உள்ளது. உதாரணமாக, மத்திய தரைக் கடலுக்கு தெற்கே உள்ள ஒருவர் இந்த கடலை தாண்டி – சட்டவிரோதமாகத்தான் - ஐரோப்பாவிற்குள் நுழைவதாக வைத்துக் கொள்வோம். இவர் அங்கு போய் ஒன்றும் இந்த நாடுகளில் மூலதனத்தை அபகரிக்கப் போவதில்லை. தனது உழைப்புச் சக்தியை விற்பதற்கே முயல்கிறார். ஆனால் அவர் தனது உழைப்பின் இடத்தை மாற்றுகிறார். அதன் மூலமாக உழைப்பின் நிலைமைகளை மாற்றுகிறார். அப்படி செய்வதன் மூலமாக இந்த மைய நாடுகளின் மூலதனமானது இவருக்கு மையநாடுகளின் நிலைமைக்கு ஏற்ற கூலியை வழங்குமாறு நிர்ப்பந்திக்கப்படப் போகிறது. இது இவர்களது இலாபத்தை கடுமையாக பாதிக்கக் கூடியதாக அமைகிறது. இந்த நோக்கில் இந்த நாடுகள் தமது குடிவரவு சட்டங்களை – அதாவது கடவுச்சீட்டு தொடர்வான சட்டங்களை - கடுமையாக்குவதுடன், இதற்கு சாதகமாக இந்த நாட்டிலுள்ள ஆளும் வர்க்கங்களின் ஒரு பிரிவானது அந்நிய வெறுப்பு கருத்துக்களை வெளிப்படையாக தெரிவிக்கவும் தொடங்குகின்றன. ஆகவே உலகமயவாதிகள் குறிப்பிடுவது போல உலகமயமாதல் சர்வதேசியத்தை உருவாக்கவில்லை. மாறாக ஒரு **அயோக்கியத்தனமான தேசியவாதத்தை** – மிகவும் குறுகிய நோக்கிலான தேசியவாதத்தை – வளர்க்கும் வேலையைத்தான் செய்கிறது.

www.tamilarangam.net

மைய நாடுகளில் காணப்படும் வெளிப்படையானதும், நிறுவனமயப்படுத்தப்பட்டதுமான அந்நிய வெறுப்பானது, மேலே குறிப்பிட்டவாறு குடிபெயர்ந்து வரும் தொழிலாளரது வாழ்க்கை நிலைமைகளை மிகவும் கடுமையாக்கிவிடுகின்றன. அதனால் இவர்கள் அந்தந்த நாடுகளின் பிரதான போக்குகளுடன் இணைந்து கொள்வது சாத்தியமற்றும் போகிறது. இப்படியாக வைத்திருப்பதனால் மாத்திரமே இவர்களை இந்த நாடுகளில், மேற்கு நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்கள் செய்ய விரும்பாத வேலைகளை மட்டும் செய்வதனால் தமது பிழைப்பை நடத்துமாறு நிர்ப்பந்திக்கலாம். உண்மையில் இந்த குடியேறிய தொழிலாளர்கள், தமது மலிவான உழைப்புச் சக்தியை வழங்குவதன் மூலமாக அந்த நாட்டு தொழிலாளர்களுக்கு ஒரு 'மெத்தை' (cushion) ஆக செயற்படுகிறார்கள். இதனால் ஒருவிதத்தில் இந்த நாட்டுகளின் தொழிலாளர் வர்க்கமும் கூட இந்த அந்நிய வெறுப்பில் அள்ளப்படும் நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. ஆதலால் குடியேறிய தொழிலாளர்கள் மைய நாடுகளிலும் ஒருவித சேரிப்புற வாழ்க்கையைத்தான், பாட்டாளி வர்க்கத்திற்கும் கீழான நிலையில்தான் (Under Class) வாழ நேர்கிறது. ஆகவே **இங்கே நாம் சர்வதேசியத்தை காணவில்லை. மாறாக குறுந்தேசியவாதத்தைத்தான் காண்கிறோம்.**

இப்போது விளிம்பு நாடுகளில் உள்ள நிலைமைகளைப் பார்ப்போம். வெளியில் இருந்து ஊடுருவும் மூலதனமானது ஒன்றும் தேசியம் சம்பந்தமாக பக்க சார்பற்றதாக (Unbiased) உள்நுழையவில்லை. மாறாக அந்தந்த நாடுகளில் உள்ள ஆதிக்க சக்திகளது ஆதரவுடன் தான் உள்ளே செல்கிறது. அந்தந்த சமூகத்தில் என்னென்ன ஒடுக்குமுறைகள் உள்ளனவோ, அவற்றையும் அனுசரித்துதான் இவை உள்நுழைகின்றன. இதனால், ஆளும் வர்க்க, ஆதிக்க தேச நலன்களை மறுதலிக்காமல் அவற்றுடன் இணைந்தே இவையும் பயணம் செய்கின்றன. கொலனித்துவம் இந்த நாடுகளுக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வந்தபோது எப்படியாக இந்த நாடுகளில் இருந்த நிலப்பிரபுத்துவ சக்திகளுடன் ஒத்துழைத்ததோ, அப்படியே இப்போதும் அந்தந்த நாடுகளில் உள்ள ஆதிக்க சக்திகளுடன் கையை கோர்த்துக் கொண்டே பயணம் செய்கின்றன. ஏற்கனவே அந்தந்த நாடுகளில் உள்ள தேசிய முரண்பாடுகளில் **மூலவளங்களுக்கான போட்டியும்** (Resourses War) ஒரு அம்சமாக நிலைத்து வருகையில் இந்த புதிய ஆதிக்க சக்தியின் வரவானது, ஏற்கனவே உள்ள முரண்பாடுகளை இன்னமும் கூர்மை அடையவே செய்கின்றன. அதாவது

இந்த உலகமயமாதலானது விளிம்பு நாடுகளில் கூட தேசிய முரண்பாடுகளை கூர்மை அடையவே செய்கின்றன. இதற்கு மாறாக உலகமயமாதல் தேசிய பிரச்சனைகளை தளர்த்துவிடும் என வாதிப்போர், இந்த நாடுகளில் ஏற்கனவே உள்ள தேசிய முரண்பாடுகள் எந்தளவிற்கு தளர்த்தப்பட்டுள்ளன என நிரூபித்தாக வேண்டும். உதாரணமாக இந்தியாவில் இது காஷமீர் பிரச்சனையை தணிக்கவோ, அல்லது சீனாவில் திபெத்திய பிரச்சனையை தீர்த்து வைக்கவோ இந்த உலகமயமாதல் உதவவில்லை. மாறாக இந்த நாடுகளில் இந்த பிரச்சனைகள் தீவிரமடைந்திருப்பதுடன் இன்னமும் புதிய பிரச்சனைகளையும் இவை உருவாக்கி விட்டுள்ளன. உதாரணமாக, சீனாவின் மத்திய ஆசிய பிராந்திய மக்களது பிரச்சனையையும், திபெத்தில் அதிகரிக்கும் சீனர்களது குடியேற்றங்கள் உருவாக்கியுள்ள புதிய மோதல்களையும் குறிப்பிடலாம். இதே விடயம் தான் இலங்கையில் இந்திய மூலதனங்கள் தமிழர் தாயகப் பகுதியில் தமிழ் மக்களது சம்மதத்தைப் பெறாமலும், தமிழ் மக்களது நலன்களுக்கு எதிராகவுமே நகர்கின்றன என்பதையும் இங்கு நாம் குறித்துக் கொள்வது இந்த இடத்தில் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த விடயங்ளை தொகுத்து நோக்குகையில் உலகமயமாதல் என்பத தேசியவாதத்தை தணிவிக்கவில்லை என்பதையும், அது மைய நாடுகளிலும் சரி, விளிம்பு நாடுகளிலும் சரி தேசியவாதத்தை தீவிரப்படுத்தும் வேலையைத்தான் செய்து முடிக்கிறது என்பது தெளிவாகிறது. **பொருளாதாரம் என்பது ஒரு குருட்டுத்தனமான ஓட்டத்தில் எந்தவொரு பாகுபாடுகளையும் பாராமல் காட்டாற்று வெள்ளம் போல் பழைய பிரச்சனைகளை அடித்துக் கொண்டு செல்லவில்லை.** மாறாக மிகவும் கவனமாக, தேர்ந்தெடுத்த விதமாக (Selective) ஏற்கனவே உள்ள முரண்பாடுகளை அனுசரித்துக் கொண்டுதான் செல்கிறது. இந்த கருத்துக்கு மேலதிக ஆதாரமாக, முதலாளித்துவம் தான் நிறவெறியை தோற்றுவித்தது என்பதையும், அது ஆணாதிக்க முறையுடன் சமரசம் செய்துதான் செல்கிறது என்பதையும் சேர்த்து நோக்குவது பயனுடையதாக இருக்கும். இப்படியான நிலைமைகளில் பொருளாதாரமானது முற்றிலும் பலம் பெற்றதாக, சர்வ வல்லமையும் கொண்டு ஒரு சக்தியாக இல்லை என்பதும், இது சமூகத்தின் ஏனைய கட்டமைப்புக்களான அரசியல், சித்தாந்தம், அழகியல், கோட்பாடு என்பவற்றுடன் இணைந்துதான் செயற்படுகின்றது என்பது தெளிவாகும். பொருளாதாரமானது, இந்த கட்டமைப்புக்களை நிர்ணயிக்கும் அதே சமயத்தில் இந்த கட்டமைப்புக்களால் மேல் நிர்ணயம் செய்யவும் படுகிறது என்பது தெளிவாகும். இதற்கு மாறாக

www.tamilarangam.net

பொருளாதாரத்தை சர்வ வல்லமை உள்ள ஒரு சக்தி போலக் கருதி, சமூகத்தில் உள்ள அனைத்து விடயங்களையும் அது அப்படியே நேரடியாக நிர்ணயிக்கும் என்றவகையில் வாதிட முனைவதானது பொருளாதாரவாதமேயாகும்.

இதே போன்றதொரு இன்னொரு பிரச்சனையானது தற்போது உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடிகளை புரிந்து கொள்வது தொடர்பான பிரச்சனையிலும் எழுவதை காண முடிகிறது. அதாவது இந்த பொருளாதார நெருக்கடிகள் முற்றிய போது பலரும் இது முதலாளித்துவத்தின் பாரிய நெருக்கடி எனவும், இத்துடன் மூலதனமானது தனது மோசமாக தோல்வியை எதிர் கொள்வதாகவும் ஆர்ப்பரிக்கத் தொடங்கினர். ஆனால் இந்த பிரச்சனை தொடங்கி ஒரு வருட காலத்தில் நாம் காண்பதென்ன? சில பெரிய வங்கிகள் முற்றாக வங்குரோத்தாகிவிட்டன: பலர் தமது முதலீடுகளை இழந்துள்ளனர்: ஆனால் மொத்தத்தில் இந்த நாடுகளில் உள்ள உழைப்பாளிகள் கண்டதென்ன? மூலதனத்தோடு ஒப்பிடும் பொழுது, தொழிலாளர்கள் எப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள்? இன்றைய பொருளாதார நெருக்கடி உண்மையில் தொடங்கியது வீட்டு அடமானக் கடன் தொடர்பாக வங்கிகள் மேற்கொண்ட அதீத ஊகவாணிப முறையுடன் தொடர்பு பட்டதாக இருப்பினும் கூட, அது பெரிய அளவில் சமூக நெருக்கடியாக உருவானதே, வங்கிகள் கார்களுக்கான கடன் வழங்களை நிறுத்தியதுடன்தான். இப்போது அதுவே பெரிதாக ஆக்கப்பட்டு அதனை சீர் செய்வதே இன்றுள்ள முக்கிய கடமை என்ற விதத்தில் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கார் உற்பத்தியைப் பொறுத்தவரையிலும் கூட அதன் சந்தையின் நிரம்பல் தன்மை: மிகவும் பெரிய சொகுசு வாகனங்களது விற்பனையில் இலாபம் அதிகம் கிடைக்கும் என்ற வகையில் அவற்றை நோக்கி மூலதனம் அதிகம் அக்கறை செலுத்தியமை: எரிபொருள் சிக்கனம், மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு பற்றிய அக்கறைகளை அறவே நிராகரித்தமை: மாற்று தொழில் நுட்பங்களை, உதாரணமாக மின்சாரத்தில் இயங்கும் கார்கள், முடக்கி வைத்தமை: இந்த நிறுவனங்களிலும், ஏனைய நிதிநிறுவனங்களிலும் பணியாற்றும் உயர் நிர்வாகிகள் பெற்றுக்கொள்ளும் பாரிய ஊதியங்கள்: போன்ற பல பிரச்சனைகள் இருக்கின்றன. ஆனால் இந்த முக்கியமான விடயங்களையெல்லாம் புறந்தள்ளி விட்டு, பிரச்சனையை காரின் உற்பத்தி செலவை அதாவது, தொழிலாளரின் ஊதியத்தை குறைப்பது பற்றிய விடயமாக திசை திருப்புவதில் இந்த அரசும், முதலாளித்துவ சக்திகளும் வெற்றி பெற்றன. இந்த சிக்கலான விடயமானது, உற்பத்தியின் செலவை

www.tamilarangam.net

குறைப்பது பற்றிய பிரச்சனையாக குறுக்கப்பட்டது. இது வெகுஜன செய்தி ஊடகங்களில் பெரியளவில் பேசப்பட்டு, உற்பத்தி செலவை குறைப்பது என்ற நோக்கில் தொழிலாளர்களது ஊதியங்களை குறைப்பது தொடர்பான பிரச்சனையாக குறுக்கி, தொழிற்சங்கங்கள் கடுமையான நெருக்குதல்களுக்கு உள்ளாகின. கடைசியில் தொழிற்சங்க அமைப்புகள் ஏதும் இல்லாத 'டொயாட்டா' (Toyota) நிறுவனத்தின் ஊதியமான மணித்தியாலத்திற்கு 59 டொலர்கள் என்ற மட்டத்திற்கு ஏனைய அமெரிக்க கார் உற்பத்தி நிறுவனங்கள் மூன்றினதும் ஊதியங்கள் 76 டொலரில் இருந்து குறைக்கப்பட்டன. இதுவரை நடந்தவற்றை தொகுத்துப் பார்த்தால் நாம் பின்வருவனவற்றை தெளிவாக இனம் காணலாம். இந்த பொருளாதார நெருக்கடிகளில் இருந்து பெரும்பாலான முதலாளி வர்க்கத்தினர் அதிகம் இழப்புகள் இன்றி வெளிவந்துள்ளனர். அத்தோடு தொடர்ந்தும் அரசு கொடுத்த கடன்களில் இருந்தே தொடர்ந்தும் போனஸ்களை பெற்றுக் கொண்டு வருகின்றன. தோல்வியுற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கூட பெருந்தொகையான பணத்தை இழப்பீடாக பெற்றுக் கொண்டே வெளியேறினார்கள். இவர்கள் கடந்த காலத்தில் ஏற்படுத்திய பெருந்தொகையான நட்டங்கள் குறித்து எந்தவிதமான பதிலும் சொல்லும்படி நிர்ப்பந்திக்கப்படவில்லை. மாறாக தொழிலாளர் வர்க்கமானது மிகப் பெரிய விலையை இந்த ஊகவாணிபர்களது சூதாட்டத்திற்கு செலுத்த நேரிட்டுள்ளது. முதலாவதாக, இந்த 'சப் பிரைம்' (Subprime) எனும் கந்துவட்டி வீதத்தில் வீட்டுக் கடன்களை வாங்கி, கட்ட முடியாமல் பெருந் தொகைப் பணத்தையும் வீடுகளையும் இழந்தவர்கள் யாவரும் அடி மட்டத்தில் இருக்கும். வசதி குறைந்த, அடைமான விதிமுறைகளில் போதிய விழிப்புணர்வற்ற தொழிலாளர்களே என்பதை மனதில் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, இந்த பெரிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அரசு வழங்கிய பெருந்தொகைப் பணத்தையும் மக்கள் தொகையில் மிகவும் பெரும்பான்மையான இருக்கும் உழைக்கும் மக்களே வரியாக எதிர்காலத்தில் செலுத்தியாக வேண்டியுள்ளது. மூன்றாவதாக, 'ஹெட்ஜ் நிதி' எனும் பெயரில் தாரைவார்க்கப்பட்டதில் பெருந்தொகைப் பணம் உழைப்பாளர்களது ஓய்வூதிய நிதி மற்றும் சேமிப்பாகும். நான்காவதாக, இந்த வட்டத்தில் இருந்து மீள்வதற்காக விட்டுக் கொடுப்புக்களையும் தொழிலாளர்களே தமது ஊதியக் குறைப்புகள் மூலமாக செய்தாக வேண்டியுள்ளது. இப்படியாக எமது ஆய்வாளர்கள் முதலாளித்துவத்தின் சரிவை எதிர்வு கூறிய போதிலும், தொழிலாளர்களே அனைத்து இழப்புக்களையும் செலுத்தியாக வேண்டியிருக்கிறது. இது ஏன் நடைபெற்றது? இப்படிப்பட்ட விடயங்களை மதிப்பிடுவதில் நாம் எங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவறிழைக்கிறோம்? என்ற கேள்விகள் இங்கு மிகவும் அவசரமாக விடையை வேண்டி நிற்கின்றன அல்லவா?

இங்கு நாம் **பொருளாதாரம், வர்க்க போராட்டம், மற்றும் அரசு ஆகியவற்றுக்கிடையிலான சிக்கலான உறவுகளை** புரிந்து கொள்வது அவசியமானது. வெறுமனே **அரசு ஆளும் வர்க்கத்தின் கரங்களில் உள்ள ஒடுக்குமுறையின் கருவி என்ற பாலபாடம்** அதிக பலனைத் தராது. கடந்த காலத்தில் முதலாளித்துவ நாடுகள் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகளை தவிர்ப்பதில் கணிசமான அளவு வெற்றி கொண்டிருந்தாலும், பாட்டாளி வர்க்கமும் தன் பங்கிற்கு குறிப்பிடத்தக்க வெற்றிகளை பெற்றே இருக்கிறது. ஒப்பீட்டளவில் உயர்வான வாழ்க்கைத் தரம், சமூக காப்பீட்டுத் திட்டங்கள், தொழிற்சங்க மற்றும் ஏனைய ஜனநாயக உரிமைகள் போன்றவை இவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இந்த போராட்டங்களின் போது அரசானது வெறுமனே ஆளும் வர்க்கத்தின் கருவியாக மட்டும் செயற்படாமல், தேவைப்பட்டால் ஒட்டு மொத்த முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களிலிருந்து சமரசம் செய்விக்கும் கருவியாகவும் செயற்பட்டுள்ளது. இதில் நாம் முன்னர் குறிப்பிட்து போல முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பகுதியினர் தாமாகவே முன் வந்தும் மூலதனத்தினதும் சுரண்டலினதும் நீண்டகால நலன்களை முன்னிட்டும் சில விட்டுக் கொடுப்புக்களை செய்தும் இருக்கின்றன. இதனால் ஒப்பீட்டளவில் தமக்கு சாதகமான ஒரு சமநிலையை தொழிலாளர் வர்க்கமானது மூலதனத்துடனான தமது உறவில் அடைந்திருந்தது. ஆனால் இப்போது இந்த பொருளாதார நெருக்கடியில் இந்த சமநிலையானது முதலாளி வர்க்கத்திற்கு சாதகமாக நகரத் தொடங்குகிறது. இப்படிப் பட்ட நிலைமைகளை பயன்படுத்திக் கொண்டு மூலதனமானது தான் ஏற்கனவே இழந்தவற்றை மீட்டுக் கொள்வதற்கான தாக்குதலை தொடுக்கிறது. அதுதான் இங்கு நடைபெற்ற தொழிலாளர் இழப்பிற்கான காரணமாகும். இந்த கட்டத்தில் தொழிலாளர் வர்க்கமானது போதியளவு விழிப்புணர்வுடனும், முறையான அமைப்பாகியும் இருந்திருப்பின் இந்த மூலதனத்தின் தாக்குதல்களுக்கு எதிராக முன்னேறித் தாக்கியிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. இப்படிப் பட்ட விளக்கமானது அரசை வெறுமனே ஆளும் வர்க்கத்தின் கருவியாக மாத்திரம் நோக்காது, **அரசானது வர்க்க போராட்டத்தின் களங்களில் ஒன்றாகவும்** நோக்கினால் மாத்திரமே சாத்தியப்படும். அவ்வாறே முதலாளி – தொழிலாளி வர்க்கங்களைக் கூட தனித்தனியே முற்றிலும் ஒருங்கிணைந்த ஏகவினமான தன்மையுடன் (Monolithic) ஆக பார்க்காமல், முதலாளித்துவ வர்க்கத்தில் பல்வேறு பிரிவுகள் (Factions) இருப்பதையும், இந்த வெவ்வேறு பிரிவுகள், அரசின்

www.tamilarangam.net

வேறுபட்ட பிரிவுகளையும், மேற்கட்டுமானத்தின் வெவ்வேறு கூறுகளையும் கட்டுப்படுத்தும் சாத்தியக் கூறுகள், மற்றும் இவற்றின் இணைவில் தோற்றும் ஆளும் குழுமம் (Ruling Bloc) என்பதாக புரிந்து கொண்டால் மாத்திரமே சாத்தியப்படும். இதற்கு மாறாக எந்தவொரு குறுக்கல்வாதமும் இந்த புரிதலுக்கு தடையாகவே அமைகின்றன. **குறுக்கல்வாதங்கள் எளிமையாக பிரச்சனைகளை விளக்குவதாக ஆரம்பத்தில் பட்டாலும் இறுதியில் போலியான நம்பிக்கையையும், தோல்விகளையுமே திரும்பத் திரும்ப தோற்றுவிக்கக் கூடியவையாகும். இங்கு நாம் சிக்கலான பல்வேறு கட்டமைப்புகளின் இணைவால் உருவாகும் சமூக உருவாக்கத்தை அவற்றின் ஏதாவது ஒரு கூறின் அடிப்படையில் விளக்க முனையும் அத்தனை முயற்சிகளையும் குறுக்கல்வாதங்கள் (Reductionism) என்றே குறிப்பிடுகிறோம்.**

## தேசங்களும் தேசிய சிறுபான்மையினரும்

நாம் தேசிய பிரச்சனை பற்றி பேசும் போது தேசங்களுக்கும் (Nations) தேசிய சிறுபான்மையினருக்கும் (National Minorities) இடையிலான வேறுபாடுகளை தெளிவாக குறித்துக் கொள்வது அவசியமானதாகிறது. ஐக்கிய இராச்சியத்தைப் (United Kingdom) பொருத்த வரையில் ஸ்கொட், வேல்ஸ் போன்ற மக்கள் தனியான தேசங்களாக அமைகிறார்கள். அதேவேளையில் இந்த நாடுகளில் அண்மைக் காலத்தில் குடியேறிய ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட இந்திய, பாகிஸ்தானிய வம்சாவழி மக்கள் தேசிய சிறுபான்மையினராவர். ஸ்கொட், வேல்ஸ் மக்களது தேசியவாதமானது அவர்களது வரலாறு உட்பட, ஐக்கிய இராச்சியத்தினுள் இணைத்துக் கொள்ளப்பட்ட விதம் மற்றும் இணைந்த பின்பு அவர்கள் நடத்தப்பட்ட விதம் குறித்த மனக்குறைகள் போன்ற பல காரணங்களுடன் தொடர்புடையதாக உருவாகிறது. இவர்களுடன் ஒப்பிடுகையில் இந்த தேசிய சிறுபான்மையினரின் பிரச்சனையானது மிகவும் வேறுபட்டதாகும். எண்ணிக்கையில் சிறிய சமூகமாக இருப்பது, நீண்டதொரு வரவாறு, அதன் தொடர்ச்சியான இவர்கள் பெற்றிருக்கக் கூடிய சமூக மற்றும் பொருளாதார அந்தஸத்துகள் போன்ற எதுவும் இன்றி ஒரு நிலையான சமூகமாக செயற்பட முடியாதவர்களாக உள்ளார்கள். அதேவேளை இந்த தேசிய சிறுபான்மையினரது பிரச்சனையானது தாம் இங்கு மிகவும் அந்நியப்படுத்தப்பட்டவர்களாக உணர்வதுடன் தொடர்பு பட்டது. இதனால் இவர்களால் இந்த சமூகத்தில் ஒன்று கலக்க முடியவில்லை.

www.tamilarangam.net

மாறாக தனியான ஒரு அரசியல் சக்தியாக உருவெடுக்கவும் இவர்களது எண்ணிக்கை மற்றும் வரலாற்றுபூர்வமான அம்சங்கள் இடம் கொடுப்பதில்லை. இந்த சமூகங்களை பல்கலாச்சார சமூகங்களான இனம் கொண்டு கொள்ள முடியாத இந்நாட்டு ஆளும் வர்க்கங்களது இயலாமையும், தாம் சமத்துவத்துடன் நடாத்தப்படாமை தொடர்பான மனக்குறைகளும் இந்த அடையாளங்கள் இன்னமும் இறுகிப்போய் அதன் சாத்தியளவிலான கடைக்கோடி வடிவத்தை நோக்கி நகர்ந்து செல்வதற்கான வாய்ப்புக்களே அதிகளவில் உள்ளது.

இங்குள்ள முக்கியமான ஒரு பிரச்சனை என்ன வென்றால், இப்படிப்பட்ட **தேசிய சிறுபான்மையினரையும்**, ஏனைய **தேசங்களையும்** சம தளத்தில் வைத்து பேசுவதான உணர்வொன்று நாவலனது எழுத்தில் வெளிப்படுவதாகும். இந்த இரண்டு தொகுதியினரும் அறவே ஒப்பிடப்பட முடியாதவர்கள் என்பதை முதலிலேயே வலியுறுத்தப்படுவது மிகவும் அத்தியாவசியமானது. இவர்களில் ஒரு பகுதியினர் **பெரும் எண்ணிக்கையில் வாழ்வதுடன், தமக்கென குறிப்பான வரலாறு, மற்றும் ஏனைய சமூக. பொருளாதார, அரசியல் அம்சங்களை கொண்டுள்ள நிலையான சமூகங்களாகும்.** இந்த வகையில இவை **சுயமாக நிலைத்து நிற்கும் ஆற்றலைக் கொண்ட, சுயமான அரசியலைக் கொண்ட சமூகங்களாகும்.** இந்த எவற்றையும் குறிப்பிடத்தக்கவிதத்தில் கொண்டிராத தேசிய சிறுபான்மையினர், ஏனைய தேசங்களை ஒத்த அரசியல் அபிலாசைகளை உருவாக்கிக் கொள்வது சாத்தியமானதல்ல. ஆகவே இந்த பதங்களை நாம் பயன்படுத்தும் போது மிகவும் அவதானமாக இருப்பது அவசியமானது. அத்தோடு இந்த இடத்தில் நாம் இலங்கையில் தேசிய பிரச்சனை பற்றி பேசும் போது **"சிறுபான்மை"** மற்றும் **"பெரும்பான்மை"** போன்ற பதங்களை அறவே தவிர்ப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தியாக வேண்டியுள்ளது. ஏனெனில் அது மேலே குறிப்பிட்ட தேசம் மற்றும் தேசிய சிறுபான்மை பற்றிய குழப்பத்தினுள் ஈழத் தமிழரது அடையாளங்களை போட்டுக் குழப்பிவிடுகிறது. இலங்கையில் தேசிய பிரச்சனை பற்றி பேசும் போது சிங்கள மக்களை **"பெரும்பான்மையினர்"** என்றும் தமிழரை **"சிறுபான்மையினர்"** என்றும் குறிப்பிடுவதானது சிங்கள பேரினவாதமானது கட்டமைத்த போலிப் புனைவாகும். இது **தனியான ஒரு தேசமான ஈழத்தமிழரை** மேலே குறிப்பிட்ட **தேசிய சிறுபான்மையினருடன் குழப்பியடிப்பதன்** மூலமாக எம்மை அரசியல் ரீதியில் மிகவும் பலவீனப்படுத்தும் நோக்குடன் செய்யப்படுவதாகும். ஆதலால் தமிழ் மக்கள் தம்மை இப்படியாக சிறுபான்மையினராக இனம் காட்ட முனைவதை தீவிரமாக எதிர்த்து முறியடிப்பது அவசியமானது. அதனை விட **'பெரும்பான்மை' மற்றும் 'சிறுபான்மை' போன்ற பதங்கள்**

www.tamilarangam.net

**முதலாளித்துவ ஜனநாயகத்தில் பிரயோகிக்கப்படும் போது, இந்த இரண்டு குழுக்களும் ஒரே விதமான மொழி மற்றும் கலாச்சார அம்சங்களைக் கொண்டுள்ளார்கள் என்ற முன்னூகத்தின் அடிப்படையிலேயே பிரயோகிக்கப்படுகின்றனவே ஒழிய, இந்த இரண்டு குழுக்களும் பல்தேச சமூகத்தின் வேறுபட்ட கூறுகள் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுவது கிடையாது.** ஆகவே இந்த **பெரும்பான்மை** மற்றும் **சிறுபான்மை** போன்ற பதங்களை நாம் இலங்கையில் நடைபெறும் தேசிய பிரச்சனையில அறவே பாவிக்க கூடாது. அப்படியாக பாவிக்க முனையும் போது, நாம் **சிங்கள் பேரினவாதம் கட்டமைத்துள்ள ஆய்வுச் சட்டகத்தின் உள்ளே நின்று கொண்டே சிங்கள பேரினவாதத்தை எதிர்க்க முனைவதாகவே அர்த்தப்படும்**. அதனால் இநத விதமான குழப்பங்கள் அடிக்கடி நிகழ்வது தவிர்க்கப்பட முடியாததாகிவிடும்.

இப்போது தேசியவாதத்தில் நாம் ஒன்றுகலத்தல் (Assimiliation) பற்றிய பிரச்சனைக்கு வருவோம். சில நாடுகளில் அல்லது வரலாற்றின் ஒரு கட்டத்தில் இலகுவில் கலந்துபோன சில சமூகங்கள், இன்னோர் கட்டத்தில் கலந்து போக மறுப்பதேன் என்ற பிரச்சனை இங்கு பார்ப்போம். முதலாளித்துவத்தின் ஆரம்ப கட்டத்தில் பல்வேறு இனக்குழுக்களும் தமது முழுமையான உள்ளாற்றலை வெளிப்படுத்தும் பண்பை கொண்டிருக்கவில்லை. அப்படியான சந்தர்ப்பங்களில் புத்திஜீவிகளில் ஒரு பிரிவினர் தேசத்தின் மொழிகளை, அரசியல் கட்டமைப்புக்களை வடிவமைப்பதில் முன்னணி பாத்திரம் வகித்தனர். அப்படியாக செய்யும் போது பொதுவான மொழி தோற்றுவிக்கப்படும் போது வெவ்வேறு இனக்குழுமங்களின், வட்டார மொழிகளின் கூறுகள் உள்வாங்கப்பட்டன. இன்னும் சில அறவே உள்வாங்கப்படாமலும் போயிருக்கலாம். ஆயினும் இந்த பிரிவினருக்கு முதலாளித்துவ உற்பத்தி முறை, பொதுக்கல்வி, ஜனநாயகம் என்பன வழங்கப்பட்ட போது அவற்றில் பெரும்பான்மையானவை அவற்றை பெற்றுக் கொண்டு தமது அடையாளங்களை துறந்து குறிப்பிட்ட தேசிய அடையாளங்களுடன் ஒன்று கலந்தன. ஆனால் இந்த நிலைமைகள் சற்று காலம் தாழ்த்தி ஏற்படும் போது. அதாவது குறிப்பிட்ட **இனக்குழுமங்கள் தமக்கென சொந்த எழுத்து வடிவங்கள், சொற்களஞ்சியம், பொதுக் கல்வி போன்ற விடயங்களை சுயாதீனமாக உருவாக்கிக் கொண்ட பின்பு, அவை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தேசிய பிரக்ஞையையும் பெற்றுக் கொண்ட பின்பு, இப்படியான ஒன்று கலத்தல்கள் கடினமானவையாக மாறிவிடுகின்றன. இதனை வெறுமனே சந்தை பற்றிய பிரச்சனையால் விளக்கிவிட முடியாது.**

www.tamilarangam.net

## இலங்கையில் தேசியவாதத்தின் தோற்றம்

இலங்கை கொலனித்துவத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கையில் கிறீஸ்த்துவத்தை பரப்புவதை நோக்காகக் கொண்ட கல்விமுறையின் அறிமுகம்: அதன் தாக்கத்தால் உருவான தென்னிலங்கையில் அநகாரிக தர்மபால போன்றவரது தலைமையிலான பௌத்த மறுமலர்ச்சி அமைப்புக்கள்: வடக்கில் ஆறுமுக நாவலர் தலைமையில் தொடங்கிய மறுமலர்ச்சி இயக்கம்: கொழும்பில் அறபி பாஷா அவர்களது உந்துதலால் உருவான முஸ்லிம்களது மலர்ச்சி: போன்றவை மதம் மற்றும் மொழி பற்றிய சிந்தனைகளில் மறுமலர்ச்சியை தோற்றவித்தன. இவை அனைத்தின் செயற்பாடுகளுடனும் பொதுக்கல்வி முறைகளின் தோற்றம், உரை நடை எழுத்து முறைகள், சொற்களஞ்சியம், அகராதிகளின் தோற்றம், அச்சுக்கலையின் அறிமுகம், அருகிப் போன தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்வது, செய்திப் பத்திரிகையின் தோற்றம் போன்றதொரு மொழி, மதம் மற்றும் இனம் தொடர்பான மறுமலர்ச்சி ஒன்று இங்கு நடை பெற்றது. ஆனால் இந்த மறுமலர்ச்சியானது, ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் தோன்றிய காரணிகளில் இருந்து மிகவும் வேறுபட்ட காரணங்களுக் கூடாக தோற்றம் பெற்றன. **ஒருக்கால் மொழிப் பற்று மற்றும் தேசிய உணர்வுகள் தோன்றி விட்டால், அவை எப்படிப்பட்ட நிலைமைகளின் கீழ் உருவானது என்பது அதிக முக்கியத்துவம் பெறுவதில்லை.**

ஒரு கொலனித்துவ நாட்டில் முதலாளித்துவ வளர்ச்சிகள் மிகவும் வரையறுக்கப்பட்ட நிலைமைகளின் கீழ் மட்டுமே நடை பெறும் பட்சத்தில், இந்த முதலாளித்துவ வளர்ச்சியுடன் நேரடியாக மூலதனம் இடுபவராகவோ, அல்லது அதற்காக பணியாற்றும் தொழிலாளராகவோ இல்லாமலேயே கூட ஒரு சமூகமானது பலமான தேசிய இயக்கங்களை உருவாக்கும் நிலைமைகள் உருவாவதை நாம் இலங்கைளில் காண்கிறோம். இத்துடன் கூடவே, சர்வஜன வாக்கெடுப்பானது ஒரு குறைவிருத்தி நாட்டினுள் திணிக்கப்படும் போது இது ஒரு விரிவான **'சமுதாய ஒப்பந்தத்தின்'** விளைவாக அன்றி, மேலிருந்து திணிக்கப்பட்டதாக அமைந்தது. இப்படியாக மேலிருந்து திணிக்கப்பட்ட ஜனநாயகமானது அதன் ஆரம்பம் முதலாகவே தவறாகவே – வெறும் எண்ணிக்கை தொடர்பான விடயமாக – அதாவது **'பெரும்பான்மைவாதமாக'** (Mejoritarionism) குறுக்கப்பட்டு விடுகிறது.

www.tamilarangam.net

இதற்கு பின்பு எண்ணிக்கையில் பெரியதாக இருக்கும் ஒரு சமூகத்தின் ஆளும் குழுமமானது, இந்த எண்ணிக்கையை எவ்வாறு எப்போதும் தமக்கு சார்பாகவே வைத்திருப்பது என்ற எண்ணத்துடனேயே் செயற்பட ஆரம்பிக்கிறது. குறிப்பிட்ட மக்கள் பிரிவினரின் வாக்குரிமைகளை பறிப்பது: குறிப்பிட்ட மக்கள் தம்மை அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவம் செய்ய முடியாதவாறு குடிசனப்பரம்பலை மாற்றியமைப்பது என்று தொடர்கிறது. அடுத்த கட்டத்தில் இது அரிதான மூலாதார வளங்கள் பற்றிய போட்டியாக, போராட்டமாக மாறி (Resourse War) வன்முறை மூலமாக இதற்கு தீர்வு காணப்படுகிறது. இந்த போரில் சிங்கள பேரினவாத அரசானது அடுத்தடுத்ததாக, ஒவ்வொரு களமாக தேர்ந்தெடுத்து தனது தாக்குதல்களைத் தொடுக்கிறது. தனிச்சிங்களச் சட்டம், சிங்கள சிறீ, இனரீதியான தரப்படுத்தல், கலாச்சாரரீதியான ஒடுக்கு முறைகள்... இப்படியாக தொடர்ந்து நேரடியான வன்முறைசார்ந்த ஒடுக்குமுறைகளிக் வடிவத்தை எட்டும் போது, தமிழ் மக்களது ஆயுத போராட்டமானது தோன்றுகிறது.

பிரிட்டிசாரின் ஆட்சிக் காலத்தில் உள்ளூர் நிர்வாக அதிகாரங்களை படிப்படியாக உள்ளூரிலுள்ள ஆளும் குழுமங்களின் கைகளில் ஒப்படைக்கும் நோக்கில் தனது அரசியல் சீர்திருத்தங்களைத் தொடங்கியபோது, ஆரம்பத்தல் **சிங்கள தமிழ் மேட்டுக் குடிகளிடையே நெருக்கமான உறவும் நம்பிக்கையும் பலமாக நிலவியது**. கரையோர **சிங்கள 'கொவி' சாதியினர், தமிழ் வெள்ளாள சாதியினருடன்** நல்ல நெருக்கமாக உறவுகளைக் கொண்டிருந்தனர். அப்போது பொருளாதாரரீதியில் புதிதாக பலம் பெற்று வந்த **சிங்கள 'கரவா' சாதியினர்** ஏனைய இரண்டு தரப்பினருடனும் போட்டியிட வேண்டியிருந்தது. 1912 இல் மானிங் சட்ட திருந்தங்களின் அடிப்படையில் நடைபெற்ற சட்டசபைக்கான தேர்தலில் **'படித்த இலங்கையரது பிரதிநிதித்துவத்திற்கான'** போட்டியில் ஒரு சிங்கள கரவா சாதியைச் சேர்ந்த சேர் மார்க்கஸ பெர்னான்டோ (Sir Marcus Fernando) என்பவருக்கு எதிராக தமிழ் வெள்ளாளரான பொன். இராமநாதனை ஆதரிக்க சிங்கள கொவி சாதியினர் முன்வந்தனர். இதன் மூலம் இலங்கை முழுவதற்குமான படித்த மக்களது பிரதிநிதியாக பொன். இராமநாதன் தெரிவானார். இப்படிப்பட்ட நிலைமையில் சிங்கள கரவா சாதியினர் அரசியல் அதிகாரத்தில் தமது பங்கைப் பெறுவதானால் சிங்கள கொவி – தமிழ் வெள்ளாளரது கூட்டை உடைத்தாக வேண்டியிருந்தது. அதற்கான கருவியான சிங்கள மொழி பற்றிய விடயம் பயன்பட்டது. சிங்கள் 'கராவா' மேட்டுக்குடியானது "சிங்களம் மட்டும்" தொடர்பான கோரிக்கைகளை

www.tamilarangam.net

முன்வைத்ததன் நோக்கமே இந்த சிங்கள 'கொவி' - தமிழ் 'வெள்ளாள' கூட்டை உடைப்பதேயாகும். இந்த போராட்டத்தில் முன்னின்ற அத்தனை முன்னணி பிரமுகர்களும், பிக்குகளும், அவர்களது 'ராமாயான நிக்காய' என்ற பௌத்த சங்கமும் முழுக்க முழுக்க சிங்கள கரவா சாதியைச் சேர்ந்தவர்களே. இப்படியாக தமிழ் வெள்ளாளரை விலையாகக் கொடுத்தே, சிங்கள கராவ சாதியனர் சிறீலங்கா அரசில் தமது பங்கைப் பெற்று சிங்கள ஆளும் குழுமத்தின் ஒரு பகுதியினராக ஆகினர். இப்படியான தமிழருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சிங்கள பேரினவாதத்தின் ஊற்று மூலமாக சிங்கள தேசத்தினுள் நிலவிய சாதி அடிப்படையிலான போட்டிகள் காரணமாக அமைந்தன.

சிங்கள் மக்களிடையே கரையோர சிங்களவருக்கும், கண்டிய சிங்களவருக்கும் இடையிலான போட்டிகளும் பலமானவையாக விளங்கின. ஒரு கட்டத்தில் **கண்டிய சிங்களவரது** மனக்குறைகளை களையும் விதத்தில் பண்டாரநாயக்காவால் சமஸ்டி திட்டம் முன்வைக்கப்பட்டது. 1926 இல் இலங்கையில் இருக்கும் **மூன்று தேசங்களுக்கும் தனியான சமஷ்டி அமைப்புக்களின் தேவை** பற்றி பண்டாரநாயக்கா வலியுறுத்தினார். 1944 இல் **இலங்கை கொம்யூனிஸ்ட்டுக் கட்சியானது** சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் ஆகியோர்கள் தனியான தேசங்கள் எனவும் **விரும்பினால் அவர்கள் பிரிந்து செல்வது உட்பட அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கிய சுயநிர்ணய உரிமை உடையவர்கள்** என்றும் தமது அறிக்கையில் தெரிவித்ததுடன், ஒரு **சமஷ்டி முறையிலான அரசியலமைப்பின் தேவையை இலங்கையில் வலியுறுத்தினார்கள்.** இப்படியாக பண்டாரநாயக்காவும், கொம்யூனிஸ்ட்டு கட்சியும் முன்வைத்தபோது கண்டிய சிங்களவர்கள் அதற்கு கொடுத்த முக்கியத்துவத்தைக் கூட தமிழ் தலைமைகள் கொடுக்கவில்லை. அவர்கள் சிங்கள 'கொவி'களுடன் சேர்த்து தம்மை பெரும்பான்மையாக கருதிக் கொள்ளும் ஒருவித மயக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். இந்த கனவுகள் களைவதற்கு அதிக காலம் எடுக்கவில்லை. மலையக மக்களது பிரசா உரிமை மற்றும் வாக்குரிமைகள் பறிக்கப்பட்ட பின்பு திடீரென விழித்தெழுந்தவர்கள் **'தமிழரசுக் கட்சி'** யை தாபித்தார்கள். அதன் அங்குரார்ப்பன கூட்டத்தில் செல்வநாயகம் அவர்கள் ஆற்றிய உரையில், **"தமிழ் மக்கள், சிங்கள மக்களைவிட எல்லா அடிப்படையான அம்சங்களிலும் வேறுபட்ட ஒரு தனியான தேசமாக அமைவதாக"** வலியுறுத்தினார். தமிழரசுக் கட்சியானது தொடர்ச்சியாக முன்னெடுத்த பல் வேறு போராட்டங்கள் மூலமாக தமிழ் தேசிய உணர்வை ஈழத்தமிழர்கள் மத்தியில் பரப்புவதில் வெற்றி பெற்றார்கள். தமிழ் தேசிய கிளர்ச்சிகள் தமிழர் தாயகத்தில் மிகவும் தீவிரமாகவே

www.tamilarangam.net

நடைபெற்றது. மாநாடுகள், பாத யாத்திரைகள், சத்தியாக்கிரகம் என்று பல்வேறு வெகுஜன போராட்ட முறைகள் மூலமாக முன்னெடுக்கப்பட்ட தேசியவாத கிளர்ச்சிகள் தமிழ் தேசியத்தை தமிழர் தாயகத்தின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு செல்ல தவறவில்லை. தமிழர் தேசிய இயக்கமானது ஒரு போதும் மேட்டுக்குடி இயக்கமாக குறுக்கிக் கொண்டது கிடையாது. சாதாரண விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர், அரச ஊழியர்கள், இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள்... என்று சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் அரவணைத்துக் கொண்டுதான் முன்னேறியது. தொடர்ந்துவந்த மொழிப் போராட்டம், தரப்படுத்தலுக்கு எதிரான போராட்டம், வட்டுக்கோட்டை மாநாட்டு தீர்மானம் போன்றவை அனைத்துமே முன்னைய நடவடிக்கைகள் பலனளிக்கத் தவறியதன் அடிப்படையில்தான் முன்னெடுக்கப்பட்டன. இங்கே யாரோ குறிப்பிட்ட **சிலர் திடீரென தன்னிச்சையாக, தமிழ் தேசத்தின் தகுதிக்கு மீறிய கோரிக்கைகளை ஆர்வக் கோளாறு காரணமாக எழுந்தமானமாக முன்வைக்கவில்லை.**

**இங்கே நாம் ஒரு அசலான தேசிய இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி என்பவற்றையன்றி வேறெதையும் காணவில்லை.** இது ஸ்டாலினால் சூத்திரத்தினுள் அடைக்கப்பட முனைந்த ஒரு நிகழ்வுப் போக்கிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்ட ஒரு போக்கினூடாக இன்னொரு தேசமானது உருப்பெற்று தனக்கான தனியான அரசை அமைப்பதற்கான தனது விருப்பை தெரிவிக்கும் ஒரு வரலாற்றை நாம் அப்படியே எமது கண் முன்னாலேயே காண்கிறோம். பல குறைபாடுகள் உடையதுதான் என்றாலும் கூட, 1977 ம் ஆண்டுத் தேர்தலானது இந்த **தமிழீழ கோரிக்கைக்கான சர்வஜனவாக்கெடுப்பாகவே** கருதப்பட்டாக வேண்டியுள்ளது. (ஐ. நா. தலைமையில் ஒரு மிகவும் சுதந்திரமான, ஆயுத பயமுறுத்தல்கள் இல்லாத ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நிகழ்த்த முடியாதவரையில் இதனை இப்படியாக ஏற்பது தவிர்க்கப்பட முடியாததாகிறது.) அதற்கு பின்பு 1983 இன் கலவரங்களுடன் கிட்டத்தட்ட ஒட்டு மொத்த தேசமுமே விடுதலைப் போராளிகளை முழுமனதுடன் ஆதரித்து உதவிகளைச் செய்து வந்தார்கள். இங்கே ஒரு மக்கள் கூட்டம் தனது விருப்பங்களை செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தியுள்ளது. தொடர்ந்த ஆயுத போராட்டத்தில் குறைபாடுகள் மிகப் பெரிய அளவில் காணப்பட்டாலும் மக்கள் தலைமையையும் போராட்டத்தையும் வேறுபடுத்திப் பார்க்கும் அளவிற்கு முதிர்ச்சி பெற்றவர்களாவே இருந்தார்கள். யுத்தத்தின் கடைசி நாட்களில், புலிகள் ஏற்படுத்திய குழறுபடிகளையும் மீறி, புலம் பெயர்ந்த நாடுகளில் மக்கள் கூட்டமானது இலட்சக்கணக்கில், பனிக்கால குளிரையும்

www.tamilarangam.net

பொருட்படுத்தாமல் வீதியில் திரண்டதே! **இதனைவிட வேறு எப்படியாக ஒரு தேசம் தனது தேசிய உணர்வை வெளிப்படுத்த முடியும்.** இதற்கு மேல் இந்த மக்களை ஒரு தேசமாக அங்கிகரிக்க ஏதாவது ஒரு சூத்திரம் இடையூறாக இருக்குமானால், இங்கு திருத்தப்பட வேண்டியது சமூக இயக்கமல்ல: மாறாக சூத்திரமேயாகும்.

இப்படியாக பெரும்பாலான கொலனித்துவத்திற்கு பிந்திய நாடுகளில் போலவே இலங்கையிலும் பல்லின நாடாக இருந்த இலங்கை, சிங்கள் தேசியவாதத்தின் ஒடுக்குமுறைகள் காரணமாக பல்தேசிய சமூகமாக உருப்பெற்றுவிட்டுள்ளது. இதில் தமிழ்த் தேசமானது தனியான அரசை அமைப்பதற்கு போராடியுள்ளது. இப்போது அந்த போராட்டமானது பல்வேறு காரணங்கள் காரணமாக ஒடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு தோல்வியின் விளிம்பில் வைத்து, ஈழத்தமிழர் ஒரு தேசமா? என்று கேள்வி எழுப்புவதும், அதனை நிராகரிக்கும் வகையில் ஸ்டாலின் சூத்திரத்தை துணைக்கழைப்பதும் மிகவும் அபத்தமான காரியமாகவே படுகிறது.

## எமது யுத்தமும் சர்வதேச நிலைமைகளும்

யுத்தம் நடந்து முடிந்த விதம், மற்றும் இதில் மேற்கு நாடுகளும், சீனா, ரஷ்யா மற்றும் முற்போக்கு முகாமைச் சேர்ந்த நாடுகளும் ஆற்றிய பாத்திரம் குறித்தும் பல கேள்விகள் எழுகின்றன. எமது போராட்டம் நசுக்கப்பட வேண்டும் என்பதில் முழு உலகமும் அக்கறை காட்டியதா? மேற்கு நாடுகளின் சில அரைகுறையான முன்னெடுப்புக்களையும் மீறி சீனாவும் ஏனைய நாடுகளும் கொடுத்த ஆதரவுகளை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது? இந்த பின்னணியில் தேசியவாதம், தேசிய விடுதலை போன்றவற்றின் எதிர்காலம் என்ன? என்பன போன்ற பல கேள்விகள் எம்முன் எழுகின்றன.

இன்றைய சர்வதேச நிலைமைகளை புரிந்து கொள்வதற்கு அண்மையில் சர்வதேச அளவில் ஏற்பட்டுவரும் புதிய அணிசேர்க்கைகளை கவனிப்பது அவசியமானது. 1990 களில் இருந்தது போன்ற நிலைமைகள் இப்போது சர்வதேச அரங்கில் காணப்படவில்லை என்பதுதான் இங்கு முக்கியமான விடயமாகும். 1990 களின் ஆரம்பத்தில் சோவியத் யூனியனது தகர்வை அடுத்து, ஒற்றைத் துருவத்தின் தலைமை நாடுகள் என்ற வகையில் அமெரிக்காவின் தலைமையில் ஐரோப்பிய யூனியனும் ஜப்பானுமாக விரிவான அளவில் சர்வதேச அரங்கில் ஏனைய நாடுகளை

www.tamilarangam.net

கட்டுப்படுத்தும் நிலைமையில் இருந்தன. மூலதனத்தின் நகர்வு, மற்றும் சர்வதேச கடன் பரிவர்த்தனைகள் போன்றவற்றில் இந்த நாடுகளுக்கு இருந்த பலத்தை பயன்படுத்தி, ஏனைய நாடுகளை மிக எளிதாக வற்புறுத்தி தமது நோக்கங்களுக்கு இணங்க வைப்பதில் வெற்றி பெற்றனர். ஆனால் இந்த நிலைமையை அப்படியே தொடர்வதில் இப்போது பிரச்சனைகள் எழுந்துள்ளன. அவற்றில் முக்கியமான விடயம் இந்தியா, சீனா போன்ற நாடுகள் இந்த உலகமயமாதல் தொடர்பான மாற்றங்களின் ஊடாக தாமும் பொருளாதார ரீதியலில் பலம் பெற்ற நாடுகளாக உருப்பெற்று வருவதாகும். இப்போது மேற்கு நாடுகளுக்கு கடன் கொடுக்கும் முக்கிய நாடாக சீனா மாறிவிட்டுள்ளது. அத்தோடு முன்னர் உலக வர்த்தக மையம் தொடர்பான பிரச்சனைகளில் செயற்பட்டது போலன்றி, இந்த வளர்ந்து வரும் நாடுகளில் முக்கியமான நாடுகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக பிரக்ஞையுடன், ஒன்று பட்டு செயற்பட தொடங்கியுள்ளன. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 'BRIC' நாடுகளின் கூட்டமைப்பானது இப்போது உலகளாவிய பிரச்சனைகளில் இணைந்து செயற்படத் தொடங்கியிருக்கிறன. இவை தமக்குள் மாத்திரமன்றி, ஏனைய மூன்றாம் உலக நாடுகளையும் தம்மோடு இணைத்துக் கொண்டு செயற்படத் தொடங்கியுள்ளன. இன்றைய உலகில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியனும் ஜப்பானும் இணைந்த கூட்டிற்கு எதிராக, இந்த புதிய கூட்டானது ஒரு பலமான எதிரணியாக உருவாகியுள்ளது. இவற்றின் கூட்டு செயற்பாடானது பொருளாதார தளத்தில் மட்டும் நின்றுவிடாமல், ஏனைய அரசியல் மற்றும் முக்கியமான சர்வதேச விவகாரங்கள் தொடர்பாகவும் விரிவடைந்து வருகிறது. இந்த முரண்பாட்டை சரியாக இனம் கண்டு தனது நலனுக்கு உரிய வித்தில் முழுதாக பயன்படுத்திக் கொண்டதில்தான் சிறீலங்கா அரசின் வெற்றியானது அடங்கியிருக்கிறது.

ஆரம்பத்தில் மேற்கு நாடுகள் சிறீலங்கா அரசிற்கு உதவ தயங்கியபோது சீனா மற்றும் இந்த அணியைச் சேர்ந்த நாடுகளிடம் ஆயுத மற்றும் பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொண்டதுடன், யுத்தம் தொடங்கிய போது மேற்கு நாடுகளிடம் இருந்து வந்த அழுந்தங்களை சமாளிப்பதற்கும் இதே சாதுர்யம் பயன்பட்டது. யுத்தம் முடிந்த பின்பு மனித உரிமை மீறல் மற்றும் போர்க்கால குற்றங்கள் தொடர்பாக எழுந்த முறைப்பாடுகளையும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் விவாதிக்க முடியாதவாறும், மனித உரிமைக்கான அமைப்பில் வாக்களிப்பில் தனக்கெதிரான தீர்மானங்களை தோற்கடிப்பதற்கும் இதே முறைகளையே சிறீலங்கா அரசு பயன்படுத்தியுள்ளது. இந்த முயற்சிகளின் போது வெனிசுவேலா, கியூபா

போன்ற நாடுகளும் சிறீலங்கா அரசிற்கு ஆதரவாக வாக்களித்தமை பலருக்கும் ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் அமைந்திருந்தது. இதில் ஆச்சரியப்பட, அல்லது அதிர்ச்சியடைய ஏதும் இருப்பதாக கருத முடியாது. ஏனெனில் சர்வதேச உறவுகள் என்பது முற்றிலும் தர்மம், மனித உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படுபவை அல்ல. ஆனாலும் அந்தந்த நாடுகளிலும், சர்வதேச அளவிலும் ஏற்படும் பொதுஜன அபிப்பிராயம், மற்றும் சர்வதேச அமைப்புகளின் அழுத்தம் போன்றவற்றினால் கட்டுப்படுத்தப்பட அல்லது செல்வாக்கு செலுத்தப்படக் கூடியவையே ஆகும். சர்வதேச உறவுகள் பற்றிய விடயங்களை முற்றிலுமாக நிராகரித்து, சர்வதேச நியமங்களை தூக்கியெறிந்ததற்கு விடுதலைப் புலிகள் கொடுத்த விலைதான் இந்த தோல்வியாகும். இந்த உறவுகளின் சிக்கலான தன்மைகளை சரிவர புரிந்து கொண்டு சரியான முறையில் காய்களை நகர்த்திய சிறீலங்கா அரசானது வெற்றியடைந்தது.

## எதிர்காலம் குறித்து

இந்த தோல்வியை அடுத்து, மாறியுள்ள சர்வதேச சூழலில் தேசிய விடுதலைப் போராட்டங்களோ, அல்லது மொத்தத்தில் எதிர்ப்பியக்கங்களோ இனிமேல் வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்ற வகையில் நம்பிக்கையீனத்தை பரப்புவதை நாம் அனுமதிக்க முடியாது. இதில் நாம் சில விடயங்களை கருத்திற் கொண்டாக வேண்டியுள்ளது.

- x முதலாவதாக, சர்வதேச சூழலானது எமது போராட்டத்திற்கு பாதகமாக அமைந்தது உண்மையே. ஆயினும், இதனை முற்றிலும் இப்படியே போக விட்டதில் விடுதலைப் புலிகளின் பங்கு அதிகமானது. போராட்டத்தின் ஆரம்ப காலம் தொட்டே சர்வதேச விவகாரங்கள் உரிய கவனத்தை பெற்றிருக்குமாயின் இந்த நெருக்கடிகளை பெருமளவில் சமாளித்து இருக்க முடியும்.
- x இரண்டாவதாக, இன்றுள்ள சர்வதேச சூழ்நிலை என்றென்றைக்குமே இப்படியாக இருக்கப் போவதில்லை. இன்றுள்ள நாடுகள் பலவற்றில் பல மாற்றங்கள் ஏற்படவும், அதன் விளைவாக இந்த அணிசேர்க்கை இப்போது நாம் கற்பனை செய்தும் பார்க்க முடியாத மாற்றங்களுக்கு உள்ளாவதற்கும் கூட வாய்ப்புக்கள் உண்டு. ஆதலால் எதனையும் முன்கூட்டியே கழித்துக் கட்டிவிடுவது ஆபத்தானது.

www.tamilarangam.net

- மூன்றாவதாக, ஒரு தேசம் ஒடுக்கப்படும் வரையில் அந்த ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் எழுவது தவிர்க்கப்பட முடியாததாகும். இதனை தவிர்ப்பது தொடர்பான கட்டுப்பாடானது அந்நிய சக்திகளின் கரங்களில் அதிகம் இல்லை. போராட்டங்களை ஒட்டு மொத்தமாக நசுக்குவதன் மூலமாக இப்படிப்பட்ட அடிப்படையான பிரச்சனைகளை தீர்த்துவிட முடியாது. பெரியளவிலான புலம் பெயர் சமூகம், நவீன கணணி மற்றும் இணையத்தள வசதிகள், புலம் பெயர்ந்தவர்களுக்கு இடையிலும், புலம் பெயர்ந்தவர்களுக்கும் - புலத்தில் இருப்பவர்களுக்கும் உருவாகக் கூடிய பலமான வலைப்பின்னல் அமைப்புகள், கடுமையான போராட்ட அனுபவங்கள், தொடரும் ஒடுக்குமுறைகளும், தேசிய பிரச்சனைக்கு தீர்வு காண இயலாதா சிங்கள மற்றும் தமிழ் தலைமைகளில் இயலாமை போன்றவை இந்த முரண்பாடுகளையும், போராட்டங்களையும், பல் வேறு வடிவங்களிலும், தளங்களிலும் கொண்டுவரவே செய்யும். இதனை கட்டுப்படுத்துவது சர்வதேச சமூகத்தால் மாத்திரம் ஆகக் கூடியதன்று.
- நான்காவதாக, சர்வதேச சமூகம் பெரியளவிலான ஆயுத போராட்டங்கள் தொடர்ச்சியாக நடப்பதை விரும்பவில்லை என்பது உண்மைதான். "எல்லை கடந்த பயங்கரவாதம்" பற்றிய எச்சரிக்கை இதற்கு முக்கியமான காரணமாகும். ஆதலால் இந்த முரண்பாடுகள் பெரிய அளவிலான ஆயுதம் தாங்கிய போராட்டங்களாக வெடிக்காமல் தவிர்ப்பதில் இந்த நாடுகளுக்கு அக்கறை இருக்கவே செய்கிறது. அத்தோடு அகதிகள் மேற்கு நாடுகளை நோக்கிக் குவிவது, அத்துடன் கூடவே உழைப்புச் சக்தி இடம் பெயர்வது போன்ற பிரச்சனைகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும் இது அவசியமானதாகிறது. ஆனால் அதற்காக எல்லாவிதமான போராட்டங்களையும் முற்றாக நசுக்கிவிடலாம் என்று நம்பும் அளவிற்கு அவற்றின் இராஜாங்க திணைக்களங்கள் ஒன்றும் போராட்டங்கள் பற்றிய அறிவு அறவே அற்றவர்கள் அல்லர். எங்கெல்லாம் அடக்குமுறைகள் தொடர்கின்றனவோ, அங்கெல்லாம் போராட்டங்கள் தொடங்குவது தவிர்க்கப்பட முடியாதது என்ற படிப்பினையை இவர்கள் தமது சொந்த வரலாற்றிலேயே பல தடவைகள் நேரடியாக கற்றவர்கள். ஆதலால் நீண்ட காலத்தில் இது எமக்கு சாதகமாக திரும்பவும் வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன. தொடர்ந்தும் சிறீலங்கா அரசானது அரசியல் தீர்வுகளை முன்வைக்காமல்

www.tamilarangam.net

இழுத்தடிக்கையில் இது எமது போராட்டங்கள் பற்றி சாதகமான நிலைமைகளை தோற்றுவிக்காது என்பதில்லை.

**ஒரு போராட்டத்தின் வெற்றி – தோல்வியானது வெறுமனே அதன் அகநிலைமைகளாலோ அல்லது அதன் புற நிலைமைகளாலோ தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக அக மற்றும் புற காரணிகளின் கூட்டிணைவே இதனை நிர்ணயிக்கின்றன.** இந்த இரண்டு அம்சங்களும் சீரமைக்கப்படும் பொழுது ஒரு சரியான அக மற்றும் புற காரணிகளின் கூட்டிணைவிற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகளவில் இருக்கின்றனன. அத்தோடு **இன்றைய சர்வதேச ஒழுங்கமைவானது இப்பொழுதும் ஒரு மாறும் கட்டத்திலேயே, அசைவியக்கத்திலேயே இருக்கிறது. இதனை ஒரு பொது விதியாக ஆக்குவதும், இந்த அடிப்படையிலேயே எதிர்கால போராட்ட நடவடிக்கைகள் எல்லாவற்றையும் நம்பிக்கையீனத்துடன் பார்ப்பதும் தவறாகும்.**எதிர்காலத்தில் இன்னமும் என்னென்ன சாத்தியப்பாடுகள் இருக்கக் கூடும் என்பதை யாருமே முன்னனுமானிப்பது மிகவும் கடினமானதாகும். வேகமாக மாறிக் கொண்டிருக்கும், போக்குகளாக இன்னமும் திடநிலை (settle) ஆகாத ஒரு கட்டத்தில் நாம் இப்போது இருக்கிறோம். ஆகவே எல்லாவற்றையும் முன்கூட்டியே தூக்கிப் போடும் ஒரு வேலை இப்போது யாருக்கும் பயன்படாது.

நாவலன் தனது கட்டுரை முழுவதும் தமிழர்களது தேசியவாதத்தை பலவிதமாக விமர்சித்து வந்த போதிலும், அது தேசியவாதம் தானா என்ற கேள்விகளை எழுப்பிய போதும், இறுதியில் ஈழத் தமிழரது தேசியவாதம் தவிர்க்க முடியாதது என்ற கருத்துடன் முடிக்கிறார். இந்த முடிவுடன் நாம் உடன்பாடு காணும் போதிலும் இவர் கட்டுரையின் முன்பகுதியில் எழுப்பிய பிரச்சனைகளில் தீர்வாக அன்றி, கட்டுரையின் கடைசிப் பகுதியில் திடீரென வலிந்து திணிக்கப்பட்டது போன்ற தொரு உணர்வைத்தான் தருகிறது. அது ஏன் நடைபெற்றது என்பதை ஆசிரியர் கவனிக்க வேண்டும். தனது வாதத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக தான் ஒத்துக் கொள்ளும் ஒரு அரசியல் நிலைப்பாட்டை தனது கோட்பாட்டு நிலைப்பாட்டில் இருந்து நிரூபிப்பதில் உள்ள நெருக்கடியாலா? அல்லது நடைமுறை அரசியலானது கோட்பாட்டு சூத்திரங்களை தூக்கியெறிந்து விட்டதன் விளைவா என்பதை வாசகர்களும் நோக்க வேண்டும்.

**இறுதியாக மார்க்சியம் பற்றிய எமது புரிதல்களையும் நாம் கேள்விக்குள்ளாக்கும் நேரத்தை அடைகிறோம். மார்க்சியம் என்பது ஒரு விஞ்ஞானம் என்கிறோம். சமூகம் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறோம். அப்படியானால் அரசியல்,**

www.tamilarangam.net

**பொருளாதாரம், வரலாறு, தத்துவம், மற்றும் அறிவுத்துறையின் ஏனைய கிளைகளில் ஏற்படும் கோட்பாட்டு வளர்ச்சிகளுக்கு இணையாக நாமும் எமது கோட்பாட்டு சாதனங்களை தொடர்ந்தும் புதிதாக உருவாக்கிக் கொள்ளவும், வரலாறு புத்தம் புதிதாக முன்வைக்கும் வளமான பிரச்சனைகளில் அவற்றை பரீட்சித்துப் பார்க்கவும் எமக்கு போதியளவு திறமையும், துணிவும் இருக்க வேண்டும். அப்படியாக இருக்கும் போது மட்டுமே நாம் “வரலாற்றில் மிகவும் முன்னேறிய கோட்பாட்டினால் வழிநடத்தப்படுபவர்கள்” (லெனின்) என்று உரிமை பாராட்ட முடியும். இதற்கு மாறாக வரட்டுச் சூத்திரங்களை தூக்கிப் பிடிப்பது நம் கண்முன்னே நடக்கும் வரலாற்று நிகழ்வுகளை புரிந்து கொண்டு அரசியல்ரீதியாக தலையீடு செய்ய ஒருபோதும் உதவப்போவதில்லை.**

ஒக்டோபர் 07, 2009

நாவலனது கட்டுரையை பார்க்க:
http://inioru.com/?p=5170

***உசாத்துணை நூல்கள்:***


Antonio Gramsci: The Prison Note book
Benedict Anderson: The Imagined Community
Earnest Gellner: Nation and Nationalism
J.V.Stalin: Marxism and National Question
Karl Marx: Capital Vol 1
Michal Lowy: Why Nationalism? Socialist Register 1993.
Minqi Li: The United States, China, Peak Oil, and the Demise of Neoliberalism
Nicos Poulantzas: State, Power, Socialism
Samir Amin: Globalisation and Imperialism
Tom Nairn: The Break up of Briton
V.I. Lenin: The Right of Nations to Self-Determination
V.I. Lenin: What is to be Done?
William K Tabb: Globalization is an Issue, The Power of Capital is the Issue.

www.tamilarangam.net

# சூறையாடப்படும் தமிழீழவளங்கள்

**அருந்ததி**

இந்திய அரசு எமது போராட்டத்தை அங்கீகரிப்பது, தமிழீழத்தை அங்கீகரிப்பது, படையை அனுப்புவது போன்ற இன்ன பிற விடயங்கள் இப்போது தமிழக அரசியலிலும், எமது ஜனநாயக தலைவர்களாலும் பேசப்படும் விடயங்களாக இருக்கின்றன. ஆனால் இவற்றையெல்லாம் மீறி இந்திய அரசும் அதன் ஆளும் வர்க்கமும் தமிழர்களின் தாயகப்பிரதேசத்தில், அதன் சட்டபூர்வமான உரிமையைக் கொண்டுள்ள அவர்களின் சம்மதமும் ஆலோசனையுமின்றி வளங்களை கொள்ளையிடுவதில் இறங்கியுள்ளது.

சம்பூர் அனல் மின்னிலையம், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, மன்னாரில் எண்ணை ஆய்வு, சேது சமுத்திர திட்டம், வன்னியில் விவசாய அபிவிருத்தி, என இவை அனைத்தும் எமது தாயகப்பகுதியில் நடைபெறும் விடயங்கள். இலங்கை அரசு தமிழ்மக்களின் வளமிக்கப்பிரதேசங்களை உயர்பாதுகாப்பு வலையமாகப் பிரகடனப்படுத்தி விட்டு மக்களை அங்கு மீள குடியேறவிடாது மிதிவெடி, கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை, பாதுகாப்பானதல்ல எனக் கூறுகிற அதேவேளே யாழ் மாவட்டத்தில் தெல்லிப்பளை, காங்கேசன்துறை, சாவகச்சேரி மற்றும் பருத்திதுறை ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள் மீள அமைத்தல், மேலதிக இராணுவமுகாம்களை ஏற்படுத்துதல், மற்றும் பல வருடங்களாக வவுனியா வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த ரயில் சேவை யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை வரை விஸ்தரித்தல் என்பதுடன் இதற்காக ஒன்பது பிரதான ரயில் நிலையங்கள் உட்பட 34 ரயில் நிலையங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

மேலும் காங்கேசன்துறை துறைமுகம் மீள்கட்டுமான மற்றும் நிர்வாகப் பொறுப்பினை இந்தியாவிற்கு வழங்கியுள்ளது.அதன் முதல் நகர்வாக, பலாலி விமான ஓடு பாதை புனரமைப்பிற்கு 117 மில்லியன் ரூபாய்களை இந்திய தூதுவராலயம் இலங்கைக்கு அண்மையில் வழங்கியுள்ளது.

### சம்பூர் அனல்மின்னிலையம்

இலங்கையின் இரண்டாவது அனல் மின்நிலையம் திட்டம் 2002 இல் இந்திய அரசினால் முன் வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு உகந்த இடமாக திருகோணமலை மாவட்டத்தின் சீனக்குடா பிரதேசம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. சீனன்குடாவில் பிரிமா மாஆலை, மிட்சுபி சீமெந்து ஆலை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பன அமைந்துள்ளதுடன் சீனன்குடா நகரங்கள் வர்த்தக ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் கேந்திர முக்கியத்தும் வாய்ந்தவையாகும்.

www.tamilarangam.net

நிலக்கரி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யவிருக்கும் அனல் மின்நிலையத்தின் புகைப்போக்கி மிக உயரமாக அமையப்போவதால் இது சீனக்குடா விமானத்தளத்தில் விமானப்போக்குவரத்து தடையாக அமையலாம் என அரசு இவ்விடத்தை நிராகரித்ததாக கூறப்படுகிறது, ஆனால் உண்மையில் சீனக்குடாவிற்கு தென் மேற்குப்பகுதியில் பெரும்பான்மையின மக்கள் செறிந்து வாழும் இடங்களான கந்தளாயும் அதையண்டிய பிரதேசங்களும் அமைந்துள்ளன. இவ் அனல்மின்நிலையத்தால் வெளியேற்றப்படும் கரி நிரம்பிய புகையும், மற்றும் ஏனைய நச்சுக்கழிவுகளின் மூலம் அச் சூழல் மாசமடையும் என்பதாலும் அங்குள்ள மக்களுக்கு இது ஆபத்தை ஏற்படுத்தும் என்பதனாலேயே இத் தெரிவு நிராகரிக்கப்பட்டு அதே மாவட்டத்தின் மூதூர் கிழக்குப் பகுதியிலுள்ள சம்பூர் தெரிவு செய்யப்பட்டது.

இந்த அனல் மின் நிலையமானது 500 ஏக்கர் நிலப்பரப்பில் 500 மில்லியன் யு.எஸ் டொலர் செலவில் அமைக்கப்படவுள்ளது. இரு கட்டங்களாக அமையவுள்ள இந்த திட்டத்துக்காக குறைந்தது 5 வேறுபட்ட உடன்படிக்கைகள் கைச்சாத்தாக உள்ளன. எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்ய முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.சுமார் 50 அனல் மின் நிலையங்களை அமைக்கக் கூடியளவு நிலத்தை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்திற்கும் த.வி.புலிகளுக்கும் இடையிலான போர் காரணமாக சம்பூர் பிரதேசத்தை சூழவுள்ள 30 கிராமங்களில் வாழ்ந்த 30, 000 தமிழ் மக்கள் அப்பிரதேசத்தை விட்டு வெளியேறினர். சம்பூர், சேனையூர், கடற்கரைச்சேனை, சூடைக்குடா, கூனித்தீவு, பாட்டாளிபுரம் ஆகிய கிராமங்களை சிறிலங்கா அரசு அதிஉயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்தது. இம் மக்கள் தற்போது மட்டக்களப்பு, கிளிவெட்டி, பட்டித்திடல், மற்றும் கட்டைப்பறிச்சான் பகுதிகளில் இடைத்தங்கல் முகாம்களில் பரந்து வாழ்கின்றனர். அகதி முகாம்களில் தங்கியிருக்கும் பிரதேச மக்களிடம் வேறு இடங்களுக்கு செல்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் கையொப்பங்களை அரசாங்கம் தந்திரமாக பெற்று வருகிறது. இவ்வாறு இடம்பெயர்ந்து மக்கள் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருந்த பொழுது ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அந்த பகுதியினை கையகப்படுத்திக் கொண்டுள்ளார்.

ஈச்சிலம்பற்றுகிராம மக்களின் குடிமனைப்பிரதேசத்தில் இன்று இராணும முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வாழ்ந்த மக்களின் குடியிருப்பு பிரதேசத்தில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு காலம் காலமாக வாழ்ந்து வந்த 75 ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வுரிமை மறுக்கப்பட்டு இரண்டு கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள உப்புக்கேணி,

சின்னக்குளம் ஆகிய இடவசதி குறைந்த தற்காலிக குடில்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.
இம்மக்கள் வேறு இடங்களில் வசிக்க வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளதாக ஊடகங்களில் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்ற அதேவேளை மாற்றீடாக வழங்கப்படவுள்ள பிரதேசங்கள் மிகவும் மோசமான பயனற்ற பிரதேசங்கள் என்பதையும் பரிந்துரைக்கப்பட்டுள்ள ரால்கீ- மகாவலி கங்கை பெருக்கெடுத்து ஓடும் காலங்களில் நீரில் மூழ்கிவிடும் அபாயமுடையது என்பதையோ மற்றைய தென்பகுதியில் வறட்சி நிலைமை காணப்படுகின்றது என்பன போன்ற விடயங்களை திட்டமிட்டு புறந்தள்ளியுள்ளது.
திருகோணேஸ்வர ஆலயத்துடன் வரலாற்று ரீதியாக தொடர்புடைய பிரதேசம் சம்பூராகும். இரண்டாம் இராஜசிங்க மன்னனினால் கோணஸ்வரத்திற்கு பதிலாக தம்பலகாமத்தில் ஓர் கோயில் அமைக்கப்பட்டதாகவும், கோயிலுக்கு தொண்டாற்றும் பணிகள் சம்பூர் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக டச்சு வரலாற்றுப்பதிவு குறிப்பிடுகிறது. சம்பூர் ஓர் மிகச் சிறந்த விவசாய நிலம், மின்நிலையத்தை அமைப்பதற்கு பொருத்தமான இடம் அதுவல்ல, அந்தப் பிரதேச மக்களிடம் இது குறித்து எவ்வித கருத்தும் அறியப்படவில்லை. அக் கிராம மக்களை இந்த நிலைமை எந்தளவுக்கு பாதிக்கும் என்பது பற்றி எவரும் கவனத்தில் கொள்ளவில்லை. முதலில் அந்தப் பிரதேச மக்களிடம் கருத்துக்கள் அறியப்பட்டிருக்க வேண்டும், அவர்களுக்கு நியாயமான நஷ்ட ஈடுகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயத்தையும், மீன்பிடியையும் தமது முக்கிய தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள்.
தமிழ் மக்களின் பாரம்பரிய குடியிருப்பு பகுதியினுள் அமைக்கப்பட்டிருந்த 300 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு, 500 ஏக்கர் பகுதியில் 1000 மேகாவோல்ற் மின் உற்பத்தி செய்யும் அனல் மின்னிலையம் அமைக்கப்படவுள்ளது.
இந்நிலையம் அமைக்கப்படுவதனால் சம்பூரை அண்டிய கொட்டியாரக்குடா பகுதியில் நிலக்கரியைச் சேமித்து வைக்கும் தளங்கள் உருவாக்கப்படும், இதனால் மேலும் சுமார் 500 ஏக்கர் குடியிருப்பு நிலங்கள் சுவீகரிக்கப்படும். இவ்வாறான மின் நிலையம் அமைக்கப்பட முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய சூழல் கள ஆய்வுகள் மற்றும் இதர கள ஆய்வுகள் எதுவும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை.இம் மின்னிலையத்தில் வெளியேற்றப்படும் நிலக்கரிதூசு, நச்சுவாயுக்களினாலும் சூழல் மாசடைவதுடன், வெளியேறும் கழிவுகள் கொட்டியாரக்குடா கடல் சுற்றாடலில் அமைந்திருக்கும் சேனையூர், கட்டைபறிச்சான், மூதூர் கடல்வளத்தை அழிக்கும் அபாயம் காணப்படுகிறது.

www.tamilarangam.net

பொதுவாக இம்மின் நிலையங்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் ஏறத்தாழ அறுபது வருடங்களாகும். இதற்கு முன்னமே முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் அதன் மூலம் கிடைக்கவிருக்கும் இலாபத்தையும் கம்பனிகள் பெற்றுவிடும். சம்பூரில் முதலீடு செய்யும் இந்த நிறுவனம் உலக உற்பத்தியில் ஆறாவது இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மின்வலு பிரச்சினைக்கு தீர்வு காணும் முக்கிய உபாயமாகவே பிராந்தியத்தின் பல நாடுகளுடன் கூட்டு மின்சக்தி திட்டங்களை அமுல்படுத்த இந்தியா முனைத்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கடலினூடாக 200 மைல் தூர நிலக்கீழ்குழாய் வழியாக மின்சாரப் பரிமாற்றத் திட்டத்திற்கான அங்கீகாரத்தை இலங்கை அரசு வழங்கியுள்ளது. 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இத்திட்டத்துக்காக செலவாகும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த மின்சாரப் பரிமாற்றத்தின் கீழ் ஆயிரம் மெகாவாற் மின்சாரத்தை கொண்டு செல்லக் கூடிய நிலக்கீழ்குழாய் இணைப்பு ஏற்படுத்தப்பட விருக்கின்றது. ஆயிரம் மெகாவாற் என்பது இலங்கை மின்சார உற்பத்தியில் 40 சதவீதமாகும்.இந்தியா அதன் அண்டைய நாடுகளான நேபாளம், பூட்டான், பங்களாதேஷ் போன்ற நாடுகளுடனும் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டுள்ளது.

**காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை**

இத்தொழிற்சாலை 1950 ல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதற்கு இப்பகுதியில் காணப்படும் தரத்தில் மேம்பட்ட சுண்ணாம்புக்கற்களே காரணமாகும். இச்சுண்ணாம்புகற் படுக்கையானது நாட்டின் ஏனைய பகுதிகளை விட கனமானதாக உற்பத்திக்கு உகந்த இங்கு காணப்படுகிறது.

காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள திறப்பதற்கு முன்னர் அது திறக்கப்படுவதால் சுற்று சூழலுக்கு ஏற்படும் அபாயம் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என யாழ் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. தகுதியான நிபுணர்களின் உதவியுடன் இது குறித்து உடனடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அந் நிறுவனங்களின் கூட்டமைப்பு சூழல் மாசுபாடுதல், கடல் அரிப்பு,சுண்ணாம்பு கற்பாறைகளுக்கு எதிர் காலத்தில் ஏற்படும் தட்டுப்பாடு, நிலத்தடி நீரின் தன்மையில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றை ஆய்வின் போது பிரதான அம்சங்களாக கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

சீமெந்து உற்பத்திக்காக இந்தியா அல்லது பிறவெளிநாடு ஒன்றிற்கு சீமெந்து தொழிற்சாலை கையளிக்கப்பட உள்ள நிலையில் இந்த

www.tamilarangam.net

கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.காங்கேசன் துறை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்கள் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலையமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள நிலையில் பிறிதொரு நாடு ஒன்றிற்கு தொழிற்சாலையை கையளிப்பது மக்களின் மீள்குடியேற்றத்தையும் மிகவும் பாதிப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக யாழ் சிவில் வட்டரங்கள் தெரிவித்துள்ளன.

இத் தொழிற்சாலையின் திறப்புவிழாவில் உரையாற்றிய ஜி.ஜி. இனிமேல் தெற்கில் சிங்கள மக்கள் வீடு கட்டுவதாயிருந்தால் வடக்கில் தான் சிமெந்து வாங்க வேண்டும் என தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். காங்கேசன்துறை சிமெந்துதொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெந்து இலங்கையின் சிமெந்துத் தேவையின் பெரும்பகுதியை உற்பத்தி செய்தது ஆனால் யாழ்ப்பாணத்தின் சூழல்மாசடைவது தொடர்பான எந்தவித கரிசனையும் இன்றி இது நிகழ்த்தப்பட்டது. சுமார் ஆறு சதுரமைல் நிலப்பரப்பளவை அப்போது சிமெந்து தொழிற்சாலை எடுத்துக் கொண்டதுடன் கீரிமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இருந்த போயிட்டி எனும் கிராமம் காணாமல்லாமல் போய் விட்டது. அத்துடன் மாவை கலட்டி என்ற கிராமத்தின் பெரும் பகுதியை இத்தொழிற்சாலை எடுத்துக் கொண்டது.

லங்கா சிமெந்து லிமிட்டட் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இங்கு உற்பத்தி இரு மடங்காக அதிகரிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் இத்தொகுதியை பிரதிநிதிப்படுத்தியவர் செல்வநாயகம் என்பதையும் நாம் குறித்துக் கொள்ள வேண்டும்.

இது இயங்கிய காலப்பகுதியில் சூழவுள்ள கிராமங்களான மாவட்டபுரம், கொல்லன்கழட்டி மற்றும் பன்னாலை ஆகிய கிராமங்களில் பயிர்களிலும் பனைமரங்களிலும் சீமெந்து தூசுப்படிவுகளைக் காணக்கூடியதாக இருந்தது. இத்தொழிற்சாலையின் முதற்பலியாக காங்கேசன்துறையில் இயங்கி வந்த மருத்துவமனை மூடப்பட்டு இந்த மருத்துவமனை தெல்லிப்பளைக்கு இடம்மாற்றப்பட்டது. மழைநீர் நேரடியாக நிலக்கீழ் ஊற்றுக்களில் கலக்காது இருப்பதற்கு இச்சுண்ணாம்புக்கற்கள் மிகவும் அவசியமாகும். இச்சமநிலையில் மாற்றம் ஏற்படும் போது கடல் நீர் உள்ளே நுழைவதற்கான சாத்தியக்கூறுகள் பெருமளவு காணப்படுகிறது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்திலுள்ள 30 வீதமான நிலக்கீழ் நீரூற்றுக்கள் வெவ்வேறு பட்ட காரணங்களால் சவர்தன்மையுடையதாக மாறிவிட்டது. அண்மையில் பெறப்பட்ட அறிக்கையொன்றின் படி 4500 ஹெக்டர் (1 hectare = 10000 square meters) நிலப்பரப்பு சவர்தன்மையுடையதாகவும் விவசாயத்திற்குகந்ததல்லாத பிரதேசமாக மாறியுள்ளது.

உள்நாட்டு சிமெந்து உற்பத்தியில் சிறந்த போட்டித்தன்மையை ஊக்குவிப்பதற்கும், உள்ளூரில் நிலவும் கடுமையான சிமெந்து

www.tamilarangam.net

பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் உற்பத்தி மீள ஆரம்பிக்கப்படுவதாக கூறப்படுகிறது. மீண்டும் தொழிற்சாலையில் சீமெந்து உற்பத்திகள் ஆரம்பிக்கப்படுமானால் இலங்கையின் சீமெந்துத் தேவையில் 40வீதத்தினை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க உலகின் மிகப்பெரிய சிமெந்து உற்பத்தி நிறுவனங்களின் ஒன்றான இந்திய பிர்லா கம்பனி காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையைப் பொறுப்பெடுத்துள்ளது. இந்த நிறுவனம் உலகிலுள்ள சிமெந்து உற்பத்தி நிறுவனங்களின் வரிசையில் 11வது இடத்தில் இருக்கிறது. இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்களில் தமிழ்நாடு கணிசமான பங்கை வகிக்கிறது. காங்கேசன்துறையில் இந்த நிறுவனம் தனது உற்பத்தியை ஆரம்பிக்கும் போது தற்போதிருக்கும் 40 வீத சிமெந்து உற்பத்தியை 80 வீதத்திற்கு அதிகரிக்கவுள்ளது. இதன் மூலம் தனது முதலீட்டின் உச்ச இலாபத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் சந்தையின் தேவை பூர்த்தி செய்யும் வகையில் இராட்சத உற்பத்தியில் ஈடுபடும் என்பதை மட்டும் உறுதியாக நம்பலாம். இதனால் யாழ்ப்பாணக் கரையோரங்களில் மீண்டும் சுண்ணாம்புக்கற்கள் பெருமளவில் அகழப்படும், இதனால் கரையோர நிலங்கள் கடலில் மூழ்குதல், சூழல் மாசடைவு, நஞ்சாகும் நிலக்கீழ் நீரூற்றுக்கள், உடல்நலம் பாதிக்கப்படும் மக்கள் என ஒரு பாலைவானத்தை யாழ்தீவகற்பம் எதிர்நோக்கவிருகிறது.

அதேவேளை காங்கேசன்துறைமுக மீள்கட்டுமானப் பொறுப்பையும் நிர்வாகப் பொறுப்பினையும் இந்தியா பொறுப்பேற்கவிருக்கிறது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக பலாலி விமான ஓடு பாதையை சீரமைப்பிற்காக பல மில்லியன்களை இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சிமெந்தினை ஏ9 பாதை வழியாவோ அல்லது துறைமுகம் வழியாகவும் விற்பனைக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதேவேளை சிமெந்து தொழிற்சாலையிற்கும் அனல் மின் நிலையத்திற்கு எரிபொருளை கொண்டுவருவதற்கு துறைமுகங்கள் அவசியமானதாகிறது. இந்நோக்கிற்கு வசதியாக காங்கேசன்துறைமுக நிர்வாகப் பொறுப்பினை இந்தியா பொறுப்பேற்கவுள்ளது.

www.tamilarangam.net

### சேது சமுத்திர திட்டம்

தற்போதைய இலங்கைத்தீவு இந்திய தீபகற்பத்தில் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் எனவும் கடற்கோளினால் சில தாழ்வான பகுதிகள் அழிந்த காரணத்தால் இலங்கை தனித்தீவாக உருவெடுத்தாக புவியியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவின் தூத்துக்குடியில் ஆரம்பித்து இராமேஸ்வரம், தனுஷ்கோடியினுடாக இலங்கையின் தலை மன்னாருக்கும் இடையிலான பிரதேசமே சேது சமுத்திரமாகும். இப்போதுள்ள நிலைமையில் மணல்திட்டுகள், பவளப்பாறைகள் மற்றும் சீற்றமான கடலடித்தளத்தையும் இப்பகுதி கொண்டுள்ளது. திட்டம் இதுதான் இப்பிரதேசத்தில் தற்போது கடலாழம் குறைவாக இருப்பதால் வணிக்கப்பல்கள் இலங்கையை சுற்றியே பயணம் செய்கின்றன. இக்கடல் பிரதேசத்தை ஆழமாக்கி சேதுக்கால்வாய் ஒன்றை அமைப்பதன் மூலம் 780 கி.மீ கப்பல் பிரயாண தூரத்தையும், 30 மணித்தியால பிரயாண நேரத்தையும் எரிபொருளையும் மீதப்படுத்த முடியும் என்பதே.

இத்திட்டத்தின் மூலம் இந்தியாவின் தேசிய பொருளாதாரம் வளப்படுவதுடன் இந்தியாவின் கடற்படை மற்றும் கரையோர காவல் படையினரின் கண்காணிப்பை மேம்படுத்த வழிவகுக்கிறது.

மன்னார் வளைகுடா என்பது சுமார் 10, 500 சதுரகிலோ மீற்றர் பரப்பளவாகும். இது மீன்வளம் மிக்க ஒரு பிரதேசமாகும். இந்த மீன்வளத்திற்கு அடிப்படையே இங்கே காணப்படும் பவளப்பாறைகள்தான். இப் பவளப்பாறைகளின் மீது விழும் சூரியஒளியைப் பயன்படுத்தி அங்கு வாழும் நுண்ணுயிர்கள் ஒளிச்சேர்க்கையை நிகழ்த்தி ஒட்சிசனை தயாரிக்கின்றன. இங்கு வாழும் பிராணிகள் உயிர்வாழ இது அத்தியாவசியமானதாகும். இங்கு 3,600 வகையான கடற்தாவரங்கள், உயிரினங்கள் மற்றும் 117 வகையான அரிய பவளப் பாறைகளும் காணப்படுகின்றன. இப்பகுதியில் காணப்படும் கடல்வாழ் உயிரினங்கள் உலக முக்கியத்துவம் வாய்ந்தவை. இங்கு 441 வகையான மீன்கள் பிடிக்கப்படுகின்றன, இவற்றில் 100 வகை மீன்கள் அழகுக்கானவையாகும்.மேலும் 5 வகையான கடலாமைகள் குறிப்பாக இவ்விடத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

இத்தனை வளமிக்க பிரதேசத்தினை ஆழப்படுத்தி வணிக்கப்பல் பிரயாணத்திற்கு பயன்படுத்துவது தனியே சுற்றுச்சூழலுக்கான அச்சுறுத்தல் மட்டுமல்லாது இது பராம்பரிய மீன்பிடித்தொழிற்றுறையில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. மன்னார் வளைகுடாவில்

கிராமங்கள் இத்தொழிலையே நம்பியுள்ளன. ஏற்கனவே இப்பகுதி மீனவர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்ததாக காணப்படுகிறது.
வடக்கும் வடமேற்கு கரையோரப்பகுதி மக்கள் மீன்பிடித்தொழிலையே தமது வாழ்வாதாரமாக் கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள தீவுகள் கடலில் மூழ்கிவிடும் அபாயம் காணப்படுகிறது என SSSP(சேது சமுத்திர கால்வாய் செயற்திட்ட இந்திய அமைப்பு ) கூறியுள்ளது.
மண்ணியல் ஆய்வுகளின் படி யாழ்ப்பாணத்தீவகற்பமானது சுண்ணாம்பு படுக்கையின் மீது அமைந்திருப்பதாகவும், இப்பகுதி முழுவளர்ச்சியை எட்டாத சுண்ணாம்பு கற்பகுதியையும் கொண்டுள்ளது. இந்த சுண்ணாம்புகற் படுக்கையானது தீவைக்கடந்து இராமேஸ்வரம் வரை நீடிக்கின்றது. முற்காலத்தில் தூத்துக்குடியிற்கும் இலங்கையிற்கும் இடையில் கடல்பகுதி இருக்கவில்லை எனவும் இந்தியாவும் இலங்கையும் ஒரே அடித்தள பூமிப்படுக்கையில் அமைந்துள்ளன. இந்நிலையில் இப்பிரதேசத்தில் செயற்கையாக ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் மூலம் யாழ்ப்பாணத்தீபகற்பத்தில் ஒருபகுதி நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும் வாய்ப்புக் காணப்படுகிறது.
யாழ்ப்பாணம் கடலின் மட்டத்தில் இருந்து சில அடிகளே உயரமாக இருப்பதால் இந்த கால்வாயை ஆழப்படுத்தும் போது கடல் கொந்தளிப்பு மற்றும் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.
யாழ்ப்பாணத்தில் நிலக்கீழ் நீரின் தரம் மிகவும் குறைந்து வருவதாக பல ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்த்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் UNDP நிபுணரான பேராசியர் ரணில் சேனநாயக்கவினால் நடாத்தப்பட்ட ஆய்வுகளின் படி சேது சமுத்திர திட்டம் பூர்த்தியடைந்தால் யாழ்ப்பாணத்தின் நிலக்கீழ் அடியில் காணப்படும் நன்னீர் ஊற்றுக்களில் பாக்குநீரிணையில் காணப்படும் உப்பு நீர் கலப்பதற்கான வாய்ப்புக் காணப்படுகிறது.
சேதுசமுத்திரத்திட்டதின் மூலம் ஏற்படவிருக்கும் சூழலியல் பாதிப்புக்கள் பற்றிப் போதிய ஆய்வுகள் எதையும் இலங்கை அரசோ இந்தியா அரசோ இதுவரை நிகழ்த்தவில்லை. இது மட்டுமல்லாது இத்திட்டத்தின் விளைவாக யாழ்ப்பாணத்திற்கு மிக அருகில் உருவாகப் போகும் கால்வாயினால் அருகாமையிலுள்ள நிலப்பகுதியில் நீர்வளமும் கூடவே நிலக்கட்டுமானமும் சீர்குலையும் மிகப்பாரதுரமான விளைவையும் இதனால் பலத்த சேதமும் அழிவும் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.
கால்வாயை ஆழப்படுத்துமுகமாக 32.5 மி.க.மீ மண் அகழப்படும். இதில் பெரும் பகுதி ஆழக்கடலில் கொட்டப்படவுள்ளது. கடலோர நிலத்தில் கொட்டப்படும் மண்ணும், நீரில் கொட்டப்படும் மண்ணும், கடல்

www.tamilarangam.net

நீரோட்டத்தின் காரணமாகவும், மணல் அரிப்பின் காரணமாகவும் இடம் பெயரும். இவ்வாறு இடம் பெயரும் பெருவாரியான மணற்கும்பங்கள் எப்பகுதியை நோக்கி நகரும் என்பதோ, கடல் கொந்தளிப்பினால் ஏற்படும் பேரனர்த்தங்களையும், மனித கணிப்பீட்டுக்குள் அடங்காத இயற்கை சமநிலையின் பாதிப்பினால் ஏற்படவிருக்கும் எதிர்வுகூறமுடியாத நிலைமைகளையும் பற்றி யாரும் கருத்திற் கொண்டதாக தெரியவில்லை.

வங்காளவிரிகுடாவில் நீரோட்டங்கள் தொடர்பாக பார்க்கும் போது இருவகையான சுழல் நீரோட்டங்கள் காணப்படுகின்றன, எதிர் புயல் நீரோட்டம் ஆண்டின் அனேக மாதங்களிலும், வலிமையான புயல் நீரோட்டம் கார்த்திகை மாதத்திலும் வங்காள விரிகுடாவின் நீர் சுழற்சியின் குணாம்சமாக இருக்கின்றது. வைகாசி மாதத்திலும் 0.7-1.0 மீ என்ற விசைவேகத்தில் நீடிக்கிறது. (இந்த முக்கிய அம்சம் பற்றிய போதிய ஆய்வுகள் இல்லை). அது வளைகுடாவின் கிழக்காக ஓடும்போது மழைக்காலங்களுக்கு இடையிலான நீரோட்டமாகிறது. தென்மேற்குப் பருவ மழையின்போது முழு வளைகுடாவிலும் உள்ள நீரோட்டம் பலவீனமானதாக இருக்கிறது.ஐப்பசி மாத்தில் பூமத்திய நீரோட்டம் வளைகுடாவின் கிழக்கில் நுழையும்போது புயல் சுழற்சி உருவாக்கப்படுகிறது. குளிர்கால கிழக்கிந்திய நீரோட்டம் ஆற்றல் மிகுந்த மேற்கு எல்லை நீரோட்டமாகும். அதன் விசைவேகம் 1.0 மீ. என்ற அளவுக்கு மேலாகவே எப்போதும் இருக்கும். மன்னார் வளைகுடாவிற்கும் பாக்குநீரிணையிற்கும் இடையில் பருவகால பெயர்ச்சி காற்று காலங்களின் போது (வடகீழ், தென்மேல் ) எவ்வாறான உயர்தாழ் அமுக்கம் மாற்றங்கள் என்பது பற்றியோ, இதற்கேற்ப ஏற்படவிருக்கும் சகதி படியும் விபரம் பற்றியோ எவரும் கவனத்தில் கொண்டதாக தெரியவில்லை.

இந்தக் கடல்பகுதியின் பவள பாறைகளும், சகதி இடம்பெயர்வதும் நிலத்தின் நிலைத்த தன்மைக்கு அடிப்படையானவையாகும். கால்வாய் அகழ்வினால் எழும் சகதிப் படிவு என்ன திசையில், எத்தனை தூரத்திற்கு நகரும், பவளபாறைகள் மீது என்னமாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பன போன்ற விபரங்கள் எதுவும் மன்னாரையும் அதனை சூழவுள்ள மக்களுக்கோ தெரியாது. கடலை அகழும் போது எடுக்கப்படும் மண்ணின் அளவு 32.5 மில்லியன் கனமீற்றர்கள் எனக்கணிப்பிடப்பட்டுள்ளது. இதில் பெரும்பகுதியை ஆழக்கடலில் கொட்டப்படவுள்ளது. இது கடலடி உயிரினங்களைஸ் பாதிக்கும். இங்கே உள்ள கடலடி உயிரினங்கள், குறிப்பாக நுண்ணுயிர்கள்தான் கடல் உயிரினங்களின் அடிப்படையாகும். இந்த உயிரினங்கள் அழிய நேர்ந்தால் அது ஒட்டுமொத்த கடலுயிர்களின் உயிர் சுழற்சியிலும் சரிவைக் கொண்டுவரும். கடலோர நிலத்தில் கொட்டப்படும் மண்ணும்,

www.tamilarangam.net

நீரில் கொட்டப்படும் மண்ணும் கடல் நீரோட்டத்தின் காரணமாகவும் மண்அரிப்பின் காரணமாகவும் அவை இடம் பெயரும். அப்படியானானல் அவை எங்கே செல்லப்போகின்றன, கொட்டப்படும் மண் என்ன விளைவை ஏற்படுத்தும் என்பவை போன்றன எமக்கு தெரியாது.

**மன்னாரும் எண்ணை வளமும்**

மன்னார் வளைகுடா என்பது இந்தியப்பெருங்கடலில் இலட்சத்தீவுக்கடலின் பகுதியில் அமைந்துள்ள ஓர் குடாவாகும். இது இந்தியாவின் தென்கிழக்கு முனைக்கும் இலங்கையின் மேற்கு கரைக்கும் இடையில் 100 முதல் 125 மைலிற்கும் இடைப்பட்ட அகல இடத்தில் அமைந்துள்ளது.

மன்னார் வளைகுடாவை அண்மித்து அமைந்திருப்பது காவேரி படுக்கை எனப்படும் பாரிய எண்ணை படுக்கையாகும்.இப்படுக்கையானது தமிழ்நாட்டில் 65 வீதம் அமைந்துள்ளது. இதன் தொடர்ச்சியே தெற்கே மன்னார் பிரதேசத்தில் 35 வீதம் அமைந்துள்ளது. 1956 ஆம் ஆண்டு காவிரிப்படுக்கையில் எண்ணெய் வளம் இருப்பதை சோவியத் நிபுணர்கள் ஊர்ஜிதப் படுத்தியிருந்தனர். 1960 களின் ஆரம்பகாலத்தில் இலங்கையும் மன்னார் பகுதியில் அகழ்வாய்ப்புப்பணிகளில் ஈடுபட்டது. இதன் விளைவாக 1980 ஆண்டின் நடுப்பகுதியில் இங்கு எண்ணெய் வளம் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

மன்னார் எண்ணெய்ப்படுக்கையானது மொத்தமாக ஆறு பகுதிகளாகப்பிரிக்கப்பட்டு இதில் இரு பகுதிகள் சீனவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டின் கடற்பரப்பிலிருந்து இருபது மைல் தொலைவில் சீன நிபுணர்கள் எண்ணெய் அகழும் பணிகளில் ஈடுபடுவார்கள்.

Britain's Cairn Energyயின் ஒரு பகுதி இலங்கையின் கடல்பகுதியில் எண்ணையை அகழ்வதற்கான ஆய்வினை இந்த ஆண்டு முடிவிற்குள் அல்லது 2010 ஆண்டு ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது. இலங்கை அரசு Cairn India கம்பனிக்கு எண்ணை மற்றும் வாயு வடிவிலான பெற்றோலியத்தைத் தேடும் பணியிற்கு அனுமதியை வழங்கியுள்ளது. இது மன்னார் கடற்பரப்பிலும் அதனையடுத்துள்ள வடமேற்கு கரையோரப்பகுதியிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. அகழ்வாய்வுகள் பன்னிரெண்டு மாதங்களுக்கு நடைபெற இருப்பதாகவும் தெரிவிக்கிறது.

இக்கம்பனிக்கு 340 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டதும் 200-800 மீற்றர் ஆழமான பிரதேசம் கிடைத்துள்ளது. பூகோள தகவல்களின் படி 1.0 பில்லியன் பீப்பாய் எண்ணை வளம் இலங்கையின் வடமேற்கு கரையோரப்பகுதியில் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

www.tamilarangam.net

எண்ணெய் அகழ்வு வெற்றியளிக்கும் பட்சத்தில் இலங்கையின் எரிபொருள் தேவை பூர்த்திசெய்யப்படல், வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தல், இலங்கையின் பொருளாதார முன்னேற்றம், பிரதேசத்தின் உள்கட்டுமான அபிவிருத்தி ஏற்படும் போன்ற முன்னேற்றகரமான விடயங்கள் வெளித்தோற்றத்தில் நன்மை பயப்பன போல காணப்பட்டாலும் எண்ணெய் அகழ்விற்குரிய தொழிநுட்ப, இயந்திர மற்றும் மூளைவளங்களுக்காக, தொழிநுட்பவியலாளர்கள், நிபுணர்கள், பிரத்தியேக தொழிலாளர்கள் என உதவிகளை நாட வேண்டியிருக்கும். இவற்றை ஈடுசெய்வதற்கு நிச்சயமாக தமிழ் நிபுணர்களோ, கல்வியாளர்களோ தெரிவு செய்யப்படப் போவதில்லை மாறாக பெரும்பான்மையின மற்றும் அந்நிய நிபுணர்களுக்குமே முதலிடம் வழங்கப்படும் இதன் மூலம் நாளடைவில் திட்டமிட்ட குடியேற்றம் என்ற வரைவிலக்கணத்திற்குள் அடங்காதவகையில் தமிழ்மக்களின் பிரதேசங்களை பெரும்பான்மை இனத்தவர் கையடக்கிக்கொள்வர்.
இலங்கையும், இந்தியாவும் பரந்தளவிலான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்யவுள்ளது. இது சீபா என அழைக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கை செய்யப்பட்டால் இந்திய டாக்டர்கள், கணக்காளர்கள், சட்டத்தரணிகள், தகவல்தொழில் நுட்பவியலாளர்கள் இலங்கைக்கு சென்று பணிபுரியலாம்.

அகழ்ந்தெடுக்கும் மசகெண்ணை மன்னார் பகுதியில் சேமித்து வைக்கப்படலாம் இதற்காக அப்பிரதேசமக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயரவேண்டியேற்படலாம். சுத்தரிகரிக்கப்படாத எண்ணையை பிரித்தெடுப்பதற்கான இரசாயன படிமுறையின் போது வெளியிடப்படும் வாயுக்களினால் ஏற்படவிருக்கும் சூழலியல் மாற்றங்கள், சூழல் மாசடைதல், என்பவற்றோடு இவற்றை சேமித்தல், களஞ்சியப்படுத்தல், மற்றும் மசகு எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணை போன்றவற்றை கப்பல் மூலம் எடுத்துச்செல்லும் போதும் ஏற்படும் சுற்றுச்சூழல் தொடர்பான அழிவுகளையும் நாம் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். கப்பல் போக்குவரத்தினால் ஏற்படும் சேதங்களினால் கடல் சூழற் சமநிலை பாதிக்கப்படுவதால் அங்கு வசிக்கும் உயிரினங்கள் மற்றும் மீன்களின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.
மன்னார் வரட்சியான புவியியல் நிலைமைக்கொண்ட பிரதேசமாகும். எண்ணை உற்பத்தியின் போது வெளியேற்றப்படும் கழிவுகள் வாயுமண்டல சமநிலையைப்பாதிப்பதால் இயற்கையாக மழையை தருவிக்க உதவிபுரியும் காடுகள் அழிவை எதிர்நோக்குகின்றன. பருவகாலமழையும், பயிர்ச்செய்கைக்கு கிடைக்கும் மழையிற்குமான தட்டுப்பாடு ஏற்படும்.

www.tamilarangam.net

கடலில் எண்ணை அகழ்வினால் கரையோர பகுதியில் வசிக்கும் மக்களின் பிரதான தொழில்வாய்ப்புக்கள் பாதிக்கப்படும். அத்துடன் எண்ணை அகழ்வின் தாக்கம் நிலம், நீர், காற்று என உயிர்வாழ்விற்கு அத்தியாவசியமான காரணிகளில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்துவதால் அப்பகுதியில் வாழும் மக்கள் சுத்தமான குடிநீர், காற்று மற்றும் பயிர்செய்கை நிலங்களையோ பெறமுடியாக பேரவலத்தை சந்திப்பது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிடும்.

**வன்னியில் பாதிக்கப்படவிருக்கும் விவசாயத்துறை**

வந்தாரை வாழவைக்கும் பூமி என்ற சிறப்பிக்கப்பட்ட பிரதேசம் வன்னி, 70 களில் சுய உற்பத்தி பற்றி எண்ணம் கருக்கொண்ட காலம்,வெளிக்கிடடி விசுவமடுவிற்கு போன்ற நாடகங்கள் பிரபல்யமாக பேசப்பட்ட காலம், யாழ்ப்பாணத்திலிருந்த தொடர்கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்ட இளைஞர்கள் மற்றும் வேலைவாய்ப்பை பெறாதவர்கள் இப்பகுதியில் தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர்.
யாழ்ப்பாணத்தின் மீதான இராணுவ நடவடிக்கைகளின் போதெல்லாம் மக்கள் இங்கு பாரியளவில் இடம் பெயர்ந்தனர், பல வருடங்களாக த.வி.பு கட்டுப்பாட்டுக்குள் இந்த பகுதி முன்னேற்றங்கள் எதையும் எந்தவொரு துறையிலும் பெறவில்லை.
வன்னியில் விவசாய அபிவிருத்தி திட்டத்தின் முதல் கட்டமாக இந்தியாவிலிருந்து நிபுணர் குழுவொன்று விஜயம் செய்திருந்தது. இந்தியா இலங்கைக்கு நவீன தொழிநுட்பகருவிகள், விதை இரகங்கள், உரங்கள், பயிற்சி போன்றவற்றை வழங்கவுள்ளது. இது தவிர இந்தியா இலங்கையின் விவசாய நடவடிக்கைகளுக்காக சுமார் நான்கு கோடி ரூபாய்களை வழங்கியுள்ளது.
இங்கு நாம் இந்தியாவின் விவாசாய அபிவிருத்தி திட்டங்களை சற்று நோக்குவோம்
இந்தியாவின் பாரம்பரிய மற்றும் உள்நாட்டு, பிரதேச வளங்கள் தொடர்பான அறிவையும் ஆற்றல்களையும் கொண்டிருந்த நீண்டகால விவசாயத்தின் மூலம் பெற்றுக்கொண்ட அநுபவ மற்றும் பிரதேசத்திற்கே உரித்தான அறிவு மூலம் சூழலுக்கும், பருவகாலத்திற்கும், நிலவள மற்றும் அமைப்புத்தன்மைகளுக்கு உகந்த வகையில் விதை இரகங்களை சேமித்து பாதுகாத்துவந்தனர். ஆனால் விவசாயிகளின் தொழில்முறை யுக்திகளை கருத்தில் கொள்ளாது பசுமைப்புரட்சி என்ற பெயரில் கலப்பினவகைப் பயிர்களும், வீரிய மிக்க விதை இரகங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்பயிர்ச்செய்கைக்கு அதிகளவு இரசாயனஉரங்கள், கிருமிநாசினி வகைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. நாற்றுக்கள் மற்றும் விதைகள் தொடர்பாக

www.tamilarangam.net

பின்பற்றப்பட்ட விதிமுறைகளை இல்லாதொழித்து, பல விதைகளின் உரிமையை பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்பட்டன. இவற்றின் விளைவாக ஆரம்பகாலத்தில் இராட்சத விளைச்சலை தருவதாக காணப்பட்டாலும் இது நீண்ட கால நோக்கில் நன்மைகளுக்கு பதிலாக பல தீமைகளையே உருவாக்கியது.இது மட்டுமல்லாது மீள உற்பத்தியில் ஈடுபடுத்த முடியாத வீரியமற்ற விதைகளையும் அறிமுகம் செய்துள்ளது. இது தவிர மரபணு மாற்றப்பட்ட புதிய இரக விதைகளை அறிமுகப்படுத்தும் விடயத்தில் பருத்தி விதைகளில் மேற் கொள்ளப்பட்ட முயற்சி பலன் எதையும் வழங்காததுடன் பல நூற்றுக்கணக்கான விவசாயிகள் தற்கொலைக்குத்தள்ளியது.
இம்மாதிரியான ஒரு விவசாயக் கொள்கை எவ்வாறு நடைமுறையில் இருக்கிறது எனப் பார்ப்போம். நிறுவனங்கள் மக்களுக்கு விவசாயப்பணிகளில் ஈடுபடுவதற்கென கடனை வழங்கும். அத்துடன் மக்கள் அந்நிறுவனங்களிலேயே விதைகள் மற்றும் கிருமி நாசினி, பசளை மற்றும் சாகுபடிக்கு தேவையான பொருட்களை வாங்கவேண்டும். இதுதவிர ஏற்றுமதிக்கும் சந்தைக்கும் உகந்ததான பொருட்களின் உற்பத்தியில் மட்டுமே ஈடுபடும் படி மக்கள் நிர்ப்பந்திக்கப்படுவதால் மக்களின் நாளாந்த தேவையை பூர்த்தி செய்வதற்கான உணவுப்பொருட்களுக்காக மக்கள் இறக்குமதியில் தங்கியிருக்க வேண்டி ஏற்படுகிறது.

**இந்தியாவின் ஊடுருவல்கள்:**

- உலகமயமாதல் என்ற பெயரில் நடைபெறும் சுரண்டலையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு நாட்டின் உணவுத் தேவைக்குரியவற்றை அந்த நாட்டை விட குறைந்தளவு உற்பத்தி செலவு ஏற்படும் இன்னுமொரு நாட்டில் உற்பத்தி செய்யும் பண்பு. இந்த சுரண்டல் Outsourcing அல்லது தேசம் கடந்த உழைப்பு என அழைக்கப் படுகிறது. காலனியாதிக்கத்தின் போது வல்லரசுகள் அந்தந்த நாடுகளிலிருந்து அந்த நாடுகளை சுரண்டின ஆனால் இப்போது வளர்முக நாடுகளின் வளமிக்க பகுதிகளை பல ஆண்டுகளுக்கு குறைந்த விலையில் குத்தகைக்கு பெற்று தமது தேவைக்கும் சந்தைக்குரிய உணவுப் பொருட்களை குறுகிய காலத்தில் உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்துகின்றன. இந்தியா தனது உணவு உற்பத்தி தேவைக்காக சூழவுள்ள பல தீவுகளைக் குறைந்த விலையில் குத்தகைக்கு எடுத்துள்ளது.
- இது தவிர கனிம பொருட்கள் அதன் மூலமான உற்பத்திப்பொருட்கள் என்பவற்றுடன் இரும்பு, உருக்கு

www.tamilarangam.net

போன்றவை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இலங்கைக்கான இந்தியாவின் மொத்த ஏற்றுமதி 30 வீத பங்கை வகிக்கிறது. FTA வர்த்தக ஒப்பந்தத்திற்குப் பின் ஏற்றுமதியானது பூச்சியத்திலிருந்து 702 மில்லியன் டொலர்களாக 2006-07 காலப்பகுதியில் அதிகரித்துள்ளது. இவைகள் தவிர இந்தியா இலங்கையிற்கு கார்கள், மருந்துப்பொருட்கள் மற்றும் பஞ்சையும் ஏற்றுமதி செய்துள்ளது.

- மோட்டார் வாகன ஏற்றுமதியானது நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. இதன் தற்போதைய பெறுமதி 335 மில்லியன் டொலர்களாகும். FTA வர்த்தக ஒப்பந்ததிற்குப்பின் இரும்பு, உருக்கு ஏற்றுமதி நான்கு மடங்காகவும், மருந்துப்பொருட்களின் உற்பத்தி மூன்று மடங்காகவும் அதிகரித்துள்ளது. இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் 8.5 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.
- 2007 இல் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 280 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.
- இந்தியாவின் எண்ணைக் கூட்டுத்தாபனத்திற்கு இலங்கையில் 250 ற்கு மேலான விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன.
- இலங்கையில் நேரடியாக முதலீடு செய்யும் நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தைக் கொண்டுள்ளது.
- 2006 ஆம் ஆண்டு இந்தோ இலங்கை வர்த்தக நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் வளர்ச்சிப்பணிக்கு இந்தியா வழங்கிய கடனில் ஆறில் ஒரு பகுதி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கிளிநொச்சியிலும், திருகோணமலையிலும் இந்தியாவின் வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட இருப்பதாக, இந்த இரண்டு வர்த்தக வலயங்களிலும் இந்தியாவின் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக .அத்துடன், மீன்பிடி, விவசாயம், மற்றும் சுற்றாலாத்துறை போன்றவற்றில் இந்தியதலையீடு ஏற்பட்டுள்ளது.
- வடக்கு கிழக்கில் 50 எரிபொருள் நிலையங்களை அமைக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே திருகோணமலையிலுள்ள எண்ணைக் குதங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள இந்தியா வைத்துள்ளது. திருகோணமலை துறைமுகத்தைச் சூழவுள்ள 679 சதுர கிலோ

www.tamilarangam.net

மீற்றர் பகுதி அவர்களுக்கான பிரத்தியேக பொருளாதார வலயமாக வழங்கப்பட்டது.

- கிழக்கிலங்கையின் நிலாவெளி, புல்மோட்டை, வாழைச்சேனை மற்றும் கந்தளாய் சீனித்தொழிற்சாலை என்பனவும் இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளன.

தமிழர் தம் தாயகப்பிரதேசங்களில் காணப்படும் அனைத்து வளங்கள் தொடர்பான முடிவுகளை, பயன்பாடுகளை, நிர்வகித்தல் தொடர்பான சகல படிமுறைகளிலும் தமது கருத்துக்களை கூறவும் முடிவு செய்வதற்கான அதிகாரத்தையும் கொண்டுள்ளார்கள். இம் மக்களின் தாயகப்பகுதிகளில் பேரழிவினை ஏற்படுத்துவதற்கு சகல வழிகளிலும் உடந்தையாக இருந்தும், பிரதேசங்களுக்கும், வளங்களுக்கும் உரித்துடைய மக்களை அகதிமுகாம்களிலும், பரிசோதனைக்கான இடைத்தங்கல் முகாம்களிலும் அடைத்து வைத்துவிட்டு "உற்பத்தி", "முன்னேற்றம்" என்ற பெயரில் தமிழ்மக்களின் வளங்கள் வல்லரசுக்கு தாரை வார்க்கப்படுகிறது.

**பயன்படுத்தப்பட்ட ஊடகங்கள்:**

www.Lanka.newspapper.com
www.Tamilnet.com
புதிய ஜனநாயகம், ஆகஸ்டு -2009
சேதுசமுத்திரத்திட்டம் தொடர்பான NEERIஇன் அறிக்கை

www.tamilarangam.net

# எட்டினோமா இலக்குகளை?

**தாமிரா**

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான இராணுவ ரீதியான போராட்டம் முடக்கப்பட்ட நிலையில் புலம் பெயர் நாடுகளில் கலந்துரையாடல், சந்திப்புக்கள் நிகழ்கின்றன. போராட்ட நிகழ்வுகள் தொடர்பில் சகல துறைகளிலும் பங்களிப்புக்களை வழங்கியவர்கள் பெண்கள், சமூகத்தில் இவர்களுக்கான உரிமைகள், இவர்கள் போராட்ட காலத்தில், போராட்டத்தின் பின் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும் எமது சமூகத்தின் பின்தங்கிய கூறுகளான சாதியம், சீதனம், பாலினசமத்துவமின்மை தொடர்பான விவாதங்களை சமகாலத்தில் ஏற்படுத்துவதும் இங்கு அவசியமாகும்.

காலனித்துவத்திற்குப் பின்னான இலங்கை அரசியலில் குறிப்பாக தமிழர்களின் அரசியல் வரலாற்றில் பெண்களின் பங்கினை விமர்சனப்போக்கில் ஆராயுமுகமான ஒரு முன்வரைபாக நாம் இதனைக் கொள்வோம்.

இலங்கையின் ஆரம்பகால அரசியல் வரலாற்றில் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்ற பெண்கள் உருவாகின்றனர். யாழ்ப்பாணத்தில் முதலாவது பெண்கள் முன்னேற்ற இயக்கமாக பெண்கள் சேவை இயக்கம் அமைந்துள்ளது. இவ்வமைப்பு மதசார்பற்றதாகவும் தமிழ் பெண்களுக்கு அறிவு, தன்னம்பிக்கையூட்டும் அமைப்பாகவும் திகழ்ந்துள்ளது. தமிழ் மகள் எனும் சஞ்சிகை 1923 இலிருந்து நாற்பது ஆண்டுகள் வெளி வந்துள்ளது. சீதனக்கொடுமை போன்ற விடயங்களை விபரித்த இச்சஞ்சிகை மங்களம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. மகளிர்தேசியசங்கம் மற்றும் தமிழ்மகளிர்கழகம் என்பன சாதியத்திற்கு எதிராகவும் பெண்களின் சமத்துவத்திற்கான விடயங்களிலும் ஈடுபட்டதாக அண்மையில் வெளிவந்த யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கல்வி ஓர் அறிமுகம் தெரிவிக்கிறது.

1924 -1934 காலப்பகுதியில் சமூக மாற்றத்திற்கான கருத்தியல் ரீதியில் முன்னேற்றமான இயக்கமாக இளைஞர் காங்கிரஸ் விளங்கியுள்ளது. இவ்வமைப்பின் சந்திப்புக்களின் போது பெண்கள் கலந்து கொண்டுள்ளார்கள். இவ்வமைப்பு சீதனத்திற்கு எதிரான கோரிக்கை, டொனமூரின் பெண்களின் வாக்குரிமை நிராகரிப்பு சட்டத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தல் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தது.

www.tamilarangam.net

இடது சாரி அமைப்புக்களில் உறுப்பினர்களின் துணைவிகள் கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தனர். இதையடுத்து தமிழர் காங்கிரசும், அதிலிருந்து பிரிந்த தமிழரசுக்கட்சியும் அமைந்திருந்தன. அக்காலத்தில் காணப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டத்தின் விளைவான உப்பு சத்தியாக்கிரகம், சத்தியாக்கிரம் போன்ற வழிகளில் பெண்கள் காத்திரமான பங்களிப்பினை வழங்கியிருந்தனர். அத்துடன் சொத்துரிமை, வாக்குரிமை போன்றவற்றுக்காகவும் போராடியுள்ளனர். தமிழரசுக்கட்சியில் பெண்களின் அமைப்பாக மாதர் முன்னணி செயற்பட்டது. தமிழரசுக்கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட சிறி எதிர்ப்பு போராட்டங்களில் பெண்கள் பங்கெடுத்ததுடன் கட்சிப்பணிகளுக்கு பெண்களை அணிதிரட்டுவதிலும் ஈடுபட்டனர். இதன் பின் உருவான தமிழர்விடுதலைக்கூட்டணியில் மேலும் பல பெண்கள் அரசியல் அரங்கிற்கு வந்தனர். இவ்வமைப்பில் பெண்கள் அங்கத்தவர்களாகவும், ஆதரவாளர்களாகவும், கூட்டங்களில் உணர்ச்சிமிக்க பாடல்களை பாடுவதிலும் ஈடுபட்டிருந்தனர். தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் பெண்களை முழு நேரமாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துகின்ற நிலைமையை தமிழ் இளைஞர் பேரவை ஏற்படுத்தியது. இக்கால கட்டத்தில் த.வி.கூ.கூட்டணியின் மகளிர் அமைப்பாக தமிழ் மகளீர் பேரவை உருவாக்கப்பட்ட போதிலும் இவ்வமைப்பில் அணிதிரண்ட பெண்கள் பின்னர் த.இ.பேரவையில் (சரிநிகர். யூன். 1992 )தமது காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளனர். இதனைத் தொடர்ந்து இலங்கை அரசியல் பல மாற்றங்களைச் சந்தித்தது.

அரசியலில் கட்சிகள் அதிகாரம் இழந்து, இளஞ் சந்ததியினரின் அரசியல் நடவடிக்கைகள் எழுச்சியுற்றன. 1983 இடம் பெற்ற சம்பவங்களின் பின் இலங்கை அரசியல் நிகழ்வுகள் வேறொரு வடிவத்தை எடுத்தன. சட்டபூர்வமாக இருந்த அமைப்புக்கள் போய் தலைமறைவு குழுக்கள், அமைப்புக்கள் ஆரம்பித்தன.

தலைமறைவாக இயங்கிய அமைப்பில் முதலிடத்தை பெறுவது தமிழீழ புதிய புலிகள் அமைப்பு, இந்த அமைப்பிற்கு த.வி.கூட்டணியின் இளைஞர் அமைப்பில் முக்கிய பணிகளில் ஈடுபட்ட பெண்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தனர். பெண்கள் பெரும்பாலும் பாரம்பரிய பணிகளான ஆவணங்களைப் பாதுகாப்பது, செய்திகளை கொண்டு செல்லுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தமிழீழ புதிய புலிகளில் இருந்து பிரிந்த புதியபாதைக்குழுவினர் பின்பு 1981 இல் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தினை ஸ்தாபித்தனர். இந்த அமைப்பு பல துணை அமைப்புக்களை கொண்டிருந்தது. 1982 இல்

www.tamilarangam.net

பெண்கள் விடுதலை இயக்கம் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் பல பெண்கள் உற்சாகமாகச் செயற்பட்ட போதிலும் இவர்களிடம் பெண்களின் உரிமைகள், சமஉரிமை தொடர்பாக மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட கருத்துக்களே காணப்பட்டன. இப்பெண்கள் அமைப்பின் வெளியீடாக எழுச்சி எனும் சஞ்சிகை வெளிவந்தது, இதில் பெண் ஏன் அடிமையானாள், வால்காவிலிருந்து கங்கா வரை போன்ற கட்டுரைகள் வெளிவந்திருந்தன. இக்கட்டுரைகள் ஆண்களால் பெண்களின் பெயர்களில் எழுதப்பட்டவையே. இந்த காலப்பகுதியில் சில அரசியலில் ஈடுபாடு கொண்ட புத்திஜீவிகளின் நண்பிகளிடம் மண்ணுரிமை பெற்றால் பெண்ணுரிமை கிடைக்கும் போன்ற கோசங்களை காணக்கூடியதாக இருந்தது. பெண்கள் விடுதலை இயக்கப்பெண்கள் பல தொண்டர் அமைப்புக்களில் பணிபுரிந்து வந்தனர். அரசியல் நெருக்கடி நிலைமைகளினால் பெண்கள் விடுதலை இயக்கம் தனது செயற்பாடுகளை கைவிடவேண்டி ஏற்பட்டது.

1983 இன் பிற்பகுதியில் மீண்டும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் பெண்கள் பிரிவு ஒன்றை உருவாக்குகிறது. இது தமிழீழப்பெண்கள்இயக்கம் என 1984 இல் தோற்றம் பெறுகிறது. இவ்வமைப்பு சுயமாகவும், சுதந்திரமாகவும் பெண்களின் உரிமை தொடர்பான காத்திரமான கருத்துக்களுடன் இயங்கியதாக கூறமுடியாது. ஆனால் இந்த அமைப்பைச் சார்ந்த பெண்கள் வடக்கிலிருந்து கிழக்கு மற்றும் கிழக்கிலிருந்து வடக்கிற்குமாக பிரச்சார பணிகளிலும், பெண்கள் அமைப்புக்களை ஏற்படுத்துவதிலும் கணிசமான பங்களிப்பினை வழங்கியிருந்தனர். இவர்களுக்காக ஆண்களால் பொருளாதார ரீதியாக சுயமாக செயற்படுவதற்கு உகந்த சில வேலைத்திட்டங்கள் முன்மொழியப்பட்டிருந்தன. இவைகள் தவிர ஆண்களின் அரசியல் செயற்பாடுகளுக்கு உதவுவதே பெண்களின் பெரும்பாலான வேலைகளாக இருந்தன. காலப்போக்கில் இந்த அமைப்பில் முழுநேர ஊழியர்களாக பலர் இணைய தொடங்கியிருந்தனர். இந்த அமைப்பு பெண்களின் உரிமை போராட்டத்திற்கான பிரத்தியேக கொள்கைகளோ, வேலைத்திட்டங்களை கொண்டிருந்ததாக தெரியவில்லை. இவ்வமைப்பு தோழி சஞ்சிகையை வெளியிட்டது. இதன் மூன்று பிரதிகள் மட்டுமே வெளிவந்தன. இதன் ஆசிரியை த.வி.பு அமைப்பினால் கொலை செய்யப்பட்டார். இச்சஞ்சிகை பெண்கள் தொடர்பாக சற்று முன்னேற்றமான கருத்துக்களைக் கொண்டதாக காணப்பட்டது. இதில் வெளிவந்த ஆக்கங்கள் ஆண்களால் பெண்களின் பெயரில் எழுத்தப்பட்டவையாக அல்லது பெண்களே எழுதினார்களா என்பது பற்றி நிச்சயமாக தெரியவில்லை. இந்த காலப்பகுதியில் சில பெண்கள் இலங்கையில் ஏற்பட்ட அரசியல்

www.tamilarangam.net

நெருக்கடிகள் காரணமாக இந்தியாவிற்கு செல்ல நேர்ந்தது. அங்கு கழகத்தால் நிகழ்த்தப்பட்ட வானொலிச்சேவையில் பணிபுரிந்தனர் எனக் கூறப்படுகிறது. கழகம் கணிசமான பெண்களை உள்வாங்கியிருந்தது. இவர்கள் அந்நிய நாடுகளுக்கு சென்று இராணுவப்பயிற்சி பெற்றுக்கொண்டதாகவோ, பெண்கள் தாக்குதல்களில் ஈடுபட்டதாகவோ ஆவணப்படுத்தப்பட்ட செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.

தமிழீழ விடுதலைக்கழகம் பின்பு வரலாறு காணாத அராஜகங்களை தனகத்தே கொண்டு பல உயிர்களை பலி கொண்டது. இதில் மணியம் தோட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பெண்களின் சடலங்களும் அடங்குகின்றன. மற்றும் இந்த அமைப்பில் இணைந்து கொள்ள புறப்பட்ட பெண்கள் பல வழிகளில் ஆணாதிக்க சமூகத்தின் கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியும் ஏற்பட்டது, சில சந்தர்ப்பங்களில் ஆயுத்தப்பயிற்சிக்குப் பின் கும்பல் கும்பலாக கிழக்கிற்கு சென்ற தோழர்களில் சிலர் அங்கு தாம் சந்தித்த கழக தோழிகளை காந்தர்வ மணம் புரிந்து கொண்டனர். பின்னர் இந்த நள மகா ராஜன்களை தேடி தோழிகளும், பெற்றோரும் வடக்கு செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களும் இருந்தன. கழகத்தில் ஏற்பட்ட அராஜகங்களைத் தொடர்ந்து அமைப்பு பலரைக் கொன்றொழித்தது. இதிலிருந்து பிரிந்தவர்கள் தீப்பொறி அமைப்பினை உருவாக்கினர். இதில் பெண்கள் அங்கத்துவம் வகித்ததற்கான ஆதாரங்கள் எதுவும் காணக்கிடைக்கவில்லை.

தமிழீழ விடுதலையின் எழுச்சிமிக்க காலமான 83 ற்குப்பின்னான காலப்பகுதியில் பல ஈழவிடுதலை அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. சகல அமைப்புக்களும் பெண்கள் அமைப்புக்களைக் கொண்டிருந்தன என திட்டவட்டமாக கூறமுடியாத இருக்கின்றது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ரெலோ, த.வி.பு வி ஆகியவன பெண்களுக்கான அமைப்புக்களைக் கொண்டிருந்துடன் செயலாற்றல் மிக்க பெண் தோழர்கள் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

ஈழமக்கள் விடுதலை முன்னணியின் பெண்கள் அமைப்பு 83 ற்குப்பின் அல்லது அவ்வாண்டு இறுதிப்பகுதியில் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இவ்வமைப்பில் கணிசமான பெண்கள் அங்கத்துவம் வகித்தனர். இது யாழ். சமூக அமைப்பில் ஒர் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆயுதப்போராட்ட அமைப்பு ஒன்றில் பெருமளவில் பெண்கள் அங்கத்துவம் வகிப்பது என்பது எமது சமூகத்தால் இலகுவாக ஜீரணிக்க கூடியதொன்றாக இருக்கவில்லை. அத்துடன் யாழ் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தாத சமூகங்களைச் சார்ந்த பல

அங்கத்தவர்களை இவ்வமைப்பு உள்ளடக்கியிருந்தது. இப் பெண்கள் அமைப்பின் வெளியீடாக செந்தணல் சஞ்சிகை வெளிவந்தது. இச்சஞ்சிகை பெண்களின் உரிமைகள் பற்றி கட்டுரைகளை தாங்கி வந்தமையை காணக் கூடியதாக இருந்தது ஆனால் இவைகள் பெண்களாலே எழுதப்பட்டனவா என்பது பற்றி சரியான தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இவ்வமைப்பின் பெண் அங்கத்தவர்கள் அயல்நாட்டிற்கு சென்று இராணுவப்பயிற்சி பெற்றனர். தேசிய விடுதலைப் போராட்டத்தின் இராணுவ ரீதியாக பெண்கள் பங்கு பற்றிய முதலாவது இராணுவ நடவடிக்கை 1985 இல் காரைநகர் கடற்படைத்தளம் மீதான தாக்குதலாகும். இத்தாக்குதலில் சிறுமிகளையை களப்பலியாக கொடுத்தது இவ்வமைப்பாகும். இவ்வமைப்பில் தற்கொலை குண்டுதாரிகளுக்கான பயிற்சிகளை பெண்களும் பெற்றிருந்தனர். த.வி.புலிகளின் தாம் மட்டுமே ஈழவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க தகுதியுடைவர்கள் என்ற மேதாவிதனத்தினால் பல அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் சுட்டு அழிக்கப்பட்டனர். இந்த கோரக் கொலைகளுக்கு எதிராக காரைநகரில் மாபெரும் எழுச்சிப்பேரணி ஒன்றை நடாத்தியவர்களுள் ஈழமக்கள் விடுதலை முன்னணி அமைப்பின் பெண்கள் பிரிவினர் அடங்குகின்றனர். ஆனால் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குப்பின் இவ்வமைப்பு பல சந்தர்ப்பவாத செயல்களில் ஈடுபட்டு தன்னை அற்ப நோக்குகளுக்காக ஈடுபடுத்திக் கொண்டது, இந்த அரசியல் அரங்கமாற்றத்தின் பின் இவ்வமைப்பு பல மாற்றங்களைச் சந்தித்தது. பின்பு ஏற்பட்ட அமைப்புக்களில் பெண்கள் அமைப்பு இருந்தமையை ஊர்ஜிதம் செய்யும் தகவல்கள் எதுவும் இல்லை.

தமிழீழவிடுதலை இயக்கம் பிரபல்யமான அமைப்புக்களில் ஒன்றாக இருந்தது. இவ்வமைப்பு 1984 இல் வெளியிடப்பட்ட நாட்காட்டியின் அட்டைப்படம் பயிற்சி பெறும் பெண் போராளியை சித்தரித்திருந்தது.அத்துடன் பெண்கள் அயல்நாட்டிற்கு சென்று அலுவலகப் பணிகளில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

ஈரோஸ் மற்றும் என்.எல். எவ். ரி ஆகிய அமைப்புக்களில் ஈரோசைப் பொறுத்தளவில் தனியான பெண்கள் அமைப்பு இருக்கவில்லை, ஆனால் பல பெண்கள் கிராமங்கள் மற்றும் நகர பகுதியில் சுய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் துணி நெசவு, மற்றும் பாய் நெசவு என மூலப்பொருட்களுக்கு ஏற்ப தொழில் நடவடிக்கைகள் மேற்கொண்டனர். இந்நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் கணக்கு வழக்கிற்கான மேற்பார்வைகள் போன்றவற்றை ஆண்களே கவனித்தனர். பல பெண்கள் முழுநேரமாக பணிபுரிய இணைந்து கொண்டனர்.

www.tamilarangam.net

அவ்வப்போது இந்தியாவில் வெளிவரும் தர்க்கீகம் பத்திரிகையினை பெண்கள் தொழிலில் ஈடுபடும் இடங்களில் வாசித்தல், இது தொடர்பான விவாதங்களில் ஈடுபடுதல் சாதாரணமாக காணப்பட்டது. இவ்வுரையாடல்களின் போது அமைப்புக்காக ஐக்கிய இராச்சியத்தில் தோழர்கள் கோப்பைகள் கழுவியே பணம் அனுப்பி வைக்கிறார்கள் என்பன போன்ற தகவல்கள் பரிமாறப்பட்டன. ஆயுதப்பயிற்சியில் பெண்கள் ஈடுபட்டதாகவோ அல்லது மத்தியகுழுவில் இருந்ததாக தெரியவில்லை ஆனால் பிரதேசவாரியான குழுக்களில் பெண்களுக்கான அங்கத்துவம் காணப்பட்டது. த.வி.புலிகளின் அமைப்புச்சுத்திகரிப்பில் எண்ணிக்கையளவில் அதிகளவு உயிர்சேதமின்றி தப்பிக் கொண்ட அமைப்பு ஈரோஸ் எனக் கொள்ளப்படுகிறது. இது ஆரம்பத்தில் இருந்து மதில் மேல் பூனை கொள்கையை கடைப்பிடித்தே வந்த அமைப்பாக விபரிக்கப்பட்டு வந்தது. இதில் முழுநேரத்தோழர்களாகப் பணிபுரிந்த பெண்கள் பலர் அரபு நாடுகளுக்கு பணிப்பெண்களாக சென்றனர். மார்க்சிசக் கொள்கையும் பொத்துவில் முதல் பதுளை வரை என சுலோகத்துடன் ஆரம்பித்த கூட்டங்களும் மலையக மக்களை உள்ளடக்கிய விவாதங்களும், தோழர் என்ற பதம் ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி சரளமாகப் பயன்படுத்தப்பட்டவை என்பவற்றை நினைவு கூர முடிகிறது, ஆனால் அமைப்புத்தோழர்கள் அம்போ எனக் கைவிடப்பட்டதும் யதார்த்தமாக இருந்தது.

என்.எல். எவ். ரி இல் பெண்கள் அணி இருந்ததாகவும், பெண்களுக்கென தனியான யாப்பையும் கொண்டிருந்தார்கள் எனவும் இவர்களால் சக்தி எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டதாக அமைப்பின் ஆவணங்கள் தெரிவிக்கின்றன.
1984, 85 ஆண்டு காலப்பகுதியில் வடக்கில் அன்னையர் முன்னணியும் கிழக்கில் காணாமல் போனோரின் தாய்மார்களின் அமைப்பும் தோற்றம் பெற்றன. இவ்விரு அமைப்புக்களும் காத்திரமான பங்களிப்பையும், அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் அமைப்புகளாகவும் காணப்பட்டன. இந்திய இராணும் தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் நடாத்திய கெடுபிடிகளுக்கு எதிராக பெண்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தனர். ஆனால் பின்பு த.வி.புலிகள் அமைப்பின் மேலாதிக்கத்தையடுத்து இவர்களுக்கு கீழ்படிய வேண்டுமென சகல ஜனநாயக அமைப்புக்களும் நெருக்கப்பட்டதைப் போது அன்னையர் முன்னணியும் இத்தகு நிலைக்கு தள்ளப்பட்டதை தொடர்ந்து இது தனக்கிருந்த பரந்த ஆற்றலையும், தீவிர போராட்டத்திற்கான செயற்றன்மையும் இழந்து போயிற்று.

www.tamilarangam.net

த.வி.பு அமைப்பின் பெண்கள் பிரிவு சுதந்திரப்பறவைகள். இவ்வமைப்பு 1994 இல் ஸ்தாபிக்கப் பட்டதாக ஒரு கருத்தும், Voice of tiger Bulletin, Feb. 1990 இல் வெளியான செய்திக்கட்டுரையின் படி இப்பிரிவு 1993 ஆவணியில் ஏற்படுத்தப்பட்டது எனவும் அன்று தொட்டு பெண்களை இணைத்துக் கொண்டனர் என இன்னுமொரு செய்தி ஊடகமும் கூறுகிறது. மேலும் பெண்கள் ஆரம்பத்தில் ஏனைய அமைப்புக்களைப் போலவே பிரச்சார மற்றும் பாரம்பரிய பெண்களுக்குரிய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர் எனவும் 1984 இன் நடுப்பகுதியில் ஆயுதப்பயிற்சியில் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது. இவ்வமைப்பில் பல பெண்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். 1986 ஆண்டின் இறுதியில் பெண்கள் பிரிவினர் பங்கு கொண்ட தாக்குதல் மன்னாரில் நடைபெற்றது. இதன் போது இந்தியாவில் பயிற்சி பெற்ற பெண்கள் பிரிவினர் பங்கெடுத்திருத்தினர். இது தவிர த.வி.புலிகளின் முக்கியமான பல தாக்குதல்களில் பெண் சிப்பாய்கள் பங்களிப்புக்களை வழங்கியிருந்தனர். இந்திய இராணுவத்தை வெற்றி கொள்ள நிகழ்ந்த போரில் இவ்வணியினர் தோளோடு தோள் கொடுத்துப் போராடினர் என்பது வரலாற்றுப்பதிவாகும். இவ்வமைப்பில் பெண்களும் சிறார்களும் பெருமளவில் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டதற்கு மனிதவலுப்பற்றாக் குறையே காரணம் எனவும், அமைப்பில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண் சிப்பாய்கள் எனவும் சென்னையை மையமாக கொண்டியங்கும் இந்திய செய்திப்பத்திரிகையான The Hindu தெரிவிக்கிறது. யுனிசெவ் அமைப்பின் கருத்துப்படி புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்ட சிறாரர்களில் 40 வீதமானவர்கள் சிறுமிகள் அடங்குகின்றனர்.

த.வி.புலிகளின் அமைப்பில் கணிசமான பெண்கள் அங்கத்துவம் வகித்தனர். த.வி.புலிகளின் மகளிர் படையணி, த.வி.புலிகளின் மகளீர் அமைப்பு, மருத்துவ, பிரச்சார, மாணவர் பிரிவுகளின் கீழ் பெண்கள் அணிதிரட்டப்பட்டனர். இப்பிரிவுகள் அனைத்திலும் தமது காத்திரமான பங்களிப்புக்களை வழங்கி அமைப்பை பலமிக்க அமைப்பாக்கியிருந்தனர் பெண்கள்.

2004 இல் பங்குனியில் த.வி.புலிகளின் இயக்கத்தில் கிழக்கு தளபதியான வி.முரளிதரனின் வெளியேற்றம் நிகழ்கிறது. கருணாவின் படையணியில் சுமார் 6000 பேர்கள் இருந்ததாக தொண்டர் நிறுவனம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது. த.வி.புலிகள் சுமார் 19 வருடங்களுக்கு முன் எப்படி நடந்து கொண்டார்களோ அதே மூர்க்கத்தனத்துடன் பிளவின் குறுகிய காலத்தின் பின் தாக்குதலை நிகழ்த்தினார்கள். வன்னிப்பிரிவு, கருணாவின் படையணி மீது பாரிய

www.tamilarangam.net

தாக்குதல் ஒன்றை வெருகல் ஆற்றங்கரைப் பிரதேசத்தில் நிகழ்த்தியதாகவும் இம் மோதலில் எண்ணிக்கை தெரியாத பெரும் இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் இதில் கணிசமானவர்கள் பெண்களும், சிறார்களும் என உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

த.வி.புலிகளின் கறைபடிந்த பல பக்கங்களில் புலிகளின் பெண்கள் வதைமுகாம் அத்தியாயங்களும் அடங்குகின்றன. இவ்வதைமுகாம்கள் த.வி.புலிகளின் பெண்தோழர்களால் நிர்வகிக்கப்பட்டன.1990 ஆண்டில் சுமார் 500 பெண்கைதிகள் இருந்ததாக மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் 5 வது விசேடஅறிக்கை தெரிவிக்கிறது. இதனை இங்கு நான் குறிப்பிடுவதன் அர்த்தம் ஏனைய அமைப்புக்கள் யாவும் பெண்கள் தொடர்பாக சமத்துவத்தை கடைப்பிடித்தனர் என நாம் அர்த்தப்படுத்திக் கொள்ள தேவையில்லை.

ஆசிய சமூக அமைப்பு முறையில் காணப்படும் தந்தைவழி மேலாதிக்கமானது சமூக அமைப்பிலுள்ள ஏனைய அடக்குமுறையுடன் இணைந்து காணப்படுகிறது.எமது சமூக அமைப்பில் பெண்கள் சமூக, வர்க்க, பொருளாதார ஒடுக்குமுறைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இச் சமூக அமைப்பானது பல அசமத்துவமான கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தேசிய மற்றும் பால் ரீதியான அடக்குமுறைக்களுக்கு முகம் கொடுக்கும் அதேவேளை இச்சமூக அமைப்பில் காணப்படும் வர்க்க, சாதிய மேலாத்திக்கத்தினாலும் பெண்களுக்கென விதிக்கப்பட்ட கலாச்சார அடையாளங்கள், சீதன நடைமுறையினாலும் பெரும் அழுத்தத்தை எதிர் நோக்கியவர்களாகவும் காணப்படுகின்றனர். இவற்றோடு மரபும் மற்றும் மதமும் அது வழங்கும் தளைகளாலும், பாதுகாப்புக்களை வழங்காத பாரபட்டசமான சட்ட அமைப்புக்களினாலும் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

உரிமைகளுக்காகப் போராடிய சகல கட்சிகள்,அமைப்புக்கள், சங்கங்கள், முன்னணிகள் மற்றும் விடுதலை அமைப்புக்களுக்காக தமது பங்களிப்புக்களை, அயராத உழைப்பை, இன்னுயிரை ஈந்த அனைவரது போராட்ட உணர்விற்கு நான் தலை வணங்குகிறேன், யாருடைய உழைப்பையும் பங்களிப்பையும் குறைத்து எடைபோடுவது எமது நோக்கமல்ல.

www.tamilarangam.net

விடுதலைப்போராட்ட அமைப்புக்களின் பெண்கள் பங்களிப்புக்கள் சமூகத்தில் எம்மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது எமது சமூகம் பற்றிய பார்வைக்கு ஏற்ப மாறுபடும். சகல அமைப்புக்களும் ஆண்களின் தலைமை முதன்மையாகக் கொண்டிருந்தன. எமது சமூகத்தில் பெண்கள் தொடர்பாக காணப்படும் கருத்தியலை பிரதிபலிக்கும் கருத்தைக் கொண்டவர்களாகவே அவர்கள் காணப்பட்டனர். சகல அமைப்புக்களிலும் பெண்கள் ஆவணப்பாதுகாப்பு, மக்கள் தொடர்புசாதனங்களின் செய்திகளை கவனித்துக் கொள்ளல், சேகரித்தல், பாதுகாத்தல், செய்திகளை காவிச்செல்லுதல், பிற அமைப்புக்களின், இராணுவ நடவடிக்கைகளை கண்காணித்தல், பாதுகாப்பான வழிகளில் தோழர்களுக்கு உணவு, செய்திகளை எடுத்துச் செல்லல், முதலுதவிப்பயிற்சி பெறுதல்,பத்திரிகை விற்றல்,உளவுப்பணிகளில் ஈடுபடல், அங்கத்தவர்களைச் சேர்த்தல் என உதாரணத்திற்கு சிலவற்றை வரிசைப்படுத்தலாம். அமைப்புக்களின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் அவசியமான பணிகள் பலவற்றில் ஈடுபட்டிருந்தும் எந்த ஒரு அமைப்பிலும் முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய அதிகாரத்தைக் கொண்டவர்களாக எந்த ஒரு பெண்ணும் இருக்கவில்லை. த.வி.புலிகள் மட்டுமல்லாது ஏனைய அமைப்புக்களும் தேசிய விடுதலையை முதன்மைப் படுத்தியிருந்தனரே தவிர எமது சமூக அமைப்பில் காணப்படும் பாரபட்சமான நடைமுறைகள் தொடர்பாகவோ, நாளாந்த வாழ்க்கையில், குடும்ப அமைப்பில் வேலைப்பகிர்வின்மை, அசமத்துவமான நடைமுறை மற்றும் இரட்டைசுமை போன்றவற்றுடன் பொருளாதார, கலாச்சார, சீதன, வர்க்க, சாதிய முரண்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு போன்ற விடயங்கள் மற்றும் பெண்களின் அடிப்படை உரிமைகள் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.மார்க்சிய முற்போக்கு அமைப்பாக தம்மை இனங்காட்டிக்கொண்ட ஈரோஸில் மேற்கூறப்பட்ட பிரச்சனைகள் தொடர்பாக காத்திரமான பங்களிப்புக்கள் எதுவும் எமக்கு கிடைக்கவில்லை.

இதில் கவலைக்குரிய விடயமாக இருந்தது என்னவெனில் சீதன அமைப்பு முறைக்கு எதிராக போராடுவதை விடுத்து சீதனதொகைக்கேற்ப வரி அறவிடும் பணியில் த.வி.புலிகள் ஈடுபட்டார்கள், கழகத்தை விடுத்து வேறு எந்த ஒரு அமைப்பும் தமது மத்திய குழுவில் பெண் அங்கத்தவர்களைக் கொண்டிருக்கவில்லை, சகல அமைப்புக்களும் ஆண்களின் தலைமை முதன்மையாகக் கொண்டிருந்தன. எமது சமூகத்தில் பெண்கள் தொடர்பாக காணப்படும் கருத்தியலை பிரதிபலிக்கும் கருத்தைக் கொண்டவர்களாகவே காணப்பட்டனர்.விடுதலை அமைப்புக்களில் அங்கம் வகித்த

www.tamilarangam.net

பெண்களிடையே காணப்பட்ட தத்துவார்த்த வறுமையும், விடயங்கள், இலக்குகள் தொடர்பாக காணப்பட்ட போதிய தெளிவற்ற தன்மையும் சமூகத்தில் சகல பெண்களும் முகம் கொடுக்கும் பொதுவான பிரச்சனைகளுக்கு கூட பரந்தளவில் ஒன்று பட்டு செயல்பட இயலாமல் போயிற்று.

காலப்போக்கில் தேசியவிடுதலைப்போராட்டத்தை முன்னெடுக்கும் ஏகபோக உரிமத்தை வலிந்து பிடித்து வைத்திருந்த அமைப்பாக த.வி.புலிகள் காணப்பட்டது. எம்மிடம் ஒரே ஒரு ஆயுதம் தாங்கிய பெண்களைக் கொண்ட அமைப்பாக இதுவே இருந்தமையால் விமர்சனக்கருத்துக்கள் பெருமளவு தனியே அவ்வமைப்பைச் சுட்டி நிற்பது தவிர்க்க முடியாததாகிறது.

பெண்கள் தொடர்பாக த.வி.புலிகள் எவ்வாறான கருத்துக்களை கொண்டிருந்தனர் என்பதை நாம் எல்லோரும் அறிந்திருந்தோம். பெண்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாக போராட முனைவார்கள் என நாம் எதிர்பார்ப்பது எமது விமர்சனக்கண்ணோட்டமற்ற பார்வை என்றே கொள்ள வேண்டும். த.வி.புலிகள் அமைப்பு அரசியலை விட இராணுவ ரீதியான அமைப்பென கூறுவதே சரியானது என பலர் வாதிடுகின்றனர். இக்கூற்றை நாம் முழுமையாக ஏற்க முடியாத வண்ணம் அவர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.இவர்கள் வலதுசாரிதன்மையும், மாறுதலை பெரிதும் விரும்பாத, பழமைவாதம் பேணும், கலாச்சார அடிப்படைவாதிகளாக காணப்படுகின்றனர். பாரபட்சமான கலாச்சார சின்னங்களான தாலி, பொட்டு, பட்டு போன்றவை தொடர்பாக எந்தவித விமர்சனங்களும் இன்றி இன்று வரை தொடர்ந்து பேணப்படுகிறது.(இரு ஆண்டுகளுக்கு முன்பு பெறப்பட்ட தகவல்களின் படி யாழ்ப்பாண தீவகற்பத்தில் மட்டும் ஆண் துணையை இழந்தவர்களின் எண்ணிக்கை 18, 657 ஆகவுள்ளது)

இவ்வமைப்பு சனநாயகப்பண்புகளைக் கொண்ட மத்தியகுழு, செயற்பாட்டுக்குழு போன்றவற்றைக் கொண்டிருக்கவில்லை, பல ஆண்டுகளாக தீவிரமான பங்களிப்புக்களை பெண்கள் வழங்கிய பின்னரும் த.வி.புலிகளின் உயர்மட்ட முடிவு செய்யும் அதிகாரம் கொண்ட பணிகளில் பெண்கள் யாரும் இருந்ததாக தெரியவில்லை. த.வி.புலிகள் அமைப்பினர் ஏனைய அமைப்புக்களைப்போல முதலில் தேசவிடுதலை என்ற கருத்தை வலுவாக சகல பிரிவினரிடமும் பதித்து வந்தனர். இதன் காரணமாக பலமிக்க இராணுவ சிப்பாய்களை கொண்ட பெண்கள் அணியான சுதந்திரப்பறவையினால் கூட தாம் சமூக ரீதியாக எதிர் கொண்ட பிரச்சனைகளுக்கு எதிராக சிந்திக்கவோ, செயற்படவோ

www.tamilarangam.net

இயலாமல் போயிற்று. த.வி.புலிகள் அமைப்பினர் சமூகத்தில் பெண்கள் பாத்திரத்தை இரண்டாம் பட்சமாகவே கருதுகின்றனர்.

பெண்களை ஆயுதப்போராட்டத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பாக ஆர்வம் காட்டிய அமைப்புக்கள் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும், பெண்கள் தொடர்பான கருத்தியல், மற்றும் புனைவுகள் தொடர்பாக ஆழ்ந்த பரிசீலனைகள் எதையும் நிகழ்த்தவில்லை. இலங்கையின் பிரச்சனை தொடர்பான நிபுணரும் சமாதானத்திற்கான ஆய்வு நிறுவன (PRIO) முன்னைய பணியாளருமான Iselin Frydenlund கருத்துப்படி பெருமளவிலான பெண்களை கொண்ட அமைப்பாக த.வி.புலிகள் காணப்படுவதாகவும் இதில் மூன்றில் ஒருவர் பெண்சிப்பாயாக இருப்பதாகவும் அதிலும் நான்கில் ஒரு பகுதியினர் தற்கொலை தாக்குதலில் ஈடுபடுபவர்களாகவும் இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

த.வி.புலிகளின் ஆயுதப்போராட்ட ஆட்சேர்ப்பு தொடர்பாகவும், பெண்கள் ஆயுதம் ஏந்தி, தற்கொலைப்போராளிகளாக பங்களிப்புக்களை வழங்குவதன் மூலமாகத்தான் தமது சமபலத்தை நிரூபித்திருக்க வேண்டுமா எனவும், இறுதிக்காலகட்டத்தில் பலாத்காரமாக வகைதொகையாக பலரை பிடித்துச் சென்றதும், சிங்கள இராணுவம் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கி சிதைத்து விடும் என்ற அவலத்தினால் பல பெண்கள் தற்கொலை குண்டுதாரிகளாக தாக்குதலில் ஈடுபட்டமை போன்றவை தொடர்பாகவும், எமது சமூகத்தில் நிலவும் பெண்ணின் உடல் தொடர்பான கற்பிதங்கள், கற்புநெறி போன்றவற்றையும், பெண்கள் தொடர்பாக காணப்படும் கற்பிதங்களையும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக பேசிக்கொள்வோம்.

இப்போராட்டம் பெண்ணின் உடல் தொடர்பான மென்மையானவர்கள், பிள்ளைகளை பெறுவதற்கும், அவர்களை பராமரிப்பதற்கும் வீட்டை நிர்வகிக்கவும் தான் பொருத்தமானவர்கள் என்பன போன்ற பல புனைவுகளை உடையச் செய்துள்ளது. பெண்கள் தனியாகவே குடும்பத்திற்கான வருமானத்தை ஈட்டுபவர்களாகவும், தனி பெற்றோராக இருந்து பிள்ளைகளை வளர்ப்பவர்களாகவும், தன்னம்பிக்கை, செயற்றிறன் மிக்கவர்கள் எனப் பல தளங்களில் ஆளுமையை வளர்த்துள்ளது.

த.வி.பு அமைப்பில் சேர்க்கப்பட்ட பெண்களின் தலைமுடி ஒட்ட வெட்டப்பட்டமையால் தற்போது இருக்கும் முகாம்களில் இவர்கள் இலகுவில் இனங்காணப்படுகின்றனர். (இதே மாதிரியான ஒரு

www.tamilarangam.net

பிரச்சனையை பெண்கள் த.வி.புலிகளின் உடைவின் போதும் இவர்கள் எதிர்நோக்கினர். கருணா தனது படையணியைக் கலைத்து போராளிகளை வீடு செல்லும்படி கோரி அடுத்தடுத்த தினங்களில் வன்னிப்புலிகள் தமது இவர்களை இனங்கண்டு அழித்தார்கள்).அமைப்புக்களில் முழு நேர ஊழியர்களாக பங்களிப்பை வழங்கியவர்கள் சமூக கெடுபிடிகளுக்கும் கல்வி, வேலைவாய்ப்பு, திருமணம் தொடர்பாக பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

தேசவிடுதலைக்குப்பின்னான பெண்விடுதலைப்போராட்டம் என்ற கருத்தமைவிலிருந்து நாம் விடுபட வேண்டிய தேவையையும் போராட்டம் வலியுறுத்தி நிற்கிறது. விரும்பியோ விரும்பாமலோ ஈழத்தில் பல பெண்கள் அமைப்பு பின்னணியையும், ஆயுத பயிற்சியையும் பெற்றவர்களாக இருக்கப் போகிறார்கள். இதனை நாம் கல்வி மற்றும் ஏனைய துறையை யொத்த ஒரு மேலதிக வளமாக, அநுபவமாக நாம் காண முனைவது ஆரோக்கியமானது.

இனமுரண்பாட்டினை எவ்வாறு இனங்கண்டு அதற்கு எதிரான போராட்டத்திற்கு அணிதிரள முன்வருகிறோமோ அதேபோல அச்சமூகத்தின் பிறிதொரு அங்கத்தவர்களான பெண்களை பாரபட்சமாக, இரண்டாம் தர பிரஜையாக நடத்த முற்படுகின்ற சகல சமூக கூறுகளையும் இனங்கண்டு அவற்றிற்கு எதிரான போராட்டத்தில் ஆண்களும் பெண்களும் ஈடுபடுவதுடன், கடந்த கால போராட்டங்களில் எமக்கு கிடைத்த அநுபங்களை கருத்திற் கொண்டு புதிய கருத்தமைவுகளின் உருவாக்கத்திற்கும் பயன்பாட்டுக்கும் உழைப்பதும் இங்கு அவசியமாகிறது.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்:**

Voice of tiger Bulletin (feb 1990)
The Hindu (10.2002),
www.childsoldiersglobalreport.org
மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் 5 வது விசேடஅறிக்கை தமிழீழமக்கள் விடுதலைக்கழக, என். எல். எவ். ரி, மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ் ஆவணங்கள், யாழ்ப்பாணச்சமூகத்தில் பெண் கல்வி ஓர் ஆய்வு வள்ளி நாயகி இராமலிங்கம்

www.tamilarangam.net

# விடுதலைப் போராட்டமும் புலிகளும்

ஏகலைவன்

அண்மையில் நடைபெற்ற புலிகளின் தோல்வியானது தமிழர்கள் மத்தியில் மட்டுமல்லாது உலகெங்கும் உள்ள முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளிடையே அதிர்ச்சிகளை தோற்றுவித்துள்ளது. ஆட்சியதிகாரத்தை விரைவில் நிலைநாட்டுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட புலிகள் இப்படி சடுதியாகவும், முழுமையாகவும் தோற்கடிக்கப்பட்டதானது வரலாற்றில் அடிக்கடி நிகழாத ஒன்றாகும். இந்த நிகழ்வானது பல்வேறு கேள்விகளையும் முன்னுக்கு கொண்டு வருகிறது. புலிகள் ஏன் இப்படி தோற்றுப் போனார்கள்? இது தனிப்பட புலிகள் அமைப்பினது பலவீனம் சார்ந்த பிரச்சனையா அல்லது இன்றை புதிய உலக ஒழுங்கமைப்பின் விளைவா? தமிழர்களது தேசிய விடுதலைப் போராட்டமானது, பல காலமாக அதன் விமர்சகர்களால் கூறப்பட்டு வந்தது போல, வெற்றி பெற முடியாததுதானா? தமிழர்கள் ஒரு தேசம் தானா, இவர்களால் முன்னெடுக்கப்பட்டது தேசிய விடுதலைப் போராட்டம்தானா? தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு இனிமேல் எதிர்காலமே கிடையாதா? என்றெல்லாம் கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன. இன்னொரு பக்கத்தில் இந்த தோல்விக்கான பொறுப்பானது முற்றிலும் புலிகள் அமைப்பை, அதிலும் குறிப்பாக அதன் தலைவர் பிரபாகரனை அடிப்படையாக வைத்து அனுகப்படுகிறது. விடுதலை அமைப்புக்கள் என்பவையும் சமுதாயத்தின் படைப்புக்களே. இப்படிப்பட்ட நிலையில் எமது சமுதாயத்தின் சமூக, பொருளாதார,அரசியல், சித்தாந்த கட்டமைப்புக்களை கருத்திற் கெடுக்காத விமர்சனங்கள் விஞ்ஞானபூர்வமானவையாக அமைய முடியாது அல்லவா?

புரட்சிகர, விடுதலை அமைப்புக்கள் ஏதோ ஒரு விதத்தில் சமுதாயத்தை மாற்றப் போவதாக கூறிக் கொண்டாலும், இவையும் கூட சமுதாயத்தின் படைப்புக்களேயாகும். இப்படிப்பட்ட அமைப்புக்களை படைப்பதிலும், அவற்றின் போராட்டங்களை தலைமை தாங்குவதிலும் தனிநபர்கள் குறிப்பிடத்தக்க பாத்திரம் வகிக்கவே செய்கிறார்கள். ஆனாலும் இந்த தனிநபர்களும், அமைப்புக்களும் கூட சமுதாயத்தின் படைப்புக்களே என்ற வகையில் இவர்களது செயற்பாடுகள் மற்றும் சிந்தனை வீச்சங்கள் என்பவை சமுதாயத்தினாலேயே நிர்ணயிக்கவும் படுகிறது. இவர்களும் வரலாறு தமக்கு அளித்த வரையறுக்கப்பட்ட (Limited) நிலைமைகளுக்குள்ளேயே தமது பாத்திரங்களை ஆற்றியாக வேண்டியுள்ளது. இப்படியாக சமுதாயத்திற்கும், அதன்

www.tamilarangam.net

அமைப்புக்களுக்கும் மற்றும் தலைமை தாங்கும் தனிநபர்களுக்கும் உள்ள உறவானது பரஸ்பரம் தாக்கம் நிகழ்த்தும் இயங்கியல் தன்மை கொண்டவையாகும். ஆதலால் வரலாற்றுப் போக்குகளை, அதன் அமைப்புக்களை, அவற்றை தலைமை தாங்கும் நபர்களை மதிப்பீடு செய்யும் போது இந்த அவதானிப்புக்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவையாகின்றன.

இப்போது எமது சமுதாயத்தை சற்று நோக்குவோம். இது முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் வளர்ச்சியடைந்து ஒரு சமூகம் அல்ல. ஆதலால் சமுதாயத்தில் ஜனநாயக நெறிமுறைகள் பெரிய அளவில் வழக்கில் காணப்படுவதில்லை. ஆளும் வர்க்கங்களும் சரி, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும் சரி ஜனநாயக அரசியல் நடைமுறைகளுக்கு அதிகம் பழக்கப்படாதவர்களாகவே இருக்கிறார்கள். எமது சமூகத்திற்கு முதலாளித்துவ ஜனநாயக அரசில் கூட, இந்த சமூகத்தின் வளர்ச்சியின் இயல்பான வெளிப்பாடாக அன்றி, வெளியிலிருந்து திணிக்கப்பட்டதாகவே அமைந்தது. ஆதலால் இந்த ஜனநாயக நெறிமுறைகள் எமது சமுதாயத்தில் முறையாக வேரூன்றாமலேயே இருந்துவிட்டது. எமது சமூகத்தின் அத்தனை நிறுவனங்களும் - அரசியல் கட்சிகள் தொடக்கம், மதம், குடும்பம், கல்விமுறை, சாதியம் போன்ற சமூக நிறுவனங்கள் அத்தனையும் - அதிகார நடைமுறைகளை அடிப்படையாக கொண்டனவாகவே அமைந்திருக்கின்றன. ஆதலால் எமது அமைப்பில் உருவான விடுதலை அமைப்புக்கள் கூட அதிகார நடைமுறைகளையே இயல்பாக கைவரப்பெற்றனவாக அமைந்தன. இவற்றில் ஜனநாயகமானது பிரக்ஞைபூர்வமாகவே கொண்டு வரப்பட வேண்டியதொன்றாக இருக்கின்றது. எங்கெல்லாம் தன்னியல்பாக அரசியல் முன்னெடுக்கப் படுகின்றதோ, அங்கெல்லாம் அதிகார நடைமுறைகளே ஓங்கி நிற்கும். விடுதலைப் புலிகள் அமைப்பு மாத்திரமன்றி, அனேகமாக எல்லா போராட்ட அமைப்புக்களுமே அதிகார நடைமுறைகளையே கொண்டிருந்தன.

தமிழ் தலைமையானது ஆரம்பம் முதலே கொழும்பைச் சேர்ந்த வெள்ளாள வலதுசாரி மேட்டுக்குடிகளின் கைகளிலேயே இருந்தது. அவர்கள் தமிழ் மக்களது நலன்களை முரணற்று பிரதிபலிப்பதிலும் பார்க்க சிங்கள மேட்டுக்குடியான 'கொவிகம' சாதியைச் சேர்ந்த வலதுசாரிகளுடன் கூட்டமைத்து பிரத்தானியர் வழங்கிய அற்ப சொற்ப அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதிலேயே குறியாக இருந்தனர். 1920 களில் தோன்றிய யாழ்ப்பாண இளைஞர் கொங்கிரஸ் அமைப்பானது மத்தியதர வர்க்க படித்த இளைஞர்களை மையமாக கொண்டிருந்தது.

இவர்கள் அந்த காலத்தில் மிகவும் முற்போக்கான நிலைப்பாடுகளை மேற்கொண்டவர்களாக விளங்கினார்கள். சாதிய, பெண்ணடிமைத்தனம் என்பவற்றிற்கு எதிராக குரல் கொடுத்ததுடன் பிரித்தானியரது கொலனித்துவத்திற்கு எதிராகவும் குரல் கொடுத்தார்கள். 1930 இல் ‘டொனமூர்’ அரசியல் சீர்திருத்தம் கொண்டுவந்த சர்வஜனவாக்கெடுப்பை இந்த தமிழ் மேட்டுக்குடியானது, அது ‘கும்பல் ஆட்சிக்கு’ (Mob’s Rule) வழிவகுப்பதாக கூறி எதிர்த்த போது, இளைஞர் கொங்கிரஸ அமைப்பானது, அதே சீர்திருத்தங்கள் இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கத் தவறியதாக குற்றஞ்சாட்டி தேர்தலை பகிஷ்கரித்தார்கள். தமிழ் மேட்டுக்குடியின் அரசியல் அபிலாசைகளுக்கு மாறாக, தமிழ் மக்களை அணிதிரட்டி, இந்த தேர்தலில் இந்த மேட்டுக்குடியினர் பங்கு பற்ற முடியாதபடி செய்தார்கள். இதே போன்று ஏனைய சமூக பிரச்சனைகள் தொடர்பாகவும் - சாதியம் மற்றும் பெண்ணடிமைத்தனம் - தமிழ் மேட்டுக்குடியுடன் முரண்பட்டார்கள். ஆனால் இந்த முற்போக்கு சக்திகளது அரசியல் முயற்சிகள் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான மேட்டுக்குடியினால் பின்னர் பணபலம் மற்றும் வன்முறை கொண்டு முறியடிக்கப்பட்டது. தமிழர் வரலாற்றில் தோன்றிய முற்போக்கு அரசியல் அதிகம் காலம் நின்றுபிடிக்க முடியவில்லை. முன்னர் ‘மனிங்’ சீர்திருத்தத்தில் வரையறுக்கப்பட்டிருந்த இனரீதியான பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாக ‘டொனமூர்’ சீர்திருத்தம் கொண்டுவந்த பிரதேசரீதியான பிரதிநிதித்துவமானது ஓரளவிற்கு ஜனநாயக பிரதிநிதித்துவ தன்மையை கொண்டிருந்தாலும் கூட, கொழும்பை மையமாகக் கொண்ட தமிழ் வெள்ளாள மேட்டுக்குடியானது அவ்வப்போது வரும் தேர்தல் காலங்களில் மாத்திரம் யாழ்ப்பாணம் சென்று, தமது சாதிய அதிகாரம் மற்றும் பணபலம் ஆகியவற்றை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இந்த பிரதிநிதித்துவத்தை தமது கரங்களில் பேணிவந்தது. பிற்காலத்தில் தோன்றிய இடதுசாரி கட்சிகள் தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் செல்வாக்கு செலுத்த முடியாத போதிலும், தேசிய பிரச்சனைகளில் நேர்மையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். 1956 இல் கொண்டுவரப்பட்ட சிங்கள மொழி மாத்திரம் அரச கருமமொழியாக்கும் சட்டத்திற்கு எதிராக தீவிரமான எதிர்ப்பை தெரிவித்தனர். ஆனால் இவர்களது பாராளுமன்றவாத அரசியலானது இவர்களை படிப்படியாக சிங்கள பேரினவாத அரசியலுக்கு பலியாக்கியது. பின்பு சீன சார்பு கட்சியினர் சண்முகதாசன் தலைமையில் தமிழ் மக்களின் தாழ்த்தப்பட்ட பிரிவினர் மத்தியில் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்ததன் மூலமாக செல்வாக்கு மிக்கவர்களாக திகழ்ந்தார்கள். ஆனால் தொடர்ந்தும் தீவிரமடைந்த தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக திட்டவட்டமான நிலைப்பாடுகளை எடுக்கத் தவறியதன் வாயிலாக

அவர்களும் தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுப் போனார்கள். இப்படியாக இடதுசாரி சக்திகளது தவறுகள் காரணமாக தமிழ் மக்களது தலைமையானது முற்றிலும் வலதுசாரிகளின் கரங்களை போய்ச் சேர்ந்தது. பிற்காலங்களில் விடுதலை அமைப்புக்களை தோற்றுவித்த பெரும்பான்மையினர் இந்த வலதுசாரி அமைப்புக்களான தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் இளைஞர் அமைப்புக்களில் இருந்து வந்தவர்களாவர். இது இவர்களது அரசியல் பார்வையின் வீச்சத்தை மிகவும் மட்டுப்படுத்திக் கொண்டிருந்தது. சில அமைப்புக்கள் இடதுசாரி கோசங்களை முன்வைத்தாலும் கூட, அவை கூட கோசங்கள் என்ற அளவைத் தாண்டி, திட்டவட்டமான சமுதாயம் பற்றிய புரிதலாக, அரசியல் திட்டமாக, அமைப்புத்துறை சார்ந்த கருத்துக்களாக வளரவில்லை. இதனால் இந்த சிந்தனைகள் சமுதாயத்தில் திட்டவட்டமான தாக்கங்களை நிகழ்த்தாமலேயே போனது.

தமிழ் கொங்கிரஸ் மற்றும் தமிழரசுக் கட்சி ஆகியவை தமிழர்களது தேசிய கட்சிகளாக இருந்த போதிலும் அவர்கள் தமிழ் ஆதிக்க தரப்பினரையே பிரதிநிதித்துவம் செய்தனர். தமிழ் கொங்கிரஸ் கட்சியை விட தமிழரசுக் கட்சியானது தமிழரது தேசிய பிரச்சனைகளை முகம் கொடுப்பதில் தீவிரமாக இருந்த போதிலும், அவர்களது தேர்தல் அடித்தளத்திற்கும், வர்க்க பின்னணிக்கும் இடையிலான முரண்பாடானது இவர்களது அரசியலில் ஊசலாட்டமாக வெளிப்பட்டது. ஒரு புறம் சிங்கள பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான நடவடிக்கைகளை வெகுஜன மட்டத்திலான போராட்டங்கள் மூலமாக முகம் கொடுத்த போதிலும், அவற்றின் வெற்றிகளை தமிழ் மக்களது நலன்களைக் காப்பது என்பதிலும் பார்க்க தமது பாராளுமன்ற அரசியலுக்காகவும், பின்னர் தமது மேட்டுக்குடிகளது வர்த்த நலன்களுக்கு சிங்கள அரசுடன் சமரசம் செய்வதற்கும் பயன்படுத்திக் கொண்டார்கள். வளர்ந்து வந்து தேசிய இயக்கமானது புதிய போரட்ட வடிவங்களையும், அரசியல் கோரிக்கைகளையும் கோரி நின்ற போது, இவற்றை முன்னெடுக்கும் திரனின்றி தமிழரசுக் கட்சியானது தள்ளாடியது. தமிழரசுக் கட்சியின் அரச சார்பு நடவடிக்கைகளினால் அதிருப்தி கொண்ட வ. நவரத்தினம் அவர்கள் தமிழர் சுயாட்சி கழகத்தை 1968 இல் நிறுவி தமிழீழ கோரிக்கையை முன்வைத்தார். இது விரைவில் இளைஞர்களை பற்றிக் கொண்டது. 1970 களில் சிறிமாவே பண்டாரநாயக்க தலைமையிலான அரசின் போது ஏற்பட்ட குடியரசு அரசியலமைப்புச் சட்டம், தரப்படுத்தல், தமிழாராய்ச்சி மாநாட்டு பிரச்சனைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து மாணவர் பேரவை போன்ற அமைப்புக்கள் தோன்றி தேசிய இயக்கத்தை வன்முறையை நோக்கி நகர்த்தின. இது தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர்

www.tamilarangam.net

விடுதலைக் கூட்டணி போன்ற அமைப்புக்களின் இளைஞர் அமைப்புக்களில் கணிசமான நெருக்கடிகளை உருவாக்கின. பல தடவைகள் இளைஞர் குழுக்கள் தலைமையுடன் பிரச்சனை பட்டு வெளியேறி தனியான அமைப்புக்களை நிறுவின. ஈழ விடுதலை இயக்கம் அதில் முதன்மையானதாக இருந்தது. இப்படிப் பட்ட நெருக்கடிகளை சமாளிக்கும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியானது உருவாக்கப்பட்டு, 1976 இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழிழ கோரிக்கையை முன்வைத்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பானது தமிழீழ கோரிக்கையை முன்வைத்து, 1977 ம் ஆண்டு தேர்தலை தமிழீழத்திற்கான மக்கள் கருத்துக் கணிப்பாக அறிவித்த போதிலும், தமிழீழ கோரிக்கையை இவர்கள் இதய சுத்தியுடன், ஒரு செயலுக்கான கோரிக்கையாக ஒருபோதும் கருதியதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் இது ஒரு தேர்தல் பிரச்சாரமாக மட்டுமே விளங்கியது. வட்டுக்கோட்டை மாநாட்டிலேயே இரண்டு பெண்கள் தமிழீழத்தை அடைவதற்கான செயல் திட்டம் தொடர்பாக நெருக்குதல்களை கொடுத்தார்கள். இந்த கோரிக்கை கட்சித் தலைவர்களினால் அப்போது உதாசீனம் செய்யப்பட்டது. கட்சியின் முன்னணித் தலைவர்களுக்கு தமிழீழம் பற்றிய சிறிதளவு கரிசனை கூட இருக்கவில்லை. இளைஞர்கள் தாம் ஆயுத போராட்டம் மூலம் இந்த இலக்கை அடையலாம் என்று நம்பினார்கள். தலைவர்களில் ஒரு பகுதியினர் 1971 இல் வங்காளதேசத்தில் நடந்தது போன்று தமது கிளர்ச்சிகள் தீவிரமடையும் போது இந்தியா தலையீடு செய்து தமிழீழத்ததை பெற்றுத் தரும் என்று நம்பினார்கள். தமிழ் தேசிய இயக்கத்தில் தோன்றிய வன்முறையை தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பானது தனது அரசியல் எதிரிகளை, துரோகிகள் என்று ஆட்காட்டி, அழித்தொழிக்க பயன்படுத்திக் கொண்டது. இவ்வாறு துரோகிகள் பட்டம் கட்டப்பட்ட துரையப்பா, அருளம்பலம், தியாகராசா போன்றவர்கள் யாவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அரசியல்ரீதியாக சவாலாக விளங்கியவர்களாவர். அதிலும் அருளம்பலம், தியாகராசா போன்றவர்கள் முறையே தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னணித் தலைவர்களாகிய சிவசிதம்பரம், அமிர்தலிங்கம் ஆகியோரை 1970 ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தோற்கடித்தவர்களாவர். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையை ஏற்றுக் கொண்டு ஆயுத போராட்டத்தை முன்னெடுக்கும் அமைப்பாகவே இருந்தது. அவர்களது ஆரம்பகால ஆவணமானது, தமிழீழத்தை அமைத்ததும், அதனை ஆளும் பொறுப்பை அரசியல் தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டு

www.tamilarangam.net

அமைப்பை கலைத்துவிடுவதாக தெரிவித்தது. 1977 ம் ஆண்டு தேர்தலில் பெரு வெற்றியை பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியானது மேற்கொண்டு தமிழீழத்தை அடைவதற்கான வேலைத்திட்டங்கள் எதனையும் வரையாமல் அரசிடம் சமரசம் செய்யத் தொடங்கியது. தமது ஆதரவாளர்களான வர்த்தகர்களுக்காக சலுகைகளை பெறவே இந்த சமரசம் செய்யப் பட்டது. இதனை அடுத்தே இளைஞர் அமைப்புக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செல்வாக்கை விட்டு விலகிச் செல்லத் தலைப்பட்டன. அதிலும் பிரபாகரன் இன்னும் நீண்ட காலம் அமிர்தலிங்கத்தின் செல்வாக்கிற்கு உற்பட்டவராகவே இருந்து வந்ததார்.

ஆரம்ப காலம் முதலாகவே இளைஞர் அமைப்புக்கள் தன்னியல்பாகவே செயற்பட்டு வந்தன. இவை தமிழரசுக் கட்சியின் அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அமைப்புக்களாக இருந்த வரையில் இதில் பிரச்சனை எதுவும் பெரிதாக இருக்கவில்லை. ஆனால் தனியான விடுதலை அமைப்புக்களாக செயற்படத் தொடங்கிய பின்பு இது பெரிய பிரச்சனையாக உருவாகத் தொடங்கியது. தமிழர் தேசிய இயக்கமானது எதிர்கொண்ட கோட்பாட்டு, அரசியல் மற்றும் அமைப்புத்துறை தொடர்பான பிரச்சனைகளை பிரக்ஞைபூர்வமாக முகம் கொடுத்து அவற்றிற்கு தீர்வு காண முடியாதவர்களாய் இந்த அமைப்புக்கள் அத்தனையும் திண்டாடின. இந்த பிரச்சனைகள் யாவும், எந்தவொரு சமூக இயக்கமும் முகம் கொடுத்து தீர்வு கண்டாக வேண்டிய பிரச்சனைகள் என்ற புரிதலே இவர்களிடத்தல் இருக்கவில்லை. இப்படிப்பட்ட பிரச்சனைகளை முன்வைப்பவர்களை அமைப்பின் சுமுகமான இயக்கத்திற்கு ஊறு விளைவிப்பவர்களாகவே இவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது. இதனால் தலைமையின் கட்டளைகளை மாத்திரம் பின்பற்றுபவர்களாக இருக்கும் படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அப்படியாக சம்பந்தப்பட்டவர்கள் நடக்காத போது தண்டிக்கப்பட்டார்கள். இன்னும் சில அமைப்புக்கள் மிகவும் சந்தர்ப்பவாதத்துடன் நடந்து கொண்டார்கள். அங்கத்தவர்களதும், மக்களதும் ஜனநாயக உரிமைகளை மதிக்கமால் அதிகார மனோபாவத்துடன் நடந்து கொண்டார்கள். சிலர் அங்கத்தவர்களையும் மக்களையும் ஏமாற்றிவிடலாம் என்று எண்ணி செயற்பட்டார்கள்.

ஈழப் போரட்டத்துடன் சம்பந்தப்பட்ட முற்போக்கு சக்திகளுக்கு தேசியவாதம் பற்றிய புரிதலில் தீவிரமான பிரச்சனைகள் இருந்தன. மரபார்ந்த மாாக்சியத்தில் இருந்த குறைபாடுகள் இவர்களால் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முழு மனதுடன் செயற்பட தடையாக இருந்தது. **ஐக்கியப்பட்ட புரட்சி என்பதே இலங்கையில் இருந்த எல்லா**

www.tamilarangam.net

இடதுசாரி கட்சிகளதும் 'இயல்பான நிலைப்பாடாக' **(Default Position) ஆக இருந்தது.** தேசிய விடுதலை இயக்கங்களில் இணைந்து செயற்பட முன்வந்த அரசியல் கோட்பாட்டு முதிர்ச்சியுள்ளவர்கள் கூட இந்த பிரச்சனையை விளங்கிக் கொண்டு இந்த கோட்பாட்டு இடைவெளியை கடப்பதற்கு ஆவண செய்ய முன்வரவில்லை. இதனால் போரட்டம் ஓங்கியிருந்தபோது இது தொடர்பாக பிரச்சனைகள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் போராட்டத்தில் நெருக்கடிகள் தோன்றிய போதெல்லாம் முற்போக்கு சக்திகளின் ஒரு பகுதியானது "ஐக்கியப்பட்ட புரட்சிக்கு" தாவிக்கொண்டிருந்தது. இதனால் தேசிய இயக்கத்தில் தோன்றிய ஜனநாயக விரோத போக்குகளை எதிர்த்து முறியடிப்பதில் முற்போக்கு சக்திகளுக்கு அதிகம் சிரமம் இருந்தது. போராட்டமானது தன்னியல்பாகவும், மிகவும் வேகமாகவும் முன்னேறியது போல தோன்றியதால், அமைப்புக்களில் இருந்த முற்போக்கு சக்திகளது முயற்சியெல்லாம் போரட்டத்தையும், தாம் சார்ந்து இயக்கத்தையும் மக்கள் மத்தியில் நியாயப்படுத்துவதிலேயே செலவானது. இங்கு அரசியலானது வெறும் பிரச்சாரமாகவே ஆனது. அரிதாக உருவான அரசியல் முன்னெடுப்புக்கள் சிலவும் கூட அமைப்பின் அங்கத்தவர்களால் சரிவர செரிக்கப்படாமலேயே மக்களுக்கு முன்வைக்கப்பட்டது. இவர்களால் முன்வைக்கப்பட்ட அரசியல் நிலைப்பாடுகள் செயல் வடிவம் பெறுவதை இவர்களால் உத்தரவாதப்படுத்த முடியவில்லை. இதனால் இந்த நல்ல முன்னெடுப்புக்கள் கூட மக்களை ஏமாற்றவே பயன்பட்டன.

எல்லா அமைப்புக்களிலும் பிரக்ஞைபூர்வமான செயற்பாடுகள் மிகவும் குறைவானவையாகவே இருந்தன. ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால் தேசிய இயக்கத்தில் அரசியலானது இராணுவ நடவடிக்கைகளை விட பல படிகள் பின்தங்கியே இருந்தது. புலிகள் அமைப்பானது தனியரசை எப்போதும் பிரகடனப்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்புகள் மக்கள் மத்தியிலும், மாற்றுத் தரப்பாரிடமும் பரவலாக காணப்பட்ட நிலையிலும், எமது சமுதாயத்தின் ஸ்தூலமான நிலைமைகள், அதிலுள்ள சமூக சக்திகள் குறித்த ஆய்வுகளோ, அரசியல் அதிகாரம் பற்றிய புரிதலோ புலிகள் இடத்தில் மாத்திரமன்றி, வெளியே இருந்து முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளிடம் கூட இருக்கவில்லை. இப்போது கூட நிலைமைகள் அப்படியேதான் இருக்கிறது. இன்று தம்மை மாற்று சக்திகளாக அறிவித்துக் கொண்டிருக்கும் பல்வேறு குழுக்களதும் கோட்பாட்டு. அரசியல், அமைப்புத்துறை சார்ந்த நிலைப்பாடுகளை சற்று உன்னிப்பாக கவனித்துப் பார்த்தால் இப்போதும் இந்த உண்மை தெளிவாகும். இன்று கூட எம்மிட் பலர் தூக்கிப் பிடிக்கும் கோட்பாடுகள் எதுவுமே

www.tamilarangam.net

**இக்காலகட்டத்தின் மிகவும் முன்னேறிய கோட்பாடாக இல்லை** என்பதுதான் வருந்தத்தக்க உண்மையாகும். இப்படிப்பட்ட ஒரு சூழலே எமது போராட்டம் முழுவதும் கடந்த காலத்திலும் நிலவி வந்துள்ளது. இப்படிப்பட்ட சமூக, பொருளாதார, கோட்பாட்டு, அரசியல் சூழலுக்குள் வைத்தே நாம் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியலையும் மதிப்பீடு செய்ய முடியும்: செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் ஏதாவது உருப்படியான படிப்பினைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

**புலிகளும் அவர்களது அரசியலும்.**

1985 ம் ஆண்டில் வெளிவந்த ஒரு பிரசுரத்தில் "ஒரு கெரில்லா அமைப்பிற்கும், ஒரு கொள்ளை கோஷ்டிக்கும் உள்ள வேறுபாடு என்ன?" என்று கேள்வி எழுப்பப் பட்டிருந்தது. "இரண்டு அமைப்புக்களுமே வங்கிகளை கொள்ளையிடுகிறார்கள். இரண்டு அமைப்புகளுமே தம்மை கைது செய்ய முனையும் பொலிசாரை, தம்மை காட்டிக் கொடுக்க முனைபவர்களை கொலை செய்கிறார்கள். அப்படியானால் இந்த இரண்டு குழுக்களுக்கும் இடையில் வேறுபாடே கிடையாதா?" என்ற கேள்விக்கு "கெரில்லா அமைப்பு முன்னெடுக்கும் அரசியலே அந்த வேறுபாடு" என்று பதில் அந்த பிரசுரத்தில் வழங்கப்பட்டிருந்தது. துரதிஷ்டவசமாக இந்த கேள்விக்கு புலிகள் இறுதி வரையில் சரியான விடையை காணாமலேயே போய்விட்டார்கள். கடைசி வரையில், புலிகள் அமைப்பானது 'மாபியா' அமைப்பை ஒத்த ஒரு அமைப்பே ஒழிய அது ஒரு தேசிய விடுதலை அமைப்பல்ல, என்று சாதித்தவர்கள் பலரும் எமது சமூகத்தில் இருக்கவே செய்கிறாாகள். அவர்களிடம் அரசியல் இருக்கவே இல்லை என்று இவர்கள் அடித்துக் கூறுகிறார்கள்.

"**தனிப்பட்டது என்பது அரசியலே" (Personal is Political)**என்று பெண்ணியவாதிகள் வலியுறுத்துவர். நிலைமைகள் அப்படியிருக்க, "புலிகளின் தாகம், தமிழீழ தாயகம்" என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் அமைப்மை, சிறீலங்கா அரசிற்கு எதிராக தொடர்ச்சியான ஆயுத போராட்டத்தை மிகவும் மூர்க்கமாக முன்னெடுத்து வந்த ஒரு அமைப்பை பார்த்து, அவர்களிடம் அரசியல் கிடையாது என்று குறிப்பிடுவது சற்று மிகைப்படுத்தப்பட்டதாக தோன்றவில்லையா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

பெண்ணடிமைத்தனத்தின் வடிவங்களை வெறுமனே **'தனிப்பட்ட விடயங்கள்'** என்று ஆணாதிக்கவாதிகள் ஒதுக்கி விட்ட ஒரு கால

www.tamilarangam.net

கட்டத்தில், அந்த தனிப்பட்ட உறவுகள் என்று கூறப்படுவனவற்றினுள் ஊடுறுவியுள்ள **அதிகாரத்தின்** தன்மையை வெளிப்படுத்தும் வகையிலேயே மேலே குறிப்பிட்ட சுலோகம் பெண்ணியவாதிகளால் முன்வைக்கபட்டது. இங்கே குறிப்பிடப்படும் அரசியல் என்பது சரியான அர்த்தத்தில் ஒரு வகை **'நுண் அரசியலை'** குறிப்பதாகிறது. ஆனால் அரசு, அரசில் அதிகாரம், அதனை கைப்பற்றுவதற்கான போராட்டம், அந்த நோக்கத்தில் மக்களை அணிதிரட்டுவது போன்றவை **நேரடியான அர்த்தத்தில் அரசியலின்** வகைப்பட்டவையாகும் . **Politics Proper**என்று குறிப்பிடக் கூடிய இது **'பேரரசியல்'** வகைப்பட்ட ஒரு விடயமாகும். இது சாதாரணமாக சமூகத்தில் "அரசியலற்றதாக கருதப்படும் அம்சங்களில்" ஊடுறுவியுள்ள அதிகார உறவுகள் பற்றிய நுண்மையான ஆய்வுகள் அல்ல, மாறாக ஒரு குறிப்பிட்ட அமைப்பிடம் காணப்படும் அரசியல் பிரக்ஞை எப்படிப்பட்டதாக இருக்கிறது? அதனை எந்தளவு தூரம் பிரக்ஞை பூர்வமாகவும், தெளிவாகவும் முன்வைக்கிறார்கள்? அந்த குறிப்பிட்ட அரசியலை முன்னெடுப்பதற்கு குறிப்பிட்ட அமைப்பானது என்ன விதமான வழிமுறைகளை கையாள்கிறார்கள்? இந்த நடவடிக்கைகள் மூலமாக குறிப்பிட்ட அரசியல் இலக்குகள் எவ்வாறு அடையப்படுகின்றன? போன்ற கேள்விகள் இங்கு மிகவும் அத்தியாவசியமானவையாகும். **ஒரு தேசிய விடுதலை போரட்டத்தில் ஈடுபடுவதனால் மாத்திரம் ஒரு அமைப்பானது சரியான அரசியலை பிரக்ஞை பூர்வமாக முன்னெடுப்பதாக அர்த்தப்பட மாட்டாது.**

அப்படியானால் **பிரக்ஞைபூர்வமான அரசியல் என்றால் என்ன?** பிரக்ஞைபூர்வமான அரசியலை குறிப்பிட்ட அமைப்பானது கொண்டுள்ளதா, இல்லையா என்பதை எவ்வாறு கண்டு கொள்ளவது? போன்ற கேள்விகள் இங்கு எழுவது தவிர்க்க முடியாததாகிறது அல்லவா? **பிரக்ஞை என்பது முதலில் தான் யார், எப்படிப்பட்ட நிலைமைகளின் கீழ் செயற்படுகிறார், என்ன விதமான நடவடிக்கைகளை, என்ன நோக்கத்திற்காக மேற்கொள்கிறார் என்பது பற்றிய தெளிவான சிந்தனையை கொண்டிருப்பதாகும்.** அரசியலில் இது சமூகம் பற்றிய பகுப்பாய்வு, அதிலுள்ள பல்வேறு சமூக சக்திகள், மற்றும் இந்த சமூக சக்திகளுக்கிடையிலான உறவுகள், இந்த உறவுகளின் அடிப்படையில் தாம் முகம் கொடுக்கம் பிரச்சனைகளை எவ்வாறு புரிந்து கொள்வது: இந்த பிரச்சனைக்கான தீர்வு எப்படிப்பட்டதாக இருக்க முடியும்: இந்த தீர்வை நோக்கி எவ்வாறு முன்னேறிச் செல்லப் போகிறோம்: அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் தமது நண்பர்கள் மற்றும் எதிரிகள் யார் என்பவை பற்றிய அறிவை கொண்டிருப்பதாகும். இந்த பிரக்ஞையின் உயர்ந்த மட்ட

வெளிப்பாடு அரசியல் திட்டம், மற்றும் மூலோபாயம் - தந்திரோபாயம், ஊழியர் கொள்கை போன்றவற்றை வரைவதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. இப்படியாக செய்வதன் மூலமாக மட்டுமேதான் ஒரு அமைப்பானது சரியான அரசியலை, முரணற்ற விதத்தில் பிரக்ஞைபூர்வமாக முன்னெடுப்பதை உத்தரவாதப்படுத்த முடியும்.

எங்கெல்லாம் சரியான அரசியலானது பிரக்ஞைபூர்வாமாக முன்னெடுக்கப்படவில்லையோ, அங்கெல்லாம் சரியான அர்த்தத்தில் அந்த அமைப்பானது அரசியலை முன்னெடுக்கவில்லை என்றே அர்த்தப்படும். பிரக்ஞைபூர்வமான செயற்பாடுகள் இல்லாதபோது சமூகத்தில் உள்ள ஆதிக்க சித்தாந்தங்கள் அமைப்பினுள் செல்வாக்கு செலுத்துகின்றன. இதனால் அந்த அமைப்பானது விரும்பினாலும் இல்லாவிட்டாலும், தான் வரித்துக் கொண்டதாக கூறும் அரசியல் இலக்கை நோக்கி, தனது செயற்பாடுகள் முரணற்றவித்தில் முன்னெடுக்கப்படுவதை உத்தரவாதப்படுத்திக் கொள்வது சாத்தியமற்றதாகிவிடும். எப்போதெல்லாம் பிரக்ஞைபூர்வமான அரசியல் பின் தங்குகிறதோ, அப்போதெல்லாம் மேலே கூறிய கெரில்லா அமைப்பிற்கும், கொள்ளைக் கோஷ்டிக்கும் இடையிலான எல்லைக் கோடுகள் தெளிவற்றதாகின்றன. அந்த வகையில் பார்த்தால் விடுதலைப் புலிகள் அமைப்பானது ஒரு விடுதலை அமைப்பிற்கும், பாதாள உலகக் குழுவிற்கும் இடையிலான எல்லைப் பிரதேசத்திலேயே தொடர்ந்தும் இருந்து வந்துள்ளது. இதனால் நடந்தேறியவையே எமது முப்பது வருடகால ஆயுத போராட்டத்தின் மிகைப்படுத்தப்பட்ட அகோரங்களாகும்.

**தேசியப் பிரச்சனையின் அரசியல்.**

**தேசம் என்பது ஒரு மக்கள் குழுமத்தை குறிக்கும் ஒரு சொல்லாகும்**. தேசிய பிரச்சனை என்பது, குறிப்பிட்ட ஒரு தேசமானது, ஏனைய தேசங்களுடன் சமத்துவமாக இருப்பது தொடர்பான பிரச்சனை குறித்த விடயமாகும். **தேசிய பிரச்சனையானது அடிப்படையில் ஒரு ஜனநாயகம் பற்றிய பிரச்சனையாகும்.** எப்போதெல்லாம் ஒரு குறிப்பிட்ட தேசமானது, தான் ஏனைய தேசங்களால் சமத்துவமாக நடத்தப்படவில்லை எனக் கருதத் தலைப்படுகிறதோ, அப்போதெல்லாம் அந்த தேசமானது தனது தலைவிதியை தானே நிர்ணயித்துக் கொள்ள தலைப்படுகிறது. இதுவே சுயநிர்ணய உரிமை பற்றிய அக்கறையாக வெளிப்படுகிறது. இந்த அம்சத்தில் **தேசம் என்பது ஒரு மக்கள் கூட்டம்** என்பதும், **தேசிய பிரச்சனை என்பது அடிப்படையில் ஜனநாயக உரிமைகள் பற்றிய**

www.tamilarangam.net

**பிரச்சனை** என்பதும் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகின்றன.

புலிகளது அரசியல் சொல்லாடல்களை கவனமாக பரிசீலித்துப் பார்த்தால், புலிகள் தேசம் என்பதை ஒரு நிலம் சார்ந்த விடயமாக (Real Estate Issue)புரிந்து கொண்டுள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரியும். 'புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்'', 'மண்மீட்பு', 'நாட்டுப்பற்றாளர்' ... போன்ற எண்ணற்ற சொல்லாடல்களில், தேசம் என்பது மண் தொடர்பாக வலியுறுத்தப்படுவது புலனாகும். அதே வேளை, மக்கள், அவர்களது உரிமைகள் போன்றவை மிகவும் குறைந்த அழுத்தத்தையே பெற்றுள்ளன. சமூகத்தில் மேட்டுக்குடி அரசியலில் ஆட்சி செலுத்திய மக்கள் தொடர்பான மிகவும் பிற்போக்கானதும், அதிகாரமயப்பட்டதுமான ஒரு புரிதலே புலிகளிடத்தில் இருந்து வந்துள்ளது. மக்கள் மந்தைகளைப் போன்றவர்கள்: அவர்களை ஒரு திறமை மிக்க தலைவன் பலப்பிரயோத்துடன் வழி நடத்திச் செல்வது அவசியம்: தாம் அடையப் போகும் உயர்வான இலக்கானது எந்தவிதமான வழிமுறைகளையும் நியாயப்படுத்த போதுமானது: என்பதே அந்த நிலைப்பாடாகும். இதனால் இவர்கள் மக்களை அணி திரட்டுவதற்கு கூட எதிரியையே நம்பியிருந்தார்கள். ''சனத்திற்கு அடி விழுந்தால்தான் புத்தி வரும்'' என்பது இவர்கள் அன்றாடம் பாவித்து வரும் சொல்லாடல்களாகும். இந்த நோக்கில் மக்களது நலன்கள், ஜனநாயக உரிமைகள் பற்றி அறவே அக்கறை காட்டாதது மட்டுமல்ல, பல சர்ந்தர்ப்பங்களில் மக்கள் தாக்கப்படுவார்கள் என்று தெரிந்தே, அல்லது மக்களுக்கு அடி விழ வேண்டும் என்பதற்காகவே இராணுவ தாக்குதல்களை மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில், அல்லது அகதி முகாம்களுக்கு அருகில், சமயத்தில் அகதி முகாம்களுக்குள் இருந்தும் கூட நடத்தியதுண்டு. இதன் உச்ச கட்டம் தான் முள்ளிவாய்க்கால் படுகொலைகள். லட்சக்கணக்கான மக்களை ஓட்டிச் சென்றதும், அவர்களை பலியிட்டு தமது தலைமையை காப்பாற்றிக் கொள்ள முனைந்ததும் இந்த மக்கள் பற்றிய தவறான பார்வையினால்தான்.

மக்களது போராட்ட ஆற்றலை முற்றாக நிராகரித்த புலிகள் ஆயுதங்களை மாத்திரம் நம்பியே தமத போராட்டத்தை தொடங்கினார்கள். பிற்காலத்தில் இந்த அழுத்தமானது மண்ணின் மீதும், இறுதியில் பணத்தின் மீது மாறியது. ஆனால் ஒரு போதும் அது மீண்டும் மக்கள் நோக்கியதாக திரும்பவேயில்லை. இறுதியில் தம்மிடம் குவிந்து கிடந்த ஆயுதங்கள் பாவிப்பதற்கு போதிய போராளிகள் இன்றி தூங்கிக் கிடந்தன. சிறுவர்களை பலவந்தமாக பிடித்து போர் முனைக்கு

www.tamilarangam.net

அனுப்பி வைப்பதன் மூலமாக தம்மை காத்துக் கொள்ள முயன்றார்கள். முன்னரே ஈபிஆர்எல்எப் அமைப்பானது இந்தியப் படைகள் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில் முயன்று பார்த்து தோற்றுப் போன அதே வழிமுறையை முயன்று பார்த்தார்கள். இந்த வழிமுறை இரண்டாம் தடவையும் தோற்றுத்தான் போனது.

**அமைப்பினுள் ஜனநாயகமின்மை.**

தேசிய பிரச்சனை என்பது அடிப்படையில் ஒரு ஜனநாயகம் சார்ந்த பிரச்சனை என்பதும், இந்த ஜனநாயகமானது **மக்களே இறைமை உடைய தன்னிலை** (Soverign Subject)என்பதை தனது அடிநாதமாக கொண்டுள்ளது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு நிலைப்பாடே தமிழ் சமுதாயத்தில் நிலவவில்ல. போராடும் மக்களை அணிதிரட்டி, ஒருங்கமைத்து சரியான இலக்குகளை நோக்கி வழி நடத்துவது என்பதற்கு மாறாக மக்கள் வெறும் மந்தைக் கூட்டம் என்ற அதிகாரத்துவ புரிதலானது மக்கள் தொடர்பாக எந்தவிதமான ஆரோக்கியமான அணுகுமுறைகளையும் அனுமதிக்கவில்லை. அவ்வாறே போராட்ட அமைப்பு என்பது சமூகத்திலுள்ள தனிநபர்கள் தாமாக முன்வந்து இணைந்து கொண்டு செயலாற்றும், தமது நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டாக முடிவெடுக்கும் நிறுவனம் என்ற புரிதலுக்கும் இங்கு இடமில்லாமற் போனது. பிரக்ஞைபூர்வமான செயற்பாடின்மை என்பது மக்களை அணிதிரட்டுவதற்கு வெளிப்படையான அரசியலை முன்வைப்பதற்கு அனுமதிக்கவில்லை. அவ்வாறே அங்கத்தவர்களது அன்றாட அமைப்பு நடைமுறைகளை வழிநடத்தும் அமைப்புத்துறை சார்ந்த விதிமுறைகளையும் வகுப்பதற்கு வழிநடத்தவில்லை. ஏற்கனவே குறிப்பிடது போல, சமுதாயத்தில் அதிகார நடைமுறைகளே ஓங்கியிருக்கும் நிலையில், அமைப்பினுள் ஜனநாயகம் என்பதே பிரக்ஞைபூர்வமாகவே கொண்டு வரப்பட வேண்டியதாக இருந்தது. ஆனால் தன்னியல்பான செயற்பாடானது அதற்கு வழி வகுக்கவில்லை.

புலிகள் தமது அமைப்பிற்கு அங்கத்தவர்களை அணிதிரட்டுவதற்கான தெளிவான அரசியலை முன்வைக்க வில்லை. இதனால் வெறுமனே ஆயுத கவர்ச்சி, எதிரியின் தாக்குதல்களினால் ஏற்படும் இழப்புகள் தொடர்பான உணர்ச்சிக் கொந்தளிப்புகள் போன்றவற்றை நம்பியே தமது அணிதிரட்டல்களை மேற்கொண்டார்கள். இன்னும் பற்பல சந்தர்ப்பங்களில் தமக்கு அனுதாபிகளாக இருப்பவர்கள் பலரை, எதிரியின் இராணுவ நெருக்கடிக்குள் வேண்டுமென்றே தள்ளிவிட்டு, அவர்கள் வேறு வழியின்றி அமைப்புடன் இணைந்து கொள்வது போன்ற நிலைமைகள் அடிக்கடி உருவாக்கி வந்தார்கள். இப்படியாக

www.tamilarangam.net

பலவிதமான அரசியலற்ற வழிமுறைகளால் அமைப்பிற்குள் உள்வாங்கப்பட்டவர்களை அமைப்பினுள் தொடர்ந்தும் எவ்விதம் வைத்திருப்பது என்ற பிரச்சனை எழுகிறது. அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் பிணைத்திருப்பதற்கு அவசியமான பிரக்ஞைபூர்வமானதும், வெளிப்படையானதும், தெளிவானதுமான அரசியல் இல்லாத போது அதற்கு மாற்றான ஒன்றை உருவாக்க முனைந்தார்கள். அதுதான் தலைமை மீதான விசுவாசமாகும். ஒவ்வொரு அங்கத்தவர்களும் அமைப்பிற்கும் அதன் கொள்கைக்கும் விசுவாசமாக இருப்பது என்பதற்கு பதிலாக தலைவருக்கு, அத்துடன் அடுத்த மட்ட ஒருவருக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். இதிலுள்ள பிரச்சனை என்ன வென்றால். இந்த இரண்டாம் மட்ட தலைவர் ஏதோ ஒரு காரணத்திற்காக தலைவரால் துரோகியாக்கப்படும் பொழுது அவரது ‘விசுவாசிகள்’ பலரும் காரணமின்றி கொன்றொழிக்கப்பட்டது அடிக்கடி நடந்தேறியது. இந்த விதமான சிந்தனை முறைகள் ஓர குலமரபுச் சமூகத்திற்கு பொருத்தமானதேயன்றி, ஒரு நவீன தேசத்திற்கு சற்றும் பொருத்தமானதாக இருக்கவில்லை என்பதாகும்.

அமைப்பினுள் விரிவான அரசியல் கருத்துப் பரிமாற்றங்கள், விவாதங்கள் நடப்பது: இவற்றினூடாக கருத்தொற்றுமை அடையப்படுவது: அணிசேர்க்கைகள் தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் உருவாவது: இந்த அணிகளுக்கிடையிலான அரசியல் போராட்டங்களினூடாக அமைப்பின் அரசியல் முன்னெடுக்கப்படுவது: போன்ற பன்முக தன்மை அமைப்பினுள் அறவே இருக்கவில்லை. தமது அங்கத்தவர்களை ஒன்றிணைத்து வழிநடத்தும் அரசியல் இல்லாமையால், உயிரோட்டமான அகவாழ்விற்கான அமைப்புத்துறை சார்ந்த பொறிமுறைகள் இல்லாததனால், அமைப்பினுள் அங்கத்தவர்களுக் கிடையிலான அக உறவுகள் நெருக்கடிக்கு உள்ளானது. விசுவாசம் என்பது பெரிதும் அகநிலை சார்ந்த ஒன்றாகிறது. இதனை அளப்பதற்கு வெளிப்படையான அளவு கோலகள் எதுவும் கிடையாது. இதனால் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் எப்படியாக செயற்படுகிறார்கள் என்று கண்காணிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிறது. ஒவ்வொருவரும் தமது முதுகிற்கு பின்னே என்ன நடக்கிறது என்பதை அடிக்கடி திரும்பி பார்க்க வேண்டியேற்படுகிறது. போட்டுக் கொடுப்பது (தகடு கொடுப்பது) அமைப்பினுள் நியமாகிறது. தத்தமது உயர்ந்த பட்ச விசுவாசத்தை நிருபிப்பதற்காக போட்டியிட வேண்டியிருந்தது. இதிலேயே அமைப்பின் மிகப் பெரும்பான்மையான வளங்கள் விரயமாகின.

www.tamilarangam.net

ஆரம்பத்தில் எந்தவிதமான விழிப்புணர்வும் இன்றி அமைப்புடன் இணைந்து கொண்டவர்கள், அமைப்பினுள் சேர்ந்த சில காலத்திலேயே பல விதமான அரசியல் மற்றும் அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனைகளை எதிர் கொள்ளலானார்கள். இவற்றை தமது சொந்த புரிதலுக்கும், வெளிப்படுத்தும் திறனுக்கும் ஏற்ப கேள்விகளாக எழுப்பினார்கள். இவை யாவும் எந்தவொரு அமைப்பிலும் எழக்கூடிய சாதாரண அமைப்புத்துறை மற்றும் அரசியல் சார்ந்த பிரச்சனைகளே. ஏனெனில் ஒரு விடுதலை அமைப்பு என்று கூறப்படும் அமைப்பில் இணைந்து கொள்பவர்கள் கட்டாயமாக முகம் கொடுத்தாக வேண்டிய பிரச்சனைகள் இவை. இப்படிப்பட்ட கேள்விகளை எழுப்புபவர்களுடன் முறையாக பேசி பிரச்சனைகளுக்கு தீர்வு காணும், நிலைமைகளை தெளிவுபடுத்திக் கொள்ளும் திறமை தலைமையிடம் இருக்கவில்லை. இப்படிப்பட்டவர்கள் அமைப்பினுள் குழப்பம் விளைவிப்பவர்களாக அடையாளம் காணப்பட்டு ஒரம் கட்டப்பட்டார்கள்: சமயத்தில் அழித்தொழிக்கவும் பட்டார்கள்.

அமைப்பிலும், போராட்டத்திலும் உள்ள உண்மையான அக்கறை காரணமாக தமது ஆலோசனைகளை முன்வைத்தவர்கள் பகிரங்கமாகவே அவமானப்படுத்தப்பட்டார்கள்: அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். “நாயின் வேலையை நாய் பார்க்க வேண்டும், கழுதையின் வேலையை கழுதை பார்க்க வேண்டும்”, “பாரடா இவனுக்கு மரண பயம் வந்துவிட்டது” போன்ற வாசகங்கள் எவ்விதமான தயவு தாட்சண்யமும் இன்றி பிரயோகிக்கப்பட்டன. பிரபாகரன் அமைப்பை தனது தனிச்சொத்து போலவே பாவித்து, மக்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் பதில் சொல்லும் பொறுப்பு இருக்கிறது என்ற உணர்வு அறவே இன்றி தன் மனம் போன போக்கில் எல்லாம் முடிவுகளை எடுத்து செயற்படலானார்.

இப்படியாக அமைப்பில் உண்மையான அக்கறையும், போராட்டத்தின்பால் தீவிரமான ஈடுபாடும் கொண்ட அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும் தலைமையின் கண்ணோட்டத்திற்கு மாறான கருத்துக்களை கொண்டிருந்த ஒரே காரணத்திற்காக துரத்தியடிக்கப்பட்டார்கள், அழித்தொழிக்கப்பட்டார்கள். இதனால் அமைப்பினுள் இரண்டாம் கட்ட தலைமை என்ற ஒன்றே உருவாக முடியாமற் போனது. சுயமரியாதை, தன்மானம் எதுவும் இல்லாமல் தலைமைக்கு துதிபாடிக் கொண்டிருப்பவர்களுக்கு மாத்திரமே அமைப்பினுள் இடம் இருந்தது. தமிழ்ச்செல்வன் இந்த கொத்தடிமைத்தனத்தின் ஒரு சரியான வகைமாதிரியாக இருந்தார்.

www.tamilarangam.net

மிச்சமாக இருந்தவர்களில் பெரும்பாலனவர்கள் இந்த வகையராக்களே என்பதை அமைப்புடன் நெருக்கமான பரிச்சயமுள்ள எவரும் அறிவர். வேறு சிலரோ, இந்த நடைமுறைகளுடன் இணங்க முடியாமலும், ஆனால் புலிகளே ஒரே போராட்ட அமைப்பு என்ற வகையில் அதனை விட்டு வெளியேறுவது போராட்டத்தை துறந்தோடுவதாக பட்டதால் வேறு வழியின்றி அமைப்புடன் செயற்பட்டு வந்தார்கள். ஆனால் இவர்கள் தமது ஆன்மாவை கொன்றுவிட்டே ஏனோ தானோ என்று செயற்படலானார்கள். ஆனால் இத்தனைக்குப் பின்பும் தமது அமைப்பிற்காக பணியாற்ற நபர்கள் புதிதாக தேவைப்பட்டார்கள். இந்த இடத்தை நிரப்புவதற்கு வியாபாரிகளும், வஞ்சகப் புகழ்ச்சியாளர்களும், உளவாளிகளும் தயாராகவே இருந்தார்கள். இவர்கள் எந்தவிதமான தயக்கமும் இன்றி தலைமையை துதி பாடினார்கள்: முடிந்ததை சுருட்டிக் கொண்டார்கள்: முடிந்த போது அரசுக்காக உளவு பார்க்கவும் செய்தார்கள். இப்படியாக அமைப்பின் நிலைமைகள் சென்றதில் தலைமையின் பாத்திரம் என்ன? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

### தலைவர் பிரபாகரனது பற்றாக்குறைகள் (Limitations)

புலிகள் பிற்காலத்தில் மேற்கொண்ட நிலைப்பாடுகளான தனிப்பெரும் தலைவர், ஏகபிரதிநிதித்துவம் போன்ற நிலைப்பாடுகள் ஒன்றும் அந்த அமைப்பின் ஆரம்பகாலம் முதல் நிலவிவந்த நிலைப்பாடுகள் அல்ல. 'புதிய தமிழ்ப் புலிகள்' அமைப்பும், பின்பு அதிலிருந்து தோன்றிய 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அமைப்பிலும் கூட்டுத் தலைமை முறைமையே நடப்பில் இருந்து வந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் ஐந்து பேர் கொண்டு மத்தியகுழு தலைமை அங்கமாக இருந்தது. இதில் உமா மகேஸ்வரன் பொதுச் செயலாளராகவும், பிரபாகரன் படைத் தளபதியாகவும் இருந்தார்கள். ஆனால் இந்த அமைப்பு வடிவமானது அடிக்கடி தவறாக செயற்படுவதாக பிரபாகரன் கருதலானார். தான் சரியானது என உறுதியாக நம்பும் நிலைப்பாடுகளுக்கு எதிராகவே பெரும்பான்மை செயற்படுவதான உணர்வொன்று அடிக்கடி இவரிடம் எழுந்தது. அத்தோடு தான் களத்தில் உயிரை பணயம் வைத்து போராடி வெற்றிகளை அடையும் போது, இன்னொரு கூட்டமானது சும்மா இருந்து கொண்டு தன்னில் பிழை பிடிப்பது போன்றதொரு உணர்வும் ஏற்படலாயிற்று. இதனால் இந்த விரிவான, ஜனநாயகபூர்வமான தலைமை அமைப்புக்கள் பயனற்ற, காலத்தை விரயமாக்கம், செயலற்றவர்களின் கூடாரமாக இருப்பதாக அனுபவத்தில் அவர் உணர்ந்து கொண்டார். இப்படிப்பட்ட புரிதலைக் கடந்து முறையான கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்த

www.tamilarangam.net

செயற்பாடுகளின் அவசியத்தை வலியுறுத்தி, அது தொடர்பான புரிதலை முன்னேறிய பிரிவினர் மட்டத்திலாவது எட்டச் செய்வதற்கான வேலைகள் புலிகள் அமைப்பினுள்ளோ அல்லது சமூகத்தில் அமைப்பிற்கு வெளியிலோ நடைபெறவில்லை. முழுப் போராட்டமும் தன்னியல்பாக முன்னெடுக்கப்படுகையில் அரசியல் மற்றும் அமைப்புத்துறை சார்ந்த வேறுபாடுகளை கோட்பாட்டு வெளிச்சத்தில் தீர்வு காண்பதற்கு வழிமுறை எதுவுமே இருக்கவில்லை. அவரவர் தாம் சரியென நம்பும் நிலைப்பாடுகளை எப்படிப்பட்ட வழிமுறைகளிலாவது நிலைநாட்டிக் கொள்ள விழைந்தனர். முடியாத போது குறுக்கு வழிகள் கூட தவறானவையாக படவில்லை. தாயகத்தின் விடுதலை என்ற உயர்ந்த இலக்கானது எந்தவிதமான வழிமுறையையும் நியாயப்படுத்த போதுமானதாக இருந்தது. **இலக்கு – வழிமுறை பற்றிய ஒரு தத்துவ பிரச்சனை இருப்பதே இவர்களது சிந்தனை மட்டத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தது.**

பிரபாகரனது அரசியல் பலவீனம் காரணமாக அவர், தான் சரியென உறுதியாக நம்பும் கருத்துக்களை குழுக்களுக்குள் நிலைநாட்டுவதிலும், தோழர்களை அந்த கருத்தை நோக்கி வென்றெடுப்பதிலும் மிகுந்த கஷ்டங்களை எதிர் கொண்டார். பொதுவாக பலரும் இதனை பிரபாகரனது கல்வித் தகைமை சார்ந்த பிரச்சனையாக குறிப்பிடுவதுண்டு. ஆனால், இந்த பிரச்சனையை அப்படியாக அர்த்தப்படுத்தத் தேவையில்லை என்றே நினைக்கிறேன். ஒருவரது கல்வித் தகைமையையும் அவருக்கு ஆங்கிலம் நுணிநாக்கில் வருகிறதா என்பவற்றை வைத்து ஒருவரது அறிவுத் திறன் மற்றும் தலைமைப் பண்புகளையும் இணைத்து முடிச்சு போடுவது என்பது ஒரு வகையில் எமது சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் மேட்டுக்குடி மனோபாவத்தின் வெளிப்பாடாகும். நிறுவனமயப்படுத்தப்பட்ட பாடசாலை கல்வி முறைகளும், அவற்றின் பரீட்சை முடிவுகளும் உண்மையிலேயே ஒருவரது அறிவுத்திறனை வெளிப்படுத்துவதாக கல்வியாளர்கள் கூட வலியுறுத்துவது கிடையாது. உயர் கல்விகளை அதிகம் கற்காத பலரும் சிறந்த தலைவர்களாக இருந்துள்ளதை நாம் வரலாற்றில் கண்டுள்ளோம். அதே வேளை மெத்தப் படித்த மேதாவிகள் சாதாரண அரிச்சுவடி பாடங்களைக் கூட அரசியலில் கற்றுக் கொள்ளதவர்களாக நடந்து கொண்டுள்ளமையும் கண்கூடானவை. “படிக்காத மேதை” “படித்த முட்டாள்” போன்ற வாசகங்களில் உண்மைகள் இல்லாமலும் இல்லை. எந்தவொரு தொழில்முறை (Professional) செயற்பாட்டாளர்களும் மிகப் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் தமது பதின்ம வயதுகளிலேயே அந்த துறைகளில் பயிற்றப்படத் தொடங்குவதும், இவை அவ்வவ் துறைகளில் தன்னிகரில்லாத

திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுவதையும் நாம் அரசியல் மற்றும் புரட்சிகர பணிகளில் மாத்திரமன்றி, ஏனைய விளையாட்டு, தொழில்நுட்ப துறைகளிலும் கூட காண்கிறோம். ஒருவகையில் பார்த்தால் இப்படிப்பட்ட முக்கியமான ஏதோவொரு துறையில் தொழில்முறை தேர்ச்சி பெற்றவர்கள் (Professional) மற்றெல்லாத் துறைகளிலும் சராசரியை விட குறைந்த அறிவை பெற்றிருப்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் கண்டுள்ளோம்.

சராசரியை விட சற்று திறமையானவர்கள், தமது அனுபவம், அர்ப்பணிப்பு மற்றும் கூர்மையாக அவதானிக்கும், பொதுமைப்படுத்தி சிந்திக்கும் அறிவுத்திறம் போன்றவற்றால், படிப்படியாக பயிற்றப்பட்டு முறைசார் புத்திஜீவிகளை விட தரத்தில் மிகவும் உயர்ந்த தலைவர்களாக புடம் பெற்று வருவதை வரலாறு கண்டுள்ளது. இதனையே கிராம்சி 'உயிர்ப்பிணைப்புள்ள புத்திஜீவிகள்' (Organic Intelectuals) என்ற கருத்தாக்கத்தினால் குறிப்பிடுகிறார். ஆகவே கல்வித் தகைமை என்பது உண்மையிலேயே ஒரு பிரச்சனையாக பிரபாகரனுக்கு இருந்திருக்க முடியாது. அவர் ஒரு நல்ல இணைப்பாளராக (Facilitator), விவாதங்களை ஒழுங்கமைத்து வழிநடத்துபவராக செயற்பட்டு, அமைப்பினுள் ஆரோக்கியமான விவாதங்களை ஊக்குவித்து, அவற்றை கூர்ந்து அவதானிக்கவும், அடுத்தவர்கள் கூறுவதை நன்கு செவிமடுக்கும் தன்மை உடையவராக, தொடர்ச்சியாக தீவிரமான வாசிப்பை மேற்கொள்பவராக இருந்திருந்தாலேயே கணிசமான அளவு பிரச்சனைகளை கடந்திருக்க முடியும். தேவையான போது மொழி பெயர்ப்புக்களை பெற்றுக் கொள்வதும் கூட இப்படிப்பட ஒரு பெரிய அமைப்பின் தலைமைக்கு சாத்தியப்பட்டிருக்கக் கூடியதே. ஆதலால் கல்வித் தகைமை மற்றும் ஆங்கிலப் புலமையின்மை என்பவை ஒரு நல்ல தலைவரை, அவரது உண்மையான தலைமைத்துவம் வெளிப்படுத்துவதில் நின்றும் முற்றிலும் தடுத்துவிட முடியாது. ஆனால் அந்த சராசரியை விட சற்று அதிகமான திறமை என்பதை நாம் பிரபாகரனிடம் எதிர்பார்த்திருக்க முடியுமா என்பது கேள்விக்குறியதே. பிரபாகரனது வாயால் கூறப்பட்ட வாசகங்களான "குமுதம், கல்கி, பொன்னியின் செல்வன் போன்றவற்றை வாசித்து தனது அறிவை பெருக்கியது" மற்றும் "கினின்ட் ஈஸ்ட்வூட்" பற்றிய குறிப்புகள் இவரிடம் இந்த உள்ளார்ந்த பண்பு (Metal) இருந்ததா என்பதை கேள்விக்குள்ளாக்குகிறது. சிக்கலாக கருத்தாக்கங்களை பற்றிக் கொள்ளும் தன்மை இவரிடம் குறைந்த அளவிலேயே காணப்பட்டதாக கூற முடியும். அத்தோடு பிரச்சனைகளை இயல்பூக்க

www.tamilarangam.net

மட்டத்தை (Instinct Level) கடந்து பிரக்ஞை மட்டத்தில் (Conscious Level) பற்றிக் கொள்வது இவரிடம் காணப்படவில்லை. பிரச்சனைகளை அனுபவவாத மட்டத்தில் அனுகுவதும், தொட்டுணரத்தக்க, உடனடியான விளைவுகளை நோக்கிய தேடலும் அறிவை தேடுவதற்கு எதிரிகளாக அமைந்துவிடும். பிரச்சனையை அதன் பல பரிமாணங்களிலும் வைத்துப் பார்ப்பது, அதனுடன் தொடர்புடைய பல்வேறு உறவுகளையும் பற்றிக் கொள்வது, இவற்றில் பிரதான கண்ணியில் கவனத்தை குவிப்பது, நிகழ்வுகளை ஒரு வரலாற்றுப் போக்கில் வைத்துப் பார்ப்பது மற்றும் அது நீண்ட காலத்தில் எங்கு கொண்டு செல்கிறது என்பது தொடர்பான புரிதல்கள் போன்றவை எந்தவொரு தலைமைக்கும் இருக்கவேண்டிய அத்தியாவசியமான பண்புகளாகும். ஆனால் பிரபாகரனது புரிதல் மட்டமானது இந்தவிதமான விளக்கங்களை அடைவதை ஒருபோதும் அனுமதித்திருக்காது. இதிலிருந்தே பிரச்சனைகளை சரியான கருத்துத் தளத்தில் வைத்து தனது எதிர் தரப்பினரை வென்றெடுப்பது பற்றிய பிரச்சனை எழுகிறது. கூடவே இவரது சாதிய பின்னணி, மற்றும் கல்வித்தகைமை பற்றி யாழ் சமூகம் கொண்டிருந்த கண் மூடித்தனமான வழிபாடு போன்றவை இவரை அச்சுறுத்தியிருக்கக் கூடிய வாய்ப்புகள் மிகவும் அதிகமாக உள்ளது. கடந்த காலத்தில் படித்தவர்கள் என்று கூறப்பட்டவர்கள் செய்த முட்டாள் தனமான அரசியல் குறித்து கொண்டிருந்த பகைமையான உணர்வும் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றியிருக்க முடியும். அத்தோடு ஆரம்ப கால இயக்க அனுபவங்கள் இவரை அரசியல் பேசுபவர்கள் பற்றி நல்ல அபிப்பிராயத்தை கொண்டிருக்க வைக்கவில்லை.

இப்படிப்பட்ட காரணங்கள் பலவும் சேர்ந்து புத்திஜீவிகள் மற்றும் அரசியல் பற்றி அதிகம் பேசுபவர்கள் குறித்து ஒரு விதமான பகைமை உணர்வை அவரிடத்தில் ஏற்படுத்தியிருந்தது. அவர் தனக்கு தெரிந்த வகையில் பிரச்சனையை வெறுமனே கறுப்பு – வெள்ளையாக புரிந்து கொண்டார். பிரச்சனைகளை வெறுமனே இயல்பூக்க மட்டத்திலேயே (Instinct Level) புரிந்து கொண்டார். உடனடியாக தொடடுணரக் கூடிய விளைவுகளில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். விடயங்ளை ஒரு வரலாற்று போக்கில் வைத்து பார்ப்பது. ஒவ்வொரு சம்பவமும் நீண்ட காலத்தில் எங்கு நோக்கி இட்டுச் செல்லும் என்ற வரலாற்று இயங்குதிசை (historical trajectory) பற்றி கற்பனை செய்து கொள்ளும் திறமை, தரிசனம் (Imagination and Vision) போன்றவை அறவே அற்றவராக இருந்தார். இதனால் அரசியல் செயற்பாடுகள், அவற்றின் இயக்கதின் விளைவாக அடையப்படக் கூடிய நிலைகள் பற்றி அறவே விழிப்புணர்வற்றவராகவே இருந்தார். இன்னும் குறிப்பாக கூறுவதானால்,

வரலாற்று பிரக்ஞை அறவே அற்றவராக இருந்தார். இவற்றுடன் கூடவே மக்களது போராட்ட பலம் தொடர்பாக இருந்த தவறான பார்வை, மக்களுக்கு அடி விழுந்தால்தான் புத்தி வரும் என்ற குறுகிய சூத்திரம் எல்லாமாக சேரவே அரசியல்ரீதியாக ஒரு முட்டுச் சந்துக்குள் இவர்கள் போராட்டத்தின் ஆரம்பத்திலேயே முடங்கி விட்டார்கள். இதனால், ஒரு போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் உருவாகக் கூடிய பலவகையான சந்தர்ப்ப சூழ்நிலைகளின் 'வரலாற்று இணைவு' (Historical Conjunture) பற்றி இவர்களால் எண்ணிப் பார்க்கவே முடியாமற் போனது.

இதனால் எல்லாவிடயங்களையும் சந்தேகிப்பது, யாரையும் நம்பாமல் விடுவது போன்றவை இவரது அரசியல் வாழ்வை வழிநடத்தும் நெறிமுறைகள் ஆயின. அமைப்பிற்குள்ளும், வெளியிலும் யாரையும் நம்பாமல் தனக்கென தனியான உளவுப்பிரிவு, மெய்பபாதுகாவலர்கள், தனது கருத்துக்களுக்கு மறு வார்த்தை பேசாத தோழர்கள், துதிபாடும் ஒரு கூட்டம் என ஒரு பொய்யான உலகத்தினுள் சஞ்சரிக்கும் நிலைமை உருவானது. சற்றும் கூச்சப்படாமல் புகழ்பாட ஒரு கூட்டம் தயாராகவே இருந்தது. மன்னன், சூரியதேவன், மேதகு, முருகனுக்கு நிகரானவன் என்றெல்லாம் கூட்டமாக கோசம் போடவே, அந்த கோசத்தில் யதார்த்தம் இவர்களை விட்டு வேகமாக விலகிச் சென்று கொண்டிருந்தது. அமைப்பு மற்றும் போராட்டம் தொடர்பான அனைத்து விடயங்களையும் தானே, நேரடியாக கட்டுப்படுத்தலாம் என நினைத்தார். மத்தியகுழு அமைப்தற்காக அமைப்பினுள் நடைபெற்ற போராட்டம் மிகவும் நீண்டது. இந்த ஒரு விடயத்திற்காக அமைப்பினுள் போராடி வெளியேறியவர்களின் எண்ணிக்கையே கணக்கில் அடங்காது. எல்லாவற்றையும் தானே கட்டுப்படுத்த வேண்டும் என்று பிரபாகரன் விரும்பினாலும், நடைமுறையில் ஒரு தேசத்தின் விடுதலை இயக்கத்துடன் தொடர்பு பட்ட அத்தனை விடயங்களையும் ஒருவரே கண்காணிப்பது, கட்டுப்படுத்துவது என்பது ஒரு போதும் சாத்தியமற்றதாகவே இருந்தது. இதனால், தனக்கு நம்பிக்கையான தனிநபர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து அவர்களை மேற்பார்வை செய்வதைத் தவிர இவருக்கு வேறு வழி இருக்கவில்லை. இது அடிப்படையில் ஒரு குலமரபுக் குழுவிற்கான வேலைமுறையே அன்றி ஒரு விடுதலை அமைப்பின் நடைமுறைகள் அல்ல. அந்த நபர்களும தம்பங்கிற்கு இன்னும் சில நம்பிக்கையானவர்களை பொறுப்பாக நியமித்து தமக்கு மாத்திரமே பதில் சொல்லும் பொறுப்புடன் செயற்பட அனுமதித்தார்கள். இப்படியாக செயற்பட்ட ஒவ்வொருவருமே ஒரு குறுநில மன்னர்கள் போலவே செயற்பட்டார்கள். சக போராளிகள், தோழர்கள் யாருடைய கண்காணிப்பிற்கும், கேள்விகளுக்கும் அப்பாற் பட்டவர்களாக செயற்பட்ட இவர்களால் அமைப்பினுள்

www.tamilarangam.net

அதிகாரத்துவமும், ஊழலும் பெருகத் தொடங்கியது. இந்த நபர்கள் உளவுப்பிரிவுகள் மூலமாகவும், விசுவாசிகளின் ஊடாகவும் தலைவரால் கண்காணிக்கப்படவே, மீண்டும் தகடு கொடுப்பதும், சந்தேகிப்பதும், இந்த தகவல்கள் அடிப்படையாக தண்டிக்கப்படுவதும் என்று ஒருவித காட்டாட்சியே அமைப்பு என்ற பெயரில் இடம் பெற்றது. ஒரு கட்டத்தில் அமைப்பில் உள்ள முக்கிய அங்கத்தவர்கள் உளவியல் படிக்க ஆர்வப்பட்டார்கள். உளவியல் படித்தால் அடுத்தவர் என்ன சிந்திக்கிறார் என்பதை கண்டறிய முடியும் என்ற விளக்கத்தை வேறு முன்வைத்தார்கள். இது அமைப்பினுள் அதன் ஆத்மா முற்றாக அழிந்தவிட்டதன் வெளிப்பாடு தவிர வேறல்ல.

ஒரு விடயத்தை தெளிவு படுத்திக் கொள்வது முக்கியமானது. மனிதரது ஆற்றல்கள் என்பவை எப்போதும் எல்லைக் குட்பட்டதாகவே இருக்கின்றன. ஆனால் இயற்கையும், சமூகமும் எண்ணற்ற விந்தைகளை தம்முள் அடக்கி வைத்துள்ளன. இதனால் தான் மனிதர் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு கிரகத்தை, ஒரு புதிய உயிரினத்தை கண்டு பிடித்துக் கொண்டே இருக்கின்றனர். தனி மனிதர்கள், அவர்கள் எவ்வளவுதான் திறமைசாலிகளாக இருந்தாலும் இந்த எல்லையற்ற அண்டங்களின், சமூகங்களின் இரகசியங்களை, அவற்றின் இயங்குவிதிகளை புரிந்து கொள்வது முழுமையாக சாத்தியப்படப் போவதில்லை. சமூகத்திலும், விடுதலைப் போராட்டத்திலும் நிலைமை கிட்டத்தட்ட இதேதான். நாம் செய்யக் கூடிய தெல்லாம், எம்மிடம் உள்ள அத்தனை வளங்களையும் திரட்டி ஒன்று குவிப்பதன் மூலமாக இந்த போராட்டம் நாள் தோறும் எம்மை நோக்கி எழுப்பும் சவால்களை சமாளிப்பதற்காக ஓயாது போராடுவது மட்டும்தான். நிலைமைகள் இப்படியாக இருக்க, ஒரு தனி மனிதரது தலைமை என்பதும், அவர் அனைத்து விடயங்களையும் கண்காணிப்பது, கட்டுப்படுத்துவது என்பதும் சாத்தியமாகக் கூடியவை அல்ல. நாம் பல மட்டங்களில் தலைமை அங்கங்களை, மக்களது பிரதிநிதித்துவங்களை முறையாக உருவாக்கி அவற்றின் மூலமாக கூட்டாக முடிவெடுத்து, பரஸ்பரம் கண்காணிப்புடன் செயற்பட்டால் இந்த பணிகளை ஓரளவு செய்து முடிக்க முடிந்திருக்கும். அதனைவிட முக்கியமானது என்னவென்றால், போரட்ட இயக்க தலைமை என்பது எமது தனிப்பட்ட விவகாரம் அல்ல. இது ஒரு தேசத்தின் தலைவிதி சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள கடமையாகும். இதனால் நாம் யாரை பிரதிநிதித்துவப் படுத்துகிறோமோ, அந்த மக்களுக்கும், எம்மால் தலைமை தாங்கப்படும் அங்கத்தவர்களுக்கும் பதில் சொல்லும் பொறுப்பு தலைமைக்கு இருக்கிறது. வெளிப்படையான தன்மை, பதில் சொல்லும் பொறுப்பு என்பவை கடைப்பிடிக்கப்படாத பட்சத்தில் இந்த தலைமை என்பது எதேச்சாதிகாரம் மிக்கதாக

ஆகிவிடுகிறது. தனிமனிதரின், அவரின் விசுவாசிகள், அவர்களது விசுவாசிகள் என்ற வலைப்பின்னல் ஒரு ஊழல் படிந்த அதிகார கட்டமைப்பினையே தோற்றுவிக்கக் கூடியது. அதிகாரம் என்பது எப்போதும் ஊழல் படுத்திவிடக் கூடியதாகும். அதிலும் வரம்பற்ற அதிகாரம் என்பது கட்டற்ற ஊழலில் விளைநிலமாகும். Power corrupts, Absolute powe absolutely corrupts, என்ற வாசகம் முற்றிலும் சரியானதே. குழுக்களை அமைக்க மறுத்து தனது கைகளில் அதிகாரங்களை குவிக்க முனைந்தவர், இறுதியில் சமூகத்தின் எந்த இயக்கத்தையும் கட்டுப்படுத்தும் தன்மையை இழந்தார். அமைப்பின் பல அங்கங்கள் பற்றி, சமூகத்தின் பல பிரச்சனைகள் பற்றி தலைவர் ஏதும் அறியாதவராகவே இறுதிக்காலத்தில் இருந்ததாக புலிகளது அங்கத்தவர்கள் சிலர் கூறும் தகவல்களில் உண்மை இருப்பதற்கான வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன.

இத்தனை விடயங்களையும் கண்காணிப்பது, புரிந்து கொள்வது, கட்டுப்படுத்துவது ஒரு சாதாரண தனிமனிதரது சக்திக்க அப்பாற்பட்டது என்ற பிரச்சனை வரும் போதுதான், அதிமானுடனது தேவை இங்கே எழுகிறது. தலைவரை கடவுளாக சித்தரித்த வஞ்சகப் புகழ்ச்சியாளர்கள் என்ன நோக்கத்தில் அதனை செய்தார்களோ, ஆனால் அப்படிப் பட்ட ஒரு உருவகத்தை தெரிந்து கொண்டே அனுமதிப்பதற்கான தேவை தலைமைக்கு இங்கே தான் எழுகிறது. இப்படிப்பட்ட புகழுரைகள் பிரபாகரனது அரசியல் வங்குரோத்தை மறைக்க பயன் பட்டதாலேயே அவை ஊக்குவிக்கபட்பட்டன.

சமூக அமைப்பில் இருந்து அதில் காணப்படும் சமூக உறவுகளில் இருந்து சமூக இயக்கங்களை, அவற்றின் தலைமைகளை புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் புறப்பட்ட நாங்கள், மீண்டும் தனிநபர் பற்றியும் அவரது புரிதல் பற்றியும் பேசத் தொடங்குகிறோம். சமூக இயக்கங்களும் அவற்றின் தலைமையும் சமூதாயத்தின் படைப்புக்களே என்ற வகையில், குறிப்பிட்ட சமூக கட்டமைப்புக்கள் குறிப்பான விதத்தில் அமைந்த சமூக இயக்கங்களையும், அவற்றின் தலைமைகளையும் தோற்றுவிக்கின்றன. ஒருக்கால் குறிப்பான சமூக நிலைமைகள் தனிநபரை தலைமையாக கொண்ட, ஏகபிரதிநிதித்துவத்தை வலியுறுத்தும் தலைமையையும் உருவாக்கிய பின்னர், அப்படிப்பட்ட ஒரு அமைப்பு, தலைமை உருவாவதை சமூகமானது அங்கிகரித்த பின்னர், இந்த தனிநபரானவர் குறிப்பிட்ட காலத்திற்கு அந்த சமூகத்தை வழி நடத்துவதில் தீர்க்கமான பாத்திரம் வகிப்பது தவிர்க்க முடியாததாகிறது. இந்த வகையில் நாம் பிரபாகரன் என்ற தனிநபர் குறித்தும், அவரது புரிதல் குறித்தும் விரிவாக பேசுவது

www.tamilarangam.net

தவிர்க்க முடியாததாகிறது. வரலாற்றில் பல்வேறு தனிநபர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தன்னிச்சைப்படியாக செயற்பட முனைகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் இவர்கள் அனைவரும் மக்களது ஆதரவைப் பெறுவதிலும், குறிப்பிட்ட காலம் சமூக இயக்கத்தை வழி நடத்துவதிலும் வெற்றி பெற்றுவிடுவதில்லை. எப்போது சமூக சிந்தனை மட்டத்துடன் ஒத்ததாக இந்த நடவடிக்கைகள் அமைகின்றனவோ, அப்போது மட்டுமே இவை குறிப்பிடத்தக்க ஆதரவை, ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பெற்றுக் கொள்ள, தக்க வைக்க முடிகிறது. ஆனால் வரலாறானது இப்படிப்பட்ட பிற்போக்கான தலைமைகள் தொடர்பாக தனது தீர்ப்பை ஈவிரக்கமற்று எழுதித்தான் செல்கிறது. சமூக வளர்ச்சிக்கு தடையாக நிற்கும் தனிநபர்களையும், அமைப்புக்களையும் துடைத்தெறிகிறது. எம்மைப் பொறுத்தவரையில் 25 வருடங்கள் என்பது ஒரு தலைமுறை, ஆனால் வரலாற்றிற்கோ இது ஒரு கணப்பொழுது மட்டுமே. ஆதலால் வரலாறு என்று பேசும் போது நாம் ஒரு நீண்ட கால கண்னோட்டத்துடனேடே பேசுகிறோம் என்பதையும் கவனத்திற் கொள்வது அவசியமானது. அந்த வகையில் வரலாறிற்கும், தனிநபர்களுக்கம் இடையிலான பாத்திரம் பற்றி நாம் இன்னமும் அதிகமாக, இந்த கட்டுரைக்கு அப்பாலும் பேசித்தான் ஆக வேண்டியுள்ளது. அதனை இன்னோர் சமயத்திற்காக இப்போதைக்கு ஒத்தி வைப்போம்.

## மாற்று அமைப்புகளின் தடையும் புலிகளது ஏக பிரதிநிதித்துவமும்

சமூகம் என்பது பல்வேறு சமூக சக்திகளின் சேர்க்கையால் உருவாவதாகும். பால், வர்க்கம், சாதி, பிரதேசம், மதம்... என்று பல்வேறு சமூக கூறுகளால் உருவான சமூகத்தில், அந்தந்த கூறுகளது நலன்களும் வேறு பட்டனவாகவே இருக்கின்றன. ஒவ்வொரு சமூக சக்திகளும் விளிப்புணர்வு கொள்ளும் போது தத்தமது நலன்களின் அடிப்படையிலேயே தம்மை ஒழுங்கமைத்து, போராட முற்படுகின்றன. இதனைவிட குறிப்பிட்ட சமூக சக்திகளுக்குள் அடங்கும் தனிநபர்களும் தத்தமக்கென குறிப்பான சிந்தனைகளை உடையவர்கள். இதனால் பன்முக தன்மை என்பது எந்தவொரு சமூகத்திலும் மிகவும் இயல்பான ஒரு தன்மையாகும். நாம் செய்யக் கூடியதெல்லாம், இந்த தனிநபர்களும், சமூக சக்திகளும் தத்தமது சிந்தனைகளை, நோக்கங்களை, அரசியலை வெளிப்படையாக முன்வைப்பதும், அந்த அரசியலின் அடிப்படையில் விவாதங்கள், கருத்துப்பரிமாற்றங்களை நிகழ்த்துவதும், விட்டுக் கொடுப்புகள், சமரசங்கள் செய்வதன் மூலமாக இணக்கங்கள் காண்பதும், அல்லது எங்கெங்கே வேறுபடுகிறோம்

www.tamilarangam.net

என்பதை குறித்துக் கொள்வதுமேயாகும். இந்த இணக்கங்களின் அடிப்படையில் இணைந்து கொள்வதும், அல்லது வேறுபாடுகளின் அடிப்படையில் வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டு இணைந்து செய்றபடுவதுமேயாகும். இதனால் எந்தவொரு அரசியலிலும் சமரசம், விட்டுக் கொடுப்பது, கருத்தொற்றுமை காண்பது, கூட்டு செயற்பாடு என்பது தவிர்க்க முடியாததாகிறது. இந்த பன்முக தன்மை மறுக்கப்படும் போது ஒரு போராட்டத்தின் உயிரோட்டம் சிதைந்துவிடுகிறது. அந்த இயக்கமானது 'மெல்லச் சாகும்' நிலைமை உருவாகிறது.

அரசியல் வறுமை, மற்றும் தனது குறிப்பான சமூக பின்னணி மற்றும் ஏனைய "குறைபாடுகள்" காரணமாக தான் அமைப்பினுள் மாத்திரமன்றி, சமூக அளவிலும் ஓரங்கட்டப்படுவதற்கான வாய்ப்புகளை கண்ட பிரபாகரன், மாற்று அமைப்புக்களை தடை செய்வதன் மூலமாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காண முயன்றார். இது உடனடியான அண்மைக் காலத்தில் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது போல பட்டாலும், நீண்ட காலத்தில் மிக மோசமான எதிர்மறை விளைவுகளையே தோற்றுவித்தது. புலிகள் தனது **'நட்பு சக்திகளை அணிதிரட்டி, எதிரியை தனிமைப்படுத்துவது'** என்பதற்கு பதிலாக, **தன்னை தனிமைப்படுத்தி, தனது எதிரிகளை பெருக்கி, அவர்களை அணிதிரட்டும் பணியையும் தாங்களே செய்து முடித்தார்கள்**. விடுதலைப் போராட்டத்தை உளமாற நேசித்த, பல்வேறு அர்ப்பணிப்புகளுக்கும் தயாராக இருந்த பல சக்திகள் இந்திய அரசையும், சிறீலங்கா அரசையும் நோக்கி தமது உயிர் பாதுகாப்புக்காகவே நகரும் படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். 1983 ஜுலை கலவரத்திற்கு பின்பு, மிகவும் தனிமைப்படுத்தப் பட்டிருந்த சிறீலங்கா அரசானது, தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை மீண்டும் வென்றெடுக்க வழிவகுத்துக் கொடுத்ததில் புலிகளின் இந்த செயற்பாடு முதன்மையானது.

ஒரு விடுதலை அமைப்பானது ஒரு விரிவான அரசியல் முன்னெடுப்பின் மூலமாக அனைத்து அமைப்புக்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்கு முயன்றிருக்க வேண்டும். அதற்கு தடையான சக்திகளை படிப்படியாக தனிமைப்படுத்தியிருக்கலாம். இந்த முயற்சிகளில் இந்திய அரசு தலையீடு செய்யவும், குழப்பியடிக்கவும் நிறையவே சாத்தியக் கூறுகள் இருந்தது உண்மையே என்ற போதிலும், விடாப்பிடியாக ஒரு சரியான அரசியல் முன்னெடுப்பை மேற்கொள்வதன் மூலமாகவே இதனை முறியடிக்க முயன்றிருக்க வேண்டும். முறையான அரசியல் முன்னெடுப்புகள், விரிவான விவாதங்கள் மூலமாக தலைமைகளை வென்றெடுக்க, முடியாத போது அப்படிப்பட்ட தலைமைகளை

www.tamilarangam.net

அங்கத்தவர்கள் மத்தியில் இருந்தும், மக்களிடம் இருந்தும் தனிமைப்படுத்தவும் முயன்றிருக்க வேண்டும். இதில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் நிறையவே இருந்தன. ஆனால் மாற்று அமைப்புக்களை தடை செய்யும் செயற்பாடானது, குறுகிய காலத்தில் புலிகளுக்கு பலம் சேர்ப்பது போல தென்பட்டாலும், இறுதியில் தேசத்திற்கு பெரும் சேதம் விளைவித்து, இறுதியில் அவர்களது அழிவிற்கும் முக்கிய பங்காற்றி முடித்தது என்பதுதான் உண்மையானது. ஊரிலுள்ள ஆலைகளை மூடுவதால் மாத்திரம் இழுப்பம் பூ சர்க்கரையாகிவிட முடியாது என்பதை நிரூபித்துள்ளார்கள். மாற்று இயக்கங்களை தடை செய்வது என்பது தமிழ் மக்கள் மத்தியில் இருந்த தேசிய எழுச்சியை முற்றாக ஒடுக்கிவிட்டது. தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமன்றி, உலகெங்கும் உள்ள முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளது ஆதரவை எமது போராட்டம் இழப்பதற்கு வழி வகுத்தது. தமிழ் மக்கள் மத்தியில் தேசிய உணர்வு மங்குவது என்பது மீண்டும் புலிகளையும் பாதிக்கவே செய்தது.

இதனைவிட முக்கியமானது இந்த ஏக பிரதிநிதி பற்றிய கோரிக்கையின் தார்மீக தன்மை பற்றிய பிரச்சனையாகும். நாம் ஒரு தாராண்மை ஜனநாயக காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இங்கே பிரதிநிதித்துவம் என்பது தேர்தல்கள் மூலமாகவே நிர்ணயம் செய்யப்படுகின்றன. ஒரு கட்சி ஆட்சி முறையை கொண்ட நாடுகளை ஆதரிப்பதில் முற்போக்கு, ஜனநாயக சக்திகளே சிரமங்களை எதிர் கொள்ளும் பொழுது, ஒரு விடுதலை இயக்கம், அதுவும் மாற்று இயக்கங்களை வன்முறை மூலமாக ஒடுக்குவதன் மூலமாக, சக போராளிகளை கொன்றொழிப்பதன் மூலமாக தனது ஏக பிரதிநிதித்துவத்தை நிலைநாட்ட முனைவதும், அதனை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளும் என்று எதிர் பார்ப்பதும் சர்வதேச அரசியலின் அரிச்சுவடி கூட தெரியாதவரது எதிர்பார்ப்பாகவே இருக்க முடியும். புலிகளது ஏக பிரதிநிதித்துவ நிலைப்பாடானது ஒரு பாசிச வெளிப்பாடாகவே புரிந்து கொள்ளப்பட்டது. இதனால், எமது போராட்டத்திற்கு சாதாரணமாக தார்மீகரீதியா கிடைக்கக் கூடிய ஆதரவுகள் கூட கிடைக்காமற் போயின. எமது போராட்டத்தை சர்வதேசரீதியாக தனிமைப் படுத்துவதற்கான சிறீலங்கா அரசின் முயற்சிகளுக்கு உரம் சேர்ப்பதாகவே இந்த செயற்பாடு அமைந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பானது இந்த ஏக பிரதிநிதித்துவ நிலைப்பாட்டை வென்றெடுப்பதற்காக என்ன விலையை கொடுக்கவும் தயாராக இருந்தது. பல்வேறு சந்தர்ப்பங்களில் புலிகள் அரசியல்ரீதியாக

www.tamilarangam.net

பலத்த நெருக்குதல்களுக்கு உள்ளான போது, தமது ஏக பிரதிநிதித்துவ நிலைப்பாட்டை காப்பாற்றிக் கொள்வதற்காக அரசியல்ரீதியான விட்டுக் கொடுப்புகளை செய்யத் தயாராகவே இருந்தது. உதாரணமாக, இந்திய - இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக புலிகளை சம்மதிக்கச் செய்வதற்காக இந்திய அரசின் மூலமாக புலிகள் கடுமையான நிர்ப்பந்தத்திற்கு உள்ளான போது, அந்த நிர்ப்பந்தங்களை மக்களுக்கு அம்பலப்படுத்துவதிலும் பார்க்க, இந்திய அரசு விடுதலைப் புலிகள் அமைப்பை தமிழ் மக்களது ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளதாக அறிக்கை விடுத்தார்கள். இப்படியாக பல்வேறு சந்தர்ப்பங்களிலும் விடுதலைப் புலிகள் தமது இந்த ஏக பிரதிநிதித்துவ நிலைப்பாட்டை காப்பாற்றுவதற்காக எந்த விலையையும் கொடுக்க தயாராகவே இருந்தார்கள்.

**முஸ்லிம் மக்களும் புலிகளும்**

முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் ஒரே தாயகத்தைக் கொண்ட இரண்டு வேறுபட்ட தேசங்களாகும். ஈழத் தமிழர், தமது தாயகத்தில் வாழும் இன்னொரு தேசத்துடனான உறவு என்ற வகையில், மிகவும் பொறுப்பாகவும், சமத்துவ அடிப்படையிலும் இந்த பிரச்சனையை அணுகியிருக்க வேண்டும். தமிழரது மரபார்ந்த தலைமையானது முஸ்லிம் மக்கள் பற்றிய தப்பெண்ணங்களில் ஊடாகவே தமது அரசியலை கடந்த காலத்தில் முன்னெடுத்திருந்தது. தமது சந்தர்ப்பவாத அரசியலில் முஸ்லிம் தலைமைகளுடன் முரண்பட நேர்ந்த போது முஸ்லிம் விரோத கருத்துக்களை பரப்புவதன் மூலமாக தமது பக்க தவறுகளை மறைத்துக் கொண்டார்கள். ஆயுத போராட்டத்தை முன்னெடுத்த பெரும்பாலான இயக்கங்களும் தமிழ் தேசிய இயக்கத்தில் ஓங்கியிருந்த முஸ்லிம் விரோத கருத்துக்களை கேள்விக்கு உள்ளாக்கி அவற்றை முறியடிக்க முயலவில்லை. இதனால் இது அந்த அமைப்புகளின் செயற்பாடுகளில், அங்கத்தவர்களது அன்றாட கருத்துக்களில் சர்வ சாதரணமாக வெளிப்படலாயிற்று. தன்னியல்பான நடவடிக்கைகள் மீண்டும் மீண்டும் ஆதிக்க சித்தாந்தங்களின் செல்வாக்கின் கீழ் செயற்படவே வழிவகுத்தது.

முஸ்லிம் மக்கள் தொடர்பாக ஒரு திட்டவட்டமான அரசியல் நிலைப்பாட்டை மேற்கொண்டு, அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் அவர்களுடனான உறவுகளை வரையறுத்துக் கொள்ள எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஒரு புறத்தில் தமிழ் தேசியவாதமானது, முஸ்லிம்களை தமிழ் பேசும் மக்கள் என்று வரையறுப்பதன் மூலமாக அவர்களை தமிழ் தேசத்தின் ஒரு கூறாக

www.tamilarangam.net

வரையறுக்க முனைந்தார்கள். இன்னோர் புறத்தில் முஸ்லிம் மக்களது அரசியல் பிரதிநிதிகள், முஸ்லிம் மக்களை தனியான ஒரு தேசமாக அடையாளப்படுத்த முனைந்தார்கள். புலிகள் முஸ்லிம்களை தமிழ் தேசத்தின் ஒரு கூறு போலக்கருதி அனுக முற்பாட்டார்கள். தமது அணிதிரட்டலை இவர்கள் மத்தியிலும் மேற்கொண்டார்கள். வரிகளை இவர்களுக்கும் விதித்தார்கள். புலிகளது அணிகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் முஸ்லிம் இளைஞர்களும் இணைந்து கொண்டிருந்தார்கள்.

முஸ்லிம்கள் புலிகளுடன் முரண்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம், அவர்களை கூட்டாக தண்டித்தார்கள். காத்தான்குடி, ஓட்டமாவடி பள்ளிவாசல் படுகொலைகள் இதற்கு ஒரு உதாரணமாக அமைந்தன. பின்னர் ஒரு கட்டத்தில் வட மாகாணத்திலுள்ள அத்தனை முஸ்லிம்களையும் குறுகிய கால இடைவெளியில் உடுத்த உடைகளுடன் வெளியேற்றினார்கள். இந்த நடவடிக்கைகளுக்கு எந்தவிதமான அரசியல் விளக்கங்களும் அளிக்கப்படவில்லை. தமிழர் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பாக இருந்த தப்பெண்ணங்களை இதற்கு பயன்படுத்திக் கொண்டார்கள். இன்னும் கூறுவதானால், இந்த தப்பெண்ணங்களின் ஊடாகத்தான் புலிகளும் முஸ்லிம் மக்களை அணுகினார்கள். பிரக்ஞைபூர்வமான அரசியல் இல்லாதபோது, பொதுப்புத்தி மட்டத்திலான அரசியலே ஓங்கி நிற்கும். இந்த பொதுப்புத்தி அரசியலானது, சமூகத்தில் நிலவும் தப்பெண்ணங்களை ஒரு போதும் கேள்விக்குள்ளாக்காது, அதனை அப்படியே ஏற்றுக் கொண்டே செயற்படும். ஆனால் இப்படியான செயற்பாடுகள் ஊடாக புலிகளும் மறைமுகமாக இன்னொரு விடயத்தை ஒத்துக் கொண்டார்கள். அதாவது முஸ்லிம் மக்கள் தமிழ் தேசத்தின் ஒரு கூறல்ல என்பதை அவர்களும் ஒத்துக் கொண்டார்கள்.

புலிகளால் முஸ்லிம்கள் தொடர்பாக இழைக்கப்பட்ட இந்த தவறுகள் சாதரணமானவை அல்ல. இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு என்பவை போர்க்கால குற்றங்களாக கருதப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டிக்கப்படக் கூடியவையாகும். இவ்வளவும் நடந்து, சர்வதேச அளவில் இவர்களது நடவடிக்கைகளுக்கு கண்டணங்கள் எழுந்த போதும் கூட புலிகளால் தமது குற்றங்களில் பாரதூரமான தன்மை புரிந்து கொள்ளப்படவில்லை. முடிந்தபோதெல்லாம் அந்த குற்றங்களை தாம் செய்யவில்லை என்று சாதிக்க முனைந்தார்கள். 2000 ம் ஆண்டில் கிளிநொச்சியில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டபோது, “முஸ்லிம் மக்களது பாதுகாப்பு கருதியே அவ்வாறு செய்யப்பட்டதாக” பதில்

www.tamilarangam.net

அளிக்கப்பட்டது. முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடத்திற்கு திரும்ப அனுமதிக்கப்படுவார்களா? என்று கேள்விக்கு, பதிலளித்த பிரபாகரன், முஸ்லிம்கள் முன்பு குடியிருந்த பிரதேசங்களில், உயர்பாதுகாப்பு வலயங்களில் இருந்து இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் குடியிருப்பதாகவும், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சனைகள் தீர்வு காணப்படும் போது. அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பலாம், என்றும் பதிலளித்தார்.

மொத்தத்தில் புலிகள் முஸ்லிம் மக்களுக்கு இழைத்த பாறிய குற்றங்கள் தொடர்பாக உண்மையான வருத்தத்தை தெரிவிக்காதது மாத்திரமன்றி, தமது தவறுகளுக்கு பரிகாரம் தேடும் அக்கறையும் அறவே அற்றவர்கள் என்பதை மீண்டும் நிரூபித்ததார்கள். ஒடுக்கப்படும் ஒரு தேசம் என்ற வகையில் சர்வதேசரீதியாக ஆதரவு தேட விளையும் ஒரு தேசமானது, இன்னொரு தேசத்தை இப்படியாக ஒடுக்க முனைந்தால், அதற்கு மேல் அந்த தேசமானது சர்வதேச அரங்கில் தனக்கு கிடைக்கக் கூடிய தார்மீக ஆதரவு அனைத்தையும் இழந்துவிடும் என்பதை இவர்கள் அறவே புரிந்து கொள்ளவில்லை.

**சிங்கள் மக்கள் தொடர்பாக**

வலதுசாரி மேட்டுக்குடிகளினால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் தேசியமானது, அதன் ஆரம்ப காலம் முதலாகவே, ஒரு விரிவான ஜனநாயக இயக்கத்தின் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. தொடர்ச்சியாக மக்களை கல்வியூட்டல், மக்களது ஜனநாயக உணர்வுகளை உயர்த்துதல், இதன் மூலமாக சிங்கள இனவாதத்திற்கு எதிராக ஒரு விரிவான ஜனநாயகபூர்வமான தமிழ் தேசியவாதத்தை கட்டமைத்தல் போன்ற பண்புகள் இந்த மரபார்ந்த தமிழ் தலைமையிடம் இருக்கவில்லை. மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் ஜனநாயக இயக்கங்கள் என்பதற்கு மாறாக, தேர்தல் காலங்களில் இந்த பிரச்சனைகளை முன்வைத்து மக்களது கீழான உணர்ச்சிகளை தூண்டிவிட்டு வாக்குகளை அள்ளிச் செல்வதே இவர்களது செயல்முறையாக இருந்தது. இதனால் தமிழ் தேசியவாதமானது, சிங்கள இனவாதத்திற்கு குறைவில்லாத பிற்போக்கான, ஏனைய சக தேசங்களை வெறுக்கும் பண்புகளை ஆரம்பம் முதலே தனக்குள் கொண்டிருந்த தமிழ் இனவாதமாகவே இருந்தது. சிங்கள வெறுப்பானது பகிரங்கமாகவே வெளிப்படுத்தப்பட்டது. சிங்கள அரசுகளுடன் சுமூகமாக நட்புறவுடன் பேசி தமக்கு தேவையான சலுகைகளை பெற்றுக் கொள்ளும் இதே தலைமைகள், தேர்தல் மேடைகளில் சிங்கள வெறுப்பை கக்கினர். சிங்களவர் — எதிர் — தமிழர் என்ற மிகையாக

www.tamilarangam.net

எளிமைப்படுத்தப்பட்ட சூத்திரங்களே தேசியவாதத்தின் முக்கியமான சொல்லாடல்களாக விளங்கின.

தேசிய பிரச்சனை என்பது அடிப்படையில் தேசங்களுக்கு இடையிலா முரண்பாடு என்ற போதிலும், ஒடுக்கும் தேசத்தினுள் உள்ள முரண்பாடுகளை நாம் ஒருபோதும் மறந்துவிட முடியாது. சிங்கள தேசத்தின் ஆதிக்க சக்திகளிடமிருந்தும், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறீலங்கா அரசிடம் இருந்தும், சாதாரண சிங்கள மக்களையும், அவர்கள் மத்தியில் உள்ள முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளையும் தனிமைப்படுத்த முனைவது தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களது முக்கிய மூலோபாய பிரச்சனையாக இருக்கிறது. ஆனால் இந்தவிதமான விழிப்புணர்வு எதுவும் இன்றி சிங்கள மக்களை இலக்காக கொண்டு நடத்தப்பட்ட தாக்குதல்கள் சிங்கள் தேசம் தனது அக முரண்பாடுகளைக் கடந்த ஒன்றுபட வழி சமைத்தது.

அவ்வாறே, சிறீலங்கா இராணுவ வீரர்கள் தொடர்பாக கடைப்பிடித்த வழிமுறைகளும் மிகவும் மோசமானவையாக இருந்தன. ஒவ்வொரு போர்வீரனையும் கொன்றொழிப்பது எமது இலக்காக இருக்க முடியாது அல்லவா? எதிரியின் போரிடும் ஆற்றலை சிதைப்பதுதானே எமது நோக்கம்? அப்படியானால் சரணடைபவர்களது உயிர்களுக்கு உத்தரவாதம் இருக்குமானால் ஒவ்வொரு போர் வீரனும் கட்டாயம் போரிட்டு மடிந்தாக வேண்டும் என்று கடைசிவரையில் போரிட மாட்டானே! சரணடைந்தவர்களை, காயமடைந்தவர்களை கௌரவத்துடன் நடத்தி திருப்பி அனுப்புவது உளவியல்ரீதியாக போரிடுபவரது மனவலிமையை கடுமையாக பாதித்திருக்கும். யுத்தம் என்பது எதிரியின் போர் வீரர்கள் அனைவரையும் அழித்தொழிக்கும் ஒரு நடவடிக்கை அல்ல. அழித்தொழிப்பு யுத்தம் என்பது மிகவும் விதிவிலக்கான சூழல்களில், ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் மாத்திரமே நடைபெறுவதாகும். மாறாக, யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பது அர்த்தமற்றது என்பதை எதிரி உணரும்படி செய்வதே யுத்தத்தின் நோக்கமாகும். அதனை நோக்கி எதிரியின் யுத்த இயந்திரத்தை, அதன் போர் வீரர்களை பௌதீகரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் நிர்ப்பந்திப்பதே யுத்தத்தின் நோக்கமாகும். ஆனால் அந்த வகையான சிந்தனை எதுவும் அற்ற ஒரு கொலைகார கலாச்சாரமே புலிகளிடம் வெளிப்பட்டது. இந்தியப் படைகளின் வெளியேற்றத்தைத் தொடர்ந்த நடந்த மோதல்களில் கிழக்கில் சரணடைந்த 600 இற்கும் மேற்பட்ட பொலிசார் கொல்லப்பட்டார்கள். ஆனையிறவு, முல்லைத்தீவு போன்ற பல முகாம்களின் வீழ்ச்சிகளின்

www.tamilarangam.net

போது எந்த போர் வீரனும் கைதாக, சரணடைய, காயமடைந்து பிடிபட இல்லை என்று சாதிப்பது அசட்டுத்தனமானதாகும். கடைசியாக இதே வழிமுறைகளை எதிரி எமது மக்களுக்கும், விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கும் எதிராக பிரயோகித்த போது நாம் இது தொடர்பாக போட்ட கூச்சல்களை யாருமே பொருட்படுத்தவில்லை.

சரணடைந்த, கைது செய்யப்பட்ட போர்வீரர்களை. போராளிகளை கொல்வது, காயமடைந்தவர்களுக்கு உரிய பராமரிப்புகளை வழங்காமல் விடுவது போன்றவை கடுமையான போர்க் குற்றங்களாகும். போர்க்கைதிகளை நடத்துவதற்கென்றே ஜெனிவா யுத்த விதிகள் இருக்கின்றன. ஆனால் இவற்றை மீறுவதை நாமே தொடக்கி வைத்துவிட்டு, இப்போது முறையிடுவதில் ஏதாவது அர்த்தம் இருக்க முடியுமா? ஒவ்வொரு விடயத்திலும் நாம் முன்மாதிரியாக நடந்து கொண்டால் மாத்திரமே, அதே மாதிரியான செயற்பாடுகளை எதிரியிடமும் வலியுறுத்தலாம்: அது நடைபெறாத போது முறையீடு செய்யலாம். இவையெதுவும் நாம் எதிரிக்கு காட்டும் சலுகைகள் அல்ல: மாறாக நாம் அப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு உள்ளாகும் போது அப்போது எம்மை பாதுகாத்துக் கொள்ளவதற்றாக நாம் இப்போதே ஏற்படுத்திக் கொள்ளும் பாதுகாப்பு வலைகள் (Safty Nets)இவை. இந்த விதிகளை மீறும் செயற்பாட்டை தொடக்கி வைப்பவர்களாக நாமே இருந்துவிட்டால், அது எமக்கு எதிராக திரும்பும் போது எமக்கு அவசியமான பாதுகாப்பு பொறிமுறைகள் எதுவுமே இல்லாமல் போய்விடும். விடுதலைப் புலிகள் ஒரு போதுமே, தாம் இப்படிப்பட்ட நிலைமையை அடைய நேரிடலாம் (அதாவது தாம் எப்போதாவது Receiving End இல் இருக்க நேரும்) என்று கடைசி சந்தர்ப்பம் வரையில் நினைத்தும் பார்த்திருக்கவும் இல்லை. அதற்கான முன் தயாரிப்புக்கள் என்று எதனையுமே செய்திருக்கவும் இல்லை. Plan B என்ற ஒன்றே இல்லாமல் ஒரு யுத்தத்தை நடத்திய பெரிய விடுதலை அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு மாத்திரமே இருந்திருக்க முடியும். அதுதான் அவர்கள் வரலாற்றில் எங்கும் காணக்கிடைக்காத, சடுதியானதும் முற்று முழுதானதுமான தோல்வியை தழுவ நேர்ந்துது.

**இந்தியா தொடர்பாக**

இந்திய அரசு தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பானது ஆரம்பத்தில் மிகவும் அவதானத்துடனேயே நடந்து கொண்டார்கள். 1983 ம் ஆண்டில் எல்லா இயக்கங்களும் போட்டி போட்டுக் கொண்டு இந்திய அரசிடம் இராணுவ பயிற்சி பெற சென்ற போது விடுதலைப் புலிகள் மாத்திரம் இந்த விடயத்தில் அவசரப்படாமல் இருந்தார்கள். பெரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐந்து இயக்கங்களுக்குள் மிகவும் கடைசியாக பயிற்சிக்கு அங்கத்தவர்களை அனுப்பிய இயக்கம் விடுதலைப் புலிகள் அமைப்பேயாகும். பயிற்சியின் போதும் தமது அங்கத்தவர்கள் இந்திய உளவுப் பிரிவின் செல்வாக்கிற்கு உள்ளாகிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். இந்தியாவிலுள்ள பல்வேறு ஒடுக்கப்பட்ட தேசங்கள் மற்றும் புரட்சிகர, ஜனநாய, முற்போக்கு சக்திகளுடன் நட்பு பூனுவதற்குப் பதிலாக தமிழகத்திலுள்ள பிற்போக்குத்தனமான தமிழ் தேசியவாதிகளே இவர்களது நட்பு சக்திகளாக திகழ்ந்தார்கள். இவர்கள் எம். ஜீ. ஆர் உடன் கொண்டிருந்த நெருக்கமும், கருணாநிதியை நிராகரித்ததும், தமிழகத்திலிருந்த உண்மையான ஆதரவாளர்களை அதிருப்தியுறவே செய்தது. அதிலும் சக இயக்கங்களை தடை செய்யத் தொடங்கியதும் இந்த செல்வாக்கு இன்னும் சரியத் தொடங்கியது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து நடந்த இந்தியப்படைகளுடனான யுத்தம் கூட இவர்கள் தொடர்பான தமிழக மக்களது ஆதரவை அதிகம் பாதிக்கவில்லை. 1990 இல் இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து வெளியேறி, சென்னைத் துறைமுகத்தை அடைந்த போது அவர்களை வரவேற்க அன்றைய தமிழக முதலமைச்சர் செல்லாது புறக்கணிக்கும் அளவிற்கு இந்த ஆதரவு உறுதியானதாக இருந்தது. ஆனால் ராஜிவ் காந்தியின் கொலையானது இந்த நிலைமையை தலைகீழாக மாற்றியமைத்துவிட்டது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதில் புலிகள் காட்டிய தயக்கம், அதனை அடுத்து இந்திய படைகளுடன் ஏற்பட்ட மோதல்கள், இதில் பிரேமதாசவுடன் ஏற்பட்ட கூட்டு வரையில் எல்லாம் சரிதான். ஆனால், ராஜிவ் காந்தியை இந்திய மண்ணில் வைத்து கொல்லும் அவசியம் என்ன ஏற்பட்டது? இதில் என்ன அரசியல் இருக்கிறது? ராஜிவ் காந்தியை கொல்வது தமிழீழ போராட்டத்தின் வெற்றிக்கு மிகவும் அத்தியாவசியமானது என்று அரசியல்ரீதியாக முடிவெடுக்கப்பட்டதா? அல்லது, ராஜிவ் காந்தி ஒப்பந்தம் இடுவதற்காக புலிகளை நிர்ப்பந்தம் செய்த போது தலைவர் பிரபாகரனை நடத்திய விதம் தொடர்பாக எழுந்த கோபத்தின் வெளிப்பாடா? அல்லது, புலிகளின் தலைவரை இந்தியப் படைகள் கொல்வதற்கு பல தடவைகள் முயற்சி செய்து வெற்றி பெறவில்லை. அதற்கு பதிலாக செய்யப்பட்ட பழிவாங்கலா? இப்படி செய்வது எப்படிப்பட்ட எதிர்விளைவுகளை உருவாக்கும் என்று இவர்கள் எப்போவாது கணிப்பிட்டு பார்த்தார்களா? இந்த விதமான மதிப்பீடுகள் எதுவுமின்றி, பழிக்குப்பழி என்றரீதியில் நடத்தப்பட்டது என்றால், இது என்ன குலமரபு குழுவுக்குரிய யுத்தமா? அல்லது தேசியவாதமா?

www.tamilarangam.net

ராஜிவ் கொலையானது இந்திய மக்களது உணர்வுகளை முற்றாக மாற்றியமைத்துவிட்டது. இந்த கொலை நடந்திருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்திய அரசும், ஆளும் வர்க்கங்களும் தமிழரது தேசிய விடுதலைக்கு எதிராகவே செயற்பட்டிருப்பார்கள் என்பது உண்மைதான். ஆனால் இப்படிப்பட்டதொரு சம்பவம் நடந்திருக்காத நிலையில் இந்திய மக்களை, அதிலும் தமிழ் நாட்டு மக்களை இந்திய அரசானது ஒரு போதும் தனிமைப்படுத்த, அமைதிப்படுத்த முடிந்திருக்காது. இதனை ஒரு வேறு நாட்டு உதாரணத்துடன் ஒப்பிட்டு பார்ப்போம். கியூபாவின் புரட்சியை அடுத்து அமெரிக்க அரசானது பல்வேறு நெருக்கடிகளை கியூபாவின் மீது எடுத்து அடாத்தாக நடந்து கொண்டுள்ளது. கியூப எதிர்ப்பு கெரில்லாக்களுக்கு பயிற்சியளித்து கொண்டு போய் கியூபாவின் கரையில் இறக்கியது முதலாக, கியூபாவின் தலைவர் பிடல் கஸ்ரோவை கொலை செய்ய சுமார் 600 தடவைகள் வரையில் முயன்றும் இருக்கிறது. இதுவொன்றும் இரகசியமானதல்ல. ஆனால் இதற்கு பதிலடி கொடுப்பதாக கருதிக் கொண்டு கியூப உளவுத்துறை அதிகாரிகள் ஒரு அமெரிக்க அதிபரையாவது கொலை செய்ய முனைந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று நினைத்துப் பார்ப்போம். கியூபா எப்போதோ சுடுகாடாகியிருக்கும். சேகுவேரா, பிடல் கஸ்ரோ போன்ற உலகப் புகழ் பெற்ற புரட்சியாளர்கள் கூட நினைத்துப் பாராத விடயங்களை செய்துவிட்டு, மறுப்பறிக்கை விடுவதால் மாத்திரம் பிரச்சனை தீர்ந்துவிடுமா?

சரி பிரச்சனைகள் கைமீறிப் போன பின்பாவது, நிலைமைகளின் பாரதூரமான தன்மையை புரிந்து கொண்டு அதனை ஈடு செய்ய முனையாமல், "துன்பியல் நிகழ்வு" என்று கூறுவதன் அர்த்தம் என்ன? துன்பியல் நிகழ்வு என்று கூறுவதற்கு இது என்ன இயற்கை அனர்த்தமா அல்லது எதிர்பாரமல் நடந்தேறிய விபத்தா? இது ஒரு அரசியல் படுகொலை. ஒரு அமைப்பானது சில குறிப்பிட்ட அரசியல் காரணங்களுக்காக முடிவெடுத்து, திட்டமிட்ட முறையில் பல நாட்கள் உளவு பார்த்து, ஒத்திகை பார்த்து, கனகச்சிதமாக செய்து முடிக்கபட்பட்ட ஒரு அரசியல் படுகொலை. அதனை செய்ததற்கான நியாயங்கள் இருக்கும் என்று அப்போதும் கருதியிருந்தால் அவற்றை முன்வைக்க வேண்டும். மாறாக, தவறு நேர்ந்துவிட்டது என்று கருதினால் அதற்காக வருத்தத்தை தெரிவித்து, அந்த இழப்பிற்கு உரிய ஈட்டை செய்ய முற்பட்டிருக்க வேண்டும். தேவைப்பட்டால் தேசத்தின் நலன்களைக் கருதி தலைமை தன்னை இந்திய சட்டத்தின் முன் நிறுத்தவும் தயாராக இருந்திருக்க வேண்டும். மாறாக, விதன்டாவாதம் செய்வதன் மூலமாக நிலைமைகளை சீர் செய்துவிட முடியாது.

www.tamilarangam.net

இத்தனைக்கும் இடையில், இலங்கை அரசுடனான தமது பேச்சுவார்த்தைகளை இந்தியாவில் நடத்த விரும்புவதாக புலிகள் அறிவித்தமை எதைக் காட்டுகிறது. மன்னிப்போம் மறப்போம் என்று கூறக் கூடிய சாதாரண தவறா அது? தமது சொந்த நாடுகளில் கெடுபிடி நிலைமைகள் மோசமடையும் பொழுது, போராளிகள் அண்டை நாடுகளை தமது பின்தளமாக பாவிப்பது என்பது எல்லா போராட்டங்களிலும்தான் நடந்துள்ளது. அப்படியாக செயற்பட்ட காலங்களில் எல்லாம் தம்மை வரவேற்று தஞ்சம் அளித்திருக்கும் நாட்டில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது தொடர்பாக விரிவான வரையறைகளை வைத்தே இந்த அமைப்புகள் செயற்பட்டுள்ளன. அந்தந்த நாட்டின் சட்ட ஒழுங்குகளை மீறாமை: உள்ளூர் அரசியல் விடயங்களில் தலையீடு செய்யாமை: தமது செயற்பாடுகளை கண்டபடி விளம்பரப்படுத்தி அநாவசியமான ராஜதந்திர நெருக்கடிகளை அந்த நாட்டிற்கு ஏற்படுத்தாமை: போன்றவை இவற்றில் முக்கியமானவையாகும். இவற்றை இந்தியாவில் தங்கியிருந்த எந்தவொரு அமைப்பும் அதிகம் மதித்து நடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் புலிகள் இந்த கொலையின் மூலமாக இந்த எல்லைகளை எல்லாம் கடந்து எங்கோ சென்றுவிட்டார்கள்.

இந்த கொலையினால் எமது தேசம் கொடுக்க நேர்ந்த விலை மிகவும் அதிகமானது. தமிழகமும், இந்தியாவிலுள்ள ஏனைய ஒடுக்கப்பட்ட தேசங்களும், மற்றும் முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளும் எமது போராட்டத்தின் உறுதியான நட்பு சக்திகள் ஆவர். இவர்களை இந்திய அரசிற்கு சாதகமாக திருப்பிய, அல்லது தமது ஆதரவை வெளிப்படையாக காட்ட முடியாதபடி அவர்களை தற்காப்பு நிலைக்கு தள்ளி விட்டது மாபெரும் அரசியல் தவறும், படு முட்டாள் தனமாக செயற்பாடும் ஆகும். இந்தியா என்ற நாடு என்பது நாம் விரும்பினாலும் இல்லாவிட்டாலும் எமது கரையில் இருந்து வெறுமனே 20 மைல் தொலைவில்தான் இருக்கிறது. இப்போதைக்கு அதன் அரசியல் அமைப்பில் குறிப்பிடத்தக்க புரட்சிகர மாற்றங்கள் எதுவும் நிகழும் சாத்தியக்கூற்றை யாரும் காணவில்லை. அப்படி கூறுவதன் மூலமாக நாம் இந்திய அரசு தனது நலன்களுக்கு ஏற்ற விதத்தில் எமது போராட்டத்தை கையாள்வதை அப்படியே சகித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. மாறாக, இதனை நாம் செயலூக்கமான முறையிலும், புத்தி சாதூரியத்துடனும் முகம் கொடுத்தாக வேண்டும். நாம் மிகவும் குறிப்பான, மிகவும் திட்டவட்டமான அரசியல் நிலைப்பாடுகளை, அணிசேர்க்கைகளை மேற்கொள்வதன் மூலமாக, இந்திய அரசு தனது மனம் போன போக்கில் செயற்படுவதற்கு இருக்கும் செயற்பரப்பை குறுக்க வேண்டும். நாம் எடுக்கும்

www.tamilarangam.net

நிலைப்பாட்டை ஆதரிப்பது தவிர வேறு தெரிவுகள் இல்லை என்ற நிலைமையை இந்திய அரசுக்கு ஏற்படுத்த வேண்டும். அதற்கு தேவை மிகவும் ஆழமான புரிதலும், அரசியல் ரீதியில் மிகவும் கடினமான உழைப்புமேயாகும். பழிக்குப்பழி, இரத்தத்திற்கு இரத்தம், துன்பியல் நிகழ்வு போன்ற எண்ணங்களும், சொல்லாடல்களும் அறவே பயன்படப் போவதில்லை.

பிற்காலத்தில் இவர்கள் தமது ஆதரவாளர்களாக ஆக்கிக் கொண்ட நெடுமாறன், வை. கோ, திருமாவளவன், ராமதாஸ் போன்றவர்களது அரசியல் தகுதி கேள்விக்குரியதாகும். தமது நாட்டில், தமக்கென ஒரு சொந்த அரசியல் நிலைப்பாட்டை மேற்கொண்டு, தமது அரசியல் அடித்தளங்களை உருவாக்கிக் கொள்ள முடியாதவர்கள், ஈழத்தமிழர் பிரச்சனையை தமக்கான தனியான அரசியல் பிரச்சனையாக வரித்துக் கொள்ளும் போது, தமிழகத்தில் உண்மையிலேயே கணிசமான மக்களை எமது பிரச்சனைகளை நோக்கி திருப்புவது சாத்தியப்பட மாட்டாது. இவர்கள் முதலில் தமிழ் நாட்டின் அரசியல் செயற்பாட்டாளர்கள். அதன் பின்புதான ஈழ ஆதரவாளர்கள். மாறாக முதலில் ஈழ ஆதரவாளர்கள், பின்புதான் அரசியல் செயற்பாட்டாளர்கள், என்ற ரீதியில் செயற்பட்டால், இவர்களால் தமிழக மக்கள் மத்தியில் காத்திரமான அரசியல் செல்வாக்கு எதனையும் பெற்றுக் கொள்ள முடியாமற் போய்விடும். இதனால் இந்த தலைவர்கள் தம்மை வளர்ப்பதற்கு புலிகளது வளங்களை பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால் எமது போராட்டத்திற்கான ஆதரவுத்தளம் இவர்களது செயற்பாடுகளால் அதிகம் வளர்ந்துவிடவில்லை. இன்று இந்த அரசியல் வாதிகளை மிகுந்த நம்பிக்கையுடன் பார்க்கும் பலருக்கு இவர்களது கடந்த காலம் பற்றிய பின்னணிகள் பற்றி அதிகம் தெரிந்திருக்க நியாயமில்லை. 1983 இல் இதே நெடுமாறன் காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரிவில் அதிகம் செல்வாக்கு பெறாத பல இரண்டாம், மூன்றாம் மட்டத் தலைவர்களுள் ஒருவராக இருந்தார். அப்போது ஜூலைக் கலவரத்தை அடுத்து தான் ஈழத்திற்கு படையெடுத்துப் போய் போராட்டத்தில் ஈடுபடுவதாக கூறிக் கொண்டு பாதயாத்திரையாக சென்னையில் இருந்து புறப்பட்டு இராமேஸ்வரம் நோக்கி சென்றவர். செல்லும் பாதை எங்கும் எழுச்சி கூட்டங்களை ஏற்பாடு செய்து பெருந் தொகையானவர்களை அணிதிரட்ட முயன்றார். அது அதிகம் பயனளிக்காமல் போனது. அத்துடன் இவரிடன் இலங்கைக்கு செல்வதற்கான எந்தவிதமான தயாரிப்பு நடவடிக்கைகளுமே இருக்கவும் இல்லை. இதனால் இராமேஸ்வரம் கடற்கரையை சென்றடைந்தால் இந்த குட்டு அம்பலப்பட்டுவிடும் என்ற கவலை இவரை பற்றிக் கொண்டது. காவல் துறையினர் தன்னை விரைவில் கைது செய்யலாம் என்ற எதிர்பார்ப்பும்

www.tamilarangam.net

நிறைவேறாமல் போனது. தமிழகத்தில் ஆட்சியில் - எதிர்க்கட்சியில் அப்போது இருந்த அரசியல்வாதிகளும் இவரது அரசியல் சாகசவாதத்திற்கு (Political Stunt) ஒரு முடிவு ஏற்படுவதை விரும்பியது போலப் பட்டது. இதனால் நெருமாறன் தனது போராட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பி வருமாறு கலைஞர் உட்பட இந்த தலைவர்கள் மூலமாக அறிக்கை விடுக்க எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. கடைசியாக அமிர்தலிங்கத்தையும் கெஞ்சிப் பார்த்தார். அதுவும் சரிவராமல் போகவே, இராமேஸ்வரம் கடற்கரையை போய்ச்சேர்ந்தார். அங்கிருந்த காவல் துறையினர், கடற்கரையில் சில ஓட்டைப் படகுகளை விட ஏனைய பாவனைக்கு உகந்த படகுகளையெல்லாம் ஏற்கனவே அப்புறப் படுத்தியிருந்தார்கள். இதனால் வேறு வழியின்றி நெடுமாறனும் அவரது நெருங்கிய ஆதரவாளர்கள் சிலரும் இந்த ஓட்டை படகுகளில் ஏறி பயணம் செய்ய முற்பட்டார்கள். இந்த படகுகள் சில யார்கள் நகரும் முன்பே மூழ்க ஆரம்பித்தன. அப்போது தண்ணீரில் தத்தளித்த நெடுமாறனை காவல் துறையினர் காப்பாற்றிக் கரை சேர்த்தனர். அடுத்த நாள் நெடுமாறன் காவல்துறையினரின் கைதினால் தனது போராட்ட முயற்சி தடுக்கப்பட்டதாக அறிக்கை விட்டார். ஆனால் அதற்கு மறுப்பாக காவல் துறையினர் விடுத்த அறிக்கையில், தாம் நெடுமாறனை கைது செய்யவில்லை என்றும், கடலில் தத்தளித்த அவரை காப்பாற்றி பாதுகாப்பாக கரை சேர்த்ததற்கு மேலா எதனையுமே செய்ய வில்லை என்றார்கள். இதன் பின்பு நீண்டகாலம் ஒருவித அஞ்ஞானவாசம் மேற்கொண்டு பின்பு தான் அவரது அடுத்த தமிழீழ ஆதரவு அவதாரம் தொடங்கியது.

இதனை இவ்வளவு விரிவாக பேசுவது அவசியமா என்ற கேள்வி எழலாம். மிகவும் மோசமான நபர்கள் எப்படியெல்லாம் எமது விடுதலைப் போராட்டத்தை பயன் படுத்தி தம்மை வாழவைத்துக் கொள்கிறார்கள் என்ற விடயம் மிகவும் முக்கியமானதாகிறது. இவர்கள் தமிழீழ ஆதரவாளர்கள் என்ற எல்லையை கடந்து, எமது போராட்டத்தின் தீர்க்கமான கட்டங்களில் இந்த விடயங்களில் பேசுவதற்கு அதிகாரம் பெற்றவர்கள் போல பேச முனையும் போது இந்த கவனிப்பு மிகவும் அவசியமானதாகிறது. அண்மைக் காலத்தில் பிரபாகரனது மரணம் தொடர்பான செய்திகளை மறுப்பதற்கும், பிரபாகரனால் நியமதிக்கப்பட்டிருந்த கே.பி யை துரோகி என்று பட்டம் கட்டவும் முனையும் போது இவர்கள் ஈழ ஆதரவாளர்கள் என்ற தமது வரையறையைத் தாண்டி, ஈழப் போராட்ட இயக்கத் தலைவர்கள் போல செயற்படத் தொடங்குகிறார்கள். அத்தோடு இவர்கள் போராட்டத்தின் பாலுள்ள கரிசனை என்பதைக் காட்டிலும் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனது விசுவாசிகளாக செயற்படுவதே நடைபெறுகிறது.

www.tamilarangam.net

எந்தவிதமான விமர்சனங்களும் இன்றி புலிகளையும், அதன் தலைவரையும் ஆதரிப்பது, வரம்பு கடந்து போலியான புகழுரைகளை செய்வது, மிகைப்படுத்தப்பட்ட பொய்யான புனைவுகளை வெளிப்படுத்துவது, பகுத்தறிவிற்கு பொருந்தாத வெறும் உணர்ச்சிமயமான உரைகளை ஆற்றுவது போன்ற நடவடிக்கைகள், தமிழர்பால் உண்மையான அக்கறை உடையவர்களை விலகிப் போகச் செய்துவிட்டது. தமிழர் போராட்டத்தின் நம்பகத் தன்மையை கேள்விக்குள்ளாக்கிவிட்ட இவர்கள், இதுவரையில் செய்த காரியம் போராட்டத்தை பலப்படுத்தியதா அல்லது பலவீனப்படுத்தியதா என்பதை நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டியுள்ளது. இந்த இடத்தில் இவர்கள் பற்றிய மதிப்பீடுகள் செய்வதும், அவர்களது பாத்திரங்கள் குறித்து மீள் வரையறை செய்து கொள்வதும் மிகவும் அத்தியாவசியமாகிறது.

**வளங்களை விரயமாக்கியமை**

முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவடையும் நிலையில் எமது போராட்டத்தை பார்த்த எவருக்கும் எமது தேசமானது எந்த விதமான வளங்களும் அற்ற ஒரு சமூகம் போல தென்பட்டிருந்தால் அது ஆச்சரியப்படுவதற்குரியது அல்ல. ஏனெனில் போராட்டத்தின் பெரும் பகுதி அப்படித்தான் நடந்தேறியது. இதனால் எமது தேசத்தின் உள்ளாற்றல் பற்றி நாமே ஒரு தடவை மீள் பரிசீலனை செய்வது அவசியமானதாகிறது.

புலிகள் தமது பலமான நிலையில் இருந்த போது சுமார் 15,000 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பையும், இலங்கையின் கடற்பரப்பின் அரைவாசிக்கும் அதிகமானதையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். தமது கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமன்றி இலங்கையின் தெற்கு பகுதிக்கு இடம் பெயர்ந்திருந்தவர்களும், புலம் பெயர் தமிழரும் இந்த போராட்டத்திற்கு ஆதரவாகவே இருந்தனர். மிகப் பெருமளவிலான இயற்கை வளங்களும், கடின உழைப்பிற்கு தயங்காத மனித வளமும் எமது தேசத்திடம் இருந்தது. பெருந்தொகையான கல்வி கற்றவர்கள், பல்வேறு துறையில் பாண்டித்தியம் பெற்றிருந்த நிபுணர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள், செயற்பாட்டாளர்கள் என கணிசமாக அறிவுசார்ந்த, செயலூக்கமுள்ள வளம் எம்மிடம் இருந்தது. இரண்டு பல்கலைக் கழகங்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தன. பலர் தொழில் முனைவோர்கள், புதியனவற்றை கண்டுபிடிக்க ஆர்வம் கொண்டு தம்மை எரித்துக் கொண்டவர்கள் என எந்த வகையிலும் எம்மிடம் குறை இருக்கவில்லை. இத்தனை வழங்களை தன்னுள் கொண்டுள்ள ஒரு தேசம் எதனை சாதித்திருக்க

www.tamilarangam.net

முடியாது? ஆனால் எமது தேசம் என்ன நிலையில் யுத்தத்தின் கடைசி நிலைமையில் இருந்தது?

புலிகளிடம் இருந்த ஆயுதங்களை ஏந்துவதற்கே போதிய போராளிகள் இருக்கவில்லை. அடிக்கடி வன்னிக்கு உணவை அனுப்பும் படி புலிகள் பினாமி ஊர்வலங்களை வன்னியில் நடத்திக் கொண்டிருந்தார்கள். வன்னியின் உணவு உற்பத்தி தெற்கிலிருந்து வரும் பசளைகள், கிருமி – களை நாசினிகள் மற்றும் மண்ணெண்ணையை நம்பியே இருந்தது. தமிழர் தாயகத்தில் புலிகளது விசுவாசிகள் தவிர்ந்த சாதாரண குடிமக்கள் அரசியல் பேசவே பயப்பட்டார்கள். புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் கூட 'பொங்கு தமிழ்' இற்கு மேல் செல்லக் கூடிய அரசியல் நடவடிக்கைகள் என்று எதுவுமே இருக்கவில்லை. வெறுமனே பணத்தை வழங்கும் இயந்திரமாக இவர்கள் மாற்றப்பட்டிருந்தார்கள். இங்கு தமிழர்கள் கைவசம் இருந்த அத்தனை ஊடகங்களும் புலிகளின் புகழ் பாடுவது என்பதற்கு மேலாக எந்த உருப்படியான காரியத்தையும் செய்யவில்லை. சர்வதேசரீதியில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவும், அரசுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவும் ஒரு ஆற்றல் மிக்க தூதுக்குழு இருக்கவில்லை. இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் போராடிக் கொண்டிருந்தார்கள்: ஆனால் மேற்கு நாட்டு அரசுப் பிரதிநிதிகளிடம் முறையான பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய பிரதிநிதிகள் இருக்கவேயில்லை. கண்டவர்கள் எல்லாம் தீடீரென தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற பெயரில் விடுதலைப் புலிகளது அங்கிகாரமும் இன்றிக் கூட போய் இவர்களை சந்தித்து ஏதேதோ பேசிக் கொண்டார்கள். ஐ.நா. வின் பிரதிநிதிகளை இரண்டு கனடிய தமிழ் பத்திரிகையாளர்கள் போய் சந்தித்தார்கள். அவருடன் என்ன பேசுவது என்றே இவர்களுக்கு தெரியவில்லை. இதுதான் தமிழரது தலைவிதியாக இருந்திருக்க வேண்டுமா?

தமிழர் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் என்ற பெயரில் ஒரு அமைப்பை நிறுவி, அது தொடர்பாக பெரியளவில் விளம்பரங்கள் 1980 இன் பின் அரைப்பாதியிலேயே மேற்கொள்ளப்பட்டன. வல்லை வெளியில் சவுக்கு மரங்களை நட்டு, அதனை 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து விஜயம் செய்திருந்த ஊடகவியலாலருக்கு காட்டி, தாம் நீண்ட கால கண்ணோட்டத்துடன் பொருளாதாரரீதியாக திட்டமிடலை கொண்டிருப்பதாக விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். அந்த காலத்தில் பல கண்காட்சிகளும் நடத்தப்பட்டன. இவற்றைக் கடந்து பார்த்தால் தேசத்தின் பொருளாதார வளங்களைக் கருத்திற் கெடுத்து அவற்றை ஒரு சுயசார்பு, தன்னிறைவான

www.tamilarangam.net

பொருளாதாரமாக மாற்றியமைக்கும் திட்டம் எதுவுமே இந்த அமைப்பிடம் அறவே இருக்கவில்லை. இருந்ததெல்லாம் அக்கிரமமாக வரிவிதிக்கும் புகழேந்தி தலைமையிலான ஒரு குழு மட்டுமேயாகும். தேசத்தின் பொருளாதாரத்தை உயிரோட்டத்துடன் இயங்குவதை உத்தரவாதப்படுத்தி, அதில் பெறப்படும் ஒப்பீட்டளவில் சிறிய வரியின் மூலமாக பெருமளவில் வருமானத்தை பெற்றுக் கொள்வது என்பதிலும் பார்க்க, இவர்களது கடுமையான வரிகள் சாதாரண பொருளாதார நடவடிக்கைகளைக் கூட சாத்தியமற்றதாக ஆக்கிவிட்டிருந்தன. விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் மற்றும் ஏனைய கைத்தொழில் முயற்சிகள் போன்ற அனைத்துமே சிறீலங்கா அரசின் வரிக்கு மேலாக இன்னும் ஒரு தடவை கடுமையான வரியை செலுத்த நிர்ப்பந்திக்கப் பட்டன. அத்துடன் கூடவே எங்கெல்லாம் சற்று வருமானம் ஈட்டக் கூடியதாக நிலைமைகள் இருந்தனவோ, அங்கெல்லாம் விளை பொருட்களின் மொத்த கொள்வனவு உரிமையையும் புலிகள் தாமே எடுத்துக் கொண்டார்கள். இதனால் பல்வேறு விவசாய, மீன்பிடி, வர்த்தக, மற்றும் கைத்தொழில் முயற்சிகள் அதில் ஈடுபடுபவர்களுக்கு எந்த இலாபத்தையும் கொடுக்க முடியாதனவாகின: அதாவது பொருளாதார ரீதியில் இலாபமற்றனவாக ஆகியிருந்தன. இதனால் பல தொழில்கள் செய்யப்படாமலேயே போயின. பயிரிடப்படாத நிலங்கள், கைவிடப்பட்ட தொழில் முயற்சிகள், அரச தடைகளையும் மீறி மீன் பிடிக்கச் செல்வதில் எந்த அர்த்தத்தையும் காணாத மீனவர்கள் பலர், இப்படியாக உழைக்கும் திறனும், அதற்கான உந்தலும் உடைய பலர் தத்தமது தொழில்களை கைவிட்டு அரசின் உதவித் தொகைக்கு கையேந்துபவர்களாக ஆக்கப்பட்டிருந்தார்கள். தேசத்தை தனது சொந்த காலில் நிற்கச் செய்வதாக கூறிக் கொண்ட புலிகள் மறுபக்கத்தில் சொந்த காலில் நிற்கக்கூடிய மக்களை சிறீலங்கா அரசிடம் கையேந்துபவர்களாக மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து சிலர் பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான மூலதனத்தை தமிழர் தாயகத்தில் முதலீடு செய்ய முன்வந்தார்கள். அவர்கள் அங்கு சென்று தொழில் முயற்சிகள் அனைத்தையும் தொடங்கும் வரையில் அனுமதித்துவிட்டு பின்பு ஒரு கட்டத்தில் புலிகள் சென்று, தாம் அவற்றை பொறுப்பெடுப்பதாகக் கூறி அதன் உரிமையாளரை உடனடியாக எந்தவிதமான நஷ்ட ஈடும் கொடுக்காமல் வெளியேற்றினார்கள். இங்குதான் ஒரு முக்கிய பிரச்சனை எழுகிறது. இவர்களுக்கு அடிப்படையான பொருளாதார அறிவோ, அல்லது தேசத்தின் பொருளாதாரம் பற்றிய அக்கறையோ அறவே இருக்கவில்லை. இங்கு இவர்கள் ஒரு பாதாள உலகக் கோஷ்டி போலத்தான் செயற்பட்டார்கள். ஒரு தேசத்தின் தலைவர்கள் என்று

www.tamilarangam.net

கூறிக் கொள்பவர்கள் இவ்விதம் செயற்பட்டிருக்கவே முடியாது. ஒரு உருவகத்தை மாதிரியாக எடுத்துக் கொள்வோம். ஒரு சிறிய வியாபாரி 10 ரூபாய் முதலீட்டுடன் ஒரு பெட்டிக் கடையை நடத்துவதாக வைத்துக் கொள்வோம். அவரிடம் ஒரு சிறிய அளவிலான வரி (5 சதவீதம்) அறவிடப்படுவதாக வைத்துக் கொள்வோம். அவர் முதலீட்டுள்ள பத்து ரூபாய் ஒரு தடவை சுழலும் பொழுது புலிகளுக்கு 50 சதம் வரியாக கிடைத்திருக்கும். ஒரு வருடத்தில் மிகவும் குறைந்த அளவில் எதிர்வு கூறினாலும் அது பத்து தடவையாவது முழுமையான சுழற்சியை மேற்கொள்வதாக வைத்துக் கொள்வோம். அதனால் குறைந்தது 5 ரூபாய் வரியாக அது கொடுத்துவிடும். அடுத்த வருடம் இதே மூலதனம் 15 ரூபாயாக பெருகியிருக்கும், அடுத்த வருடத்தில் 7.50 ரூபாயை வரியாக கொடுத்திருக்கும். இப்படியாக இது தொடர்ந்து செயற்படுகையில் சில வருடங்களுக்குள்ளேயே அது ஆரம்பத்தில் போடப்பட்டதிலும் பார்க்க பெரும் தொகையை வரியாக கொடுத்திருப்பதுடன், தன்னளவிலும் பன்மடங்கு பெருகி பலருக்கு வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும். மாறாக அந்த மூலதனத்தை இவர்கள் கையகப்படுத்தினால், அந்த தொழிலைக் கூட புலிகள் வெற்றிகரமாக செய்யப் போவது கிடையாது. ஏற்கனவே இவர்கள் தமது இயக்கத்தை சரிவர நடத்துவதற்கே போதிய நபர்கள், வழிவகைகள் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பொறுப்பெடுத்த எந்த நிறுவனத்தையும் இவர்கள் வெற்றிகரமாக நடத்தியதாக வரலாறு கிடையாது. ஆகவே இங்கு 'தங்க முட்டையிடும் வாத்தை பேராசை காரணமாக கொன்று போட்ட' கதைதான் நடக்கிறது. இப்படியாக ஒரு சிறிய நிறுவனத்தைக் கூட நடத்தும் திறனற்ற, அது தொடர்பான அறிவு ஏதும் அற்ற ஒரு கூட்டத்தின் கையில் ஒரு தேசத்தின் வளங்கள் அனைத்தும் அகப்படும் போது அது 'குரங்கின் கை பூமாலை' கதையாகத்தான் போய் முடிந்தது.

விவசாயத்தில் பல விதமான சுயசார்பு, சேதனவியல் முறைகளை அறிமுகப்படுத்தி, சந்தை வசதிகளையும் பெருக்கி ஊக்குவித்திருக்கலாம். இந்த வழிமுறைகள், முழுக்க முழுக்க சோவியத் யூனியனின் மானியத்தில் தங்கியிருந்த கியூபாவை காப்பாற்றியிருக்க முடியுமானால், எமது தேசத்தை கைவிட்டிருக்க மாட்டாது. மீன்பிடிக்கும் இப்படியாக பலவித ஊக்குவிப்புகளை செய்திருக்க முடியும். கைத்தொழில், வர்த்தக முயற்சிகளை ஊக்குவிப்பது இருக்க, தன்னியல்பாக தனிமனிதர்கள் மேற்கொண்ட முயற்சிகளை குழப்பியடிக்காமல் இருந்திருந்தாலே அது தன்பாட்டிற்கு முன்னுக்கு வந்திருக்கும். சிறீலங்கா அரசு விதித்த கடுமையான பொருளாதார நெருக்கடிகளே மாற்று வழிமுறைகளை நோக்கி மக்களை

www.tamilarangam.net

தள்ளுவதற்கு போதுமான உந்துசக்தியாக இருந்தது. அந்த வகையான தேடல்களை ஊக்குவிக்காவிட்டாலும், தடுக்காமல் விட்டிருந்தாலேயே பல முன்முயற்சிகள் இந்த முன்முயற்சி உள்ள மக்களிடம் இருந்து தானாக தோன்றியிருக்கும்.

தமது கட்டுபாட்டில் தமிழர் தாயகத்தில் மிகப் பெரும்பாலான பகுதிகள் இருப்பதாகவும், அதில் தாம் தனியான ஒரு அரசை நடத்துவதாகவும் மார் தட்டிக் கொண்டிருந்த காலத்தில் புலிகள் அந்த நிர்வாகத்தை எப்படி நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பது கவனிக்கத் தக்கதாகும். நிர்வாகம் என்பது வரி பெறுவதற்கான உரிமை மட்டுமல்ல. மாறாக, அந்த மக்களுக்கு அவசியமான அத்தியாவசிய சேவைகளை வழங்குவதையும் உள்ளடக்கியதே இந்த நிர்வாகம் பற்றிய பிரச்சனையாகும். புலிகளின் நிர்வாகத்தின் முக்கிய கூறுகளாக கருதப்பட்ட அவர்களது காவல்துறை, நீதிமன்றம், மற்றும் வரி அறவிடுபவர்கள, சுங்கத்துறை தவிர்ந்த ஏனைய அத்தனை சேவைகளும் சிறீலங்கா அரசிடம் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த சிறீலங்கா அரசின் ஊழியர்களினாலேயே வழங்கப்பட்டன. கல்விச் சேவைகள், அரசாங்க நிர்வாகம், மருத்துவசேவை, விவசாய சேவைகள்... இப்படியாக எண்ணற்ற சேவைகளை இந்த ஊழியர்களே வழங்கினார்கள். அத்தனைக்கும் பின்னால் இந்த ஊழியர்கள் புலிகள் இட்ட பணிகளையே செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அத்தோடு இவர்களிடமும் வரி அறவிடப்பட்டது. ஏற்கனவே சிறீலங்கா அரசின் பொருளாதார தடைகள் காரணமாக உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து அத்தியாவசி பொருட்களுக்கும் பெரிய தட்டுப்பாடு நிலவியது. கள்ளச் சந்தையே பெரும் இலாபம் ஈட்டும் ஒரே தொழில் துறையாக மாறியிருந்தது. இதனை கட்டுபடுத்த எந்த முயற்சியையும் புலிகள் அமைப்பு எடுக்காமல், அப்படியாக ஈட்டப்படும் மக்கள் விரோதமான பணத்தில் பங்கு பெறுபவர்களாக இருந்தார்கள். இந்த வியாபாரிகளுக்கு விதிக்கப்பட்ட மிகையான வரிகளையும் அவர்கள் மக்கள் மீதே தள்ளிவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளில் மக்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு புலிகள் எந்த முயற்சிகளையும் செய்யவில்லை. கறுப்புச் சந்தை, நுகர் பண்டங்களுக்கு விதிக்கப்படும் வரிகள், உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்படும் வரிகள், அரச ஊழியர்களுக்கு விதிக்கப்படும் வரிகள் இவற்றையெல்லாம் விட சிறீலங்கா அரசின் வரிகள் வேறு என்று ஒரு நபர் பல தடவைகள் வரிகளை செலுத்த வேண்டியிருந்தது. இவற்றைவிட சிறீலங்கா அரசு மானியமாக வழங்கும் உணவுகள், மற்றும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் ஊடாக செல்லும் அத்தியாவசி பொருட்கள் போன்றவற்றையும் புலிகள் கட்டுப்படுத்தினார்கள், அபகரித்தார்கள்,

www.tamilarangam.net

அவற்றையும் பறித்தெடுத்து அந்த மக்களுக்கே மிகவும் உயர்ந்த விலைகளில் விற்றார்கள். இப்படியாக சிறீலங்கா அரசினால் அனுப்பி வைக்கப்படும் உணவு பொருட்கள் தங்களது பிரதேசத்திற்கு வந்து சேராத சமயத்தில் தமது ஆதரவாளர்களைக் கொண்டும், மக்களை கட்டாயப்படுத்தியும் பினாமியான ஊர்வலங்களை நடத்தினார்கள். புலிகளது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் எந்தவிதமான மக்களது சுயாதீன அமைப்புகளும் செயற்பட முடியாது என்பதை சிறீலங்கா அரசும், சர்வதேச சமூகமும் நன்கு அறிந்தே இருந்தன. இப்படியான சந்தர்ப்பங்களில் இந்த விதமான நிகழ்வுகள் புலிகளது தனியான அரசு பற்றிய விம்பங்களை தகர்த்துக் கொண்டிருந்தன.

## தவறிப்போன அரசியல் முன்னெடுப்புகள்

புலிகளது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் இருந்த பல்கலைக்கழகங்கள் எந்தவிதமான சமூக பயன்பாடும் அற்றனவாக ஆக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழக மாணவர்களை எப்படி கட்டுப்படுத்துவது, அதன் செனட்டை, ஆளுனரை யார் நியமிப்பது போன்ற அதிகாரம் சார்ந்த பிரச்சனைகளுக்கு அப்பால் இந்த நிறுவனங்களை அவற்றின் அறிவுபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பது பற்றி யோசிக்கவே இல்லை. இன்னும் சொல்வதானால் அவற்றின் சுயாதீனமான செயற்பாடுகளில் தலையீடு செய்வதன் மூலமாக, அவை மேற்கொண்டிருக்கக் கூடிய உருப்படியான காரியங்களையும் தடுத்துவிட்டார்கள். உண்மையில் இந்த நிறுவனங்கள் தமிழருக்கு அவசியமாக தேவைப்படும் பல்வேறு விஞ்ஞான, தொழில் நுட்பம் சார்ந்த ஆய்வுகளை முன்னெடுத்திருக்க முடியும். பல்வேறு அரசியல், சமூக, கலாச்சாரம், அரசியலமைப்பு மற்றும் சட்டம் தொடர்பான ஆய்வுகளை, முன் முயற்சிகளை மேற்கொண்டிருக்க முடியும். எமது தாயகத்திலுள்ள பௌதீக வளங்கள், மற்றும் புதிய தொழில் நுட்பங்களின் அறிமுகம் போன்றவற்றை மேற்கொண்டிருக்கலாம். பல்வேறு சமூக பிரச்சனைகள் பற்றிய கோட்பாட்டுரீதியானதும், ஸ்தூலமானதுமான பல ஆய்வுகளை மேற்கொண்டிருக்கலாம். பல்வேறுபட்ட கலை, சமூக, அரசியல் இயக்கங்களின் சந்திப்பாக, அரங்காக, மேடையாக இந்த நிறுவனங்கள் விளங்கியிருக்கலாம்.

தமிழீழ அரசு பற்றிய பேச்சுக்களுக்கு மாறாக, தமிழீழ குடியரசின் அரசியலமைப்பை வரைவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். இதற்கான ஆலோசனைகளை தொடங்கி சமூக நிறுவனங்களின் முன்மொழிவுகளைக் கோரியிருந்ததலே, சமூகத்தின்

www.tamilarangam.net

அனைத்து பிரிவுகளும் தம்மை ஒழுங்கமைத்துக் கொள்ளவும், தமது பிரச்சனைகள் பற்றி விவாதிக்கவும் தொடங்கியிருக்கும். இந்த விவாதங்களையும், இந்த அமைப்புகளது முன்மொழிவுகள் தொடர்பாகவும் பகீரங்கமான விவாதங்களை மேடைகளிலும், தொடர்புச் சாதனங்களிலும் முன்னெடுத்தாலேயே முழுச் சமூகத்தினதும் அரசியல் அசைவியக்கத்தை பலமாக உந்தியிருக்க முடியும். இந்த விதமான நடவடிக்கைகள் பல்வேறு சமூகப் பிரிவுகளையும் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இனம் காணவும், அதில் தமது பங்களிப்பு, மற்றும் மலரப்போகும் புதிய சமுதாயம் பற்றிய கனவுகள் என விரிவான ஈடுபாட்டை உருவாக்கியிருக்க முடியும். ஆனால் விடுதலைப் புலிகள் பயந்ததே இந்த விதமான மக்களது விழிப்புணர்வு பற்றியேயாகும். புலிகளது தலைமைக்கு இருந்த அரசியல்ரீதியான இயலாமையானது தமக்குள் பயப்பிராந்தியை உருவாக்கிக் கொள்ளவும், இதன் காரணமாக முழுச் சமுதாயத்தையும் பயத்திலும், சந்தேகத்திலும் ஆழ்த்தவும் மாத்திரம் அவர்களால் முடிந்தது. இதனால் தேசத்தின் முழுமையான அரசியல் பலமும் முடங்கிப் போனது.

உள்ளூரிலும், சர்வதேச அளவில் தேசிய பாராளுமன்றம், தேசிய சபை, அல்லது இதனை யொத்த நிறுவனம் ஒன்றை அமைத்து அதன் மூலமாக தேசத்தின் இறைமையை அங்கிகரிப்பது குறித்து சர்வதேச சமூகத்திடையே விரிவான அளவில் பிரச்சாரத்தை மேற்கொண்டிருக்க வேண்டும். பி. எல். ஓ விற்கு ஐ. நா. சபையில் பிரதிநிதித்துவம் எப்போதோ கிடைத்துவிட்டது. அது போன்ற ஒரு அந்தஸ்த்தை பெறுவதற்கு நாம் விடாமல் முயற்சி செய்திருக்க வேண்டும். அந்தந்த நாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் தாம் வாழ்ந்த நாடுகளில் போராட்டத்திற்கு ஆதரவான பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்திருக்க முடியும். பலஸ்தீன விடுதலை இயக்கம், பிலிப்பைன்ஸ் நாட்டு புரட்சியாளர்கள், நிக்கரகுவா அரசு, மொரிசியஸ் அரசு, தென்னாபிரிக்க அரசு போன்ற பல்வேறு அரசுகளுடனும், விடுதலை அமைப்புக்களுடனும் ஏற்கனவே 1980 களிலேயே உறவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இவற்றை இன்னமும் விரிவு படுத்த தொடர்ச்சியாக முயன்றிருக்க வேண்டும். மேற்கு நாடுகளில் உள்ள அரசியல், இராஜதந்திர வட்டாரங்களுடன் தொடர்புகளை விருத்தி செய்யும் விதத்தில் தொழில் முறையான 'லொபி' குழுக்களை அமர்த்த, அவற்றை சொந்தமாக உருவாக்கிக் கொள்ள நாம் முனைந்திருக் வேண்டும். இவற்றை செய்யக் கூடிய நபர்கள் பலர் எம் மத்தியிலேயே இருந்தார்கள். அப்படி இல்லாவிட்டாலும் பரவாயில்லை நாம் இந்த இருபது வருடங்களில் சொந்தமாகவே பலநூறு சட்ட வல்லுணர்களை, இராஜதந்திரிகளை உருவாக்கி விட்டிருக்கலாம். இதற்கு அவசியமான

www.tamilarangam.net

வளங்களும், கால அவகாசமும் போதியளவு எம்மிடம் இருந்தன. ஆனால் அதற்கு மிகவும் அத்தியாவசியமான அந்த அரசியல் தொலை நோக்கு இல்லையானால் இவை ஒருபோதும் கைகூடப் போவது கிடையாது.

**சர்வதேச நிலைமைகளை கையாண்ட விதம் குறித்து**

எந்தவொரு போராட்டத்தினதும் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பதில் சர்வதேச நிலைமைகள் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. இதனால் சர்வதேச விவகாரங்களை கவனிப்பதற்கு என்றே விடுதலை, புரட்சிகர அமைப்புகள் தமக்குள் தனியான பிரிவுகளை உருவாக்கி, அதில் பல்வேறு நிபுணத்துவம் பெற்றவர்களையும் இணைத்து தீவிரமாக செயற்படுவதுண்டு. இப்படிப்பட்ட அமைப்புகள் பல் வேறு நாடுகளிலும் கிளைகளை அமைத்து அந்தந்த நாட்டின் அரசியல், இராஜதந்திர வட்டாரங்களுடன் தொடர்ச்சியாக தொடர்பு கொண்டு தமது போராட்டம் தொடர்பான நல்லெண்ணங்களை வளர்க்கவும், தேவைப்படும் போது உரிய விளக்கங்களை கொடுத்து நிலைமைகளை மேம்படுத்தவும் தொடர்ச்சியாக பாடுபடுவர்.

சர்வதேச சமூகம் என்பதை ஏதோ உலகத்தின் மனச்சாட்சி போல மிகவும் நேர்மையாகவும், சமநிலை தவறாமலும் நடந்து கொள்ளும் என்ற கனவுகள் தேவையற்றவை. அதேபோல, சர்வதேச சமூகம் தமிழருக்கு எதிராக வேண்டுமென்றே செயற்பட்டதாக கூறுவதும் கூட இன்னொரு எதிர்க் கோடியான கூற்றேயாகும். நாம் வாழும் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல்கள் போன்றவற்றை நிர்ணயிப்பதில் ஏகாதிபத்திய நாடுகள் பெரும் பங்காற்றியுள்ளன. அது போலவே எமது தேசிய பிரச்சனை என்பது கூட, கொலனித்துவத்திற்கு பின்பான நிலைமைகள் தொடர்பாக எழும் ஒரு பிரச்சனையும் கூட. அந்த வகையில் இதனை உருவாக்கி விட்டதில் இந்த ஏகாதிபத்தியங்களுக்கும் முக்கியமான பங்கு இருக்கிறது.

சர்வதேச சமூகம் என்பது முற்றிலும் ஒரு படித்தான ஒரு அம்சமல்ல. நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகள், ஆட்சியில் உள்ள கட்சிகளுக்கு இடையிலான வேறுபாடுகள், அங்குள்ள எதிர்க் கட்சிகள், சமூக அக்கறையுள்ள இயக்கங்கள், ஏனைய முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளின் பாத்திரம், மனித உரிமை அமைப்புக்கள், சிறுவர் நலன்பேணும் அமைப்புக்கள், தொண்டர் நிறுவனங்கள், இவற்றையெல்லாம் விட அங்குள்ள மக்களது மனதாபிமான உணர்வுகள்... போன்ற பல ஒன்றிற்கொன்று முரணான பல்வேறு

www.tamilarangam.net

சக்திகளின், முரண்பட்ட பல்வேறு இயக்கப்போக்குகள் கொண்ட ஒரு கலவையாகவே இதனை புரிந்து கொள்ள வேண்டும். இந்த முரண்பட்ட சக்திகளுக் கிடையிலான வெளிகள் தாம் நாம் இயங்குவதற்கான முக்கியமான தளங்களாகும். இவற்றிற் கிடையில் நாம் செயற்படுவதனால், அந்தந்த நாட்டு மக்களது, ஏனைய முற்போக்கு கூறுகளது நல்லெண்ணங்களை வென்றெடுப்பதன் வாயிலாக எமது எதிரியை தனிமைப்படுத்துவதும், எமது அரசியல் முன்னெடுப்புகளுக்கு அங்கிகாரத்தை பெற்றுக் கொள்வதுமே எமது இலக்காக இருக்க வேண்டும்.

இந்த விதமான நல்லெண்ணங்களை வென்றெடுப்பதற்கு, முதலில் நாம் சர்வதேச சமூகத்தின் நியமங்களை புரிந்து கொண்டு அவற்றை மதித்து நடக்க பழகிக் கொள்ள வேண்டும். மனித உரிமைகள், அக ஒடுக்குமுறைகள், சக தேசங்களை நாம் நடத்தும் விதம், குழந்தைகள், பெண்களது நலன்களை பேணும் விதம், மக்களது ஜனநாயக உரிமைகள் மதிக்கப்படும் விதம், பத்திரிகை சுதந்திரம் பேணப்படும் விதம், யுத்தக் கைதிகள், கருத்து முரண்பட்டவர்கள் தொடர்பாக கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள்.... போன்றவை இங்கு மிகவும் முக்கியமானவை. தேசங்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதாக நாம் எதிரியின் மேல் குற்றஞ்சாட்டிக் கொண்டே நாம் மக்களதும், சக தேசங்களதும் ஜனநாயக உரிமைகளை மீற முடியாது. மனித உரிமைகள், இனச்சுத்திகரிப்பு, போர்க்கால குற்றச்சாட்டுகள், குழந்தைப் போராளிகள், போன்றவைகள் மிகவும் தீர்க்கமான விடயங்களாக இங்கு அமைகின்றன. ''பயங்கரவாதம்'' பற்றிய குற்றச்சாட்டுகள் அண்மைக் காலங்களில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவை. வலதுசாரி தலைவர்களது குறுகிய அர்த்தப்படுத்தல்களைக் கடந்து, சற்றே தளர்வான நடைமுறைகளை நாம் சர்வதேச சமூகம் என்ற வகையில் பொதுவில் எதிர் பார்க்கலாம் எனினும், அதன் வீச்சம் கூட குறுகியதே என்ற விழிப்புணர்வு மிகவும் அவசியமானது. ''தனிநபர் பயங்கரவாதம்'' எனக் கருதப்படும் அரசியல் படுகொலைகள் தொடர்பாகவும் இந்த சமூகம் அதிகம் விழிப்பாக இருக்கிறது. உதாரணத்திற்கு, நாம் சிறீலங்காவின் ஒரு அரசில் தலைவரை கொலை செய்யும் போது அந்த குறிப்பிட்ட நபர் இந்த வட்டாரங்களில் நன்கு அறியப்பட்டவராகவும் ஏற்கனவே இவர்களது நல்லெண்ணத்தை பெற்றவராகவும் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. அத்தோடு தேசம் கடந்தும் இந்த ஆழும் குழுமங்கள் தமது மேட்டுக்குடி ஒருமைப்பாட்டை (Elite Solidarity) பேணிக்கொண்டே இருக்கின்றன. ஆதலால் இந்த விதமான நடவடிக்கைகள் தொடர்பாக கூடிய விழிப்புணர்வு அவசியமானது. இந்த விடயத்தில் நாம் என்றோ ஒரு நாள்

www.tamilarangam.net

பதில் சொல்ல நேரும் என்ற எச்சரிக்கையுடன் செயற்படுவது மிகவும் முக்கியமானது.

ஏனைய புரட்சிகர, விடுதலை அமைப்புக்களுடன் ஒப்பிடும் போது தமிழரைப் பொறுத்தவரையில் இந்த சர்வதேச விவகாரம் குறித்த விடயம் ஓரளவிற்கு இலகுவான காரியமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இங்கே தான் புலிகளது நெருக்கடிகளுக்கான ஊற்று மூலங்களும் அமைந்திருந்தன. புலம் பெயர்ந்த நாட்டில் வாழும் தமிழர்களுடனான உறவுகள் என்பது, பொதுவில் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான விடயங்களும் வேறு வேறான விடயங்களே என்ற போதிலும், இவை இரண்டும் ஒரே நாட்டில், மிகமிக அருகாமையில் இருப்பதனால் அதற்கேயுரிய சுலபமான தன்மைகளும், தேவையில்லாமல் ஒன்றையொன்று பாதிக்கக் கூடிய வாய்ப்புகளும் இருக்கின்றன. புலம் பெயர்ந்த தமிழர்கள் மேற்கு நாடுகளில் வாழ்வதனால் இந்த நாடுகளில் உள்ள அரசியல் மற்றும் இராஜதந்திர மட்டங்களுடன் தொடர்புளை ஏற்படுத்துவதும், நெருக்கமான தொடர்புகளை பேணுவதன் மூலமாக நிலைமைகளை உடனுக்குடன் தெளிவுபடுத்திக் கொள்வதும், அதேவேளை ஊரிலுள்ள போராட்ட தலைமைக்கு உரிய முறையில் சர்வதேச நிலைமைகளை தெளிவுபடுத்துவதும் மிகவும் இலகுவான காரியமாக இருந்திருக்க வேண்டும். மாறாக இந்த பௌதீகரீதியான நெருக்கம் விடயங்களை இலகுவாக்க உதவவில்லை. புலிகளின் தலைமையைப் பொறுத்தவரையில் புலம் பெயர் தமிழர்களிடம் இருந்து பணத்தை பிடுங்குவது என்பதற்கு மேலாக சர்வதேச விவகாரங்கள் பற்றிய ஆழமான பார்வை இருக்கவில்லை. இதற்கான முயற்சிகளும் பெரிய அளவில் நடைபெறவில்லை. இதற்கு அவசியமான பயிற்சி, தேர்ச்சி போன்றவையும் எவரிடமும் இருக்கவில்லை.

அந்தந்த நாடுகளில் வாழ்ந்த தமிழரில் சிலர் தமது சொந்த வாழ்க்கையை, அதனை வளம்படுத்த அவசியமான அரசியலை மேற்கொள்ள முனைந்த போது, தாம் விரும்பிய கட்சிகளுடன் இணைந்து, தமது வாக்கு வங்கிகளாக தமிழ் மக்களை ஆக்க முனைந்தார்கள். எமது நாட்டின் அதே அரசியல் சாயங்களை இந்த நாட்டிலும் பரப்ப முயன்றார்களே ஒழிய, இங்குள்ள தமிழ் மக்கள் மத்தியில் இந்த நாடுகளின் அரசியலை புரிய வைக்கக்கூட முயற்சிகள் நடைபெறவில்லை. இந்த நாட்டின் ஜனநாயக நடைமுறைகள் பற்றிக் கூட எந்த புரிதலையும் ஏற்படுத்த முயலவில்லை. மேற்கு நாட்டவருடன் ஒப்பிடும் போது, எமது நாடுகளில் காணப்படும் வாக்களிப்பவர்களின் சதவீதம் உயர்வாக இருப்பது ஒன்றே தாம் தேர்தலில் வெற்றி பெற

www.tamilarangam.net

போதுமான காரணியாக கருதிச் செயற்படலானார்கள். கனடாவில் ரொறொன்டோ நகரில் நடைபெற்ற தேர்தலின் போது தமிழ் வேட்பாளருக்கு எதிராக தேர்தலில் நின்ற வேட்பாளர்கள் யாழ்பாணத்தில் புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றிய தகவல்களை இந்த வேட்பாளர்களுக்கு எதிராக பயன்படுத்தி இவர்களை தோற்கடித்ததும் நடைபெற்றது. இது சர்வதேச அளவில் நடக்கவிருக்கும் அடுத்தடுத்த தோல்விகளின் முதற்படியாக சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வில்லை. உள்ளூரில் குறிப்பிட்ட ஒரு பிரிவினரை மோசமாக ஒடுக்கிவிட்டு சர்வதேச அளவில் எப்படி எமது போராட்டத்திற்கான ஆதரவை நாம் பெற்றுக் கொள்வது என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்க்க தவறினார்கள். வெறுமனே மறுப்பறிக்கைகள் விடுவது, பொய்களை புனைவது போன்ற நடவடிக்கைகள் சர்வதேச அபிப்பிராயங்களை வென்றெடுக்க அறவே உதவமாட்டாது அல்லவா?

அதனைவிட முக்கியமானது இங்கே வாழும் தமிழ் மக்களை ஊரில் வாழும் தமிழர்கள் போல சட்டவிரோதமான முறைகளில் மிரட்டி காரியம் பார்க்க முடியாது என்பதை ஊரிலுள்ள தலைமை மாத்திரமன்றி, இங்குள்ள அவர்களது விசுவாசிகளும் புரிந்து கொள்ளததாகும். இந்த நாடுகளில் பேச்சுச் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம் போன்றவை ஒப்பீட்டளவில் மிகவும் விரிவானவை. ஆனால் இங்கே இருக்கும் புலிகளின் தலைமையானது இந்த சுதந்திரங்களை ஊரில் நடப்பது போல இலகுவாக அடக்கிவிடலாம் என நினைத்தார்கள். அதற்காக பலவிதமான தந்திரங்ளையும் கையாண்டார்கள். மிரட்டுவது, அவதூறுகளை பரப்புவது, பத்திரிகைகளுக்கு விளம்பரங்களை கிடைக்காமற் செய்வது, வியாபாரங்களை நடத்தவிடாமல் செய்வது, வன்முறையை பயன்படுத்துவது என்று போய் கடைசியில் கொலை முயற்சி வரையில் இது போய் முடிந்தது. அவ்வாறே தமிழர்களிடம் இருந்து கட்டாயமாக பணத்தை பெற முயன்றார்கள். இதனால் பலர் பொலிசாரிடம் சென்று முறையிட நேர்ந்தது. குழந்தை போராளிகள், மற்றும் கட்டாயமான பணம் பறிக்கும் முயற்சிகள் போன்றவை பெரியளவில் பாதிப்பை இந்த நாடுகளில் ஏற்படுத்திய விடயங்களாகும். இந்த பணம் பறிக்கும் நிலைமைகள் மோசமான சந்தர்ப்பத்தை பயன்படுத்தித்தான் மேற்கு நாடுகள் பல புலிகளை தடை செய்யம் தமது நோக்கத்தை இலகுவாக செய்து முடித்தன. புலிகளது நடவடிக்கைகளை கண்டித்து மனித உரிமை அமைப்புக்களே (Human Right Watch) அறிக்கைகளை விட நேர்ந்தது. அப்படிப்பட்ட ஒரு அறிக்கை 2000 ம் ஆண்டில் குழந்தை போராளிகள் தொடர்பாக வெளியானது. அதனை தயாரித்த ஜோ பெக்கர் (Joe Becker) என்பவர் மற்றும் கனடாவில் உள்ள ஏனைய

www.tamilarangam.net

மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் எமது போராட்டத்தில் அக்கறையுடையவர்களுடன் இணைந்து இந்த அறிக்கை தொடர்பான ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடாகி இருந்தது. அந்த கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பே அந்த மண்டபத்தில் கூடிய புலிகளின் ஆதரவாளர்கள் கூட்டம் தொடங்கிய வேளையில் கடுமையாக கூச்சலிட்டு அந்த கூட்டத்தை குழப்பிக் கொண்டிருந்தார்கள். அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் ஒன்ரோரியோ மாகாண முதல்வரும், இந்நாள் லிபரல் கட்சியின் முன்னணித்தலைவருமான பொப் ரே என்பவர், இந்த கும்பலின் நடத்தை பற்றி மிகவும் அதிர்ச்சி அடைந்திருந்தார். தனது வாழ் நாளில் இந்தவிதமான காடைத்தனத்தை தான் கண்டதில்லை என்று குறிப்பிட்டிருந்தார். பின்பு யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்த போது, இதே அரசியல்வாதிகளை சந்திப்பதற்காக நாட்கணக்கில் பாராளுமன்ற வாசலில் இலட்சக்கணக்கான மக்கள் காத்திருந்த போதும் இவர்களை சந்திப்பதை அந்த அரசியல்வாதிகள் வேண்டுமென்றே தவிர்த்தார்கள். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களது அரசில் வாழ்வை வெறுமனே புலிகளுக்கு காசு கொடுக்கும் விவகாரமாக குறுக்கிய பின்பு, அந்தந்த நாடுகளில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகளில் தலையீடு செய்வது மற்றும் அந்தந்த அரசுகளை தாய் நாட்டில் நடைபெறும் அவலங்களை நோக்கி கரிசனை கொள்ளுமாறு செய்வது போன்ற அனைத்துமே இலகுவான காரியமாக இருக்கவில்லை.

இந்த நாடுகளில் தமிழர்கள் சார்பில் லொபி செய்வதற்கான ஏற்பாடுகள் எதனையும் இவர்கள் ஏற்பாடு செய்யவில்லை. மேற்கு நாடுகளின் அரசியல் செயற்பாடுகள் பற்றிய முறையான ஒரு புரிதல் இருந்திருந்தால் இதனை யாருமே தவிர்த்திருக்கவே முடியாது. அத்தோடு இந்த நாடுகளில் செயற்படும் பல்வேறு முற்போக்கு, ஜனநாயக அமைப்புக்களுடன் முறையான தொடர்புகள் மிக மிகக் குறைவாகவே பேணப்பட்டு வந்தன. தொழிலாளர் அமைப்புக்களுடனோ, நிறவெறிக்கு எதிரான அமைப்புக்களுடனோ, குடியேறிய மக்களுக்கு ஆதராவான அமைப்புக்களுடனோ, இடதுசாரி மற்றும் பெண்கள் மற்றும் பல்வேறு சமத்துவ உரிமைக்கான அமைப்புக்களுடனோ எந்தவிதமான உருப்படியான தொடர்புகளும் இருக்கவில்லை.

இப்படியாக மேற்கு நாடுகளில் தமிழர்கள் போராட்டம் பற்றிய ஒரு தவறான படம் உருவாக்குவதற்கு புலிகளே காரணமாக இருந்ததால், புலிகள் அமைப்பை இந்த நாடுகளில் ஓரம் கட்டச் செய்வதற்கு சிறீலங்கா அரசு எடுத்த முயற்சிகள் இலகுவாக கைகூடின. இவர்களை ஓரம் கட்டுவதில் சிறீலங்கா அரசுக்கு எந்த சிரமமும் இருக்கவில்லை.

www.tamilarangam.net

முதலில் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்தார்கள்: பின்பு தடை செய்தார்கள். இதனை ஏன் என்று கேட்பதற்குக் கூட நாதியிருக்கவில்லை. எமது வளங்கள் முறையாக குவிக்கப்பட்டிருப்பின் இந்த நாடுகளில் வாழும் தமிழர்களது எண்ணிக்கையும் சேர சிறீலங்கா அரசானது மிக இலகுவில் தனிமைப் படுத்தப் பட்டிருக்க முடியும். இது முற்றிலும் சாத்தியமானதாகவே இருந்திருக்கும். புலிகளோ தம்மை தனிமைப்படுத்திக் கொண்டு, எதிரிகளை ஒன்று சேர்க்கும் பணிகளை செய்து முடித்த பின்பு இது அறவே சாத்தியப்படவில்லை. இத்தனைக்கும் பிறகு புலிகள் சர்வதேச சமூகம் தம்மை வேண்டும் என்றே ஒதுக்கிவிட்டதாக பிரச்சாரம் செய்கிறார்களே ஒழிய தமது பக்க தவறுகளை ஒத்துக் கொள்வதாக தெரியவில்லை.

**தனிநபர் பயங்கரவாதம் குறித்து**

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் குறிப்பிடுவது போன்று தனிநபர் பயங்கரவாதம் என்பது எந்தவொரு போராட்டத்திலும் இடம் பெறாத ஒரு விடயம் அல்ல. இராணுவ தந்திரோபாயங்களில் தனிநபர் பயங்கரவாதம் என்பதும் ஒரு குறிப்பிடத்தக்க, வரையறுக்கப்பட்ட பாத்திரம் ஆற்றியே வந்துள்ளது. இதே அரசுகளே தேவையேற்படும் போது தனிநபர் பயங்கரவாதத்தில் ஈடுபட்டுத்தான் இருக்கின்றன. ஆகவே இங்குள்ள பிரச்சனை அது சரியா, தவறா என்பது பற்றியல்ல. மாறாக, அதன் வரையறுக்கப்பட்ட எல்லை என்ன என்பது பற்றியதாகத்தான் இருக்க முடியும்.

எழுபதுகளின் நடுப்பகுதியிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது அரசியல் எதிரிகளை துரோகிகள் என்று முத்திரை குத்தி புலிகளது தாக்குதல் இலக்குகளாக ‘ஆட்காட்டி’ வேலை செய்தார்கள். துரையப்பா தொடங்கி அருளம்பலம், தியாகராசா என இந்த பட்டியல் தொடர்ந்தது. எந்த வொரு சந்தப்பத்திலும் இவர்கள் ஏன் துரோகிகளாக கருதப்பட வேண்டும் என்று கூட்டணியினர் விளக்கம் அளிக்கத் தவறினார்கள். யாருடன் ஏற்படுத்திய, எந்தவிதமான அரசியல் உடன்பாடுகளுக்கு துரோகம் இழைத்தார்கள் என்பது இங்கு அவசியமானது அல்லவா? ஆனால் அப்படிப்பட்ட விளக்கங்கள் எதுவும் இன்றி தமக்கு அரசியல் ரீதியாக சவாலாக இருந்தவர்களை தமது வழமையான பணம், செல்வாக்கு, சாதி மற்றும் ஏனைய “சாணாக்கிய” வழிமுறைகளால் தோற்கடிக்க முடியாத போது அவர்கள் புலிகளது தனிநபர் பயங்கரவாதத்திற்கு இலக்காக்குவதன் மூலமாக தமது

www.tamilarangam.net

வெற்றிக்கு வழி சமைத்துக் கொண்டார்கள். இந்த வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பானது அகிம்சையை பின்பற்றிய, முற்றிலும் ஜனநாயகபூர்வமான வழிமுறைகளை முன்னெடுத்த அமைப்பு அல்ல: அதன் கைகளிலும் இரத்தக் கறை இருக்கவே செய்கிறது என்பதை குறித்துக் கொண்டு நாம் மேற்கொண்டு விடுதலைப் புலிகள் பற்றிய விமர்சனங்களுக்கு செல்வோம்.

எந்தவொரு ஆயுத போராட்டமும், எப்போதும் தூய்மையான வடிவங்களுடன் தொடங்குவதில்லை. பல்வேறு தட்டுத் தடுமாறல்களுடன் தான் தனது பயணத்தை தொடங்குகிறது. ஆனால் அதன் குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்துடன் அது தனத ஆரம்ப வழிமுறைகளை மறு பரிசீலனை செய்து கொண்டு ஆரம்ப கால 'இளம்பருவக் கோளாறுகளை' சீர் செய்து கொள்கிறது. விடுதலைப் புலிகளைப் பொருத்த வரையில் இது நடைபெறாதத மட்டுமல்ல, புலிகளுக்கு வெளியில் உள்ள முற்போக்கு சக்திகள் என்று கூறப்படுபவர்களும் கூட இன்றும் கூட இந்த தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய மறு பரிசீலனை இன்றி இவற்றை தமது சாதனைகள் போல பேசும் போதுதான் பிரச்சனைகள் உருவாகின்றன. உளவாளிகள் மற்றும் அரச உளவுத்துறையினரை அழித்தொழிப்பது ஆரம்பத்தில் போராளிகள் தப்பிப்பிழைக்க தவிர்க்க முடியாத அவசியமாக இருக்கலாம். அத்தோடு சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மிகவும் முக்கியமான இராணுவ மற்றும் காவல்துறை அதிகாரிகள் போன்றவர்களையும் இலக்காக கொள்ள நேரிடலாம். ஆனால் தமது அரசியல் எதிரிகளை. அதுவும் பாராளுமன்றவாதத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு கட்சி தனது அரசியல் எதிரிகளை இப்படியாக தீர்த்துக் கட்டுவதும், அதனை எந்தவிதமான விமர்சனமும் இன்றி ஆயுத போராட்டத்தில் தொடர்ந்து முன்னெடுப்பதும் மிக மோசமான தவறுகளுக்கு இட்டுச் சென்று விடுகிறது.

எமது போராட்டத்தில் புலிகள் சுந்தரத்தில் தொடங்கி சிறீ சபாரட்னம், பத்மநாபா உற்பட பல் வேறு போராளிகளையும் கொன்றொழித்ததுடன், அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், தங்கத்துரை, பிரேமதாச, காமினி திசாநாயக்க, லக்ஸ்மன் கதிர்காமர், நீலன் திருச்செல்வம், ராஜிவ் காந்தி.... என (இந்த பட்டியல் மிகவும் நீண்டது) பல அரசியல் தலைவர்கள் இப்படியாக கொன்றொழிக்கப்பட்டார்கள். இத்துடன் புலிகளுன் ஒத்துழைக்க மறுத்ததற்காக கொல்லப்பட்ட சமூக முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள், இடதுசாரிகள், சாதாரண குடிமக்கள் போன்ற அனைவருமே துரோகிகள் என்றே பட்டம் வழங்கப்பட்டனர். இதே பட்டம் தமது அமைப்பிற் குள்ளேயே பிரபாகரனுக்கு சவாலாக வளர்ந்து வந்த போராளிகள் பலரது அழிவிற்கும் பயன்படுத்தப்பட்டது.

www.tamilarangam.net

இப்போது எழும் கேள்வி இதுதான். இப்படியாக அடுத்தடுத்து கொலைகளை செய்வதன் நோக்கம் என்ன? இப்படியாக தொடர்ந்து அடுத்தடுத்து வரும் தலைவர்களையெல்லாம் கொன்று விட்டால் வேறு தலைவர்களே இல்லாமல் போய்விடுவார்களா? அல்லது சிங்கள தேசத்தில் அல்லது இந்தியாவில் யாருமே புலிகள் விடயத்தில் நடவடிக்கை எடுக்க தயங்கும் அளவிற்கு இந்த தேசங்களை, ஆளும் வர்க்கங்களை நாம் இப்படியாக பயப்படுத்திவிட முடியுமா? அப்படியானால் எமது அரசியலுக்கும், இந்த தனிநபர் அழித்தொழிப்பிற்கும் உள்ள தொடர்பு என்ன? இப்படிப்பட்ட பல கொலைகளை செய்யாமல் விட்டிருப்பதுதான் புத்திசாலித்தனமாக இருந்திருக்குமா? உதாரணமாக, பிரேமதாசா. இவர் ஒரு மிகவும் சாதாரணமான ஒரு தலைவர். இவரது ஜனரஞ்சக அரசியல் இவரை ஆளும் வர்க்கம் மற்றும் இராணுவ தலைமை மற்றும் அதிகார வர்க்கம் ஆகியவற்றில் இருந்து மிகவும் அந்நியப் படுத்தி விட்டிருந்தது. இவரது சாதி மற்றும் தலைமைதாங்கும் முறைகள் காரணமாக இவரது கட்சிக்குள்ளேயே இவரை கவிழ்ப்பதற்கு பல சதி முயற்சிகள் நடைபெற்றன. இவர்தான் தமிழரைப் பொறுத்தவரையில் மிகவும் பலவீனமான எதிரியாக இருந்தார். இவரை கொல்வதைவிட இவரை உயிருடன் வைத்திருப்பது அரசியல்ரீதியில் அதிக பயனுள்ளதாக இருந்திருக்காதா?

இந்திய ஆளும் வர்க்கமும், அதிகார வர்க்கமும் ஈழத்தமிழர் விடயத்தில் ஒரு தெளிவான நிலைப்பாடுடன் இருந்தது என்பது அனைவருக்கும் தெரிந்துதானே இருந்தது. இந்திய "சமஷ்டி அமைப்பை" விட கூடுதலான எதனையும் ஈழத்தமிழர் பெற்றுக் கொள்ள அனுமதிப்பது இந்திய ஒருமைப்பாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பதுதானே அந்த நிலைப்பாடு. இதைத்தானே ராஜிவ் காந்தியும் செய்தார். அந்த இடத்தில் வேறு யார் இருந்திருந்தாலும் இதனைத்தானே செய்யும் படி இந்திய அதிகார வர்க்கம் பணித்திருக்கும். இவரை கொன்றதன் பின்புதானே இந்த வர்க்கம் தனது காழ்ப்புணர்வை வெளிப்படையாக காட்ட துணிந்தது. அதுவரையில் தமிழக மக்கள் பற்றிய தயக்கங்கள் இருந்தனவே. இந்த கொலைகளின் பின்பு பல இந்தியர்களும் எமது போராட்டத்திற்கு எதிராக அணிதிரளும் சாத்தியக் கூறு உருவாகிவிடவில்லையா? ராஜிவ் உயிருடன் இருந்த போது செய்ய முடியாததை, அவரது கொலை செய்யக் கூடியதாக ஆக்கிவிடவில்லையா? இந்திய படைகளுடன் விடுதலைப் புலிகள் மோதியதுடன் நிறுத்தியிருந்தால் போதாதா? ராஜிவை கொல்லும் அளவிற்கு அவர்களை இட்டுச் சென்றது என்ன? அரசியல் நுண்ணறிவா அல்லது பிரபாகரனது காயப்பட்ட தன்முனைப்பா (Ego வா)? இப்படியாக

www.tamilarangam.net

ஒருவரது தனிப்பட்ட உணர்வுகளுக்காக எல்லாம் பாரிய இராஜதந்திய சிக்கல்களை உருவாக்கிவிடக்கூடிய செயல்களில் இறங்குபவர் உண்மையான தலைவர்களாக இருக்க முடியுமா? தியாகம், அர்ப்பணிப்பு பற்றி பேசும் போது நாம் எமது தன்முனைப்யையும் (Ego வை) மக்களது நலன்களுக்கு உள்ளடக்குவது என்பதை கருதுவதில்லையா? இத்தோடு முடித்துவிடாமல் இந்த கொலைகளுக்கான ஆதாரங்களை புகைப்படங்களாகவும், வீடியே பதிவுகளாகவும் விட்டுச் சென்ற இவர்களது முட்டாள்தனத்திற்கு ஒரு விலையே இல்லையா? புலிகளுக்கு ஆதவாளர்களாக இருந்த இந்தியர்கள் பலரும் இதில் சிக்கிக் கொண்டாகளே. இவர்களுக்கு இந்த கொலை பற்றி ஏதாவது முன்னரே தெரிந்திருந்ததா? அப்படி இல்லையாயின் அவர்களை சிக்க வைத்தது என்ன நியாயம்? இந்த செயலின் அரசியல் விளைவுகள் என்னவாக இருக்கும் என்று இவர்களிடம் ஏதாவது மதிப்பீடுகள் இருந்தனவா? அப்படி இருந்ததால் அவை எவை? அப்படி இல்லையாயின் இது ஒரு விடுதலை அமைப்பின் பண்பா?

புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளின் போது பல்வேறு தரப்பட்ட, மிகவும் தரங்கெட்ட நபர்களுடன் எல்லாம் சமரசம் செய்து கொண்டு சேர்ந்து கூட்டாக செயற்பட்டுள்ளார்கள். உதாரணத்திற்கு மண்ணெண்ணை மகேஸ்வரன். ஐக்கிய தேசிய கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இவரிடம் புலிகள் உடன்பாடுகளை செய்து கொண்டு பலவிதமான வேலைகளை செய்வித்துக் கொண்டார்கள். அப்படியானவர்கள் நீலன் திருச்செல்வம் போன்றவர்களுடன் ஏதாவது ஒரு புரிதலை எட்டியிருக்க முடியாதா? அப்படி ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா? சந்திரிகா அரசாங்கத்துடன் சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே நீலன் திருச்செல்வமும், லக்ஸ்மன் கதிர்காமரும் கொல்லப்பட்டதை எவ்வாறு இவர்கள் சர்வதேச மட்டத்தில் நியாயப்படுத்த முடியும் என்று நினைத்தார்கள்?

ஒட்டு மொத்தமாக இந்த தனிநபர் பயங்கரவாதங்களை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகும். அதாவது
புலிகளிடம் ஒரு முறையான அரசியல் கண்ணோட்டம் அறவே இருக்கவில்லை. சமூகத்தை பல்வேறு சமூக சக்திகளின் தொகுப்பாக பார்க்காமல், தனிநபர்களது தொகுப்பாக புரிந்து கொண்டார்கள்: இதனால் அந்தந்த சமூக சக்திகளது நலன்கள் என்ற கோணத்திலிருந்து அரசியலை புரிந்து கெள்ளாமல், வெறுமனே தனிநபர்களது விருப்பு வெறுப்புகளிலிருந்து பிரச்சனைகளை அணுகினார்கள்: அப்படியே தீர்வும் காண முயன்றார்கள். இந்த

அரசியலற்ற சுத்த இராணுவ கண்ணோட்டமானது இத்தனை பாரிய அழிவுகளுக்கு வழிவகுத்தது. பல்வேறு போராட்ட வடிவங்களுக்குள் ஆயுத போராட்டத்தை உயர்ந்த வடிவமாக பார்ப்பதும், பின்பு ஆயுத போராட்டம் ஒன்றே ஒரே போராட்ட வடிவமாக ஆகிப்போனதும்தான் நடந்தது. கடைசிவரையில் பிரபாகரனுக்கு இந்த போராட்டத்தின் அரசியல் பிடிபடாமலேயே போய்விட்டது என்பதுதான் அப்பட்டமான உண்மையாக மிஞ்சியிருக்கிறது. இத்தனைக்குப் பின்னும் நாம் நெஞ்சை நிமிர்த்தி “நாம் வன்முறை மீது காதல் கொண்ட பைத்தியக் காரர்கள் அல்ல” என்று எவராவது நேர்மையாக சொல்லக் கூடியதாக நிலைமை உள்ளதா?

## தேசத்தின் அகமுரண்பாடுகளும் புலிகளும்

தமிழ் தேசம் ஒன்றும் ஒரு படித்தான சமூகம் அல்ல. எல்லா சமூகங்களைப் போலவுமே வர்க்க, பால், சாதிய, பிரதேச, மற்றும் மதரீதியான வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்குமுறைகள் யாவும் இந்த சமூகத்திலும் இருக்கவே செய்தன. தேசிய விடுதலைக்கு தயாராகும் சமூகங்கள் அந்தந்த சமூகத்தின் பல்வேறு பிரிவினரையும் அணைத்துச் செல்லும் நோக்கில் சில சமரசங்களை முரண்பட்ட சமூகப் பிரிவுகளுடனும் செய்து கொண்டாக நேர்கிறது. தேசத்தின் ஒற்றுமை கருதி, மக்களது ஜனநாயக உரிமை மற்றும் மனித உரிமைகள் போன்றவை இவற்றுக்கு அடித்தளமாக அமைகின்றன. அக சமூக ஒடுக்குமுறைகளை அப்படியே தொடர்ந்து கொண்டு, ஒடுக்கப்பட்ட ஒரு சமூகப் பிரிவை தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக கிளர்ந்தெழச் சொல்லி கேட்க முடியாது. இதனால் ஒடுக்கும் சக்திகள் தனது ஒடுக்கு முறைகளில் சிலவற்றையாவது கைவிட நேர்வது தவிர்க்க முடியாததாகிறது. ஆனால் இந்த அக முரண்பாடுகளை முகம் கொடுப்பதைப் பொறுத்த வரையில் புலிகள் மிகவும் பலவீனம் கொண்டவர்களாகவே செயற்பட்டார்கள். இப்படிப்பட்ட முரண்பாடுகள் இருப்பதையே கண்டு கொள்ள மறுத்தார்கள். அதையும் மீறி இந்த பிரச்சனைகள் முகத்திற்கு எதிரே வந்து நின்ற போது அவற்றை தேசிய விடுதலையின் பெயரால் ஓடுக்கப்பட்ட மக்களது போராட்டத்தை கைவிடக் கோரினார்கள். சமூகத்தில் ஒரு மோசமான ஒடுக்குமுறை தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருக்கும் போது, அதற்கெதிரான போராட்டங்களை தேசிய விடுதலையின் பேரால் தணிப்பது என்பது ஒரு விதத்தில் ஒடுக்கு முறை தொடரவே உதவுவதாக இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சமூகத்தில் நிலவும் எல்லா ஒடுக்குமுறைகளையும் தொடர்வதில் தேசத்தின் நலனோ அல்லது புலிகளது நலனோ கூட தங்கியிருக்கவில்லை. ஆனால் அவற்றை முகம் கொடுப்பதற்கான

www.tamilarangam.net

வழிவகைகளை அறியாதவர்களாக இருந்தார்கள், அல்லது இந்த முரண்பாடுகளை நேரடியாக முகம்கொடுத்து முறியடிப்பது குறித்து தயங்கினார். எங்கே தாம் ஒதுக்கப்பட்டு விடுவோமோ என்று பயந்தார்கள். எத்தனையோ பலமான ஒரு அமைப்பு, ஒப்பீட்டளவில் சிறிய பிரச்சனைகள் குறித்து இத்தனை தூரம் பயப்பட்டது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. ஒரு விதத்தில் இவர்கள் ‘கடதாசிப் புலிகளாக’ த்தான் இருந்தார்கள்.

**(அ) வர்க்கம்**

வர்க்கம் என்ற வகையில் புலிகள் அமைப்பானது ஆளும் வர்க்கத்தை நேரடியாக பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. புலிகள் அமைப்பின் அங்கத்தவர்களில் மிகப் பெரும்பாலானோர் சாதாரண வறிய விவசாயிகளின் பிள்ளைகளாகவே இருந்தார்கள். ஆனாலும் புலிகள் அமைப்பானது நடப்பிலுள்ள சொத்துடமை உறவுகளை பெரிய அளவில் கேள்விக்குள்ளாக்கவில்லை. தமக்கு தேவைகள் எழுந்த போது எந்த சொத்தையும் பலவந்தமாக எடுத்துக் கொள்ள தயங்கவும் இல்லை. ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் சார்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்காததுடன் அவர்களிடம் இருந்த ஒரு சில அமைப்புக்களையும் தாங்கள் பொறுப் பெடுத்து அவற்றை அந்தந்த வர்க்கங்களின் நலன்களை காக்கும் விதத்தில் செயற்பட அனுமதிக்காமல், தமது அமைப்பிற்கான ஆள்திரட்டும், தொண்டு செய்யும் நிறுவனங்களாக மாற்றியமைத்தார்கள். பல சிறிய தொழிற்சங்கங்கள் இதனால் செயலிழந்து போயின. கூலித் தகராறுகள் வெடித்தபோது வர்க்க அமைதி காக்க நிர்ப்பந்தித்தார்கள். அதன் மூலமாக சுரண்டும் வர்க்கங்களுக்கு சாதகமாக செயற்பட்டார்கள். வியாபாரிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் மீது கடுமையான வரிகளை விதித்தார்கள். ஆனால் இந்த வரிகளை அந்த வர்க்கம் தமது தொழிலாளர்கள் மீதும், நுகர்வோர் மீதும் மாற்றிவிடுவதை கண்டு கொள்ளவேயில்லை. பல சந்தர்ப்பங்களில் இவர்கள் விதித்த வரியின் சுமை காரணமாக இந்த பொருளாதார முயற்சிகள் அதன் முனைவோருக்கு கட்டுபடியானதாக அமையவில்லை. இப்படியான சந்தர்ப்பங்களில் அந்த நிறுவனங்களை தாமே பொறுப்பெடுத்துக் கொண்டார்கள். தம்மிடம் இருந்த பொருளாதார முயற்சிகளில் கூலி உழைப்பை அடிப்படையானதாக கொண்டார்கள். பல சந்தர்ப்பங்களில் கட்டாய உழைப்பும் புலிகளினால் அமைப்பின் தேவைகளுக்காக நிர்ப்பந்திக்கப்பட்டது.

www.tamilarangam.net

## (ஆ) சாதியம்

புலிகளின் தலைமையானது கரையார சாதியைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் சாதியடுக்கு நிலையில் இரண்டாம் நிலையிலேயே இருந்தார்கள். இது இவர்களது தலைமையை வெள்ளாளர்கள் ஆதரிப்பதற்கு ஆரம்பத்தில் தடையாக இருந்தது. எனினும் சக இயக்கங்களை அழித்த பின்பு புலிகளை ஆதரிப்பதைத் தவிர இவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. புலிகள் அமைப்பின் அணிகளில் இருந்த பலர் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இவர்களது குடும்பத்தவர்கள் தமது சொந்த ஊர்களில் சாதிய ஒடுக்கு முறைகளை முகம் கொடுத்தே அன்றாடம் சீவியத்தை நடத்தியாக வேண்டியிருந்தது. தேசத்தின் நலன் கருதியும், தமது தலைமையின் ஸ்திர தன்மை கருதியும், பெரும்பாலான அங்கத்தவர்களது நலன் கருதியும் புலிகள் அமைப்பானது சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் வெறும் அடையாள அளவிலான முயற்சிகளுக்கு மேலாக, சாதிய ஒடுக்கு முறையை இல்லாது ஒழிக்க அதிகம் செய்யவில்லை. நிலம், குடியிருப்புகள், மின்சாரம், நீர் போன்ற அடிப்படையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காதது மட்டுமல்ல, காலாகாலமாக தொடரும் சாதிய ஒடுக்குமுறைகளுக்க எதிராகக் கூட எதுவும் செய்ய முடியாதவர்களாகவே இருந்தார்கள். இன்றுவரை திறக்கபடாத ஆலயங்களும், தண்ணீர் அள்ள அனுமதிக்கப்படாத கிணறுகளும் தொடர்ந்தும் இருக்கவே செய்கின்றன. இவை அடிப்படையான ஜனநாயக உரிமை பிரச்சனைகளாகும். இவற்றை ஒழிப்பதற்கு அதிகம் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கத் தேவைகூட இல்லை. சர்வதேச அளவில் எமது சுயநிர்ணய உரிமைக்காக போராடும் ஒரு சமூகம் இப்படிப்பட்ட மனித உரிமை மீறல்களை தனக்குள் அனுமதிக்க முடியாது என்பதை மக்களுக்கு விளங்கப்படுத்தியிருக்க முடியும். அதுவும் கூட வேண்டாம், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் உருவாகி வந்த தமது சுயகௌரவத்தை காக்கும் வித்தில் செயற்பட்ட அமைப்புகளை செயற்பட அனுமதித்திருந்தாலேயே போதும், பல பிரச்சனைகளுக்கு அவை தீர்வு கண்டிருக்கும். இந்த விதத்தில் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய ஜனநாயக அமைப்புக்கள், இடதுசாரி அமைப்புக்கள் மற்றும் ஈபிஆர்எல்எப் போன்ற அமைப்புக்களே அதிகம் சாதித்திருக்க முடியும். யுத்த நிலைமைகள், அரசின் பொருளாதார தடைகள், வரிவிதிப்புகள், தொழில்கள் முடங்கியமை, கூலி உயர்வின்மை போன்ற பிரச்சனைகள் காரணமாக பாதிக்கப்பட்ட மிகப் பெரும்பான்மையான வறியவர்கள் தாழ்த்தப்பட்டவர்களேயாவர். இவர்களே தமது பிள்ளைகள் மூலமாக இந்த யுத்தத்தில் கணிசமான யுத்த சுமைகளையும்

www.tamilarangam.net

தாங்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அகதி வாழ்வு, அரசின் மானியம் போன்றவற்றிலும் இவர்கள் அதிகமாகவே பாதிக்கப்ட்டார்கள். சாதிய பிரச்சனையில் புலிகள் காட்டிய தயக்கத்திற்கு தலைமை தான் தனிமைப்படுத்தப் பட்டுவிடக் கூடாது என்பதில் காட்டிய அச்ச உணர்வே காரணமாகும்.

இதனைவிட அண்மையில் புலிகளது தலைமை அங்கத்தவர்கள் தமது வாழ்க்கை துணைகளை மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெள்ளாள சாதிகளில் தேர்ந்தெடுத்தது கவனத்திற்கு உரியதாயிற்று. அந்த வகையில் இவர்கள் தமது தலைமை அந்தஸ்த்தை பயன்படுத்திக் கொண்டு சாதியரீதியில் மேல்நிலையாக்கம் பெற முனைந்ததாகவே கருத வேண்டியுள்ளது. இந்த இடத்தில் இன்னொரு அம்சத்தை தொடர்பு படுத்திப் பார்ப்பது விடயத்தை இலகுவில் தெளிவுபடுத்த உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். தமிழ் மொழியை அமுலாக்கம் செய்வதாக கூறி, கடைகளின் பெயர்ப் பலகைகளை திருத்திய இவர்கள், பாணுக்கு வெதுப்பு என்று பெயரிட்ட புலிகளுக்கு வண்ணார்பண்ணை, தச்சன் தோப்பு, தட்டார் தெரு, அம்பட்டன் பாலம் போன்ற பெயர்கள் கூட கண்ணில் தட்டுப்படாமல் போனது என்ன தற்செயலான ஒரு அம்சம் என்று யாராவது நம்ப முடியுமா?

### (இ) பெண்கள் தொடர்பாக

பிரபாகரனுக்கு ஆரம்பம் முதலே பெண்களை இயக்கத்தில் இணைத்துக் கொள்வதில் உடன்பாடு இருக்கவில்லை. ஊர்மிளா மூலமாகவே அமைப்பு உடைந்ததாக அவர் உறுதியாக நம்பினார். பிற்காலத்தில் ஈபிஆர்எல்எப் அமைப்பில் பெரும் தொகையான பெண்கள் இணைந்து கொண்டு செயற்பட்ட போது, இந்த பெண்களது நடத்தைகள் பற்றி அவதூறுகளை புலிகள் பரப்பியிருந்தார்கள். மிகவும் பிந்திய காலத்திலேயே புலிகள் தமது அணிதிரட்டல்களை பெண்கள் மத்தியில் மேற் கொண்டார்கள். அதுவும் அணிதிரட்டலுக்கு நல்லதொரு ஆளணி வளமாகவே பெண்களை கருதினார்கள். அமைப்பில் இணைந்து கொண்ட பெண்களும் மிகவும் கடுமையாக போராடித்தான் தமது அமைப்பினுள்ளும், வெளியிலும் பெண்கள் தொடர்பாக இந்த தப்பெண்ணங்களை முறியடித்தாக வேண்டியிருந்தது. இதனால் பெண்கள் அணிகள் மூர்க்கத்தனத்துடன் போரிடும் அணிகளாக பெயரெடுத்தன. இத்தனைக்குப் பின்பும் பெண்கள் தொடர்பாக சமூகத்திலும், அமைப்பினுள்ளும் இருந்த கருத்துக்களில் பெரிய அளவில் மாற்றங்கள்

www.tamilarangam.net

ஏற்படவில்லை. பெண்வெறுப்பு, பெண்களை இழிவு செய்வது போன்றவை சர்வ சாதரணமாக நிலவின. சமூகத்தில் பெண்கள் தொடர்பாக இருந்த பிற்போக்கு சித்தாந்தம் பெரிதும் ஆட்டம் காணமலேயே இருந்தது. பெண்களது கற்பு, சீதனம், கலாச்சாரம் போன்ற சிந்தனைகளும் சமூகத்தில் அப்படியே தொடரவே செய்தன. இன்னும் சில சந்தர்ப்பங்களில் புலிகள் அமைப்பினரே இந்த கலாச்சார அம்சங்களை சாதாரண பெண்களிடம் வலியுறுத்தவும் செய்தனர்.

பெண்கள் புலிகள் அமைப்பில் பெருமளவில் இணைந்து செயற்பட தொடங்கிய காலத்தில் பெண்களது ஆயுதம் ஏந்திய பங்களிப்பிற்கும், பெண் விடுதலைக்கும் இடையிலான உறவுகள் பற்றிய பிரச்சனைகள் முன்னுக்கு வந்தன. 'சரிநிகர்' இது தொடர்பான ஒரு கட்டுரை ராதிகா குமாரசாமி அவர்களால் எழுதப்பட்டிருந்தது. அவர் தனது கட்டுரையில், பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைமை உருவாகிவிட்ட பின்னரும் கூட பெண் விடுதலை தொடர்பான கருத்துக்கள், வேலைத்திட்டங்கள் இன்னமும் முக்கியத்துவம் பெறாமை பற்றி விமர்சித்திருந்தார். இதற்கு புலிகள் சார்பில் பதிலளித்த பெண் ஒருவர், தாம் எப்போதாவது ராதிகா குமாரசாமியிடம் தாங்கள் பெண் விடுதலைக்காக போராடுவதாக இரகசியமாக குறிப்பிட்டிருந்தார்களா? என்ற பாணியில் நையாண்டி செய்திருந்தார். உண்மையில் முக்கியமான ஒரு பிரச்சனை தொடர்பாக உரிய காலத்தில் எழுப்பப்பட்ட கேள்விகள் இவ்வாறு பெண்களைக் கொண்டே நையாண்டி செய்து ஒதுக்கித் தள்ளப்பட்டது நடந்தேறுகையில், இதனை சிறந்த நகைச்சுவையாக ரசித்த முற்போக்காளர்களும் சமூகத்தில் இருக்கத்தான் செய்தார்கள்!

ஆனால் அன்று எழுப்பப்பட்ட அதே பிரச்சனைகள் ஆண்டுகள் பதினைந்துக்கு மேலாகியும் அப்படியேதான் இருக்கினறன. பெண்கள் மற்றும் பாலியல் ஒழுக்கம் பற்றிய கருத்தாக்கங்கள் சமூகத்தில் பெரிய அளவில் மாற்றம் காணப்படாததால், புலிகள் இயக்கத்தில் இருந்த பெண்கள் சமூகத்தில் நல்ல மதிப்பை பெற்றிருக்கவில்லை. அமைப்பை விட்டு வெளியில் வந்தால் அவர்கள் சாராசரி பெண்களைவிட குறைவாகவே மதிக்கப்பட்டார்கள். இவர்கள் சாதாரண சிவிலியன்களை திருமணம் செய்வது கடினமாக இருந்தது. இதனால் இவர்களுக்கு அமைப்பினுள்ளேயே திருமணங்கள் செய்து வைக்கப்பட்டன. இதனால் திருமணத்தை அடுத்து அந்த பெண்ணுடன் சேர்ந்து ஆண் போராளியும் அமைப்பை விட்டு ஒதுங்கிப் போகும் நிலைமை ஏற்பட்டது. இதனால் 2002 ம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து பெருமளவில் போராளிகளது எண்ணிக்கையில் பற்றாக்குறை ஏற்பட்டது. யுத்தத்தின் கடைசி கட்டங்களில் சிறீலங்கா இராணுவம் பெண்களை பாலியல்

www.tamilarangam.net

வல்லுறுவு செய்கிறது என்று பெரிய அளவில் பிரச்சாரம் செய்யப்பட்டது. இதனால் பெண் போராளிகள் பெரும்பாலானோர் தற்கொலைத் தாக்குதல்களில் பங்கு கொண்டு தம்மை அழித்துக் கொண்டார்கள். சிறீலங்கா இராணுவமும் தன் பங்கிற்கு இறந்து போன பெண் போராளிகளது உடல்களை நிர்வாணமாக்கி புகைப்படங்களாக எடுத்து வெளியிட்டுக் கொண்டிருந்தனர். சரணடைந்த பின்பு பெண் போராளிகளுக்கும், அகதி முகாம்களில் உள்ள பெண்களுக்கும் இதே நிலை தொடர்வதாகவே தெரிகிறது. இந்த நிலைமை இப்படியே இருக்க, பாலசிங்கம் அவர்கள் மாவீரர் தின உரைக்கு விளக்கம் அளிக்கும் கூட்டங்களில் பெண்கள் தொடர்பான மிகவும் பிற்போக்கான கருத்துக்களை தெரிவித்துக் கொண்டிருந்தார். அமைப்பில் உள்ள பெண்கள் பற்றிய எந்தவிதமான விழிப்புணர்வும் இன்றி ஒரு கூட்டம் அதை பெரிய நகைச்சுவையாக ரசித்துக் கொண்டிருந்த சோகம் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்தது.

இப்போது நாம் தமிழ் சமூகத்தில் பெண்களின் நிலைமையை எடுத்துப் பார்த்தால் அதன் பெண்கள் தொடர்பான மதிப்பீடுகளில் எந்தவிதமான குறிப்பிடத்தக்க மாற்றங்களும் ஏற்பட்டதாக தெரியவில்லை. எந்த விதமான சலனங்களும் இன்றி பெண்ணொடுக்குமுறையின் வடிவங்கள் அப்படியே தொடர்கின்றன. இத்தனை கால யுத்தமும், அதில் ஏற்பட்ட பற்பல சமூக நெருக்கடிகள் மற்றும் பெண்களின் அர்ப்பணிப்புகள் அனைத்தையும் மீறி நிலைமைகள் அப்படியே தொடர்வது வேதனையானது. பெண்களைப் பொறுத்தவரையில் ஒரு அதிகார கும்பல் பெண்களை தமது அதிகார மமதைக்கு பயன்படுத்திக் கொண்டதாக வரலாறு இந்த நிகழ்வுகளை பதியும்.

### (ஈ) யாழ்மையவாதம்

யாழ்மையவாதம் என்பது ஈழத்தமிழர் மத்தியில் புரையோடிப் போயிருக்கும் பிற்போக்கு சிந்தாந்தங்களுள் முக்கியமான ஒன்றாகும். கடந்த காலத்திலும் இது தமிழ் தேசிய இயக்கத்தில் பல சர்ச்சைகளை ஏற்படுத்தவும், அதன் எதிரிகள் அவற்றை தமது குறுகிய நோக்கங்களுக்காக பயன்படுத்தவும் இடம் கொடுத்தது. மரபார்ந்த தமிழ் தலைமைகள் அனைத்தும் இந்த சித்தாந்த செல்வாக்கின் கீழேயே செயற்பட்டார்கள். அவ்வப்போது சிலர் யாழ்மையவாதத்திற்கு எதிராக சில முன்னெடுப்புக்களை செய்ய முன்வந்த போதும், ஈழத்தமிழரது பிரதான சிந்தனைப் போக்காக யாழ்மையவாதம் இருப்பதை அசைத்துவிட இவர்களால் முடியவில்லை. இதிலும் வேடிக்கை

www.tamilarangam.net

என்னவென்றால் யாழ்மையவாதம் தமிழரது சிந்தனையின் பிரதான போக்காக இருந்ததால், அது இந்த ஆதிக்கத்திற்கு எதிராக குரல் கொடுப்பவர்களையே 'பிரதேசவாதிகள்' என்று முத்திரை குத்திக் கொண்டிருந்ததுதான்.

தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவற்றில் மேலோங்கியிருந்த இதே போக்கு, விடுதலை அமைப்புக்களிலும் தொடரவே செய்தது. இந்த விடயத்தை எந்தவொரு அமைப்புமே ஒரு பிரச்சனைக்குரிய அம்சமாக எடுத்து அதற்கு தீர்வுகாண, அதனை நோக்கிய கருத்தியல் மற்றும் நடைமுறை சார்ந்த முன்னெடுப்புக்களை மேற்கொள்ளத் தவறினார்கள். இதனால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் பல்வேறு அமைப்புக்ளினுள்ளும் கிளம்பி சர்ச்சைகளை, மோதல்களை ஏற்படுத்தின. புலிகளிலும் இது கருணா பற்றிய பிரச்சனையாக வடிவெடுத்தது. கருணா பற்றிய பிரச்சனை புலிகள் அமைப்பினுள் எழுந்த போது அதனை அரசியல் தளத்தில் வைத்து அணுகுவதை அறவே செய்யாத இவர்கள், வெறுமனே இராணுவ மோதல்கள் மூலமாக தீர்வு கண்டார்கள். இவற்றுடன் கூடவே இன்னொரு முக்கியமான மாற்றமும் நிகழ்ந்தது. இந்த நிகழ்வுகளுக்குப் பின்பு புலிகளால் கிழக்கை தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியவில்லை. இந்த சமர்களில் கண்ட வெற்றியானது, புலிகளது இறுதி யுத்தத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் அளவிற்கு எதிர்விளைவுகளை உருவாக்கிவிட்டது. கருணா மூலமாக ஒரு முக்கிய இராணுவ தலைவரை மாத்திரம் புலிகள் இழக்கவில்லை. அத்துடன் கூடவே அமைப்பு பற்றிய முழுமையான படத்தை சிறீலங்கா அரசிற்கு தெரியப்படுத்தியதுடன், மிக முக்கியமான வளங்களும் இத்துடனேயே இழக்கப்பட்டன. யாழ்ப்பாணம் புலிகளது கட்டுப்பாட்டை விட்டுப் போன பின்பு தமிழ் மக்கள் அதிகம் வசித்த ஒரு பிரதேசமான மட்டக்களப்பே திகழ்ந்தது. இதிலிருந்துதான் கடந்த காலத்தில் பெரும் தொகையான அங்கத்தவர்கள் புலிகள் அமைப்பிற்கு அணிதிரட்டப்பட்டிருந்தார்கள். பல சந்தபர்ப்பங்களில் இது பலவந்தமாகக் கூட மேற்கொள்ளப்பட்டது. இந்த முக்கிய வளத்தை புலிகள் இத்துடன் இழந்தார்கள். இத்தோடு கூடவே இன்னும் முக்கிய வளங்களான மக்களது ஆதரவு உட்பட பலவற்றை இழந்தார்கள். இப்படியாக யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பை இழந்ததன் மூலமாக புலிகள் அமைப்பானது முக்கியமான மக்கள் தொகை கூடிய பிரதேசங்களை இழந்தது. ஆயினும் மிகவும் பரந்த பிரதேசமான வன்னியை மிகவும் குறைந்த மக்கள் தொகையுடன் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயன்றார்கள். இந்த அசமத்துவ தன்மையானது இராணுவரீதியில் கடுமையான நிலைமைகளை புலிகளுக்கு எதிராக தோற்றுவித்தது. இது முக்கியமாக இராணுவ

www.tamilarangam.net

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வெற்றியை சிறீலங்கா அரசிற்கு ஏற்படுத்திக் கொடுத்தது. கிழக்கு பெருமளவிற்கு அமைதிப்படுத்தப்பட்டதானது, தமது கவனம், வளங்கள் முழுவதையும் வன்னியை நோக்கி திருப்புவதற்கான வாய்ப்பை இராணுவத்திற்கு வழங்கியது. புலிகளது தோல்வியில் இது முக்கியமான பங்கு வகித்தது.

**புத்திஜீவிகளின் கயமை**

புலிகள் ஆரம்பம் தொடக்கம் புத்திஜீவிகள் பாலான வெறுப்புணர்வை வெளிப்படையாகவே காட்டிவந்தார்கள். அறிவு பூர்வமான செயற்பாடுகள் அனுமதிக்கப்படவில்லை. புத்திஜீவிகள் தமக்கு துதிபாடுபவர்களாகவே இருக்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவர்களது நிர்ப்பந்தங்கள் காரணமாகவே பலர் நாட்டை விட்டு மட்டுமல்ல, போராட்டத்தை விட்டுமே ஒதுங்கிக் கொண்டார்கள். புலிகள் பல புத்திஜீவிகளையும், பத்திரிகையாளர்களயும் கொன்றொழித்தார்கள். உண்மையை கூறுவதானால் தென்னிலங்கையில் இருந்த தமிழ் புத்தஜீவிகளும் பத்திரிகையாளர்களும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழ்ந்தவர்களை விட ஒப்பீட்டளவில் சுதந்திரமாகவே செயற்பட முடிந்தது. தென்னிலங்கையில் இருந்து பல புத்திஜீவிகள் அரசை கண்டித்து கருத்துக்களை, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் என்றாலும், தெரிவிக்க முடிந்தது. ஆனால் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் உள்ள புத்திஜீவிகள் புலிகளை கண்டிப்பது இருக்க, புலிகளை ஆதரிக்காமல் கூட இருக்க முடியவில்லை. தம்மை ஆதரிக்காதவர்களை எதிரிகளாக சந்தேகித்து தொல்லை செய்வது தொடர்ந்தது.

புலிகளது அடக்கு முறைகளை நன்கு தெரிந்திருந்தும் பல புத்திஜீவிகளும், முற்போக்கு எண்ணம் கொண்டவர்களும் புலிகளுடன் இணைந்து செயற்பட்டார்கள். புலிகளுடன் இணையாதபோது அவர்களுக்கு தேசத்தின் துயர் துடைக்க வேறு மார்க்கங்களே இருக்கவில்லை என்று இவர்கள் கருதியதே இதற்கான காரணம் ஆகும். இதில் தமது பதவி ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முனைந்தவர்களும் இருக்கவே செய்தார்கள். ஒடுக்கப்பட்ட தனது தேசத்தின் விடுதலைக்கான ஏனைய அனைத்து மார்க்கங்களும் அடைக்கப்பட்டிருப்பதாக கண்ட ஒருவர் இப்படியாக புலிகளுடன் இணைந்து செயற்பட முனைந்தது புரிந்து கொள்ளத் தக்கதே. ஆனால் பிரச்சனை என்னவென்றால், இவர்கள் புலிகளுடன் இணைந்து செயற்பட தொடங்கிய உடனேயே புத்திஜீவிகளாக, முற்போக்காளர்களாக இருப்பதை நிறுத்திக் கொண்டதுதான். புலிகள் அமைப்பில் இவர்கள்

www.tamilarangam.net

சாதாரண புலி விசுவாசிகள் போலவே நடந்து கொண்டார்கள். தமக்கு ஏற்கனவே திட்டவட்டமாக தெரிந்திருந்த விடயங்களை, தாம் இதுவரை காலமும் கொண்டிருந்த நியாயமான விமர்சனங்கள் அனைத்தையும் கைவிட்டு புகழ்பாட ஆரம்பித்தார்கள். முழுக்க முழுக்க தவறான, நியாயப்படுத்த முடியாத விடயங்களைக் கூட நியாயப்படுத்த முயன்றதனால் இவர்கள் மக்களுக்குள் வேண்டுமானால் குழப்பங்களை உருவாக்க முயன்றிருக்கலாம். ஆனால் இவர்கள் பொது அரங்கில் தம்மைத்தான் அம்பலப்படுத்திக் கொண்டார்கள். நிபந்தனையின் பேரில் ஆதரிப்பதாக இருந்திருப்பின் இவர்கள் புலிகளது தலைமைக்கு ஓரளவு அழுத்தத்தை கொடுக்க முனைந்திருக்க முடியும். ஆனால் இவர்களும் சேர்ந்து துதிபாட முனைகையில் அதற்கு வழிகளே இல்லாமல் போய்விடுகிறது அல்லவா?

புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் பலவந்தமான பணம் சேகரிக்க முனைந்த போது Human Right Watchஅமைப்பைச் சேர்ந்த ஜோ பெக்கர் என்பவர் இதனை கண்டித்து ஒரு அறிக்கையை விடுத்திருந்தார். இது மிகவும் விபரமானதும், பல்வேறு சாட்சிகளை முறையாக விசாரித்து அறியப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டதுமான ஒரு அறிக்கையாகும். பேராசிரியர் சிவத்தம்பி இந்த அறிக்கையின் உள்ளடக்கம் பற்றியோ, இது புலிகளுக்கு சர்வதேச அரங்கில் ஏற்படுத்தக் கூடிய நெருக்குதல்கள் பற்றியோ ஏதும் பேசாமல், அறிக்கை விடுத்த நபரைப் பற்றி நியாயமில்லாத சந்தேகங்களை கிழப்பத் தொடங்கினார். தமிழ் தேசத்தின் ஒரு மூத்த புத்திஜீவி என்ற பொருப்புணர்வு சிறிதும் இன்றி, அவரை ஒரு பெண்ணென்ற முறையில் விழித்து. அவர் அரசாங்கத்தின் பணத்தை பெற்றுக் கொண்டு செயற்படுபவர் என்ற பாங்கில் 'தினக்குரல்' பத்திரிகையில் பீஷ்மர் என்ற பெயரில் எழுதினார். உண்மையில் இவர்கள் தமக்கு புலிகளின் தலைமையுடன் இருக்கும் உறவுகளின் நெருக்கத்தை பயன்படுத்தி தேசத்தின் நன்மை கருதி நெருங்கிவரும் ஆபத்துக்கள் பற்றி எச்சரித்து இருக்க வேண்டும். அப்படி ஒரு முடிவை புலிகள் நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியாமல் அவர்களுடன் இணைவதால் கடைசிக் காலத்தில் எவற்றையோ எதிர்பார்த்து இவர் இருந்திருந்தால் இவர்கள் எல்லாம் உண்மையில் தகுதியுள்ள புத்திஜீவிகள் தானா? என்ற கேள்வி எழுவதும் தவிர்க்க முடியாததாகிறது அல்லவா?

இவ்வாறே கடந்த காலத்தில் தம்மை புரட்சியாளர்களாகவும், முற்போக்காளர்களாகவும் காட்சிக் கொண்ட இன்னும் சிலரும் இப்படியாக இணைந்து கொண்டார்கள். அவர்களும் இதே பாணியில் தமது ஆற்றல்களை முறையான விதத்தில் ஆக்கபூர்வமாக

www.tamilarangam.net

பயன்படுத்துவது பற்றி சிந்தித்தார்கள் இல்லை. புலிகளுக்கு துதி பாடுவதும், அவர்களது அக்கிரமங்களுக்கு துணை போவதுமாக இருந்தார்கள். இவர்களது கனவில் கூட முள்ளிவாய்க்கால் விபரீதங்கள் பற்றி சிந்தனைகள் வரவில்லை. இப்படியானவர்கள் தம்மை பெரிய மேதைகளாக பாவனை காட்டுவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும். இத்துடன் நிறுத்திக் கொள்ளாது "தலைக்கு இது தெரியாதா?", "தலைக்கு இதை நாம் சொல்ல முடியுமா?" என்ற பாணியில் பேச, செயற்பட தொடங்கினார்கள். இவர்களது முட்டாள்த்தனம் எந்த அளவிற்கு இருந்தது என்றால், இவர்கள் ஏனைய முன்னேறிய பிரிவினரிடமே "தலைவரின் இரட்டை வேடம்" குறித்து கதையளக்கும் அளவிற்கு போனது. இப்படி பார்க்கும் போது சம்பந்தப்பட்டவர்களது அரசியல் நேர்மை குறித்த கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகிறது. ஒன்றில் இவர்கள் தாம் சரியான முட்டாள்கள் என்பதை ஒத்துக் கொண்டு வெளியில் பெரிய பந்தா பண்ணுவதை நிறுத்தியாக வேண்டும். அல்லது, இவர்கள் தம்மை சரியான அயோக்கியர்கள் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். இத்தனை அழிவுகளுக்கு பின்னரும் இவர்கள் மக்களது முதுகில் சவாரி விடலாம் என்று நினைப்பார்களாயின் இவர்கள் சாதாரண அயோக்கியர்களாக நாம் கருத முடியாது அல்லவா?

இந்த இடத்தில் நாம் பாலசிங்கம் அவர்களது பாத்திரம் குறித்தும் சில கேள்விகளை எழுப்புவது தவிர்க்க முடியாததாகிறது. தன்னை ஒரு மார்க்சியவாதியாக கூறிக் கொள்ளும் இவர் புலிகள் அமைப்பில் சேர்ந்து இயங்குவது குறித்த கேள்விகள் தொடர்ச்சியாக எழுந்ததுண்டு. அப்போது இவருக்கு அனுதாபமுடைய சிலர், அவர் புலிகளுடன் இருப்பதால்தான் பிரபாகரன் ஓரளவு கட்டுப்பாட்டுடன் இருக்கிறார் என்று இதனை நியாயப்படுத்தியதுண்டு. எந்தளவு கட்டுபாட்டுடன் பிரபாகரன் இருந்தார் என்று இவர்கள் கூறினார்கள் என்று இப்போது சிந்தித்து பார்ப்பது அவசியம் அல்லவா? புலிகள் அமைப்பானது எமது போராட்டத்தை எந்தளவுக்கு சீரழிக்கலாமோ அந்தளவிற்கு சீரழிக்கக் கூடிய அனைத்தையும் செய்தார்கள். இத்தனைத் தவறுகளுக்கு பின்னரும் புலிகளின் தவறுகளை பகிரங்கமாக நியாயப்படுத்தும் செயலைத்தான் இவர் செய்து கொண்டிருந்தார். அத்தோடு இவர் ஆற்றிய மாவீரர்தின உரைக்கான விளக்க உரைகள் அசட்டுத்தனமானவை. ஆணாதிக்க, சாதிய வெறியுடன் கூடியவை. தமிழ் மக்களை மிகவும் குறைந்த கலாச்சார மட்டத்திலேயே வைத்திருப்பதை நோக்கமாக கொண்டவை. இந்த வகையில் பாலசிங்கம் தமிழருக்கு ஒரு சாபக்கேடுதான். ஒருவேளை இவர் போன்றவர்கள் இப்படியாக முண்டு கொடுக்காமல் விட்டிருந்தால் இப்போது நடந்து முடிந்ததைவிட இன்னும்

www.tamilarangam.net

என்ன மேலதிகமாக கவிழ்ந்து இருக்க முடியும். ஒருவேளை இதனை விட விரைவாக புலிகள் அழிந்திருக்கலாம். அதனால் இழப்புக்கள் இன்னும் குறைவாக இருந்திருக்க முடியுமேயன்றி வேறெதுவும் நட்டம் பெரிதாக ஏற்பட்டிருக்க முடியுமா? என்று நாம் ஒரு தடவை மீள் பரிசோதனை செய்தாக வேண்டியுள்ளது அல்லவா? இதற்கு மாறாக, இப்படிப் பட்ட புலிகளின் தவறுகளை சரிவர இனம் கண்டு கொண்டவர்கள் புலிகளுடன் அப்படியே அள்ளப்படாமல், அவர்களை ஆதரிப்பதற்கு பலமான நிபந்தனைகள் போட்டு செயற்பட்டிருந்தால், ஒரு வேளை புலிகள் தம்மை ஓரளவிற்கு மாற்றிக் கொள்ள நிர்ப்பந்திக்கப் பட்டிருப்பார்களா? என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நேரம் அல்லவா இது? இவர்கள் எவருமே புத்திஜீவிகள் என்ற வகையில் தமது பாத்திரத்தை அறவே ஆற்றவில்லை. மாறாக, தமது முன்னைய புத்திஜீவி தகமைகளை பயன்படுத்தி புலிகளது தவறுகளுக்கு கவசம் அளிக்கவே முயன்றார்கள். அது அறவே முடியாமல் போய்விட்டது என்பதுதான் உண்மையானது.

## தவறுகளை ஒத்துக் கொள்ளாமை

எந்தவொரு போராட்ட அமைப்புமே தனது போராட்டத்தில் பல தவறுகளை விட்டுத்தான், அவற்றிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுத்தான் முன்னேற முடியும். புலிகள் அமைப்பிற்கும் இதுதான் நடைபெற்றது. ஆனால் அவற்றை ஒத்துக் கொள்ள பிரபாகரன் தயாராக இருக்கவில்லை. அப்படி ஒத்துக் கொள்வதால் தனது தலைமைக்கு ஆபத்து நேர்ந்துவிடும் என்ற அச்சம் அவரை கடைசி வரையில் இந்த தவறுகளை ஒத்துக் கொள்வதில் நின்றும் தடுத்து வந்தது. உதாரணத்திற்கு சிலவற்றை பார்ப்போம்.

புலிகளில் ஆரம்ப செயற்பாடுகளின் போது அவர்களது நிலைப்பாடுகள் பின்வரும் ஐந்து விடயங்களை குறிப்பிடப்பட்டிருந்தது.

1. தமிழிழம்தான் தீர்வு
2. ஆயுத போராட்டம் மூலமே அதனை அடைய முடியும்.
3. அரசு அமைக்கப்பட்டதும் அமைப்பை கலைத்துவிட்டு நாட்டை அரசியல் தலைவர்களிடம் ஒப்படைத்து விட்டு ஒதுங்குவது.
4. புகைத்தல், மது, காதல் தடை.
5. அமைப்பை விட்டு விலகினால் ஒதுங்கிவிட வேண்டும். வேறு அமைப்பை கட்ட முயலக் கூடாது.

இப்போது இவற்றை பார்க்கும் எவருக்குமே, இந்த நிலைப்பாடுகள் இளமைப் பருவத்தில் வெறும் இலட்சிய வேகத்தில் எடுக்கப்பட்ட

யாதார்த்ததிற்கு பொருந்தாத நிலைப்பாடுகள் என்பது புரிந்துவிடும். இவற்றில் 3, 4, 5 ஆகிய விடயங்கள் தொடர்பான இந்த விமர்சனத்தை அப்போதே பலரும் முன்வைத்து இருந்தார்கள். இந்த விமர்சனங்களை உடனடியாக இவர்கள் ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல, இந்த விதிகளை மீறியதற்காக பல நூறு பேர்கள் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள். புலிகள் இயக்கம் உடைந்ததற்கும் காதல் பிரச்சனையே என்று பல ஆயிரம் தடவைகள் விளக்கங்கள் இவர்களால் திரும்பத்திரும்ப முன்வைக்கவும் பட்டன. ஆனால், இயற்கை மிகப்பெரிய ஆசானாக இருந்து இந்த விதிகள் ஒவ்வொன்றையும் தலைவர் மூலமாகவே ஒவ்வொன்றாக உடைக்க வைத்தது. ஆனால் இத்தகைய மீறல்களுக்குப் பின்னால் இந்த விதிகளில் நடைமுறை சாத்தியப்பாட்டின்மை பற்றிய பரிசீலனையை முன்வைப்பதன் மூலமாக இந்த தவறுகளை முறையாக திருத்திக் கொண்டிருக்கலாம். ஆனால், இதில் காட்டிய பிடிவாதம், வீண்வீம்பு போன்றவை, தொடர்ச்சியாக இன்னும் பல இன்னுயிர்களை இவர்கள் இதே காரணங்களை சொல்லி அழிப்பதற்கே வழிவகுத்தது.

சரி அங்கத்தவர்கள், மற்றும் மக்களது நிலைப்பாட்டில் இருந்து பிரச்சனையை அனுகுவோம். ஒரு விதியை தலைவர் மீறிவிட்டார் என்பது அனைவருக்கும் தெரிந்தே இருக்கிறது. ஆனால் அதனை ஒத்துக் கொள்ளத் தயாராக அவர் இல்லை. அதேவேளை இதே விதிகளை காரணமாக காட்டி இன்னும் பலர் தண்டிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் காண்கிறார்கள். இதற்கு மேல் முழு அமைப்பும் ஊழல் படிந்து போய்விட மாட்டாதா? அதிகாரத்தில் இருந்தால் எல்லா விதிகளும் விலக்களிக்கும் என்பதுதானே ஊழலின் தோற்றுவாயாக அமைகிறது. ஒரு சாதாரண தவறை ஒத்துக் கொள்ள மறுப்பதானது தொடர்ந்தும் இன்னும் இன்னும் பெரிய தவறுகளுக்கு காரணமாகிவிடுகிறது அல்லவா? அப்படியாக தவறுகளுக்கு அப்பாற் பட்டவராக ஒருவரை காட்டிக் கொள்ள என்ன தேவை எழுகிறது என்று சிந்திக்க வேண்டியாகிறது அல்லவா? ஒரு தனிநபரது தனிப்பட்ட அரசியல் பலவீனங்களுக்கும், அவரது பாதுகாப்பற்ற உணர்விற்கும் ஒரு தேசம் முழுவதும் விலையை செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டதா? என்ற கேள்வியை நாம் எழுப்பியாக வேண்டியுள்ளது அல்லவா? இப்படியாக ஒரு தனிமனிதரில் இந்தளவு பொறுப்பை நாம் சுமத்துவது நியாயமானதுதானா? என்ற கேள்வி எழுவதும் தவிர்க்கப்பட முடியாது அல்லவா? ஒரு தனி மனிதனை அதிமானுடனாக சித்தரிப்பது, அவரை கடவுளாக ஆக்குவது எவ்வளவு தவறானதோ, அதே வகையான தவறு நடந்த அனைத்து தவறுகளுக்கும் ஒரு தனி மனிதனை பொறுப்பாக்கி அவரை அசுரனாக சித்தரித்துவிடுவதிலும் அதே தவறு ஏற்படுகிறது

www.tamilarangam.net

அல்லவா? அப்படியானால் நாம் இங்கு வரலாற்றில் தனிநபரது பாத்திரம் குறித்த விவாதத்திற்கு மறுபடியும் வந்தாக வேண்டியுள்ளது அல்லவா? இப்படிப்பட்ட நிலைமைகள் உருவானதில் சமூகத்தின், அதன் கூறுகளின், மற்றும் முன்னேறிய பிரிவினராகிய நாம் வகித்த பாத்திரங்கள் என்ன என்று கேட்பதும் தவிர்க்க முடியாததாகிறது அல்லவா? அல்லது நாம் இப்படிப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் போது நாம் கையாளும் கோட்பாட்டு சாதனங்களில் என்ன குறைபாடுகள் உள்ளனவா? என்றும் கேட்டுத்தானே ஆக வேண்டும். அல்லது வரலாறு என்று பார்க்கும் போது அது ஒரு மிக நீண்ட காலகட்டத்தை குறிப்பதாகவும், அதனுடன் ஒப்பிடும் போது இப்போது நாம் பேசும் விடயங்கள் சிறிய கால கட்டங்களை குறிப்பதாக கருதலாமா? அப்படிப்பட்ட கால சட்டகத்தினுள் இப்படிப்பட்ட தனிநபர்களது பாத்திரங்கள் கணிசமான பாத்திரத்தை நாம் மறுக்க முடியாது என்பதா?

## இலாப நோக்கில் அமைந்த அமைப்புச் செயற்பாடுகள்

ஆரம்ப காலத்தில் எல்லா விடுதலை அமைப்புக்களும் முற்றிலும் தொண்டர்களை அடிப்படையாக கொண்டதாகவே இயங்கிவந்தன. அதாவது, அங்கத்தவர்கள் போராட்டத்தின் பாலான தமது அக்கறை ஒன்றையே அடிப்படையாக கொண்டு மட்டுமே அமைப்புடன் இணைந்து கொண்டார்கள். இப்படியாக இணைபவர்களின் பராமரிப்பிற்கு எனவும், அவர்களது குடும்பத்தவர்களது பராமரிப்புக்கு என்றும் நிதி வழங்கப்பட்ட போதிலும் அது முற்றிலும் அந்தந்த அங்கத்தவர்களது தேவையை அடிப்படையாக கொண்டதாக அமைந்ததேயன்றி, அவர்களது உழைப்பு அல்லது பங்களிப்பு போன்றவற்றை அடிப்படையாக கொண்டதாக அமையவில்லை. ஒருவித்தில் இது ‘சக்திக் கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்’ போன்றதாகவே இருந்தது. புலிகள் அமைப்பிலும் இதுவே நிலைமையாக இருந்தது. காலப்போக்கில் அமைப்பானது தமது அங்கத்தவர்களாக அல்லாத பலரையும் அமைப்பு, மற்றும் நிர்வாகம் தொடர்பான வேலைகளில் நியமித்தது. இப்படி நியமிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்பத்தில் குறிப்பட்ட வேதனம் வழங்கப்பட்டது. பிற்காலத்தில் சில குறிப்பிட்ட வேலைகளைச் செய்தவர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கு கொமிசன் அடிப்படையில் ஊதியம் அளிக்கப்பட்டன. அதிலும் குறிப்பாக புலம் பெயர் நாடுகளில் புலிகளுக்கு நிதி சேகரிப்பவர்களுக்கு இந்த விதமாக ஊதியங்கள் வழங்கப்பட்டன. அதாவது இந்த முகவர்கள் தாம் சேர்க்கும் நிதியின் அளவிற்கு ஏற்ப சேர்க்கப்பட்ட நிதியிலிருந்து 10 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் அளவிலாக கொமிசன் வழங்கப்பட்து.

www.tamilarangam.net

இப்படியாக கொமிசன் வழங்கும் முறையானது சம்பந்தப்பட்டவர்களிடம் ஒருவிதமான முரண்பட்ட நலன்களை (Conflict of Interest) உருவாக்குவதற்கு காரணமாக அமைந்தது.

**(அ) முரண்பட்ட நலன்கள் (Conflict of Interest)**

இதனை சற்று விரிவாக நோக்குவோம். இந்த அரசியல், அமைப்புப் பணிகள் எல்லாமே தேசத்தின் விடுதலை என்ற நோக்கத்தை இலக்காகக் கொண்டவையாக இருப்பதை ஒரு விடுதலை அமைப்பு உத்தரவாதம் செய்து கொள்வது அத்தியாவசியமானது. செய்யப்படும் ஒவ்வொரு பணியும் அதனை செய்யும் ஒருவருக்கு கிடைக்கும் இலாபம் என்ற அக்கறையில் இருந்து அல்லாமல், தேசத்தின் பொதுவான நலன்கள் என்ற அடிப்படையில் இவை அமைவதை உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டும். இறுதிக் காலம் வரையில் பல்வேறு போராளிகளும் தமது உயிர்களை அர்ப்பணித்து போராடியது எல்லாம் தமக்கோ அல்லது வேறு யாருக்கோ என்ன இலாபம் கிடைக்கும் என்ற அக்கறையினால் அல்ல. இப்படியாக போராடும் போராளிகளும் கூட தனிமனிதர்கள் என்ற வகையில் அவரவருக்கான சொந்த நலன்கள் என்பவை இல்லாமல் இல்லை. ஆனால் இந்த நலன்கள் எப்போதும் தேசத்தின் நலன்களுக்கு உட்படுகின்றனவா இல்லையா? என்பதே இங்குள்ள பிரச்சனையாகிறது. முரண்பட்ட நலன்கள் (Conflict of Interest) என்பது விடுதலை அமைப்புகளுக்கு மட்டுமல்ல, சாதாரண முதலாளித்துவ அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கூட கவனத்தில் கொள்ளப்படும் ஒரு அறநெறி சார்ந்த அம்சமாக முக்கியத்துவம் பெறுகிறது.

தேசத்தின் நலன்களை முதன்மை படுத்தி அமைப்பில் செயற்படுபவர்களால் அமைப்பினுள் எழும் அதிகாரத்துவ போக்குகள் மற்றும் ஊழல் படிந்த நடைமுறைகளுடன் சமரசம் செய்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இதனால் பலர் தலைமையுடன் முரண்பட, அதனால் அமைப்பை விட்டு வெளியேற அல்லது அமைப்பினுள் அழித்தொழிக்கப்பட நேர்ந்தார்கள். இன்னும் சிலரோ, போராட்டத்தை விட்டு ஒதுங்கிப் போக மனமில்லாதவர்களாக அமைப்பினுள் நடப்பவற்றை கண்டும் காணாமலும் இருந்து கொண்டு போராட்டம், மற்றும் துன்பப்படும் மக்கள் என்றளவில் தமது அக்கறைகளை குறுக்கிக் கொண்டு, ஏனையவற்றை சகித்துக் கொண்டு வாழ பழகிக் கொண்டார்கள். இதே வேளை அமைப்பின் நேரடியான பணிகளாக அமையாத நிர்வாக பணிகளுக்காக வெளியாட்களை பணிக்கு அமர்த்துவது பெருமளவில் தொடங்கியது. அடுத்ததாக இது அமைப்பின்

www.tamilarangam.net

பணிகளுக்கும் கூட வெளியாட்கள் ஈடுபடுத்தப் படலானார்கள். இதன் அடுத்த கட்டம், உயர்ந்த பட்ச விளைவுகளை எதிர்பார்த்து ஊக்குவிப்பு தொகைகளை வழங்கும் முறைமைகள் நடைமுறைக்கு வருகின்றன. இதற்கு மேல் எல்லாமே வர்த்தகமயமாகிப் போய்விட்டன. பல்தேசிய நிறுவனங்கள் தமது நிறுவனங்களை வெளியாருக்கு குத்தகை அடிப்படையில் விடுவது போல (Franchised)பணம் என்பதே அமைப்புச் செயற்பாடின் இறுதி இலக்காக அமைந்துவிடுகிறது.

இந்த விதமான நடைமுறைகள் இப்போதெல்லாம் பல முதலாளித்துவ நிறுவனங்களில் கூட கடைப்பிடிக்கப்படுவது கிடையாது. அதிலும் ஒரு விடுதலை அமைப்பு என்று கூறப்படும் ஒரு அமைப்பில் இப்படிப் பட்ட நடைமுறைகள் கணிசமான பிரச்சனைகளை தோற்றுவித்து விடுகின்றன. புலிகள் அமைப்பானது பணத்தை திரட்டிக் கொள்வதற்கு எந்தவிதமான நடைமுறைகளையும் கைக்கொள்ள தயங்கியது கிடையாது. மக்களை எல்லாவிதத்திலும் வதைத்து இந்த பணத்தை பெற்றுக் கொள்ள முனைந்தார்கள். சாதரண மக்களுக்கும், ஏன் அமைப்பின் அங்கத்தவர்களுக்கும் கூட போராட்டத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு எந்தவிதமான உரிமையையும் மறுத்துவிட்ட புலிகள் இந்த போராட்டத்தின் அத்தனை சுமைகளையும் இதே மக்கள், எந்தவிதமான முணுமுணுப்பும் இன்றி, சுமக்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார்கள். ‘பிரதிநிதித்துவம் கிடையாத வரிவிதிப்பு’ (Taxation without Representation)என்பது பல புரட்சிகளுக்கு காரணமாக அமைந்ததை புலிகள் அறியாதவர்களாக இருந்தார்கள். இந்தவிதமாக பணம் சேகரிப்பதற்கு தமது அங்கத்தவர்களை விட வெளியாட்களை பயன்படுத்த முனைந்தார்கள். ஏற்கனவே புலிகளால் அடிக்கடி மக்களிடம் விடுக்கப்படும் பணத்திற்கான கோரிக்கைகள் நியாயமற்றதாக பலரும் உணர்ந்தார்கள். அமைப்புடன் சுமுகமான உறவில் உள்ள அல்லது புலிகள் அமைப்பை ஆதரிப்பவர்கள் மத்தியிலேயே இது தொடர்பாக அதிருப்தி உணர்வுகள் பெருகி வரலாயிற்று. அதைவிட புலிகளுடன் உடன்பாடில்லாதவர்ளையும் கூட இப்படியான நோக்கங்களுக்காக நெருக்குவது, பயமுறுத்தி பணத்தை பெற முயல்வது மிகவும் பிரச்சனைக்குறிய விடயமாக வளர்ந்து வந்தது. இந்த கட்டத்தில் அமைப்பின் அங்கத்தவர்களால் இந்த பணம் சேகரிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்குமானால் இந்த விடயத்தில் இருந்த நெருக்கடிகள் பற்றி அமைப்பிற்கு தெரியப்படுத்த, அல்லது இது தொடர்பாக அமைப்பினுள் மாற்று கருத்துக்களை அல்லது ஆலோசனைகளைக் கூட வைப்பதற்கான நிலைமைகள் இருந்திருக்கலாம். ஆனால் வெளியாட்கள் அதுவும் கொமிசன் அடிப்படையில் பணத்தை சேகரிக்க முனையும் போது தேசம், அமைப்பு,

விடுதலை, மக்களின் நல்வாழ்வு, ஏன் அந்தந்த நாடுகளில் உள்ள சட்ட ஒழுங்கு நிலைமைகள் கூட இவர்களுக்கு ஒரு பொருட்டாக தென்படாமற் போனது. இவர்களைப் பொறுத்தவரையில் இந்த பண சேகரிப்பு என்பது பெருமளவு வருவாயை ஈட்டித் தரும் ஒரு சுலபமான ஒரு வழி தவிர வேறொன்றும் இல்லை என்ற நிலைமை உருவாகிவிட்டிருந்தது.

இதனால் இப்படியாக பணத்தை சேகரிப்பவர்கள் தேசம், மக்களது நல்லுணர்வு, அந்தந்த நாட்டில் வசிப்பவருக்கு இருக்கும் சட்டபூர்வமான பாதுகாப்புகள் போன்ற எதைப்பற்றியும் கவலைப்படாமல் மக்களை நெருக்கத் தொடங்கினார்கள். வீடுகளுக்குள் அத்து மீறி புகுந்து பணத்தை பலவந்தமாக கேட்பது: அப்படியாக பணம் தரப்படாத வரையில் தாம் வீட்டிலிருந்து வெளியேறப் போவதில்லை என்று மறியல் செய்வது: மிரட்டுவது என பல வழிகளில் இது தொடரலாயிற்று. போரட்டத்தில் இதன் பக்க விளைவுகள் பற்றி சிந்திக்கும் நிலைமை சம்பந்தப்பட்டவர்களிடம் அறவே இருக்கவில்லை. இவர்களைப் பொறுத்தவரையில் இதுவோர் இலகுவாக பணம் சேர்க்கும் ஒரு தொழில் மட்டுமே. இதில் எவ்வளவு தீவிரமாக செயற்படுகிறார்களோ, அதற்கேற்ப பலன் அதிகளவில் கிடைத்தது. இப்படியாக மக்களை அளவிற்கு அதிகமாகவும், எந்த விதமான நியாயமும் இன்றி மிரட்ட நேரிட்டது கடைசியில் பொலிசில் இவர்கள் முறையிடும் நிலைமையை தோற்றுவித்தது. இறுதியில் இது புலிகள் அமைப்பை தடை செய்வதற்காக சொல்லப்பட்ட காரணங்களுள் ஒன்றாக அமைந்தது. இப்படியா செய்யாவிட்டாலும் ஒரு கட்டத்தில் புலிகள் அமைப்பை இந்த நாடுகளில் பல, ஒரு பயங்கரவாத அமைப்பென்று முத்திரை குத்தி தடை செய்திருக்க கூடும் என்பது உண்மையே. ஆனால் இந்த நடவடிக்கையானது புலிகளுக்கு இது தொடர்பான விடத்தில் கிடைக்கக் கூடிய நியாயமான ஆதரவுகளையும் இல்லாமற் செய்தது. புலிகளைப் பொறுத்தவரையில் இது இராஜதந்திரரீதியாக கிடைத்த ஒரு பலத்த அடியாகவே அமைந்தது.

### (ஆ) ஒப்பந்த கொலைகாரர்கள் (Contarct Killers)

80 களின் ஆரம்ப காலங்களில் அனைத்து இயக்கங்களும் சமூகத்தில் அதுவரையில் அதிகாரத்துவத்துடன் செயற்பட்ட உதிரிப்பாட்டாளிகளை, அதிலும் குறிப்பாக சண்டியர்களை, வேட்டையாடினர். தமக்கு போட்டியாக ஒரு உள்ளூர் அதிகாரம் செயற்பட அவர்கள் அனுமதிக்காமை ஒரு காரணம், அத்துடன் சமூகத்தில் உதிரிப்பாட்டாளிகள் பாத்திரம் பற்றி விழிப்புணர்வின்றி, ஆதிக்க

www.tamilarangam.net

சித்தாந்தத்தின் வழி நின்று அவர்களை சமூகத்தின் குப்பை கூளங்களாக கருதி சமூகத்ததை “சுத்திகரிக்க” முனைந்தமை இதன் இன்னோர் காரணமாகவும் அமைந்திருந்தது. பிற்காலத்தில் இந்த சண்டியர்கள் வகித்த அதே பாத்திரத்தை பல்வேறு விடுதலை அமைப்புக்களும் எடுத்துக் கொண்டமை முரண்நகையான இன்னொரு விடயமாகும். ஆனால் நாம் இங்கு குறிப்பாக பேச விரும்புவது, 2000 ம் ஆண்டுகளில் இந்த உதிரிக் கூறுகளை புலிகள் அமைப்பானது பயன்படுத்த முனைந்த விதம் குறித்ததாகும். 2000 ம் ஆண்டில் சிறீலங்கா இராணுவம் புலிகளை யாழ்ப்பாணத்தை விட்டும் வெளியேற்றினார்கள். இதனைத் தொடர்ந்து புலிகள் அமைப்பானது யாழ்பாணத்தில் தலைமறைவாக செயற்பட்டார்கள். இந்த கட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த தமது ஆதரவாளர்கள் பலரை வன்னிக்கு எடுப்பித்து பயிற்சி அளித்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்ப அனுப்பி வைத்தார்கள். இதன் போது யாழ்ப்பாணத்தில் இருந்த பல உதிரி கூறுகளையும் இவ்வாறு பயிற்றுவித்தார்கள். பயிற்சியின் பின்பு இவர்களுக்கு வெட்டிக் குறுக்கப்பட்ட துப்பாக்கிகளையும், எறிகுண்டுகளையும் வழங்கி, அவர்களிடம் இராணுவத்தை தாக்குமாறு பணித்தார்கள். இவர்களை தாக்குதலை நடத்துவதற்கு ஊக்குவிக்கும் நோக்குடன் இவர்கள் நடத்தும் தாக்குதல்களுக்கு ஏற்ப பணமும் பரிசாக வழங்கப்பட்டன. குறிப்பிட்ட ஒருவரை தாக்கினால், தாக்கப்பட்டவரது தரத்தை பொறுத்தும், அவரில் ஏற்படுத்தப்பட்ட சேதத்தின் அளவைப் பொறுத்தும் இந்த ஊக்குவிப்பு தொகை வேறுபட்டது. உதாரணமாக, ஒரு கேர்ணல் கொல்லப்பட்டால் அதற்கென ஒரு தொகையும், ஒரு சாதாரண சிப்பாய் காயப்பட்டால் அதற்கு இன்னொரு தொகையும் வழங்கப்பட்டன. இந்த கொடுப்பனவு விகிதம் ஏற்படுத்தப்பட்ட இழப்பிற்கு ஏற்ப வேறுபட்டுக் கொண்டே போனது. ஆரம்பத்தில் இந்த பணத்தொகையை பெறுவதற்காகவே இந்த நபர்கள் இராணுவத்தினரை தேடி தாக்குதல்களை நடத்தினர். காலப்போக்கில் இவர்கள் ஆபத்தான தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பதிலாக சாதாரண சிவிலியன்கள் மீது கொள்ளை, பாலியல் வல்லுறவு என்பவற்றையும் மேற் கொள்ளலானார்கள். இப்படியான இந்த உதிரிகளது நடவடிக்கைகள் எல்லை மீறிப் போகவே, புலிகள் அமைப்பினரும், ஈபிடீபி யினரும் இவர்களை முற்றாக அழித்தொழிக்கலானார்கள்.

மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒரு விடுதலை அமைப்பின் நடவடிக்கைகள் போல அமையவே இல்லை. உதிரிக் கூறுகளை அணிதிரட்டியது தவறாக கொள்ள முடியாது. ஆனால் அவர்களுக்கு முறையான அரசியல் கல்வியூட்டலின் மூலமாக அமைப்பானது

www.tamilarangam.net

அவர்களை சமூகவிரோத நடவடிக்கைகளில் இருந்து மீட்டு, முறையான அரசியல் மயப்படுத்தியிருக்க வேண்டும். இதன் பின்பே இவர்களை பயிற்றுவிப்பது, மற்றும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது போன்ற விடயங்களை தொடங்கியிருக்க முடியும். இப்படியான மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் எதனையும் செய்யாது விட்டுவிட்டு, அப்படியே அவர்கள் கைகளில் ஆயுதங்களை ஒப்படைப்பதும், அதுவும் கூலிக்கு வேலை கொடுப்பதும் திட்டவட்டமாக ஒரு விடுதலை அமைப்பின் வேலைப்பாணியல்ல. குத்தகைக்கு கொலைகாரர்களை வேலைக்கு அமர்த்தும் (Contract Killers) ஒரு பாதாள உலக வேலைப்பாணியே ஆகும். இங்கு தவறு இந்த உதிரிக் கூறுகளிடம் இல்லை. மாறாக இப்படிப்பட்ட வேலை முறைகளை உருவாக்கிய புலிகளிடமே உள்ளது. தனிநபர்களை முரண்பட்ட நலன்கள் கொண்ட நிலையில் (Conflict of Interest)செயற்படுமாறு அனுமதித்துவிட்டு, பின்பு அதில் தவறுகளை கண்டுபிடிப்பது ஒரு அமைப்பின் வேலைமுறையாக முடியாது. இப்படியாக புலிகள் அமைப்பானது ஆயுத நடவடிக்கைகளின் போதும் இவ்வாறே ஒரு வர்த்தக நிறுவனம் போலத்தான் செயற்பட்டது. இந்த விதமான ஒவ்வொரு நடவடிக்கைகளும் மக்களை போராட்டத்தில் இருந்து மேலும் மேலும் அந்நியப்படுத்தவும், ஒட்டு மொத்தத்தில் போராட்டத்தை பலவீனப்படுத்தவுமே உதவியது. உண்மையில் இந்த விதமான நடவடிக்கைகளை நோக்கி நகர்வது புலிகள் அமைப்பானது மிகவும் பலவீனப்பட்ட நிலையை அடைந்ததன் வெளிப்பாடேயாகும். போராட்டத்தில் அக்கறையுள்ள பலரையும் தலைமை தாங்கும் வல்லமையற்ற தலைமையானது கடைசியில் சமூகத்தின் கடைப் பிரிவுகளையும் கூட அணி திரட்டி, கடைக் கோடித்தனமான உத்திகள் மூலமாக தக்க வைத்துக் கொள்ள முனைந்ததன் வெளிப்பாடே இதுவாகும்.

**(இ) அங்கத்தவர்களை பராமரிக்காமை.**

இதேவிதமான தன்மைகளை புலிகள் அமைப்பினர் தமது அங்கத்தவர்கள் விடயத்திலும் வெளிப்படுத்தினர். அதாவது, புலிகள் அமைப்பானது அதன் அங்கத்தவர்களது, ஆதரவாளர்களது பாதுகாப்பை அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாக பார்க்க தவறினார்கள். ஆரம்ப காலத்திலேயே அமைப்பானது தனது அங்கத்தவர்களை விட ஆயுதங்களைப் பற்றி அதிகம் கவலைப்படுவதாக விமர்சனங்கள் எழுந்த போதிலும் பிற்காலத்தில் இது மிகவும் வெளிப்படையானதாகவே தென்படலாயிற்று. பல ஆபத்து மிக்க பணிகளில் பல உறுப்பினர்கள் சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் செயற்றட நேர்ந்தது. இவர்களுக்கு இன்னும் பல ஆதரவாளர்களும் உதவி

www.tamilarangam.net

செய்வதன் மூலமாக தம்மையும் இப்படிப் பட்ட ஆபத்தான நிலைமைகளுக்கு உட்படுத்திக் கொண்டார்கள். ஆனால் ஏதாவது ஒரு காரணத்தால், இவர்கள் அடையாளம் காணப்பட, அதனால் கைதாக நேரும் நிலைமைகள் உருவானபோது, இப்படிப் பட்டவர்களை காப்பாற்ற, இவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்த புலிகள் அமைப்பானது தன்னால் ஆன அனைத்தையும் செய்ய முயலவில்லை. தலைமையானது பாதுகாப்பாக தனது வன்னிப் பிரதேசங்களில் இருந்ததனால் இது தலைமையின் பாதுகாப்பு பற்றிய ஒரு விடயமாக கருதப்படவில்லை. ஆதலால் இந்த விடயத்தில் அறவே அக்கறை செலுத்தப்படவில்லை. இதனால் வேறு தொடர்புகள் உள்ள, ஓரளவு செல்வாக்கான சமூக பின்னணியில் இருந்து வந்தவர்கள் தப்பிக் கொள்ள முடிந்தது. அப்படிப் பட்ட வசதிகள் இல்லாதவர்கள் கைதாக அல்லது தற்கொலை செய்து கொள்ள நேர்ந்தது. இவ்வாறே, அமைப்பினுள் பிரச்சனைகள் உருவாகி சிலரை இடைநிறுத்தம் செய்ய நேர்ந்த போது அப்படிப்பட்டவர்களுக்கு தொடர்ந்தும் அவர்களது அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான கொடுப்பனவுகள் எதனையும் கொடுக்காது விட்டுவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளில் ஓரளவு வசதியான, நல்ல தொடர்புகள் உள்ளவர்கள் சமாளித்துக் கொண்டார்கள். வறிய சமூகப் பின்னணியைக் கொண்டவர்கள், இப்படிப்பட்ட உறவுகளை உருவாக்கிக் கொள்ள முடியாதவர்கள் அன்றாட வாழ்க்கையை ஓட்டவே மிகவும் கஸ்டப் பட்டார்கள். அதிலும் மோசமானதாக அமைந்தது தமிழர்கள் அதிகம் வாழாத வேறு நாடுகளில் தங்கியிருந்து அமைப்பின் ஆயுதம் கொள்வனவு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவரது நிலைமையாகும். 2002 ம் ஆண்டில் கேபி இடைநிறுத்ததைத் தொடர்ந்து கிழக்காசிய நாடுகள் பலவற்றில் தங்கியிருந்து செயற்பட்ட பலர் அப்படியே கைவிடப்படலானார்கள். இவர்கள் இதனால் அன்றாட வாழ்க்கையை ஓட்டவே மிகவும் கஸ்டப்படலானார்கள். இவ்வாறே வேறு நாடுகளில் அமைப்பு பணிகளில் ஈடுபட்ட பலர் கைதாக நேரும் போதும் அவர்களை மீட்பதற்கு உருப்படியாக எதனையும் செய்ய தவறினார்கள். இன்னமும் சில பகிரங்கமான சம்பவங்களில் முறையான வழக்குகளை நடத்துவதன் மூலமாக சம்பந்தப்பட்டவர்களை மீட்க முடியும் என்ற நிலைமை இருந்த போதிலும் கூட, இதன் மூலமாக சம்பந்தப்பட்டவர் மாத்திரமன்றி, எதிர்காலத்தில் ஏனையவர்கள் கூட இப்படிப்பட்ட வழக்குகளினால் அநாவசியமான தொல்லைகளுக்கு உள்ளாக்கப்படுவது தவிர்க்கப்படலாம் என்ற நிலைமை இருந்தும் கூட, அவர்களுக்காக மேற்கொண்டு பணம் செலவிடப்பட மாட்டாது என்று வெளிப்படையாகவே கூறப்பட்டது. இப்போது கூட கைதாகி இராணுவத்தின் பாதுகாவலில் வைக்கப்பட்ட புலிகளின் தலைவர்கள் பலரும் கொல்லப்படும் அபாயம் அதிகளவில் உள்ளது. இவர்களின் பெயரில் ஆட்கொணர்வு

www.tamilarangam.net

மனுக்களை தாக்கல் செய்வதன் மூலமாக இப்படிப்பட்ட கொலைகளை தடுப்பது மற்றும் அதனை நோக்கிய நெருக்குதல்களை கொடுப்பது போன்ற பல நடவடிக்கைகளை புலிகள் அமைப்பினர் மேற்கொள்ளலாம். ஆனால் கேபியின் விடயத்தில் இது தொடர்பாக பேசியவர்களிடம் அதற்கான பணம் தம்மிடம் இல்லையென்று கூறப்பட்டதாக தெரிகிறது.

இங்கு ஒரு விடயம் தெளிவாகிறது. அதாவது, புலிகள் அமைப்பானது அங்கத்தவர்கள் விசயத்தில் முற்றிலும் ஒரு வர்த்தக நிறுவனம் போலவே செயற்பட்டார்கள். இலாபம் உள்ள வரையில் அவர்களை சொத்துக்கள் (Asset) போல பேணி அதில் வரும் பலன்களை பெற்றுக் கொண்டார்கள். எப்போது அவர்கள் சுமையாக(Liable) மாறினார்களோ அப்போதே அவர்களை கைவிட்டு தாம் மேற்கொண்டு இழப்புகளை அடையாமல் தம்மைப் பாதுகாத்துக் கொண்டார்கள். இதுவேதான் தலைவர் பிரபாகரனின் மரணம் தொடர்பான விடயத்திலும் நடந்தது. அதாவது **சொத்தாக இருந்த தலைவர் சுமையாக மாறியதும் (From asset to Liable)அவரை முற்றாக கைவிட்டு அடுத்த பணம் சேகரிப்பு பற்றி கவலைப்படுகிறார்கள்**.

இங்கே நாம் ஒரு விடுதலை அமைப்பானது 'அதிகாரவர்க்கமயப்படுவது' பற்றிய வகைமாதிரியான உதாரணத்தை காண்கிறோம். ஆரம்பத்தல் விருப்பார்வத்துடன் பெருமளவில் மக்கள் வந்து போராட்டத்தில் தாமாக பங்களிப்பை வளங்க முன்வந்த நிலைமை இருந்தது. பின்பு அமைப்பினுள் ஜனநாயக நடைமுறைகள், அரசியல் விவாதங்கள் அனைத்தும் மறுக்கப்பட்ட தனித்தலைமை அமைப்பினுள்ளும், போராட்டம் முழுவதிலும் தோற்றுவிக்கப்பட்ட பின்பு, மக்களிடம் இருந்தும், அமைப்பின் அங்கத்தவர்களிடமிருந்தும் முன்பிருந்த, ஆர்வத்துடன் கூடிய அர்ப்பணிப்பு மிக்க உழைப்பை எதிர்பார்க்க முடியாத நிலைமை தோன்றுகிறது. இந்த இழப்பானது பணத்தின் மூலமாக ஈடுகட்ட முயலப்படுகிறது. இது ஒட்டு மொத்தத்தில் அமைப்பினுள்ளும், பொதுவில் தேசம் படர்ந்த அளவிலும் இந்த உணர்வுத்தரம் மிகவும் தாழ்ந்து கொண்டு செல்வதன் அடையாளமாகும். இந்த நிலைமை இப்படியே நீண்ட காலம் தொடர்ந்திருக்க முடியாது என்பது போராட்டத்தை கூர்ந்து அவதானிப்பவர்களுக்கு அப்போதே புலனாகியிருக்க வேண்டும். **நாமாக பாடங்களை கற்றுக்கொள்ள மறுத்த போது, வரலாறு ஈவிரக்கமின்றி கற்பித்தது.**

www.tamilarangam.net

## வியாபாரிகளும் வஞ்சகப் புகழ்ச்சியாளர்களும்

புலிகள் அமைப்பினுள் இருந்த நேர்மையான போராளிகள் பலரும் தேசத்தின் நலன் கருதி தலைமையுடன் முரண்பட நேர்ந்த போது ஒழித்துக் கட்டப்பட்டார்கள்: அல்லது வெளியேற்றப்பட்டார்கள். ஆனால் மேற்கொண்டு அமைப்பின் பணிகளை மேற்கொள்வதற்கு இன்னும் நபர்கள் தேவைப்பட்ட போது வியாபாரிகளும், வஞ்சகப் புகழ்ச்சியாளர்களும், உளவாளிகளுமே இவர்களை நாடிச் சென்றார்கள். புலிகள் அமைப்பும் வளர்ந்துவிட்ட தமது அமைப்பின் அதிகரித்துவிட்ட தேவைகளை நிறைவேற்ற இப்படிப்பட்ட நபர்கள் குறித்து அதிகம் கவனம் எடுக்காமல் தம்மோடு அணைத்துக் கொண்டார்கள். இப்படியாக இணைந்தவர்களுக்கு தேசத்தின் நலன்களோ, மக்கள் குறித்த அக்கறையோ இருக்கவில்லை. தம்முடைய சுயமரியாதை, தன்மானம் போன்றவை பற்றியும் இவர்கள் அறவே கவலைப்படவில்லை. ஆதலால் இவர்கள் எந்தவிதமான கூச்சங்களும், குற்ற உணர்வுகளும் இன்றி புலிகளை வஞ்சகமாக புகழ்வது, சந்தர்ப்பங்கள் கிடைத்த போதெல்லாம் அவர்களை வைத்து தாம் பிழைப்பை நடத்துவது என்பதிலேயே குறியாக இருந்தார்கள். இவர்கள் இந்த போராட்டத்திற்கு ஏற்படுத்திவிட்டு சென்ற வடுக்கள் அதிகம். உதாரணத்திற்கு சிலவற்றை பார்ப்போம்.

விடுதலைப் புலிகளது தலைமையின் தவறான போக்குகளை விமர்சித்து பலரும் அமைப்பின் உள்ளேயும் வெளியேயும் போராடிக் கொண்டிருந்த போது இவர்கள் தலைவரை போலியாக புகழ்ந்து தள்ளினார்கள். சாதாரண மக்கள் மத்தியில் உள்ள அற்பமான உணர்ச்சிகளுக்கு தீனி போட்டார்கள். இளைஞர்களை உசுப்பேத்தி விட்டார்கள். இது புலிகளது தலைமையை செயற்கையாக தூக்கிப் பிடித்ததனால், புலிகளது தவறான செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படுவதற்கு அதன் அங்கத்தவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் போதிய சந்தர்ப்பங்களை இல்லாமற் செய்தது. இந்த விதத்தில் இப்படிப்பட்ட செயற்பாடுகள் மிகவும் எதிர்ப்புரட்சிகரமானதாகவே இருந்தன. சிவராம், திருச்செல்வம், புதுவை இரத்தினதுரை...... என்ற இந்த பட்டியல் மிகவும் நீண்டதாகும். பிரபாகரனை மன்னன், முருகன், சூரிய பகவான் என்றெல்லாம் செயற்கையாக புகழ்வதன் மூலமாக முறையான விமர்சனத்திற்கும், பரிசீலனைக்கும் (Scrutiny) அப்பாற்பட்டவராக ஆக்கினார்கள். இது ஏற்கனவே தன்னை தனிப்பெரும் தலைவராக உருவாக்கிக் கொள்ள முனைந்த பிரபாகரனுக்கு மிகவும் வசதியானதாக ஆனது. இன்று புலிகள் மீது வைக்கப்படும் அத்தனை குற்றச்சாட்டுகளுக்கும் இவர்களும் பொறுப்பானவர்களே.

www.tamilarangam.net

பிரபாகரனது ஐம்பதாவது பிறந்தநாள் பற்றிய விடயத்தை பார்ப்போம். தேசமானது கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக கடுமையான யுத்த சூழலில் சிக்கித் தவிக்கிறது. இதனால் பல இலட்சக்கணக்கானோர் முறையாக சாப்பிட மூன்று வேளை உணவு, உடைகள் மற்றும் மருத்துவ பொருட்கள் இன்றி மிகுந்த சிரமங்களை சுமந்தவாறுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படியாக பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதி முகாம்களில் தமது மிகவும் அடிப்படையான தேவைகள் கூட நிறைவேற்ற முடியாது வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், யுத்தம் நடைபெறும் இடத்தை விட்டு ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி ஓரளவு சுதந்திரமான வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கூட மிகுந்த மன உழைச்சல்களுடனும், ஒருவித குற்ற உணர்வுடனும் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் சாதாரண சந்தோசமான நிகழ்வுகளைக் கூட கொண்டாடுவதில்லை. தமது குழந்தைகளின் முதலாவது பிறந்த நாளை கொண்டாடாத, தமது திருமணங்களை மிகவும் எளிமையாக நிறைவேற்றிக் கொண்ட பலர் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் போராட்ட இயக்கத்தின் தலைவனுக்கு ஐம்பதாவது வயது வந்துவிட்டது என்பது எத்தனை முக்கியத்துவமானது? முப்பது வருடத்திற்கு மேலாக போராடியும் தனது இலக்கை அடைய முடியாத நிலையில் இருப்பதாக சுயவிமர்சனமும் செய்ய வேண்டியிருக்கலாம். ஆனால் அதனை பெரிய விழாவாக கொண்டாட பலரும் முயன்றார்கள். கனடாவில் உள்ள 'ஈழமுரசு' பத்திரிகையின் ஆசிரியர் இதனையிட்டு முந்நூறு பக்கங்களில் ஒரு சிறப்பு மலர் வெளியிட்டார். அதில் ஒவ்வொரு பக்கத்திலும் பிரபாகரனது படமும், அவரை வாழ்த்தி சிலவரிகள் அல்லது கவிதைகள் என்ற எழுதப்பட்டிருந்தன. இந்த கவிதைகளில் ஒன்று பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறையை "நிலவளமும், நீர்வளமும் நிறைந்த வல்வெட்டித்துறை" என்று வர்ணிக்கும் அளவிற்கு அபத்தம் நிறைந்ததாக இருந்தது. இது வெறும் மாதிரி மாத்திரமே. ஏனைய படங்கள், செய்திகள், கவிதைகள் அனைத்தும் இதே பாணியிலேயே அமைந்திருந்தன. இது ஏன் நடைபெற்றது என்று யோசிக்க வேண்டும். இதன் உடனடி பலன் என்னவென்றால் ஈழமுரசு ஆசிரியர் பல ஆயிரம் டொலர்கள் பணம் பார்த்ததுதான். இதன் ஒவ்வொரு பக்கத்திற்கும் ஆசிரியர் ஐநூறு டொலர் வரையில் வசூலித்துவிட்டார். ஒரு இதழில் பத்தாயிரம் டொலர் நிகர இலாபம் பார்க்கும் அசலான வியாபாரம் இது. இப்படியாக வியாபாரமும், வஞ்சகப் புகழ்ச்சியும் கையோடு கைசேர்ந்தன. மக்கள் மட்டுமே அநாதைகளாக "அகதி முகாம்களில்" பாதுகாவலில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

www.tamilarangam.net

புலிகளை புகழ்வது ஒன்றே தாம் பிழைப்பதற்கான ஒரே வழியென்பதை கண்டு கொண்டதும் அதனை இந்த வியாபாரிகள் சிக்கென பிடித்துக் கொண்டார்கள். பல்வேறு வர்த்தகர்கள், உணவகங்கள், பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி, கோயில்கள் போன்ற அனைத்தும் புலிகளை அடிமைத்தனமாக வழிபாடு செய்ய முனைந்தார்கள். இவர்களது புகழுரைகள் சுயமரியாதை உள்ள ஒவ்வொருவரையும் வெட்கித் தலைகுனிய வைக்கும் வகையில் அசிங்கமானவையாக இருந்தன. பல பத்திரிகைகள் வெறுமனே விளம்பரதாரர்களை மாத்திரம் நம்பி வெளிவந்தன. இவற்றில் குறிப்பிடத்தக்க எந்தவிதமான செய்திகளும் இருக்கவில்லை. அப்படி இருந்தால் அவை ஏதாவது ஒரு வலையமைப்பில் ஏற்கனவே வெளிவந்த செய்திகளை 'வெட்டி ஒட்டியதாகவே' (cut and paste)இருக்கும். இவர்களையெல்லாம் வாழ வைத்தது புலி வழிபாடு மாத்திரம்தான். இவற்றில் எழுதியவர்களில் சிலர், அனைத்து பத்திரிகை தர்மம், ஜனநாயக மரபு போன்ற எதனையும் கருத்திற் கொள்ளாமல், புலிகளை புகழ்ந்தும், அவர்களை விமர்சித்தவர்களை மிகவும் அசிங்கமாக திட்டியும் எழுதினார்கள், பேசினார்கள். இப்படி எழுதியவர்களில் அ. ரவி, சாத்திரி...... போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

முடியாட்சியில், மன்னர் ஒருவர் மட்டுமே இறைமை உள்ளவராக கருதப்பட்டார். இதற்கான உரிமையானது இறைவனிடம் இருந்து கிடைக்கப்பட்டதாக நியாயப்படுத்தப்பட்டது. புதிதாக ஆட்சிக்கு வரும் மன்னன் இந்த 'தெய்வீக உரிமை' பெற்று தெய்வத்திற்கு நெருக்கமானவராக, சமமானவனாக வருவதற்காக யாகங்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்படிப்பட்ட யாகங்களின் பின்பு அந்த அரசன் தெய்வத்திற்கு மிகவும் நெருங்கியவனாக, தெய்வீக உரிமையை பெற்றவன் ஆகிறான். ஜனநாயக சமூகங்களில் இறைமை என்பது மக்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது. இந்த மக்களை குறிப்பிட்ட காலத்திற்கு பிரதிநிதித்துவப் படுத்தும் தலைவர்களுக்கு அதற்கான அதிகாரத்தை, பொறிமுறையை வழங்குவதே, அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகபூர்வமான தேர்தல் முறைகளின் தார்ப்பரியமாக இருந்தன. இப்படியாக தமது இறைமையை தற்காலிகமாள கைக்கொள்ளும் அரசியல் தலைவர்கள் தம்மிடம் தற்காலிகமான கையொப்படைக்கப்படட இந்த இறைமை மற்றும் அதிலிருந்து பிறக்கும் அதிகாரத்தின் செயற்பாடுகள் போன்ற அனைத்திற்கும் அந்த இறைமையின் உண்மையான உரிமையாளர்களான மக்களுக்கு காலத்திற்கு காலம் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். அத்தோடு இந்த அதிகாரங்கள் மக்களது நலன்களுக்கு சார்பாகவே பிரயோகிக்கப்படுகின்றன என்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்ளவும் உரிமையை மக்கள்

www.tamilarangam.net

கொண்டிருந்தார்கள். இதனால் 'வெளிப்படையான தன்மை' (Transparancy) 'பதில் சொல்லும் பொறுப்பு' (Accountablity) ஆகிய இரண்டும் இப்படிப்பட்ட நடைமுறைகளில் தவிர்க்க முடியாத மிகவும் அத்தியாவசிய அம்சங்களாக ஆயின. உண்மையில் தேசியவாதம் ஆனது இந்த மக்கள் தமது இறைமையை கையேற்பது தொடர்பானதாக அமைகிறது. தேசிய இயக்கத்தின் செயற்பாடுகள் மூலமாக மக்கள் 'குடிகளாக' (Subject) இருந்து முழுமையான இறைமையுள்ள 'பிரசைகளாக' (Citizen) மாறுகிறார்கள். இந்த வகையில் தேசியவாத இயக்கங்கள் முக்கியமான ஜனநாயக இயக்கங்களாக அமைகின்றன.

புலிகள் அமைப்பிற்கும் சரி, அதன் துதிபாடும் இந்த பத்திரிகையாளர்களுக்கும் சரி தேசிய பிரச்சனை என்பது அடிப்படையில் ஒரு ஜனநாயகத்திற்கான போராட்டம் என்ற சிந்தனையே இருக்கவில்லை. தமிழ் சமூகத்தில் ஓங்கியிருந்த ஆதிக்க சித்தாந்த வடிவங்களும், ஆண்ட பரம்பரை மற்றும் கரிகாலன் பற்றிய கற்பனைகளும் இந்த நவீன விழுமியங்களை எட்டிப்பார்ப்பதற்கு கூட வழிவிடவில்லை. அத்தோடு பிரபாகரனுக்கு தனது தலைமை தொடர்பாக இருந்த பயப்பிராந்தியும் சேர்ந்து கொள்ள, அவரைப் பொறுத்தவரையில் இந்த விதமான புகழுரைகள், விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவராக ஆக்குதல், கடவுளுக்கு சமமானவராக ஆக்கும் செயற்பாடுகள் போன்றவை மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவனவாகின. இந்த தேவையை நிறைவு செய்வதற்கு பலரும் போட்டியிட்டார்கள். இப்படிப்பட்ட கூலிக்கு மாறடிக்கும் கூட்டமானது, எமது தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு ஜனநாயக குடியரசை அமைப்பதற்கான ஒரு போராட்டம் என்பதை மறந்து, பிரபாகரனை ஒரு மன்னன் போலவே கருதி விழிக்கவும் தொடங்கினார்கள். பிரபாகரனுக்கு பின்னால் சார்ள்ஸ் அன்ரனி தலைமைக்கு வருவது அவர்களுக்கு ஒன்றும் பிரச்சனையாக இருக்கவில்லை. மன்னவன் இறந்தால் அடுத்தாக இளவரசர் ஆளவேண்டியதுதானே மரபு என்ற வகையில் இவர்களது சொல்லாடல்கள் அமைந்தன.

இந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்தி தமது போட்டியாளர்களை துரோகிகள் என இவர்கள் விமர்சிக்கவும், ஆதரவாளர்களை இவர்கள் முதுகு சொறியவும் இந்த தொடர்பு சாதனங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். அரசியல் ஆய்வாளர்கள், இராணுவ ஆய்வாளர்கள் என பலரை தூக்கிப் பிடித்தார்கள். இந்த கும்பல் அப்படியே ஒன்று சேர்ந்து சாதாரண மக்களை எந்தவிதமான சுயமான சிந்தனைகளுக்கும் இடமில்லாத வகையில் இந்த குப்பைகளினால் அனைத்து புலன் உணர்வுகளையும் அடைத்து விட்டார்கள். அத்தோடு தமக்குள் ஒருவர்

www.tamilarangam.net

மற்றவருக்கு பட்டங்கள் வழங்கிக் கொண்டார்கள். இந்த சந்தடியில் சிலர் புலம் பெயர் நாடுகளின் அரசியலில் காலை ஊண்றிவிட பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த விடயத்தையும் கூட எந்த அரசியலின் அடிப்படையில், எந்த அரசியல் கட்சிகளை, ஏன் ஆதரிக்க வேண்டும் என்ற வரையறை ஏதும் இன்றி பதவி வேட்டை ஒன்றையே குறியாக வைத்து ஓட்டம் நடக்கிறது. ஆனால் அதற்கும் புலிகளை கண்மூடித்தனமாக ஆதரிப்பவர் என்ற தகுதியே போதுமானதாக அமைந்து விடுகிறது. அந்த கட்சிகளிடம் தனக்கு தமிழர் மத்தியில் கணிசமான ஆதரவு இருப்பதாக காட்டிக் கொள்வதே தமது பலத்தை நிரூபிக்கும் வழிமுறையாக ஆகிவிடுகிறது. இப்படிப்பட்ட பதவி வேட்டைக் காரர்களுக்கு இந்தவிதமான பத்திரிகைகள் மற்றும் இதனை ஒத்த குழுக்கள் மேடை அமைத்துக் கொடுக்கின்றன. ஆய்வாளர்கள், நிபுணர்கள் என்று தொடங்கி தமிழர் பிரதிநிதிகள் என்றவாறு பட்டங்கள் எந்தவிதமான தயக்கமும் இன்றி வழங்கப்படுகின்றன.

இந்த பத்திரிகையாளர்கள் தமது வயிற்றை வளர்ப்பது மட்டுமன்றி, தம்மை விளம்பரங்கள் மூலமாக தொடர்ந்து ஆதரித்து வரும் ஏனையவர்களுக்கும் சான்றிதல் வழங்கும் பணியையும் தாமே மேற்கொள்கிறார்கள். ஒரு பத்திரிகையானது திடீரென தமிழர் சமூகத்திற்கு உண்மையிலேயே சேவையாற்றும் மருத்துவர்கள் யார் யார் என்ற பட்டியலை வெளியிடுகிறார்கள். இந்த பட்டியல் என்ன அடிப்படையில் வழங்கப்பட்டது. அதனை வழங்கும் ஏதாவது தகுதி இந்த பத்திரிகையாளர்களுக்கு இருக்கிறதா? இவர்கள் இப்படியாக சான்றிதழ்களை வழங்கு முன்பு ஏதாவது புறநிலையான ஆய்வுகளை அல்லது வேறு சான்றாதாரங்களை முன்வைத்தார்களா? இல்லை. (இன்று தமிழர் மத்தியில் பணியாற்றும் மருத்துவர்கள் மட்டுமன்றி ஏனைய சட்ட, வீடு விற்பனை மற்றும் பல்வேறு நிபுணத்துவ சேவை வழங்குபவர்கள் மற்றும் அனைத்து சேவைத் துறையினரும் இப்படியான ஒருவித புறநிலையான மதிப்பீடுகளுக்கு உள்ளாவது அவசியமானதாக ஆகியுள்ளதாக இவர்களது தரக்குறைவான “சேவைகளினால்” பாதிக்கப்பட்டுள்ளதாக பலரும் உணரத் தலைப்பட்டுள்ளார்கள். இந்த தமிழ் நிபுணர்களிடம் ஏனைய மேற்கு நாட்டு வெள்ளையின நிபுணர்களது சேவைத்தரம், தொழில்முறை நேர்த்தி காணப்படாமை முக்கிய குறைபாடாக தெரிகிறது. அதற்கான வழிமுறைகளை இந்த சமூகம் தேடிக் கொண்டிருக்கையில் ஒரு பத்திரிகை தன்னிச்சையாக இப்படிப்பட்ட சான்றிதழ் வழங்கும் வழிமுறைகளை மேற்கொள்வது என்பது நேரெதிரான விளைவுகளையே உருவாக்குகிறது.) இப்போது இவர்களும் பதில் சொல்லும் பொறுப்பு இன்றி செயலாற்ற

www.tamilarangam.net

முனைகிறார்கள். இதற்கான அதிகாரம் தமக்கு புலிகளை ஆதரிப்பது என்ற ஒரே காரணத்தினால் வருவதாக இவர்கள் கருதிக் கொண்டார்கள். மொத்தத்தில், இது ஒரு வியாபாரிகளதும் வஞ்சகப் புகழ்ச்சியாளர்களதும் ஒருவித கொள்ளைக் கூட்டாக அமைந்தது. ஏற்கனவே தமிழ் மக்களது அரசியல் உரிமைகள் அனைத்தையும் பறித்த மிதித்துவிட்ட நிலையில் இவற்றை எதிர் கொள்வதற்கான வழிமுறைகளும் இருக்கவில்லை. எமது போராட்டத்திறகு புலிகள் அமைப்பால் விளைந்து தீங்குகள் ஒரு பங்கு என்றால் இந்த வியாபாரிகளும், வஞ்சகப் புகழ்ச்சியாளர்களும் ஏற்படுத்திய, இன்னமும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கேடுகள் இன்னொரு பகுதியாக அமைந்தன. இந்த கூட்டமானது உடனடியாக இனம் கண்டு களையெடுக்கப்படுவது இனிமேல் ஏற்படக் கூடிய எந்தவிதமான ஆரோக்கிய முன்னெடுப்புகளுக்கும் முன்நிபந்தனையாகிறது.

இதுபோலவே வெவ்வேறு பெயர்களில் அடிக்கடி பணத்தை வசூலிப்பதும் அவற்றிற்கு உரிய கணக்குகள் எதுவும் எவருக்குமே காட்டாமல் விடுவதும் எம்மத்தியில் உள்ள வியாபாரிகளுக்கு வழக்கமாகி விட்டது. ‘வணங்காமண்’ இன்னொரு உதாரணமாகும். புலிகள் அமைப்பில் பல்வேறு விசுவாசிகள் கூட்டங்கள் பிரிந்து கிடந்தது இவர்களுக்கு மிகவும் வசதியானதாக ஆகிவிட்டிருந்தது. யுத்தம் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த சமயத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து போராளிகள் வெளியேறுவது என்பதே மிகப்பெரிய பிரச்சனையாக இருந்த சமயத்தில் முல்லைத்தீவுக்கு உணவை மற்றும் அத்தியாவசிய பொருட்களை கப்பலில் கொண்டு சென்று இறக்குவது என்பது எத்தனை சாத்தியமற்ற விடயம் என்பது பகுத்தறிவுள்ள அனைவருக்கும் தெரிந்திருந்த விடயம்தான். ஆனால் இப்படியான வெளிப்படையான மிகவும் அடிப்படையான உண்மைகளை மறுதலித்து ஒரு கூட்டம் அப்பட்டமான பொய்களைக் கூறி, தமது நம்பிக்கை அனைத்தையும் இழந்து கையறு நிலைக்கு வந்துவிட்ட ஒரு சமூகத்திடம் கொள்ளை அடிப்பதை எப்படி நாம் இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க முடியும். புலிகள் அமைப்பே செயற்படாத ஒரு நிலைமையில் இருக்கையில் இன்னமும் இயக்கத்திற்காக பணம் சேகரிக்க முனைபவர்களை எப்படி அனுமதிக்க முடியும்? சிறீலங்கா அரசானது தமிழ் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பை முற்றாக தடைசெய்து விட்டுள்ளது. வன்னியில் உள்ள முகாம்களை அப்படிப்பட்டவர்களை அண்டவே விடாமல் செய்துள்ளது. இப்படிப்பட்ட நிலைமையில் புலம் பெயர் நாடுகளில் இந்த அமைப்பின் பெயரில் பணம் சேகரிக்கப் படுவதன் நோக்கம்

www.tamilarangam.net

யாது? இதற்கான பதில் செல்லும் பொறுப்புக்களை இனிமேலும் தட்டிக்கழிக்க முடியாது அல்லவா?

**சிவில் அமைப்புக்களை தகர்த்தமை**

எல்லா சமூகங்களிலும் அவற்றில் உள்ள சிவில் அமைப்புக்களின் பாத்திரம் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவை ஒருவகையில் மக்களின் அதிகார அமைப்புகளின் கரு வடிவங்கள் என்றும் குறிப்பிடலாம். மக்களை இப்படிப்பட்ட அமைப்புகளில் ஒருங்கமைப்பதன் மூலமாக இவை ஒருவிதமான அறநெறிகளை, கலாச்சார விழுமியங்களை, பின்பற்றக் கூடிய முன்மாதிரிகளை சமூக அளவில் படைக்க முற்படுகின்றன. சமூகத்தில் நடைபெறும் அரசியல் சர்ச்சைகளுக்குள் நேரடியாக சிக்கிக் கொள்ளாமலும், அதே வேளை இந்த சமூகத்தின் மனச்சாட்சிகள் போன்றும் செயற்படுவதனால் இவை ஒட்டு மொத்த தேசத்தின் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமான கூறுகளாகும். சர்வதேச அரங்கில் போரிடும் இரண்டு தரப்பினரும் தத்தமது பக்க நியாயங்களை முன்வைத்து போராடிக் கொண்டிருக்கும் போது இப்படிப்பட்ட சிவில் அமைப்புக்களின் குரல்கள் நடுநிலையானவையாக அல்லது மக்களது உண்மையான மனநிலையாக கருதப்பட்டு தனியான கவனிப்புக்குள்ளாகக் கூடியவை. ஆதலால் மக்களது நலன் தொடர்பில் இவை மிகவும் முக்கியமானவையாக கருதப்படுகின்றன. கடந்த காலத்தில் மனித உரிமை அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், அன்னையர் முன்னணி, பிரசைகள் குழுக்கள்... போன்ற பல அமைப்புக்கள் முக்கியமான பாத்திரத்தை இந்த வகையில் ஆற்றி வந்துள்ளன.

புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில் தலைவரது பயப்பிராந்தியானது தனது அதிகாரத்திற்கு உட்படாத எந்தவொரு அமைப்பையும் சகித்துக் கொள்ள இடம் கொடுக்கவில்லை. இதனால் மிகவும் சாதாரணமான மக்கள் அமைப்புக்களைக் கூட கண்டு பயப்பட்டார்கள். சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள், விவசாய சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், இளைஞர் விளையாட்டு கழகங்கள், மாணவர் அமைப்புக்கள், பல்கலைக்கழகங்கள், ... போன்ற எல்லா வகையான அமைப்புக்களையும் கட்டுப்படுத்தவும், அவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் முனைந்தார்கள். அப்படியாக புலிகளது கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்பு இந்த கழகங்கள் ஆற்றிய சாதாரண பணிகளையும் கூட செய்ய விடாமல், தமக்கு சேவை செய்யும் அமைப்புக்களாக மாற்றினார்கள். இதனால் மக்கள் தமது கருத்துக்களை சுயமாக வெளியிட அல்லது அவற்றை வளர்த்துக்

www.tamilarangam.net

கொள்ள எந்தவிதமான வழிகளும் அற்றவர்களாக இருந்தார்கள். பத்திரிகை சுதந்திரம் முற்றாகவே நசுக்கப்பட்டது. சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டுக்குள் வாழும் பத்திரிகையாளர்கள், கல்வியாளர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் என்றாலும் அரசை விமர்சிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் புலிகளை ஆதரிக்காமல் மௌனிகளாக இருப்பதற்கு கூட அனுமதிக்கப்பட வில்லை. இப்படிப்பட்டவர்கள் மௌனமாக இருக்கும் தருனங்களில் கூட அவர்கள் மீது சந்தேகப்பட்ட தொல்லை கொடுத்த, வெளியேற்றிய, கொலை செய்த சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு.

புலிகளது அமைப்பிற்கு வெளியில் எந்தவொரு நடவடிக்கைகளுமே நடக்கக் கூடாது என்பதில் மிகவும் கருத்தாக இருந்தார்கள். உதாரணத்திற்கு, பல்கலைக்கழக மாணவர்களது நடவடிக்கைகள் சிலவற்றை நோக்கலாம். போராட்டத்தில் ஒருவித தொய்வு ஏற்படுவதாக உணர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் சிலரால் சுயாதீனமாக முன்னெடுக்கப்பட்டதே ‘பொங்கு தமிழ்’ நிகழ்வாகும். இது ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியான மனநிலையை உருவாக்குவதாக நிகழ்வுகளை ஒழுங்கு செய்த மாணவர்கள் உணர்ந்தார்கள். இப்படி ஒரு நிகழ்வு சுயாதீனமாக நடப்பதை காணச்சகிக்காத புலிகள், அடுத்த வருடம் தாமும் அதில் பங்கு கொள்ள விரும்புவதாக கூறி அடுத்த வருட நிகழ்வுகளில் பெருமளவில் கலந்து கொண்டார்கள். மூன்றாவது வருட நிகழ்வு முழுக்க முழுக்க புலிகளது நிகழ்வாக மாறியது. இதற்கு மேல் இந்த நிகழ்வுக்கு இருந்த சுயாதீன தன்மை முற்றாக மறைந்து இன்னுமொரு புலிகளது நிகழ்வாக மாறியது. இதனை அடுத்து சிறீலங்கா இராணுவ புலனாய்வு அமைப்பும், ஈபிடீபி அமைப்புமாக சேர்ந்து இதில் சம்பந்தப்பட்டிருந்த சுயாதீனமான பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் புலிகளின் ஆதரவாளர்கள் என்று அனைவரையும் கொன்றொழிக்கத் தொடங்கினார்கள். இந்த சம்பவங்களில் புலிகளின் ஆதரவாளர்களுடன் கூடவே, சுயாதீனமான, தேசத்தின் நலன்களில் அக்கறையுடைய பலரும் அழித்தொழிக்கப் பட்டார்கள்.

புலிகளது இப்படியான அணுகுமுறைகள் காரணமாக, தமிழ் மக்கள் மத்தியில் இருந்த அனைத்து சுயாதீனமான அமைப்புக்களும் செயற்பாடுகளும் செயலிழந்தன. புதிய எழுச்சிகரமான நிகழ்வுகள் மாத்திரமன்றி, சாதாரணமாக ஒரு சமூகத்தில் அன்றாடம் நிகழக்கூடிய ஆரோக்கியமான கருத்தாடல்கள், கலை இலக்கிய முயற்சிகள் கூட நின்று போயின. இதனால் சிறீலங்கா அரசானது சாதாரண பொது மக்களை இலக்காகக் கொண்டு கூட்டாக தண்டிக்கும் நடவடிக்கைகளை

www.tamilarangam.net

மேற்கொண்ட சந்தர்ப்பங்களில் கூட அதனை சுயாதீனமாக சர்வதேச அரங்கிற்கு அம்பலப்படுத்தக் கூடிய அமைப்புக்கள் எதனையும் புலிகள் விட்டு வைத்திருக்கவில்லை. இவற்றிற்கு மாறாக புலிகள் செயற்கையாக பினாமியான சில “மக்கள் அமைப்புக்களை” அவ்வப்போது உருவாக்கி அவற்றின் மூலமாக அறிக்கைகள் விட, கண்டன ஊர்வலங்களை நடாத்த தலைப்பட்டனர். புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவுகள் எப்படிப்பட்டவை என்பதை அறிந்திருந்த சர்வதேச சமூகத்தின் முன்பு இப்படிப்பட்ட பினாமிகள் எடுபடவில்லை. இவை புலிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட செயற்கையான நிகழ்வுகள் என்பதை சுட்டிக்காட்டி சிறீலங்கா அரசு தன்மீதான நியாயமான விமர்சனங்களிலிருந்து இலகுவாக தப்பிக் கொண்டது.

புலிகள் அமைப்பானது இப்படிப்பட்ட சுயாதீன அமைப்புக்களுக்கும் தமது அமைப்பிற்கும் இடையிலான எல்லைக் கோடுகள் தெளிவில்லாமல் இருப்பதை கவனமாக பார்த்துக் கொண்டார்கள். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை இப்படியாகவே நடத்த முனைந்தார்கள். ஒன்றில் இதனை தமது சமூக சேவை அமைப்பாக பிரகடனப்படுத்தி அதன் மூலமாக தமது சமூக நலத் திட்டங்களை முன்னெடுத்திருக்க வேண்டும். அல்லது, அவற்றை இயன்ற வரையில் சுயாதீனமான அமைப்பாக செயற்பட அனுமதித்திருக்க வேண்டும்: மிக குறைந்த பட்சம் அப்படிப்பட்ட ஒரு தோற்றப்பாட்டையாவது பேணி வந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமையில் இந்த நிறுவனமானது சர்வதேச தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து சுயாதீனமாக செயற்படுவதும், அந்த அமைப்புக்களிடமிருந்து உதவிகளை பெற்று செயற்படுவதும் சாத்தியமாகி இருக்கும். ஆனால் இப்படிப்பட்ட ஒரு செயற்பாட்டை புலிகள் அனுமதிக்க வில்லை. சுனாமிக்கு பின்னான உடனடி நிவாரண காலத்தில் கூட புலிகள் அமைப்பானது தமது பெண் அங்கத்தினர்களை ஒருவிதமான ‘மப்டி’ உடையில் ( நீண்ட காற்சட்டை, சேட், பெல்ட், பின்னால் வரித்துக் கட்டப்பட்ட தலைமயிர் இவற்றைக் கொண்டு புலிகளது அங்கத்தவர்கள் என்பதை இனம் காட்டக்கூடிய விதமான உடைகளுடன்) அந்த அமைப்பில் பகிரங்கமாக செயற்பட அனுப்பினார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் மே மாதக் கடைசிப் பகுதி வரையில் சிறீலங்கா அரசானது இந்த அமைப்பை தடை செய்யாமல் விட்டு வைத்ததே பெரிய விடயம்தான்.

அவ்வாறே சாதாரண சிவிலியன்களை ஆயுத பயிற்சி எடுப்பதான படங்களை எடுத்து தமது பத்திரிகைகளில் பிரசுரித்தார்கள். வயோதிப பெண்கள் ஏ.கே 47 துப்பாக்கிகளுடன் தோற்றமளிக்கும் படங்கள் பிரசுரிக்கப்பட்டன. இதன் மூலமாக “மக்களே புலிகள், புலிகளே

www.tamilarangam.net

மக்கள்'' என்ற போலியான சுலோகத்திற்கு விளம்பரம் தேடப்பார்த்தார்கள். ஆனால் அது இறுதியில் பல்லாயிரம் பொது மக்களது உயிர்களுக்கு ஆபத்தாக முடிந்தது. புலிகளால் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்களை, ''அவர்களும் புலிகள்தான்'' என்ற வகையில் சிறீலங்கா அரசால் குற்றஞ்சாட்டி, தனது இன ஒழிப்பு நடவடிக்கைகளை நியாயப்படுத்தவே வழி வகுத்தது.

இவ்வாறே பேச்சுவார்த்தைகள் பங்கு பற்றுவது உட்பட புலிகளது அனைத்து நடவடிக்கைகள் பலவும் வெளிப்படையான தன்மைகளுடன் நடைபெறவே இல்லை. இவற்றை பெரிய இராணுவ இரகசியம் போல பொத்திப் பொத்தி வைத்திருந்தார்கள். அதிகாரத்தில் இருந்த அனைத்து தரப்பினரிடமும் திரைமறைவில் இரகசியமாக பேரம் பேசுவதிலும், உடன்பாடுகளை (Deal making) மேற்கொள்வதிலும் குறியாக இருந்தார்கள். பேச்சுவார்த்தையின் போது என்னென்ன நிலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன: எவற்றில் பிரச்சனை ஏற்பட்டது: எவற்றில் உடன்பாடு எட்டப்பட்டது: போன்ற எதுவுமே மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை. எல்லமே இரகசியாமாகவே மேற்கொள்ளப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் இவர்கள் அமைப்பின் நலன்களை முதன்மை படுத்தி தேசத்தின் நலன்களை புறக்கணித்ததும் அடிக்கடி நடைபெற்றது. உடன்பாடுகள் முறிந்து, யுத்தமும் தொடங்கிய பின்பு புலிகளும், சிறீலங்கா அரசும், பேச்சு வார்த்தைக்கு ஒழுங்கு படுத்தியவர்களும் ஆளுக்கொரு கதையை சொன்னார்கள். இந்த விதமான நடவடிக்கைகள் போராட்டத்தின் வளர்ச்சிக்கு எந்தவித்திலும் உதவவே இல்லை. உண்மையில் இவற்றில் மறைத்து விளையாட எதுவுமே இருக்கவில்லை. பேசப்போவது மக்களது விடுதலை பற்றிய பிரச்சனை என்றால் அதனை தமிழ் மக்கள் மாத்திரமன்றி சிங்கள மக்களும், சர்வதேச சமூகமும் வெளிப்படையாக தெரிந்து கொள்வதுதான் சரியானது. பேச்சுவார்த்தைகளின் போது எப்படிப்பட்ட முடிவுகள் எட்டப்பட்டாலும் அது தமிழ், சிங்கள மக்களது பங்கு பற்றுதலுடனும், சர்வதேச சமூகத்தின் ஒத்தாசையுடனும் தான் நிறைவேறியாக வேண்டியுள்ளது. ஆதலால் இவற்றை பொத்தி வைக்க புலிகள் முனைவதன் நோக்கம் சந்தேகத்திற்குரியதே!

மக்களைக் கண்டும், மக்களது சுயாதீனமான நடவடிக்கைகளைக் கண்டும் பயப்பட்ட புலிகள், இப்படியாக போலியான தோற்றப்பாடுகளை பிரச்சார நோக்கில் உருவாக்குவதன் மூலமாக யாரை ஏமாற்ற முனைந்தார்கள் என்பது கேள்விக்குரியது. மக்களை ஏமாற்ற முடிந்ததா? அன்றாடம் நடக்கும் அவலங்களை, தம்மீதான ஒடுக்குமுறைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு என்ன 'படம் காட்ட'

முடியும்? கடைசி நாட்களில் தமிழ் மக்கள் சிறீலங்கா இராணுவத்தின் வலைத் தளத்தை அதிகமாக பார்க்கத் தொடங்கினார்கள். அது ஒப்பீட்டளவில் புலிகளை விட நம்பக தன்மை கொண்டதாக பலருக்கு பட்டது. சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முனைந்தார்களா? அதுவும் சாத்தியப்படவில்லை. மொத்தத்தில் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டார்கள். அதனால்தான் யாரோ அந்த மீட்பர்களுக்காக நந்திக் கடற்கரையோரத்தில் கிழக்கு பார்த்து கார்த்திருந்து ஏமாற நேரிட்டது.

எந்தவொரு போராட்டத்திலும் மக்களுக்கு உண்மையாக இருப்பது அவசியமானது. நாம் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருப்பது அந்த மக்களின் போராட்டமேயாகும். மக்களே உண்மையான புரட்சிகர சக்திகள். இதனால் இந்த தேசத்தின் உண்மையான இறைமையுடையவர்களான மக்களுக்கு நாம் உண்மையாகவும், வெளிப்படையாகவும் இருப்பது எமது கடமையாகிறது. எமது சரி – பிழைகளை , எமது வெற்றி – தோல்விகளை அந்த மக்களுக்கு வெளிப்படையாக முன்வைத்து சுயவிமர்சனம் செய்யும் போது, மக்கள் தமது போராளிகளை ஒதுக்கி விடுவதில்லை. மாறாக இன்னும் அதிகளவில் நம்பிக்கையும் அன்பும் கொண்டு அந்த போராட்டத்துடன் அதிகம் பிணைத்துக் கொள்ள முன்வருவார்கள். இப்படியாக மக்களது அளவற்ற புரட்சிகர உள்ளாற்றலில் நம்பிக்கையில்லாமையே மக்களை அதிகாரத்துவத்துடன் நடத்தவும், பொய்களைச் சொல்லி ஏமாற்றவும் இட்டுச் செல்கிறது. இறுதியில் இது எந்தவிதமான உண்மையான வெற்றியையும் யாருக்கும் கொடுப்பதில்லை. ஹிட்லரது காலத்தில் அவனது பிரச்சார மந்திரியாக இருந்த கொயபல்ஸ் பற்றி அனைவரும் அறிவார்கள். இவன் சொன்ன பொய்களுக்கு அளவே இல்லாமல் போனது. ஒரு கட்டத்தில் நாசிக்களுக்கே தாம் சொல்வதில் எது பொய், எது உண்மை என்பது மறந்து போயிற்று. இதனால் அவர்களே ஒரு மாயைக்குள் அகப்பட்டுப் போய், இறுதியில் புற உலகில் என்ன உண்மையாக நடக்கிறது என்பதை சரிவர தெரிந்து கொள்ள முடியாத ஒரு சிறிய சவர்க்கார குமிழுக்குள் (Soap Bubble) அகப்பட்டவர்கள் போல ஆனார்கள். இதனால் இறுதியில் முற்றாக அழித்தொழிக்கப்பட்டார்கள். இதன் மூலமாக வெளிப்படையான தன்மை, பதில் சொல்லும் பொறுப்பு என்பவற்றை தட்டிக் கழித்துவிட்டு ஒரு அமைப்பானது மக்களது போராட்டத்திற்கு தலைமை தாங்கவே முடியாது என்பதை புலிகள் மீண்டும் ஒரு தடவை வரலாற்றில் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

www.tamilarangam.net

## கடைசி யுத்தத்தில் புலிகள் அமைப்பினர் நடந்து கொண்ட விதம்.

புலிகள் அமைப்பானது இப்படியாக சடுதியாகவும், இவ்வளவு வேகமாகவும் தோற்றமை பலருக்கும் நம்ப முடியாத அளவிற்கு ஆச்சரியமானதாகத்தான் அமைந்திருந்தது. ஆனால் இப்போது சற்று ஆறுதலாக இருந்து நடந்து முடிந்து போன நிகழ்வுகளை ஒன்றோடொன்று தொடர்பு படுத்திப் பார்க்கும் போது, இதனை தவிர்த்திருக்க முடியுமா என்ற கேள்வி பலமாக எழுகிறது. புலிகள் அமைப்பானது அதனது சொந்த நடத்தைகள் காரணமாக மக்களுடனான உறவில் மிகவும் அந்நியப்பட்டே இருந்தது. அமைப்பிற்குள் முறையான அமைப்புத்துறை நடைமுறைகள் பின்பற்றப் படாமையால் அங்கத்தவர்களிடையேயும், அங்கத்தவர்களுக்கும் தலைமைக்கான உறவிலும் பாரிய நெருக்கடிகள் தோன்றியிருந்தன. புதிதாக ஆர்வமாக போராட்டத்தை நோக்கி பெருந்திரளாக அணிதிரல்வது முற்றாக நின்று போயிருந்தது. தவிர்க்க முடியாத நிலைமைகளில் சிலர் இணைந்து கொண்டது போக, கடந்த சில வருடங்களாகவே கட்டாயப்படுத்தி தமது இயக்கத்திற்கு ஆட்களை சேர்க்க வேண்டியுருந்தது. அமைப்பிற்குள் உள்ளவர்கள் ஒரு உயிரோட்டமான அரசியல் சூழலில் வாழ்வதாக உணரவில்லை. வேறு வழியில்லாததால் அமைப்பினுள் வேண்டா வெறுப்புடன் செயற்பட்டு வந்தார்கள். இன்னும் சிலரோ தலைமையின் குறைபாடுகள் அனைத்தும் அறிந்தவர்களாக இருந்த போதிலும் அமைப்பை விட்டு விலகுவதனால் எழக் கூடிய பாதுகாப்பு மற்றும் உளவியல் ரீதியான குற்ற உணர்வுகள் போன்றவற்றின் காரணமாக தொடர்ந்தும் அமைப்பில் செயற்பட்டு வந்தார்கள். உதாரணமாக, ஜெயம் இப்படிப்பட்டவர். இவர் மாத்தையா பிரச்சனையின் போது புலிகளது உளவுப் பிரிவினால் கைது செய்யப்பட்டு மிக மோசமாக சித்திரவதைக்கு உள்ளானவர். தளபதி பால்ராஜ் பிற்காலத்தில் நீண்ட காலமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இப்படிப்பட்ட அங்கத்தவர்களது மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பது புரிந்து கொள்ள முடியாதது அல்ல இது ஒருவித தற்கொலை முயற்சியாகத்தான் அவர்களைப் பொறுத்தவரையில் அமைந்தது. அத்தோடு சிறீலங்கா இராணுவத்துடன் நடக்கும் மோதல்களினாலும், மற்றும் இயற்கையான காரணங்களினாலும் இன்னொரு முக்கிய தலைவர்களின் பகுதி யொன்று கரைந்து கொண்டு போனது. இவற்றை விட முன்னணி தலைவர்கள் என்று வலம்வந்தவர்கள் எல்லாருமே தலைமைக்கு துதிபாடும் கொத்தடிமைக் கூட்டமாகவே இருந்தது. இவர்கள் அங்கத்தவர்கள் மத்தியில் அறவே மதிப்பிழந்தவர்களாக ஆயிருந்தார்கள். ஒரு கொத்தடிமைக் கூட்டத்தை வைத்துக் கொண்டு

www.tamilarangam.net

தேசிய விடுதலையை காண்பது என்பது முரண் உண்மையாக இருந்தது.

தலைமைக்கும் அடுத்த மட்ட தளபதிகளுக்கும் இடையிலான உறவுகள் முறுகல் நிலையில் இருக்கும் போதே, தனது மகன் சார்ள்ஸ் அன்ரனியை அடுத்த தலைவராக உருவாக்குவதற்கான முயற்சியில் பிரபாகரன் இறங்கினார். அவருக்கென தனியான மெய்ப்பாதுகாவலர் படை, தனியான உளவுப் பிரிவு என இது தொடர்ந்தது. இந்த நடவடிக்கையானது இரண்டாம் மட்ட தலைவர்களாக இருந்த பொட்டம்மான் போன்றவர்களால் சகிக்க முடியாததாக ஆனது. இதனால் தலைவருக்கும், இரண்டாம் மட்ட தளபதிகளுக்கும் இடையிலான உறவானது முற்றாகவே செயலிழந்து போனது. பால்ராஜின் மறைவும், கருணா மற்றும் நியூட்டன் போன்ற தளபதிகளது இழப்பும் புலிகள் அமைப்பை கடுமையாக பாதித்தது. கருணா மற்றும் நியூட்டன் ஆகியோர் எதிரியின் பக்கம் சேர்ந்து அல்லது சிக்கிக்கொண்ட பின்பும் கூட, தமது இரகசிய ஏற்பாடுகளை மாற்றியமைக்கு அளவுக்கு கூட இவர்கள் சுறுசுறுப்பாக, தீவிர போர்க் குணாம்சத்துடன் இருக்கவில்லை. பிரபாகரன் கிட்டத்தட்ட ஒருவித கையறு நிலைக்கு போயிருந்தார். அமைப்பினுள் பல பிரச்சனைகள் எழுந்த போதிலும் அவற்றில் தீவிரமாக தலையிட்டு நிலைமைகளை சீரமைக்கும் தன்மையை முழுமையாக இழந்திருந்தார்.

போர் நிறுத்தம் 2002 இல் தொடங்கியது முதலாக தலைமை அங்கத்தவர்கள் தமது போர்க்குணாம்சத்தை படிப்படியாக இழந்து வந்தார்கள். போராட்ட அமைப்பாக தொடங்கியவர்கள் இப்போது படிப்படியாக அதிகார வர்க்கமாக, சொகுசான வாழ்க்கைக்கு ஆசைப்படுபவர்களாக மாறி விட்டிருந்தார்கள். அடுத்தடுத்த மட்ட தளபதிகளுக்கு தலைவர் எட்ட முடியாதவராக மாறிப் போனார். ஆனால் வியாபாரிகளுக்கு மிகவும் நெருக்கமானவராகவே இருந்தார். பல இலட்சம் ரூபாய்களை, அல்லது விலைமிகுந்த ‘பஜோரோ’ வாகனத்தை வாங்கிக் கொடுப்பவர் எப்போதும் தலைவரை எட்டக் கூடியவர்களாக இருந்தார்கள். இதனால் அடுத்த மட்ட தளபதிகளே தமது போராட்டத்தில் முற்றிலும் நம்பிக்கை இழந்தவர்களாக மாறிவிட்டிருந்தார்கள்.

இதனை விட அமைப்பில் இணைந்து பலகாலமாக செயற்பட்டு நீண்ட அனுபவமும், தலைமை பொறுப்புக்களை நோக்கி வளர்ந்தும் வந்த பலர் திருமண வயதை கடந்து செல்பவர்களாக இருந்தார்கள். இதனால் யுத்த நிறுத்த காலத்தில் திருமண உறவுகளை மேற்கொண்டார்கள்.

இதிலும் குறிப்பாக பெண்கள் அமைப்பினுள் திருமணம் செய்வதே அவர்களுக்கு சமூகத்தில் இருக்கும் கௌரவக் குறைவை ஈடுகட்டும் ஒரு தேவையாக இருந்தது. இதனால் பல திருமணங்கள் அமைப்பின் அங்கத்தவர்களிடையே நடை பெறலாயிற்று. திருமணம் செய்து கொண்டு உறுப்பினர்கள் சோடியாகவே அமைப்பில் இருந்து ஒதுங்கிக் கொண்டார்கள். இதனால் அமைப்பிற்கு இரட்டை இழப்பு ஏற்பட்டது. சாதாரணமாக எந்தவொரு அமைப்பிலும் திருமண வயதை அடைபவர்கள் புதிய குடும்ப பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு சற்று பின்வாங்குவதும், புதிதாக அங்கத்தவர்கள் இணைந்து அந்த இடத்தை எடுத்துக் கொள்வதும் தொடர்ச்சியாக நடப்பதுதான். ஆனால் திருமணம் செய்பவர்கள் அமைப்பில் இருந்து முற்றாக ஒதுங்குவது கிடையாது. ஆனால் புலிகள் அமைப்பினுள் இருந்த நெருக்கடிகள் திருமணத்தை காரணமாக காட்டி பலரும் ஒதுங்கிச் செல்லவே வழிவகுத்தது. யுத்த மற்றும் அவசர நிலைமைகளின் கீழ் இவர்கள் அனைவருமே சீருடை அணிந்து தமது படையணிகளுக்கு திரும்பி வந்து யுத்தங்களில் தீவிரமாக போராடி, அனுபவம் குறைந்த இளம் தோழர்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும், அவர்களுக்கு ஒரு பலமான மனோ வலிமையை கொடுப்பவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் புலிகள் அமைப்பில் அங்கத்தவர்களிடையே இருந்த மோசமான மனநிலையானது, இப்படியாக திருமணமான இரண்டு அங்கத்தவர்களுமே நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவுக்கோ அல்லது மேற்கு நாடொன்றிற்கோ இடம் பெயரலானார்கள். இதனால் இவர்கள் மேற்கொண்டு அவசர காலத்தில் கூட தமது பங்களிப்பை வழங்க முடியாதவர்கள் ஆனார்கள்.

இதே நேரம் சர்வதேச உறவுகள் முற்றிலும் சீர் குலைந்து இருந்தது. பெரும்பாலான மேற்கு நாடுகள் புலிகளை தடை செய்திருந்தார்கள். அத்துடன் அந்தந்த நாட்டின் பல்வேறு அரசியல், சமூக சக்திகள், மற்றும் வெகுஜன ஊடகங்கள், எதிர்ப்பியக்கங்கள் போன்ற எதனுடனும் நல்ல உறவுகள் எதுவுமே இருக்கவில்லை. போதாக் குறைக்கு இந்த நிலைமைகளை மோசமாக்கும் விதத்தில் புலம் பெயர்ந்த தமிழர்களுடன் புலிகள் நடந்து கொண்ட விதமானது பிரச்சனையை இன்னமும் மோசமானதாக ஆக்கியிருந்தது. இந்த விடயங்களை ஆரோக்கியமாக செய்யக் கூடிய தகுதிமிக்க தலைமை இந்த நாடுகளில் இருக்கவில்லை. ஊரில் இருப்பவர்களோ, தமக்கு மகிழ்ச்சியைத் தரக் கூடிய செய்திகளையும், அதனை கொண்டு வரக் கூடிய கொத்தடிமையையுமே விரும்பி முதன்மை படுத்தினார்கள். இதனால் இங்கு வளர்ந்து கொண்டிருந்த ஆபத்துக்களை அறவே உணர முடியாதவர்களாக இருந்தார்கள். இந்த நாடுகளில் இருந்து அதிகளவில் பணம் வந்து

www.tamilarangam.net

சேரும் வரையில் வேறு எந்த பிரச்சனையும் இவர்களுக்கு இருக்கவில்லை.

கேபியை ஆயுத கொள்வனவு மற்றும் விநியோகத்திலிருந்து மாற்றியமை இந்த வலைப்பின்னலை பெரிதும் செயலற்றதாக மாற்றியது. சிறீலங்கா அரசோ பெருந்தொகையான ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருந்தார்கள். புலிகள் அமைப்பிடம் சிறீலங்கா அரசின் விமானப்படையின் மேலாதிக்கத்தை கட்டுப்படுத்தக் கூடிய விமான எதிர்ப்பு துப்பாக்கிகள், மற்றும் ஏவுகணைகள் போதியளவு இருக்க வில்லை. இதனை விட ஏனைய யுத்த தளவாடங்களுக்கு போதிய வெடி பொருட்கள் இருக்கவில்லை. ஹெலி, மற்றும் ஆளில்லாமல் பறக்கும் விமானங்கள் போன்றவற்றின் ஆதிக்கத்தை முறியடிக்க முடியாமல் அதிகம் திண்டாடிநார்கள். சிறீலங்கா இராணுவத்தின் இராணுவ பலத்தை முகம் கொடுக்கும் விதத்தில் புலிகள் அமைப்பானது தனது இராணுவ அமைப்பின் கட்டமைப்புக்களையும், அதன் போர்த்தந்திரங்களையும் வேகமாக மாற்றியமைப்பதன் மூலமாக தனது முற்றான அழிவில் இருந்து தப்பிப் பிழைத்திருப்பது இராணுவரீதியில் முற்றிலும் சாத்தியமற்ற ஒன்றாக இருந்திருக்க மாட்டாது. ஆனால் அதற்கு அவசியமான போர்க்குணாம்சமும், விடாப்பிடியான மனோபாவமும் அதன் தலைமையிடம் இருக்கவில்லை. இப்படியான, ஒரு முற்றிலும் வேறுபட்ட அமைப்பு வடிவ, தந்திரோபாய மாற்றத்திற்கு புலிகளது தலைமை அமைப்பானது தயாராக இருக்கவில்லை. மரபார்ந்த இராணுவமானது, எப்போதெல்லாம் மிகவும் பலமான இராணுவத்தை முகம் கொடுத்து சமாளிக்க முடியாமற் போகிறதோ அப்போதெல்லாம், அது சிறிய, வேகமாக இடம் பெயரக் கூடிய கொரில்லா குழுக்களாக தன்னை மாற்றிக் கொண்டுதான் இப்படிப்பட்ட கடுமையான நிலைமைகளை கடந்து தாக்கு பிடிக்கும். ஆனால் புலிகள் இவற்றை கருதிப் பார்க்கவும் தயங்கினார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இராணுவரீதியாக ஏற்பட்டது உலகத்தில் எமது போராட்டத்தில் மட்டும் தான் என்பதல்ல. இதற்கு முன்பு 1982 இல் லெபனானில் இஸ்ரேல் படையெடுத்த போதும், 2006 இல் தெற்கு லெபனானில் ஊடுறுவித் தாக்குதல் நடத்திய போதும், 2008 இல் காஷா பகுதியில் இஸ்ரேல் படையினர் ஊடுறுவிய போதிலும், இஸ்ரேல் இராணுவத்தின் பலமானது இப்போது சிறீலங்கா இராணுவத்தின் பலத்தைப் போல பன்மடங்கு அதிகமானதாகவே இருந்தது. ஆனால் இஸ்ரேல் படைகளினால் தமது இலக்குகளை அடைய முடியாமற் போனது. இதற்கு காரணம் இந்த சந்தர்ப்பங்களில் பலஸ்தீன, லெபனானிய போராளிகள் தொடுத்த வீரஞ்செறிந்த எதிர்த்தாக்குதல்கள்தாம். 1982 இல் பெய்ரூத் நகரினுள் இஸ்ரேல் படைகள் நுழைய முற்பட்டிருந்தால் பல்லாயிரக்கணக்கான

www.tamilarangam.net

பெய்ரூத் மக்களும், பலஸ்தீன் போராளிகளும் மட்டுமன்றி, இன்னும் பல்லாயிரக் கணக்கான இஸ்ரேல் போர்வீரர்களும் உயிரிழந்திருக்க நேர்ந்திருக்கும். இவ்வாறே தான், 2008 இல் காஷாவை முழுமையாக கைப்பற்ற இஸ்ரேல் முனைந்திருந்தால் அங்கும் பல்லாயிரக்கணக்கான போர்வீரர்களை இஸ்ரேல் இழந்திருக்கும். இவ்வாறே தெற்கு லெபனானிலும் அதிகம் இழப்பை இஸ்ரேல் இராணுவம் எதிர் கொள்ள நேரிட்டது. இவ்வாறாக, புலிகளும் காட்டுப் பிரதேசங்களுக்குள் பின்வாங்கியிருந்தால், முதலில் சிறீலங்கா அரசுக்கு மிகவும் சாதகமாக இருந்த இராணுவ சமபல நிலையை மிகவும் மட்டுப்படுத்தியிருக்கலாம். அத்தோடு அடர் காட்டுப் பிரதேசத்தில் எதிரியின் கவச வாகனங்கள் மற்றும் தொலைதூர ஆட்டிலரிகள், சுப்பர் சொனிக் விமானங்கள், ஹெலிக் கொப்டர்கள், ஆளில்லாத உளவு விமானம் போன்றவை முற்றிலும் பயனற்றவையாக மாறியிருக்கும். இதனை பயன்படுத்தி ஒரு புதிய இராணுவ சமபல நிலையை உருவாக்கி, எதிரி அவன் எதிர்பார்க்கும் நேரத்திலும், இடத்திலும் தாக்காமல், தாம் தெரிந்தெடுத்த இடத்திலும், தேர்ந்தெடுத்த நேரத்திலும், போரை செய்யுமாறு எதிரியை நிர்ப்பந்தியிருக்கலாம். இது கணிசமான வெற்றியை கொண்டு தந்திருக்கும்: முடியாத போது மாற்று ஒழுங்குகளை சர்வதேசரீதியாக மேற்கொள்வதற்கு போதிய அவகாசத்தை இது ஏனையவர்களுக்கு வழங்கியிருக்கும். ஆனால் இவை எவற்றையும் செய்வதற்கு தலைமையானது தனது போர்க் குணாம்சத்தை இழக்காமல் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். அது இல்லாததே இந்த விதமான முழுமையான அழிவுக்கு காரணமாக அமைந்தது.

மனித உரிமை மீறல்கள், முஸ்லிம்கள் மீதான இனச் சுத்திகரிப்பு, சிங்கள மக்கள் மீதான படுகொலைகள், சிறுவர் போராளிகளை பலவந்தமாக இணைத்தல், போர்க்கால குற்றங்கள் என்று புலிகள் அமைப்பின் மீது போர்க்கால குற்றங்களின் அடிப்படையில் வழக்கு தொடுக்கக் கூடிய அளவிற்கு நிலைமைகள் மோசமாக மாறியிருந்தன. இப்படியாக ஒரு கட்டத்தில், அநேகமாக 2005 ஆண்டளவில் அரசியல்ரீதியிலும், இராணுவரீதியிலும் புலிகள் ஒரு முட்டுச் சந்திற்குள் அகப்பட்டுக் கொண்டதை உணர்ந்து கொண்டார்கள். இதுவரை இவர்கள் சர்வதேச விவகாரங்கள் பற்றி அறவே மதிப்பளிக்காத புலிகளுக்கு மேற்கொண்டு சர்வதேச அங்கிகாரம் இன்றி தப்பிப் பிழைப்பதே சாத்தியமற்ற நிலைமை உருவானது. யுத்தத்தை தீவிரப்படுத்தி அரச கட்டுப்பாட்டில் உள்ள மீதியான பிரதேசங்களை மீட்டெடுத்து ‘தமிழீழ அரசை பிரகடனம்’ செய்வதும் சாத்தியப்படாது போயிற்று. அத்தோடு அதற்கான பலத்தையும் கொண்டிருக்கவில்லை. அப்படி செய்தாலும் அதனை அங்கிகரிக்க எந்தவொரு நாடுமே தயாராக

www.tamilarangam.net

இருக்கவில்லை. மாறாக சமாதானமான தீர்வை நாடுவதானால் கூட அப்படிப்பட்ட தீர்வு புலிகளின் தலையையில் அமர்ந்திருந்த பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் தலைமையின் கைகளில் கிடைப்பதை இந்தியா ஒரு போதுமே அனுமதிக்க முடியாத நிலையில் இருந்தது. ஆவவே யுத்தம் மூலமாக வெற்றி காண்பதோ, அல்லது சமாதனம் மூலமாக ஒரு குறைந்தபட்ட தீர்வை எட்டுவதோ கூட புலிகளின் தலைமையினால் தடைப்பட்டிருந்தது.

சர்வதேச சூழலானது மிகவும் வேகமாக மாறிக் கொண்டிருந்தது. இந்த மாற்றங்களை புரிந்து கொள்ளவும், அதற்கேற்ப தம்மை தகவமைக்கவுமான ஆற்றல் புலிகள் அமைப்பிடம் அறவே இருக்கவில்லை. இதனை கையாள்வதற்கு முறையான இராஜதந்திரிகள் புலிகள் அமைப்பிடம் இருக்கவில்ல. புலிகளிடம் இருந்த தெல்லாம் தமிழ்ச்செல்வன் மட்டுமே. இதற்கு மாறாக, சிறீலங்கா அரசானது டயன் ஜயதிலக்க தலைமையில் ஒரு பலமான இராஜதந்திரிகளின் குழுவை முழுமையாக செயற்படுத்தியது. இந்த இராஜ தந்திரிகளின் காய் நகர்த்தலில், பல முற்போக்கு நாடுகள் கூட, மேற்கு நாடுகளுக்கு எதிராக கூட்டணி என்றவகையில அரசிற்கு சாதகமாக செயற்பட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் மேற்கு நாடுகளால், அவர்கள் விரும்பியிருந்தாலும் கூட ஏதும் செய்ய முடியாத நிலைமைதான் உருவாகியிருந்தது.

இப்படியாக நிலைமைகள் சர்வதேச அரங்கில் புலிகளுக்கு எதிரானதாக வேகமாக திரும்பிக் கொண்டிருக்கையில் புலிகளின் தலைமையானது தனது முற்றிலும் இயலாமையை அப்பட்டமாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. ஒன்றில் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்து, தமது அரசியல் இலக்குகளை நோக்கி முன்னேறியிருக்க வேண்டும். அது முடியாது என்பது திட்டவட்டமாக தெரியும் போது நாம் ஒரு குறைந்தபட்ட இலக்குகளை நோக்கி அமைப்பை வழிநடத்தி, அமைப்பையும், மக்களையும் காப்பாற்றிக் கொண்டு ஒரு நல்ல தருணத்திற்காக காத்திருக்கக் கூடியவர்களாக இருந்திருக்க வேண்டும். இந்த இரண்டைப் பற்றியும் இவர்கள் அதிகம் அலட்டிக் கொண்டவர்களாக இவர்கள் இருக்கவில்லை. அமைப்பின் தலைவர்கள் நெருங்கிவரும் ஆபத்து பற்றி எந்தவிதமான எச்சரிக்கையும் அற்றவர்களாக இருந்தார்கள். தலைவர்கள் சொகுசான வாழ்க்கைக்கு பழக்கப்பட்டு போராட்டத்தை அடுத்த மட்டத்திற்கு கொண்டு போக தயாராக இருக்கவில்லை என்ற புலிகளின் அங்கத்தவர்களே முன்வைக்கும் சுயவிமர்சனங்கள் இந்த இடத்தில் நிராகரித்து விடக்கூடியவையாக தெரியவில்லை. சிறீலங்கா இராணுவம் முன்னேறிக்

www.tamilarangam.net

கொண்டிருக்கும் நிலைமையில் மதிவதனி அவர்கள் புடவைக்கடை திறப்பு விழாக்களில் கலந்து கொண்டுக் கொண்டிருந்தார். இதனைவிட தமிழக்தில் உள்ள கோமாளிகள் காட்டிய நாடகத்தில் மெய் மறந்து தம்மை மீட்க வரும் மீட்பர்களுக்காக காத்திருந்தார்கள்.

இப்படியாக புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில் அதன் கூறுகள் அனைத்துமே, பலவீனப்பட்டும், கோதாகியும், உதிரும் தருவாயிலும் தான் இருந்தது. அந்த கட்டமைப்பை வெறுமனே தனது அதிகாரத்தை மட்டும் பயன்படுத்தியும், மரண பயத்தை காட்டியுமே செயற்கையாக காப்பாற்றி வந்தார்கள். அது உடனடியாக அல்லாவிட்டாலும் சிறிது காலம் கடந்தாவது இன்னமும் கடுமையான நெருக்கடிகளை முகம் கொடுத்துதான் ஆக வேண்டியிருக்கும். அநேகமாக இரண்டாம் நிலை தலைவர்கள் சிலரால் பிரபாகரன் கொல்லப்படுவது அல்லது விபத்து, இயற்கை மரணம் போன்றவை இப்படிப்பட்ட ஒரு திடீர் நெருக்டியை தோற்றுவித்திருக்கக் கூடும். இப்படியாக உள்ளூர உக்கிப் போன ஒரு அமைப்பை தள்ளி விழுத்த ஒரு சக்தி தேவைப்பட்டது. அந்த புறச்சக்தியாக மட்டுலே சிறீலங்கா இராணுவம் திகழ்ந்தது. ஆகவே சிறீலங்கா அரசினால் பலமாக கொண்டாடப்படும் இந்த வெற்றியானது புற அளவில் மிகவும் பலமானதாக தோன்றினாலும், உள்ளார்ந்த அளவில் அது புலிகளின் தோல்வியாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

**இறுதி நாட்கள்**

புலிகளுக்கு தமது பலவீனம் என்பன நன்றாக தெரிந்தே இருந்தன. ஆயினும் மிரட்டுவதன் மூலமாக எதிரியை பணிய வைத்துவிடலாம் என்ற எண்ணத்தில்தான் மாவிலாறில் ஒரு வலிந்த சண்டையை புலிகள் தொடக்கினார்கள். ஆனால் அது அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக தோல்வியில் முடியவே பின் வாங்கத் தொடங்கினார்கள். ஏற்கனவே மட்டக்களப்பை சிறீலங்காப் படைகளிடம் பறி கொடுத்திருந்த நிலையில், இந்த பின்வாங்கல் அடுத்ததாக வன்னியை
நோக்கிய நகர்வாக அமைந்தது. இது அடுத்ததாக மன்னார் பிரதேசம், பின்பு கிளிநொச்சி, முல்லைத்தீவு என நகர்ந்து முள்ளிவாய்க்காலை சென்றடைந்தது. இந்த ஒரு கட்டத்தின் போதும் புலிகள் தமது பலவீனங்கள் குறித்தோ அல்லது தாம் இன்னமும் பின்வாங்க நேரும் என்பது குறித்தே எந்தவிதமாக சமிக்கைகளையும் மக்களுக்கு கொடுக்கவில்லை. அடுத்த சில நாட்களுக்குள் அடிவிழப்போகிறது என்ற பாணியில் தான் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வந்தன.

www.tamilarangam.net

இப்படிப்பட்ட பின்வாங்கல்களின் ஆரம்ப கட்டங்களிலேயே புலிகள் சாதாரண குடிமக்களை தமது சொந்த விருப்பின் பேரில் தமக்கு பாதுகாப்பு எனக்கருதும் முடிவுகளை மேற்கொள்ள அறவே அனுமதிக்கவில்லை. மக்களை அவர்களது வீடுகள், வயல்கள், தோட்கங்கள் மற்றும் அவர்களது தொழிலுக்கான சாதனங்கள் மற்றும் தொடர்புகள் அனைத்தையும் விட்டுவிட்டு தம்மோடு ் வெளியேறுமாறு நிர்ப்பந்தித்தார்கள். ஏற்கனவே பல வருடகால யுத்த நெருக்கடிகள் மற்றும் பொருளாதாரத் தடைகள் காரணமாக ஏற்கனவே மிகவும் வறிய நிலையில் வாழ்ந்த மிகப் பெரும்பாலானோர், தமது தொழில் மற்றும் இருப்பிடம் போன்றவற்றை விட்டு புலிகளின் பின்னால் செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். சென்ற இடத்தில் இவர்களுக்கு தங்குவதற்கான இருப்பிடம், உணவு, மருத்துவம் மற்றும் இவற்றை கொள்வனவு செய்வதற்கான பணம் போன்ற எதுவுமே இன்றி இவர்கள் வெய்யிலிலும், மழையிலும், பசியிலும், பிணியிலும் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

இப்படிப்பட்ட கடினமான நிலைமைகளில் இந்த குடும்பங்களில் இருந்த சிறுவர்களை புலிகள் தமது இராணுவத்திற் கென கட்டாயமாக பிடித்துச் சென்றார்கள். இவர்களை பயிற்றுவிப்பதற்கோ அல்லது தயார் படுத்தவோ போதிய கால அவகாசம் இருக்கவில்லை. ஆதலால் சில நாட்கள் பயிற்சியுடனேயே இவர்கள் போர் முனைக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்கள் யாரும் உண்மையில் போர் முனையில் வெற்றிகளை பெற்றுத் தருவார்கள் என்ற எண்ணத்துடன் அனுப்பி வைக்கப்படவில்லை. ஏற்கனவே ஈபிஆர்எல்எப் அமைப்பானது இந்திய படையின் ஆக்கிரமிப்பின் போது இப்படியாக பிடித்து பயிற்றுவிக்கப்பட்ட சிறுவர்கள் முதல் துப்பாக்கிச் சூடு தொடங்கியதுமே தமது ஆயுதங்களை போட்டுவிட்டு சரணடைந்த கதை, அவர்களை அவ்வாறு சரணடைய வைத்த புலிகள் அமைப்பிற்கு மிகவும் நன்றாக தெரிந்த விடயமாகவே இருந்தது. ஆயினும் இப்படியாக இவர்களும் சிறுவர்களை படையில் சேர்த்தார்கள். புலிகள் அமைப்பானது சிறீலங்கா அரசை எதிர்த்து போராடும் நோக்கத்தில் இருக்கவில்லை. அரசிற்கு ஓரளவிற்கு பெயரளவிலான தடையை கொடுத்து, சர்வதேச தலையீடு ஒன்று சரிவரும் வரைக்கும் சிறீலங்கா இராணுவத்தின் முன்னகர்வை தாமதிக்கச் செய்வதுதான் அதுவாகும். அதனால் அவர்களுக்கு பீரங்கிக்கு தீனி போட பலர் தேவைப்பட்டார்கள். அதற்காதத்தான் இப்படி சிறுவர்களை பிடித்து, பயிற்றுவித்து சில அனுபவம் வாய்ந்த தலைவர்களுடன் கள முனைகளுக்கு அனுப்பி சிறீலங்கா

www.tamilarangam.net

இராணுவத்தின் வேகத்தை குறைக்க முனைந்தார்கள். ஆனால் அது வெற்றியளிக்கவில்லை.

இந்த யுத்தத்தில் சிறீலங்கா இராணுவம் இராணுவ சமபல நிலையில் (Balanc of Forces) பலமான நிலையில் இருந்தது என்பது உண்மைதான். இதற்கு பல காரணங்கள் இருந்தன. ஆனால் அதனை இராணுவரீதியாக முகம் கொடுக்க புலிகள் முனையவில்லை. இவர்களது கவனம் எல்லாம் சர்வதேச தலையீடு மூலம் தாம் காப்பாற்றப்படுவது தொடர்பானதாகவே இருந்தது. அதற்கு சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளத்தக்க மனிதாபிமான பிரச்சனைகளை உருவாக்குவதை நோக்கி புலிகள் தயாரானார்கள். இந்த நோக்கத்திலேயே தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்த மக்களை தாம் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலின் போது பின்வாங்குகையில் பலவந்தப்படுத்தி தம்மோடு கொண்டு சென்றார்கள். இந்த நடவடிக்கைகள் மூலமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு காரணம் ஆனார்கள். சிறீலங்கா அரசானது இனப்படுகொலைக் குற்றச்சாட்டை (Genocidal Charges) எதிர் நோக்குவது எவ்வளவு நியாயமானதோ, அவ்வளவு நியாயம் புலிகள் இந்த குற்றச்சாட்டில் துணைநின்றவர்களாக (Accomplice) குற்றஞ்சாட்டுவதிலும் இருக்கிறது. மக்களை வெறுமனே கேடயங்களாக, மண் மூட்டைகள் போன்று பயன்படுத்தியது ஒரு போதும் மன்னிக்கப்பட முடியாத குற்றமாகும்.

இதேவேளை இந்த குற்றங்களை மறைத்து, புலம் பெயர்ந்த நாடுகளில் பொய்களைக் கூறி மக்களை வீதியில் இறக்கினார்கள். போரில் கொல்லப்படும் மக்கள் பாலான உண்மையான அக்கறையில் வீதிகளுக்கு இறங்கிய தமிழர்களை, தமது தலைமையை காக்கும் நோக்கில் பயன்படுத்திக் கொள்ள முனைந்தார்கள். ஆனால் இந்த முயற்சிகள் அனைத்தும் காலம் கடந்தவையாக இருந்தன. புலிகளது கடந்த கால செயற்பாடுகள் இப்படிப்பட்ட ஒரு சர்வதேச தலையீட்டை சாத்தியமற்றதாக ஆக்கி விட்டிருந்தது. இன்னும் ஒரு தடவை மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். ஒட்டு மொத்த போராட்டத்திலும் மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலைமையை புலிகள் தமது தவறுகள் காரணமாக தோற்றுவித்தார்கள்.

இப்படிப்பட்ட மோசமான கொடுமைகள் மக்கள் மீது இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதும் கூட, புலிகள் நடந்து கொண்ட விதங்கள் மிகவும் வியப்பூட்டும் வகையானவையாக இருந்தன. சர்வதேச நலன்புரி அமைப்புக்கள் மூலமாக சிறீலங்கா அரசாங்கம் அனுப்பி வைத்த

உணவுப் பொருட்களை கைப்பற்றிய புலிகள் அவற்றை கள்ள சந்தையில், மிகவும் கூடிய விலையில் அதே மக்களுக்கு விற்றார்கள். பொருட்களை வாங்க பணம் இல்லாத மக்களிடம் அவர்களது நகைகளை மிகவும் மோசமாக அடிமாட்டு விலைக்கு வாங்கினார்கள். கொழும்பு சந்தையில் 30 ஆயிரம் ரூபாயாக ஒரு பவுண் தங்கம் விற்கப்படுகையில், அதனை 3 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினார்கள். மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை விட்டு சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள "விடுவிக்கப்பட்ட" பிரதேசங்களுக்கு வெளியேறிச் செல்வது அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பெருந்தொகையான பணத்தை பெற்றுக் கொண்டு இப்படியாக வெளியேறுவதற்கு பலர் அனுமதிக்கப்பட்டார்கள். இங்கே எழும் கேள்வி இதுதான். அதாவது, அப்படியாக பணத்தின் மீது ஏன் இந்த வெறி புலிகளுக்கு ஏற்பட்டது? இங்கே நாங்கள் ஒரு விடுதலை இயக்கத்தை காண முடியவில்லை. புலிகள் முற்றாக அழித்தொழிக்கப்பட்ட போது அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களில் பெருந் தொகையான நகைகள் மற்றும் வெளிநாட்டு கரண்சி நோட்டுகள் போன்றவை அடங்கியிருந்தன. இன்னும் பெருந் தொகையான நாணய தாள்களை எரித்ததாக அறிய முடிகிறது. ஒரு விடுதலை அமைப்பு என்று சொல்லப்பட்ட அமைப்பானது, முதலில் மக்களையும், அதன் அங்கத்தவர்களை விட ஆயுதங்களை பெரிதாக மதித்தது: பின்பு மக்களை விட மண்ணை மதித்தது: இப்போது பணத்தை எல்லாவற்றையும் விட பெரிதாக கருதுகிறது. இப்படிப்பட்ட பாத்திரங்கள் வெறுமனே புராணங்களிலும், காவியங்களிலும் மட்டும் தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் எமது சொந்த வரலாற்றில் காண்போம் என்று எம்மில் பலர் நினைத்தும் பார்த்திருக்க வில்லை.

இப்படிப்பட்ட நெருக்கடி மிக்க நிலையில் அந்த போர்க்களம் முழுவதுமே குழப்பமும், சர்ச்சைகளும் நிறைந்த இடமாக இருந்ததாக அறிய முடிகிறது. பசி, களைப்பு, நித்திரையின்மை, தொடர்ச்சியான மரணம் பற்றிய பயம், கண் முன்னாலேயே தமது அன்புக்குரியவர்கள் சிதிலமாகி, சிதைத்து மரணித்ததை கண்ட அதிர்ச்சி இப்படியான பல உணர்ச்சிகளின் வெள்ளத்தில் எல்லாருமே ஆடிப்போய் விட்டிருந்தார்கள். இதற்கு புலிகளின் தலைமையும் விதிவிலக்காக இருக்கவில்லை. மக்கள் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தடையாக இருந்த எதனையும் பொருட்படுத்தத் தயாராக இருக்கவில்லை. உயிர் பற்றிய பயத்தைக் காட்டித்தானே புலிகள் மக்களை இதுவரை காலமும் மிரட்டி தமது நோக்கங்களுக்காக பணிய வைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த உயிரே எப்போதும் இழக்கப்படலாம் என்ற நிலைமை தோன்றிய பின்பு இழப்பதற்கு ஏதுமற்ற நிலைமை மக்களிடமும்

உருவாகி விட்டிருந்தது. இதனால் புலிகளது அச்சுறுத்தல்களையும் மீறி, புலிகளை தாக்கிவிட்டு கூட மக்கள் வெளியேறிச் சென்றார்கள். புலிகள் அமைப்பின் ஒரு பகுதியினரும் இப்படியாக புலிகளது கடற்படை படகுகளை எடுத்துக் கொண்டு அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை நோக்கி தப்பிச் செல்ல முயன்றார்கள். இப்படியாக வெளியேறிய போராளிகளையும், மக்களையும் நோக்கி, மிகவும் விரக்தியுற்றிருந்த புலிகளின் அங்கத்தவர்கள் சிலர் துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். இது தன் பங்கிற்கு புலிகளின் அங்கத்தவர்கள் மத்தியிலேயே பிரச்சனைகளை உருவாக்கிவிட்டது. இப்படியாக வதைக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினாரக சாதாரண புலி அங்கத்தவர்களது குடும்ப அங்கத்தவர்கள் கூட இருந்தார்கள். இதனால் புலிகளின் அங்கத்தவர்கள் மத்தியில் ஏற்பட்ட சர்ச்சைகளின் போது புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களில் சிலர் தற்கொலை செய்து கொண்டதாக அறியக்கிடைக்கிறது. முன்பொரு காலத்தில், சமூகத்தில் ஏனைய சமூகப் பிரிவினர் அனைவரும் புலிகளிடம் இருந்து அந்நியப்பட்டிருந்த போதிலும் போராளிகள் குடும்பங்களும், மாவீரர் குடும்பங்களும் கடைசி வரையில் புலிகளுக்கு விசுவாசமாகவே இருந்து வந்திருந்தார்கள். ஆனால் இந்த கடைசி கட்ட நெருக்கடிகளின் போது இவர்களது விசுவாசமும் அற்றுப் போனது. இந்த நிலைமை புலிகள் அமைப்பும், அதன் தலைமையும் முற்றிலும் தனிமைப்பட்டுப் போயிருந்த ஒரு நிலையாகும். ஒரு வித்தில் பார்த்தால் ஒரு விடுதலை அமைப்பானது, தனது வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக இருந்த அத்தனை கூறுகளையும் ஒவ்வொன்றாக சிதைத்துவிட்டு தானும் அழிந்து போன நிகழ்வானது, தற்கொலை என்றும் கருதப்படக் கூடியதாகும். ஒரு வகையில் இது ஒரு சர்வதேச அளவில் புரட்சியாளர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பனை மிக்கதாகும்.

**தற்போது நடப்பவை**

மே 18 இன் சம்பவங்கள் நடந்து இப்போது ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. இந்த இடைக்காலத்தில் நடந்து முடிந்தவை, இப்போதும் நடந்து கொண்டிருப்பவை பற்றி இங்கு பேசுவோம்.

தலைவர் பிரபாகரன் இறந்தது பற்றி இன்னமும் அறிவிக்காமல் இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்பது இன்னமும் அவர்களது வட்டாரத்திலேயே தெளிவு படுத்தப்படாமலேயே இருக்கின்றது. வெளியே கசிந்த செய்திகள் கூறுவதெல்லாம், அப்படி அறிவித்துவிட்டால் மேற்கொண்டு பணம் சேகரிக்க முடியாமற் போய்விடுமாம். அதுதான் அமைப்பே கலைந்து போய்விட்டதே! இதற்கு பின்பு எதற்காக பணம்

www.tamilarangam.net

சேகரிக்கப் போகிறார்கள்? அப்படியானால் பணம் சேகரிப்பதற்காக பத்து தொடக்கம் நாட்பது வீதம் வரையில் கொமிசன் வாங்கியவர்கள் அமைப்பு அழிந்தாலும் பரவாயில்லை. தாம் நிதி சேகரிப்பதை விடமாட்டோம் என்கிறாாகளா? சரியோ, தவறோ, ஒரு போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்த ஒரு தலைவன் இறந்த கிடக்கிறான்: பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்து போய்விட்டார்கள்: மூன்று இலட்சம் மக்கள் சித்திரவதை முகாமில் அடைபட்டு கிடக்கிறார்கள். இத்தனைக்கும் பின்பு பணம் சேகரிப்பது ஒன்றே தமது குறியென்ற கூறும் ஒரு கூட்டம் எப்படி அரசியல், இல்லை வியாபாரம், செய்ய முடியும். இதனை சமூக அக்கறையுள்ள எவருமே அனுமதிக்க முடியாதே!

வட்டுக்கோட்டை தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விடப்போகிறார்களாம். அப்படியானால் இந்த முப்பத்து மூன்று வருடங்களில் புலிகள் எந்த அரசியலையும் முன்னெடுக்கவில்லையா? அப்படியானால் அதனையல்லவா முதலில் ஒத்துக் கொள்ள வேண்டும். 1976 ம் ஆண்டு தமிழர் விடுதலை கூட்டணி என்ன நோக்கத்திற்காக இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்மொழிந்தது? அவர்களைப் பொறுத்தவரையில் இது ஒரு வெறும் தேர்தல் பிரச்சார தந்திரமாக மட்டும் தானே இருந்தது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டி வரும் என்று அவர்கள் கனவிலும் கூட கருதியதில்லையே. அப்படியிருக்க அந்த செத்துப்போன தீர்மானத்தை, வெறும் தேர்தல் பிரச்சார சுத்துமாத்து தீர்மானத்தை இன்னமும் இவர்கள் தூக்கிப் பிடிப்பதேன்?

புலிகள் அமைப்பானது தனது இறுதிக் காலத்தில் ஒரு மிகவும் பணக்கார அமைப்பாக இருந்தது. அவர்களிடம் பல பில்லியன் டொலர்கள் சொத்துக்கள் இருந்தன: பல மில்லியன் டொலர்கள் வருமானம் இவர்களுக்கு வந்து கொண்டிருந்தன. இந்த சொத்துக்களுக்கு இப்போது என்ன நடக்கிறது. புலிகள் அமைப்பானது மேற்கு நாடுகளில் ஒரு சட்டபூர்வமான அமைப்பாக இல்லாததனால் இந்த சொத்துக்கள் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு நபர்களின் பெயரில் முதலிடப்பட்டிருப்பது பகிரங்கமான விடயமாகும். இந்த பினாமி சொத்துக்களை வைத்திருப்பவர்கள் அவற்றை வேறு யாரிடமாவது ஒப்படைக்க வேண்டிய பிரச்சனையில் இருந்து தப்பிக் கொள்வதற்கு தலைவரின் இறப்பு பற்றிய செய்தியை ஒத்துக்கொள்ளாமல் இருப்பது அவசியமானதாகிறது அல்லவா! கடைசி நேர சமரில் இது தொடர்பான ஆவணங்கள் அழிந்து போயிருக்கும் என்ற துணிச்சல் இவர்களுக்கு. நாம் ஏற்கனவே பார்த்தபடி முரண்பட்ட நலன்கள் ( Conflict of Interest) பற்றிய பிரச்சனை வந்து கடைசியில் தலைவனது தலையிலேயே

www.tamilarangam.net

கைவைப்பதைத்தானே நாம் பார்க்கிறோம். இந்த சொத்துக்கள் என்பவை எந்த தனிநபரதோ அல்லது அமைப்பினதோ அல்ல. மாறாக இவை மக்களது சொத்துக்கள். இவற்றை உடனடியாக தேசத்தின் உடமையாக ஆவன செய்யப்பட வேண்டும். இதற்கு ஒத்துழைக்காத பட்சத்தில் இதனுடன் சம்பந்தப்பட்டவர்களது பெயர் விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். ஏற்கனவே புலிகள் அமைப்பிற்கு பெருந்தொகையான பணத்தை பல தனிநபர்கள் கடனாக கொடுத்துள்ளார்கள். இந்த நபர்கள் அவற்றை வசூலிக்கும் முகமாக இந்த நபர்களது பெயர்கள் பகிரங்கப்படுத்த வேண்டும்.

கேபியுடன் கஸ்ரோ விசுவாசிகள் செய்து கொண்டு உடன்பாட்டை அடுத்து தலைவரின் பாதையில் முன்னேறுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். தலைவரின் பாதைதானே இத்தனை காலமாக தமிழ் மக்களது விடுதலைக்கான அத்தனை முன்னெடுப்புக்களையும் தடுத்து நின்று, இறுதியில் நந்திக்கடலில் முடிந்து போனது. இதற்கு மேல் தலைவரின் பாதையும், புலிக் கொடியும் என்று சொல்லிக் கொண்ட ஒரு அடியேனும் முன்னேற முடியாது. புலிகள் அமைப்பிற்கு கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக போதிய அவகாசம் வழங்கப்பட்டுவிட்டது. இதற்கு மேல் அதே தவறுகளை தொடர்ந்தும் செய்வதை நாம் அனுமதிக்க முடியாது அல்லவா? முதலில் புலிகளது கடந்த கால வழிமுறைகள் தோற்றுப் போய்விட்டன என்பதை பகிரங்கமாக ஒத்துக் கொள்வதால் மட்டும் தான் மேற்கொண்டு உருப்படியாக எதாவது இவர்களால் செய்ய முடியும்.

கடந்த காலத்தில் புலிகள் அமைப்பானது தமிழ் மக்களுக்கு தாங்கள் பதில் சொல்லும் பொறுப்பு உடையவர்கள் (Accountable) என்பதை அறவே மறந்திருந்தார்கள். இப்போது தலைவரது மறைவு பற்றி “அவர் உயிருடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவரே போராட்டத்தின் தலைவர்” என்று கூறும் போது அதே பதில் சொல்லும் பொறுப்பை தட்டிக்கழிக்கும் செயற்பாட்டையே தொடர்வதாக அர்த்தப்படும். இதுவொன்றும் நிகழ்தகவு (Probablity) பற்றி தர்க்கீகம் பண்ணுவதற்கு நாங்கள் ஒன்றம் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கவில்லை. இரு ஒரு தேசத்தினது ஜீவ மரண போராட்டம். இப்படியான ஒரு கட்டத்தில் இந்த விதமாக தர்க்கம் பண்ணிக் கொண்டிருப்பது அறவே பொறுப்பற்ற தன்மை என்றே கருதப்பட வேண்டும். இந்த சுத்துமாத்து விளையாட்டுகள் உடனடியாக மூட்டை கட்டப்பட வேண்டும்.

www.tamilarangam.net

புலிகள் தேசத்தின் அறிதான வழங்களை மோசமாக வீணடித்தார்கள் என்று முன்னரே பார்த்தோம். இப்போதும் அதே போக்கு தொடர்வதை நாம் அனுமதிக்க முடியாது. புலிகள் யுத்தத்தில் முற்றாக தோற்கடித்த பின்னரும் இன்று வரையில் தொடரும் மாணவர், இளையோர் அமைப்பினரது போராட்டங்களின் தார்ப்பரியம் என்ன என்று நாம் கேட்க வேண்டாமா? கடந்த காலத்திலேயே இந்த போராட்டங்களின் தாக்கம் நிகழ்த்தும் பண்பு (Effectiveness)பற்றி பல கேள்விகள் எழுந்ததுண்டு. ஆனால் இத்தனை காலத்திற்கு பின்னரும் இந்த மாதிரியான வேலைகளை எவ்வித மாற்றமும் இன்றி தொடர்வதன் அர்த்தம் என்னவாக இருக்க முடியும்? பதில் இலகுவானது. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், இவர்களால் உசுப்பேத்தப்பட்டவர்கள், அதிலும் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் தமது படிப்புக்களையும் கைவிட்டு வீதிகளில் இறங்கி விட்டுள்ளார்கள். இவர்களிடம் தமது தோல்விகளை ஒத்துக்கொண்டு அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கு இந்த புலம்பெயர் புலிகளின் தலைமை தயாராக இல்லை. ஆதலால், தலைவர் இறக்கவில்லை என்று பொய் சொல்லி, தொடர்ந்தும் அவர்களை ஏமாற்றி, அவர்களுக்கு ஏதாவது “வேலை காட்டி’ தவறாக வழிநடத்த முயல்வதாகவே கருத வேண்டியுள்ளது. அதனை விட தமக்குள் நடக்கும் குத்து வெட்டுக்களில் இந்த புலம் பெயர் புலிகளின் மத்தியில் உள்ள ஒரு பிரிவு மற்றய பிரிவுக்கு சவால் விடவும் இப்படியான இளைஞர்களை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு மிகவும் அயோக்கியத்தனமான செயலாகும். இது மக்களை களைப்பூட்டி விரக்தியுறச் செய்யும் நடவடிக்கைகளாகும். இங்கு சம்பந்தப்பட்டவர்கள் எமது எதிரிக்கு சாதகமான செயற்பாடுகளைத்தான், அவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ, செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமானதாகிறது. இதனால் இந்த வகையான அர்த்மற்ற உசுப்பேத்தவது, விரயமாக்குவது, பலம் காட்டுவது போன்ற நாடகங்கள் உடனடியாகவே முடிவுக்கு வந்தாக வேண்டியுள்ளது.

**புலிகள் அமைப்பின் புனர்வாழ்வு குறித்து**

இப்படியான ஒரு நீண்ட விமர்சனத்தை முன்வைப்பதன் நோக்கம் என்ன? புலிகள் அமைப்பிற்கு இனி அரசியல் எதிர் காலமே கிடையாது என்கிறோமா? புலிகள் கடந்த காலத்தில் மாற்று அமைப்புகள் தொடர்பாக செய்த அதே தவறுகளை நாமும் செய்யப் போகிறோமா? இப்படிப்பட்ட கேள்விகள் எழுவது நியாயமானதே. இந்த கேள்விகள் தொடர்பான அம்சங்களை நாம் இப்போது எடுத்துக் கொள்வோம்.

www.tamilarangam.net

கடந்த காலத்தில் நாம் புலிகளால் எம்மீது இழைக்கப்பட்ட அத்தனை அடக்குமுறைகளையும் மீறி, அவர்களை ஒரு தேசிய சக்தியாகவே பார்த்தோம். அவர்களது அரசியல் தவறானதாக இருந்தது. அதனால் அதன் தலைமை தவறாக போராட்டத்தை வழி நடத்தியது. அதற்கு விலையை புலிகள் அமைப்பு மட்டுமன்றி, அனைத்து தமிழ் மக்களும் செலுத்த நேரிட்டது. தலைமையின் மோசமான தவறுகளையும் மீறி அதன் அங்கத்தவர்களை நாம் தவறானவர்களாக கருதவோ, அல்லது அவர்களது அர்ப்பணிப்புக்களையும், தியாகங்களையும் குறைத்து மதிப்பிட்டதோ, அல்லது இனி வரும் காலங்களில் மதிப்பிடப்போவதோ கிடையாது. தன்னிடம் இருந்த குறைபாடுகளையும் மீறி, புலிகளின் தலைமை கூட போர்க்களத்தில் தமது உயிர்களை துறந்தவர்கள். இதற்கு மேல் இவர்களை இழிவுபடுத்துவதில் எந்த அர்த்தமும் இருப்தாக நாம் கருதவில்லை.

தமிழ் மக்களது அரசியல் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட பாத்திரத்தை புலிகள் அமைப்பானது வகிக்க முடியும் என்ற கேள்வி இப்போது எழுகிறது. நாம் மேலே குறிப்பிட்டது போல புலிகள் அமைப்பானது தனது சொந்த குறைபாடுகள் காரணமாக 'உலர்ந்து உதிர்ந்தது' போன்றதொரு நிகழ்வுதான் இந்த இராணுவ தோல்வி என்பதை மறக்க கூடாது. அப்படியாக உளுத்துப் போன ஒரு அமைப்பானது, அதன் மிஞ்சிய கூறுகளுடன்தான் என்றாலும் கூட, அப்படியே மீண்டும் புத்துயிர்ப்பு பெறுவது சாத்தியமற்ற ஒரு நிகழ்வாகும். அதற்காக நாம் புலிகள் அமைப்பின் தலைமையையும், அதன் அங்கத்தவர்களையும் ஒன்றாக பார்ப்பதாகவோ, அல்லது அதனை இதய சுத்தியுடன் ஆதரித்த மக்களது பாத்திரத்தை நிராகரிப்பதாகவோ அர்த்தப்பட மாட்டாது. ஆனால் எதிர்காலத்தில் இவர்கள் ஆற்றக்கூடிய எந்தவொரு பயனுள்ள பாத்திரமும் இவர்களது கடந்தகால் தவறான அரசியலில் இருந்து முறித்துக் கொள்வதினூடாகவே சாத்தியப்படும். ஆதலால் புலிகள் அமைப்பினருடன் எந்தவிதமான ஆரோக்கியமான அரசியல் தொடர்பாடல்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு பின்வரும் நிபந்தனைகளை இவர்கள் பூர்த்தி செய்தாக வேண்டியுள்ளது.

- x தலைவர் பிரபாகரனது மரணத்தை பகிரங்கமாக அறிவித்து, அவருக்கு செய்ய வேண்டிய இறுதி மரியாதையை செலுத்துவது. தனது தலைவனது மறைவையே ஒத்துக் கொள்ள முடியாத போலி வேடதாரிகளுடன் எந்தவொரு அரசியலையும் யாருமே சேர்ந்து செய்ய முடியாது.

www.tamilarangam.net

x கடந்த காலத்தில் புலிகள் அமைப்பானது செய்த தவறுகள், குற்றங்கள் போன்றவற்றை பகிரங்கமாக ஒத்துக் கொண்டு அவற்றிற்காக மன்னிப்பு கோருவது: தவறுகளை சீர் செய்வது: இயலுமான பட்சத்தில் அவற்றிற்கு உரிய நட்டஈடுகளை வழங்குவது. இப்படியாக ஒத்துக் கொள்ள வேண்டிய தவறுகளில் பின்வருவன முக்கியமானவை என நாம் கருதுகிறோம்.

- o மக்களது ஜனநாயக உரிமைகளையும், மனித உரிமைகளையும் மீறியமை.
- o மாற்று அமைப்புக்களை தடை செய்தமை.
- o முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள், முஸ்லிம் மக்களது இனச்சுத்திகரிப்பு.
- o சிங்கள மக்கள் மீதான படு கொலைகள்.
- o போர்க்கால குற்றங்கள்
- o சிறுவர்களை படையில் சேர்த்தமை
- o அமைப்பினுள் நடைபெற்ற உட்கொலைகளை பகிரங்கப்படுத்தி மன்னிப்பு கோருவது.

x இவற்றைவிட இன்னும் சில விடயங்கள் தொடர்பாகவும் புலிகள் தமது பதில் சொல்லும் பொறுப்பை நிறைவேற்றியாக வேண்டியுள்ளது. அவையாவன.

- o புலிகள் அமைப்பானது தன்னிடமுள்ள சொத்துக்களை தேச உடமையாக்குவது. மேற்கொண்டு எந்த விதமான பணச் சேகரிப்புக்களையும் மேற்கொள்ளாமல் விடுவது.
- o தலைவர், புலிக்கொடி போன்றவற்றை கைவிட்டு திட்டவட்டமான அரசியலை முன்வைப்பது. தலைவர் செய்வார், தலைவருக்கு தெரியும் போன்ற அரசியல் பிரமைகளை கைவிட்டு அரசியல் திட்டம், மூலோபாயம், தந்திரோபாயம் என்பவற்றின் அடிப்படையில் திட்டவட்டமான அரசியலை முன்வைப்பது.
- o கடந்தகால தமது அரசியலை கட்டுடைப்பது. முழுமையான சுயவிமர்சனத்திற்கு உள்ளாவது.

மேலே குறிப்பிட்ட விடயங்கள் ஒன்றும் புலிகள் அமைப்பை அவமதிக்கும் நோக்கத்துடனோ, அல்லது புலிகள் அமைப்பை போராட்டத்தில் இருந்து ஓரம் கட்டும் நோக்கத்துடனோ

www.tamilarangam.net

முன்வைக்கப்பட்டவை அல்ல. இப்படிப்பட்ட தவறுகள்தான் எமது போராட்டத்தை இந்த அளவிற்கு சீரழித்து இப்படிப்பட்ட தோல்வியில் கொண்டு போய் விட்டது என்பதை நியாயமாக சிந்திக்கும் எவருமே ஏற்றுக் கொள்வர். எனவே, நாம் மேற்கொண்டு இந்த தவறுகளில் இருந்து படிப்பனைகள் பெற்று, அவற்றை திருத்திக் கொண்டு முன்னேறுவது என்றால் அவற்றை களைந்தெறிவதில் நாம் ஈவிரக்கம் காட்ட முடியாது. இந்த தவறுகளுக்காக தனிநபர்களும், முழுத்தேசமுமே கொடுத்த விலைகள் மிக மிக அதிகமானது என்பது உணரப்பட வேண்டும். இத்தனைக்குப் பின்னரும் இந்த தவறுகளை ஒத்துக் கொள்ளாமலேயே, வழமைபோல செயற்பட முடியும் என்று கருதுவது அயோக்கியத்தனமாகும். புலிகளின் அரசியலானது முற்றாக கட்டுடைக்கப்பட்டு அதன் சமாதியிலேதான் எந்த உருப்படியான நடவடிக்கைகளும் தொடரப்பட முடியும். தலைவர், மேதகு, மாமனிதர், மாவீரர், துரோகி, ..... போன்ற பல அசிங்கங்கள் குப்பைப் தொட்டிக்குள் போகாமல் எந்தவிதமான முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர முன்முயற்சியும் தொடங்கப்படவே முடியாது. அப்படியாக அல்லாமல் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றலாம் என்று கருதினால் அதனை சகித்துக் கொண்டிருப்பது ஒன்றும் தேசத்தின் தலைவிதியல்லவே! நாம் இங்கு பேசிக் கொண்டிருப்பது தனிநபர்களது தனிப்பட்ட உணர்வுகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் அல்ல. ஒரு தேசத்தின் வரலாறு, அதன் மகத்தான எதிர்காலம் பற்றிய பிரச்சனையாகும். இப்படிப்பட்ட நிலைமைகளின் கீழ் நாம் என்ன விதமான தேர்வுகளை முன்னெடுக்கிறோம் என்பது எமது எதிர்கால சந்ததிகள் பலவற்றின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் முடிவுகளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

www.tamilarangam.net

இறுதியாக மார்க்சியம் பற்றிய எமது புரிதல்களையும் நாம் கேள்விக்குள்ளாக்கும் நேரத்தை அடைகிறோம். மார்க்சியம் என்பது ஒரு விஞ்ஞானம் என்கிறோம். சமூகம் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறோம். அப்படியானால் அரசியல், பொருளாதாரம், வரலாறு, தத்துவம், மற்றும் அறிவுத்துறையின் ஏனைய கிளைகளில் ஏற்படும் கோட்பாட்டு வளர்ச்சிகளுக்கு இணையாக நாமும் எமது கோட்பாட்டு சாதனங்களை தொடர்ந்தும் புதிதாக உருவாக்கிக் கொள்ளவும், வரலாறு புத்தம் புதிதாக முன்வைக்கும் வளமான பிரச்சனைகளில் அவற்றை பரீட்சித்துப் பார்க்கவும் எமக்கு போதியளவு திறமையும், துணிவும் இருக்க வேண்டும். அப்படியாக இருக்கும் போது மட்டுமே நாம் "வரலாற்றில் மிகவும் முன்னேறிய கோட்பாட்டினால் வழிநடத்தப்படுபவர்கள்" (லெனின்) என்று உரிமை பாராட்ட முடியும். இதற்கு மாறாக வரட்டுச் சூத்திரங்களை தூக்கிப் பிடிப்பது நம் கண்முன்னே நடக்கும் வரலாற்று நிகழ்வுகளை புரிந்து கொண்டு அரசியல்ரீதியாக தலையீடு செய்ய ஒருபோதும் உதவப்போவதில்லை.

வியூகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்